# வாழ்க்கைப் போராட்டம்

கலாநிதி நஜீப் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்

# வாழ்க்கைப் போராட்டம்

கலாநிதி நஜீப் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்


| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | 19.07.2025 |
| நூலாசிரியர் | : | பாயிஸா ஜுனைட் கைஸ் |
| பக்க வடிவமைப்பு | : | பஸ்லி ஹமீட் |
| முன் அட்டை | : | ஹாபிஸ் இஸ்ஸதீன் |
| பக்கங்கள் | : | 179 |
| விலை | : | இலவசம் |
| அச்சுப் பதிப்பு | : | Indo-Ceylon Calendar Co.,<br>14, Abdul Jabbar Mw.,<br>Colombo-12 |
| உரிமம் | : | நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம்<br>97, லோட்டஸ் வீதி,<br>தர்கா நகர்.<br>www.najeebeducationcenter.com |
| ISBN இலக்கம் | : | 978-955-44659-1-6 |

வெளியீடு:-

Najeeb Hajiyar Education Center
Dharga Town
Sri Lanka

சமர்ப்பணம்:-

பாசத்தேனூட்டி பேணி வளர்த்து
கல்விதனைக் கனியத் தந்து
விண்ணுயர வைத்த
நஜீப் ஹாஜியார் அவர்களின்
அன்புத் தந்தை
தர்கா நகர்
மர்ஹூம் அமீர் ஆலிம் அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

# ஆசிரியர் உரை

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு.

தர்கா நகரில் புகழ் பூத்த பெருந்தகை அமீர் ஆலிம் அவர்களின் தவப் புதல்வன் சேவைச் செம்மல் நஜீப் ஹாஜியார் அவர்களின் வாழ்க்கைச் சரிதை நூலை எழுதுவதற்கு வாய்ப்பளித்த எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் அல்ஹம்துலில்லாஹ்.

“நெஞ்சம் நிறைந்த நஜீப் ஹாஜியார்” வாழ்க்கை வரலாற்று நூலின் ஆசிரியர் குழுவில் நானும் ஒருவளாகவிருந்து சில விடயங்களை தொகுத்து வழங்கியமை யாவரும் அறிந்ததே. “நெஞ்சம் நிறைந்த நஜீப் ஹாஜியார்”, “தர்கா நகரின் பொக்கிஷம்”, அரபு மொழியிலான “மசீரத் கிபா” ஆகிய மூன்று நூல்களை நஜீப் ஹாஜியர் அவர்கள் வெற்றிகரமான முறையில் வெளியிட்டுள்ளார். இது அவரால் வெளியிடப்படும் நான்காவது நூலாகும். அல்ஹம்துலில்லாஹ்.

இந்நூலானது நஜீப் ஹாஜியார் அவர்கள் ஆற்றிய சேவைகளையும், அவரது உயரிய பண்புகளையும், அவரது பயன்தரக்கூடிய சில சுற்றுலாக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளதோடு தனது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள், மேற்படிப்பு, தொழில் வாய்ப்பு முதலான துறைகளில் தன்னை அர்பணித்து வெற்றி கண்ட சாதனைகளையும் படம்பிடித்துக் காட்டுகின்றது.

இறை நம்பிக்கையுடன் அல்லாஹ்வை முன்னோக்கி தனது குடும்பத்துடன் சமூக தேவைப்பாடுகளை நன்குணர்ந்து சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி தனது கல்வி நிலையம் மூலமாகவும் ஒரு இயந்திரத்தைப் போல் இயங்கிக்கொண்டிருப்பதை இந்நூலை வாசிக்கும்போது அறிந்து கொள்ளலாம். அத்துடன் தான் செய்த நற்செயல்களை இந்நூலின் மூலமாக பிறரும் வாசித்தறிந்து சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் அவர்களும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டுமென்பதே அவரது நோக்கமமாகும்.

கொடுக்க மனமுள்ளவனிடம் பணமிருக்காது, பணமுள்ளவனிடம் கொடுக்க மனமிருக்காது. எல்வாம் வல்ல அல்லாஹ், நஜீப் ஹாஜியார் அவர்களிடம் இரண்டையும் கொடுத்துள்ளான். அல்ஹம்துலில்லாஹ், அவரது சேவை தொடரட்டும்...

எண்ணங்கள் அனைத்தும் அவருடையது, வண்ணங்கள் அனைத்தும் என்னுடையது என்பதை நான் தாழ்மையுடன் கூறிக்கொள்ள

விரும்புகின்றேன். இந்நூலில் குறைநிறைகள் நிறையவே இருக்கலாம். குறை கண்டால் சுட்டிக்காட்டும்படி வாசகர்களாகிய உங்களிடம் தயவாய் வேண்டிக் கொள்கின்றேன்.

மேலும் நஜீப் ஹாஜியார் அவர்களின் நற் சேவைகள் பாரெங்கும் பரவி இருலோகப் பாக்கியமும் பெற்று ஆரோக்கியத்துடனும், நீண்ட ஆயுளோடும் வாழ பிரார்த்தித்து விடை பெறுகிறேன்.

நன்றி - வஸ்ஸலாம்.

நூலாசிரியர்.
பாயிஸா ஜுனைட் கைஸ்
சீனன்கோட்டை.

## நூலின் நாயகர் நஜீப் ஹாஜியார் மனம் திறக்கிறார்...

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு. அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய எல்லாம் வல்ல அல்லாஹுத்தஆலாவின் திருநாமத்தை மொழிந்தவனாக ஆரம்பிக்கிறேன்.

எனது வாழ்க்கைச் சரிதை தொகுப்பான “வாழ்க்கைப் போராட்டம்” நூலைக் கண்டு மனம் மகிழ்ந்தேன். இந்நூலினை நூலுருவில் கொண்டு வர முதலில் நான் சம்மதிக்கவில்லை. எனது வாழ்க்கைக் குறிப்புக்கள் என்னோடு மாத்திரம் இருக்கட்டும் என்றே கருதினேன். எனது வாழ்க்கையில் நான் பட்ட கஷ்டங்கள், சோதனைகள், வேதனைகள், பொறுமையின் மூலம் சோதனைகளை சாதனைகளாக்கிய நிகழ்வுகள், வெற்றிக்கு வழிகாட்டிய வழிமுறைகள், இலட்சிய வேட்கை, குடும்ப வாழ்வுப் பற்றுறுதி, நட்பு, மார்க்கப்பற்று, பெரியவர்களுடனான இணைப்பு, சமூக மேம்பாட்டுத் தொடர்பு என்பவற்றை நுணுக்கமாகக் கண்டு கொண்டவர்கள் இவற்றை நூலுருப்படுத்துவதன் மூலம் சமூகத்துகக் எடுத்துக் காட்டான படிப்பினைகளை முன்வைக்கலாம் என்ற கருத்தை வலியுறுத்தியதன் பிரகாரமே சில நிபந்தனைகளின் கீழ் இந்நூலினை உருவாக்க சம்மதித்தேன்.

வாழ்க்கையில் இடம் பெறும் சம்பவங்களைக் குறித்து வைக்கும் பழக்கம் சிறு வயதிலிருந்தே என்னிடம் காணப்பட்டது. இப்பழக்கத்தை ஊட்டியவர் எனது அன்புத் தந்தை அமீர் ஆலிம் அவர்கள். அவருக்கும் எனது அன்புத் தாய்க்கும் வல்ல நாயன் அல்லாஹ்விடம் இரு கரமேந்தி பிரார்த்திக்கின்றேன்.

நான் குறித்து வைத்துள்ள பதிவுகள் யாவும் எனது வாழ்க்கையில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்திவிட்டவைகள் ஆகும். ஒவ்வொரு சம்பவமும் ஒவ்வொரு துளியாக எனக்கு படிப்பினையை ஊட்டியதோடு எனது அடுத்த கட்ட செயற்பாடுகளை செவ்வனே செய்வதற்கு வழிகாட்டின. அத்துடன் எனது வாழ்வில் எனக்கு உதவி ஒத்தாசை புரிந்தோரை நினைவில் வைத்து அவர்களைப் பின்தொடர்ந்து செல்வதற்கும், என்னை ஏமாற்றியவர்களையும், வஞ்சகம் செய்தோரையும் விட்டு விலகிச்செல்வதற்கும் வழிகாட்டியது. நான் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் இந்நூல் மூலமாக எனது சமூகத்துக்கு ஏதேனுமொரு வகையில் பயனை வழங்குமாயின் அதுவே எனக்குக் கிடைக்கும் வெற்றியாகும்.

உலகிற்கே கல்வியை வழங்கி உயிர்ப்பித்த எமது சமூகம், இன்று இழந்துவிட்ட தனது கல்விச் செல்வத்தைத் தேடி அலைந்துகொண்டிகின்றது. அதைக் கண்ட இடத்தில் எடுத்துக் கொள்வது கடமையாகும். இன்று எம்மத்தியில் கல்வி, ஒழுக்கம், மார்க்கக் கல்வி, சமூகப் பற்று என்பன அருகி வருகின்றன. இவற்றை மேம்படுத்தி எமது இளம் சமுதாயத்தினரை அவற்றின் பால் ஈர்க்கச்செய்ய நாம் ஒவ்வொருவரும் எம்மாலான முயற்சிகளைச் செய்ய வேண்டியுள்ளோம். அதற்கு துணிவைத்தந்த அல்லாஹ்வுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்ஹம்துலில்லாஹ்.

## பொருளடக்கம்

### சிறுபராயமும் கல்வியும்


| | |
|---|---|
| நஜீப் அவர்களது பிறப்பு. | 02 |
| "தாய் சொல்லைத் தட்டாதே" தட்டியதால் ஏற்பட்ட விபரீதம். | 02 |
| துள்ளித்திரியும் புள்ளி மானாய் பள்ளிப் பருவத்தில்....... | 03 |
| ஆசை யாரைத்தான் விட்டது? | |
| அரபு மார்க்கக் கல்வி கற்க காலிக்குப் பயணம். | 05 |
| குறும்புக்காரனாக இருந்து மாமனிதனாக மாற அல்லாஹ்வின் அருள் கிடைத்தல். | 06 |
| காலி மத்ரஸாவில் கால் பதித்த வேளையிலே. | 07 |
| பிஞ்சு நெஞ்சின் துஆ அங்கீகரிக்கப்பட்டது. | 08 |


### இளமைக்காலமும் தொழில் முயற்சிகளும்


| | |
|---|---|
| உறுதி கொண்டால் உதயம் காணலாம். | 12 |
| கடன் பெற்றுக் கண் திறந்தார். | 13 |
| முயன்றால் முன்னேறலாம். | 14 |
| கூட இருந்து குழி பறித்தல். | 15 |
| கள்வனைத் தேடி வலை விரிப்பு. | 17 |
| மனதைக் கவர்ந்த மாணிக்கமும் அடியோடு வெறுத்த வியாபாரமாகி விட்டது. | 17 |
| மாசி வியாபாரமும் ராசி இல்லாமல் போனது. | 18 |
| சோதனையோடு சாதனை. | 19 |
| மகிழ்வைக் கொடுத்த மலை நாட்டுச் சுற்றுலா. | 19 |
| உற்றாரைப் பிரிந்து உதயம் காண்பதற்காய்....... | 20 |
| வேட்டையாடச் சென்ற போதும் கோட்டை விடவில்லை. | 21 |
| இமாமாக நின்று தொழுகை நடாத்தி தேகம் குளிர்ந்தார். | 22 |
| குத்பா ஓதி ஜும்மா பிரசங்கம் முதல் சந்தர்ப்பம். | 24 |
| பணிபுரிந்த ஊரிலே பனிமழை. | 25 |
| சொந்த ஊரிலே செந்தூரமானார். | 25 |
| கடவுச் சீட்டுக்காக பட்ட கஷ்டங்கள். | 26 |
| மத்திய கிழக்கில் வேலை தேடி மங்கிப் போன இதயமாய்...... | 27 |
| சோதனை மேல் சோதனை. | 28 |

கடையில் சேர்ந்ததால் கிடைத்த நன்மைகள். 29
இனக் கலவரமும் காய்ச்சலும். 30
முன்வைத்த காலை பின் வைக்கவில்லை. 30
சிங்கத்திடமிருந்து தப்பிய மான்கள். 31
வெளிநாட்டு அமைச்சர்களை BMICH இல் சந்திப்பு. 32
தர்கா நகர் ஆலிம்ஸாஹிப் அப்பாவின் தக்கியாவில்
வருடாந்த கந்தூரியும் நீண்ட கால முயற்சி
நிறைவேறப் போகும் மகிழ்ச்சியும். 33
நிறைவேறிய ஆசை. 34

## வெளிநாடும் குடும்ப வாழ்வும்

கஷ்டப்பட்டேனும் கரை சேருதல். 37
இடம்மாற வேண்டி இறைவனை இறைஞ்சுதல். 38
இடம் மாறி குணத்தால் வென்றார். 39
பொறாமையின் போதும் பொறுமையைக் கண்டவர். 40
ஹஜ் பிரயாணம். 41
கார் விபத்து. 41
தாய் நாடு திரும்புதலும் சிங்கப்பூர் பயணமும் 42
மீண்டும் அபூதாபி பயணம். 42
அகம் குளிர வைத்த அதிர்ஷ்டம். 43
நீதிபதியின் சிபாரிசு. 45
நாடு திரும்பியதும் திருமணம் எனும் நறுமணம் வீசியது 45
மறக்க முடியாத இனிய நாள் 46
பிரிய மனமின்றி மீண்டும் பறந்தார். 47
புதிய வேலையில் புன்னகைத்தார். 48
பரவசமூட்டிய மனைவியின் முதல்ப் பிரசவம். 49
தப்புச் செய்யாமல் கிடைத்த தண்டனை. 49
மனைவிக்காக தடுப்புக் காவலில் 50
இறுதி முடிவு இடையில் மாற்றம்.. 51
புதிய வேலை, மொழிபெயர்ப்பாளர் பதவி. 52
அபூதாபியில் மொழிபெயர்ப்பாளர் என தினகரனின் பிரசுரிப்பு. 53
நிராகரிக்கப்பட்ட இராஜினாமா கடிதம். 53
மனம் குளிர வைத்த மனைவி மகளின் வருகை. 53
பூக்கள் இரண்டும் மணம் வீச சமூக சேவை ஆரம்பம். 54

முதியோர் கல்வித்திட்டத்தின் கீழ் அரசாங்கப்
பாடசாலையில் சேர்ந்து மேலும் அரபுக் கல்வியை கற்றல். 54
இரண்டாவது பிரசவம் நிஹ்மத். 55
குடும்பத்துடன் தாய்நாடு திரும்புதல் 55
ஊரிலே வீடு கட்ட காணி வாங்குதல். 56
மனை கட்ட மனம் கொண்டார். 56
மூன்றாவதாகக் கிடைத்த ரஹ்மத். 57
கொலையாளிக்கும் கருணை காட்டியவர். 57
உதவிக்கு கிடைத்த பரிசு கொலை மிரட்டல். 58
மொழிபெயர்ப்பில் கண்ட அனுபவம். 59
தன்னைப் பற்றிய சுயசரிதை. 59
அரபு மொழிப் பசி இன்னும் தீரவில்லை. 60
இஸ்லாத்தைத் தழுவியவர்களுடன் இரண்டாவது ஹஜ். 60
கண் கவரும் புது இல்லம். 61
15 வருடங்களுக்குப் பின் சந்தித்த சுவையான நிகழ்வு. 62
மாலைத் தீவு சுற்றுலா. 62
எகிப்தின் உப ஜனாதிபதியின் மனித நேயம். 63
நேர்முகப் சபைக்கு தலைவரானார். 63
பணத்தை உதறித் தள்ளிவிட்டு மதத்தை மதித்தார். 64
பாலைவனத்தில் ஏற்பட்ட பயங்கர ஆபத்து. 65
நீதியரசரைச் சந்தித்து சந்தோசத்தில் சங்கமித்தார். 66
கனவில் கண்ட தனது மரணம். 67
மனைவி மக்களின் மகிழ்வான வருகை. 68
பெருந்தகையின் இல்லத்தால் பரவசமானது உள்ளம். 68
ஆற்றலைக் கண்டு வியந்தார் கலீபா. 68
நான்காவது மகனின் பிறப்பு ஒரு தனிச் சிறப்பு. 69
கார் வாங்கியதன் அவசியம். 69
குடும்பத்துடன் ஹஜ் பயணம். 70
மனக் கண்முன் நிழலாடும் மறக்க முடியாத நிகழ்வுகள் 70
பண்பைக் கண்டு பதவி உயர்வு. 71
இறையடி சேர்ந்தார் அன்புத் தந்தை. 71
இஸ்லாம் காட்டும் இலகுவான வழி மர்ஹூம்
அமீர் ஆலிமின் அரும் பணி (நீர்த்தார் பெருணம்) 73
வியக்க வைத்த வார்த்தைகள். 74
தந்தையின் பெயரில் ஸதக்கா. 75

| | |
|---|---|
| பளிச்சிடும் 2004ம் ஆண்டின் நிகழ்வுகள். | 76 |
| இறையடி எய்திய ஜனாதிபதி. | 77 |
| புதல்வியோடு புன்னகை துளிகள். | 77 |
| இதயத்தைக் கவர்ந்தவை. | 78 |
| கொடை வள்ளலின் மறைவும் தாயின் சீரற்ற உடல் நிலையும் | 79 |
| தாயின் மறைவும் தாங்க முடியாத துயரமும். | 79 |
| சந்தோசமான சங்கமங்கள். | 80 |
| கனவு நனவாகியது. | 80 |
| உழைப்பின் உன்னதம். | 82 |
| கிடைத்த வாய்ப்பு பொன்னானது. | 83 |
| மருத்துவக் கல்விக்காக சீனா சென்றார். | 84 |
| திருடனைக் கண்டு பிடித்த தீர்க்கதரிசி. | 86 |
| குடும்பத்துடன் ஒரு சுற்றுலா. | 97 |
| தொடர்பாடல் கருத்தரங்கில் நஜீப் ஹாஜியார். | 87 |
| உண்மை ஒருபோதும் பொய்யாவதில்லை. | 87 |
| நினைவின் நிழல்கள். | 89 |
| சிந்திக்க வைத்த சீனப் பயணம். | 89 |
| பள்ளைகளின் மருத்துவப் பட்டம் மகிழ்வைத் தந்த கட்டம். | 90 |
| யாழ்ப்பானமும் நல்லவை நடந்ததும். | 90 |
| பொழுதைக் கழித்த இனிய நாள். | 91 |
| அமைச்சரின் வருகையும் மகனின் MBA பட்டப்படிப்பும். | 92 |
| நறுமணம் வீசிய திருமணம். | 92 |
| நிகழ்ந்த சில நிகழ்வுகள். | 93 |
| இருமனம் கொண்ட திருமணம். | 94 |
| புதல்வரும், புதல்வியும் MBBS பட்டம். | 94 |
| மூன்றாவது மகன் ஹிதாயதுல்லாஹ்வின் முத்தான திருமணம். | 94 |
| 33 வருடங்களாக ஓயாது சுழன்றவர் ஓய்வு பெற்றார். | 95 |
| ஓய்வு பெற்ற பின்னர் முதல் பயணம் லண்டன். | 95 |
| பயணங்கள் முடிவதில்லை. | 97 |
| சேவைகளுக்கு மத்தியில் செல்வங்களின் மகிழ்ச்சியில். | 98 |
| கப்பல்கள் கண்காட்சி. | 98 |
| கலாநிதி பட்டத்திற்கான கௌரவிப்பு. | 99 |
| அறபு மொழியில் சுயசரிதையா? | 99 |
| ஜோர்ஜியா சுற்றுலா. | 100 |
| குடும்ப மரக்கிளை. | 100 |


.

கிழக்கு மாகாணத்திற்கு இதமான பயணம். 103
புதல்வரின் பட்டமளிப்பு விழாவுக்கு இந்தியா
சென்ற வேளையில்... 105
ஆக்ரா கோட்டை நஜீப் ஹாஜியாரின் பார்வையில். 106
மகாத்மா காந்தி, இந்திரா காந்தி நினைவாலயங்கள்
செல்லவும் மறக்கவில்லை. 106

## சமூக நற்பணிகளும் மேன்மை தங்கியோரின் நட்பும்

அல்ஜன் வாழ் முஸ்லிம்களுக்கான நலன்புரிச் சங்கம்.... 110
மூடப்பட்ட நலன்புரிச் சங்கம். 111
UAE இற்கான இலங்கைத் தூதுவர் சந்திப்பு... 111
மார்க்கத்தைத் தழுவியவர்களுக்கு மகத்தான வழிகாட்டல். 112
மரணத்தைத் தழுவிய முன்னாள் அபுதாபி ஆட்சியாளர். 113
இஸ்லாத்தைத் தழுவிய இளைஞர்களுக்கு
இல்லம் சென்று கற்பித்தார். 114
மத்திய சிறைச்சாலையில் மார்க்கப் போதனை. 114
நீதியரசரைச் சந்தித்து சந்தோசத்தில் சங்கமித்தார். 115
இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கு (பெண்களுக்கு)
இனிதே தொடர்ந்தும் கற்பித்தார். 115
தர்மம் தலைகாக்கும். 115
பிரதி அமைச்சரை சந்திக்கக் கிடைத்த சந்தர்ப்பம். 116
நாட்டம் வைத்தல். 116
மகானின் வருகை மனதுக்கு இனிமை. 117
தாய்நாட்டு அமைச்சர்களை தூதரகத்தில் சந்திப்பு. 117
மறக்க முடியாத மகிழ்வான நினைவுகள். 118
நற்பணிக்கு நிதி உதவி. 118
தர்கா நகர் பெரிய பள்ளி மத்ரஸாவின் கட்டிட
அடிக்கல் நாட்டு விழா. 118
இதயத்தில் பதிந்த 2000 ஆம் ஆண்டு. 119
சம்மதித்த பெருந்தகை. 120
நிதி உதவியைக் கண்டு நிம்மதி அடைந்தார். 120
அல்லாஹ்வின் அருளோடு அடிக்கல் நாட்டப்பட்டது. 120
2002 ஆம் ஆண்டின் இனிக்கும் சில நிகழ்வுகள். 121
2003 ஆம் ஆண்டின் சில நிகழ்வுகளும் நினைவுகளும். 121

ஜமாத் கவுன்சில் தலைவர் கலீபதுஷ்ஷாதுலி
மௌலவி மஸா ஆலிம் அவர்களின் வாழ்த்து. 124
ஜும்மா பள்ளிகளின் தர்மகர்த்தாக்கள்
சபைத் தலைவர் ஐ.எல்.எம் சுஐம் அவர்களின் வாழ்த்து. 125
அல்ஹாஜ் அமீர் ஆலிம் முஹம்மது நஜீப்
அவர்களின் வாழ்த்து. 126
செய்கு அஹமது கலீபாவின் தாயார் மண்ணை
விட்டுப் பிரிந்தார். 127
மனம் குளிர வைத்த மத்ரஸா திறப்பு விழா. 128
நெருக்கத்தில் கண்ட சந்திப்பு. 130
சான்றிதழ் கிடைத்தமையும் செவிசாய்த்த தூதுவரும். 130
கண்முன்னே நிழலாடும் நினைவுகள். 131
கலந்துகொண்ட கருந்தரங்கும் ஜனாதிபதியின் வருகையும். 132
நினைவில் பூத்தவை. 133
அல் ஹாஜ் நஜீப் பின் அமீர் ஆலிம் அவர்களின்
ஆசிச் செய்தி. 133
அலைமோதும் நினைவுகள். 134
ஜனாதிபதியுடன் சந்திப்பு. 134
சிலிர்க்கவைத்த நினைவுகள். 135
நிகழ்ந்த சில நிகழ்வுகள். 136
முயற்சியால் மூன்றாவது மாடி. 137
இப்தாரில் எரிபொருள் அமைச்சர். 137
மீரா மஸ்ஜிதின் மூன்றாம் மாடி திறப்பும்
உள்ளம் கவர் சிறப்பும். 137
அடிக்கல் நாட்டு விழா நெஞ்சமதில் ஒளிவீசும் நிலா. 138
விளையாட்டுப் போடம்டிக்கும் பிரதம அதிதியாக... 139
மண்ணில் உள்ளவர்களை ஆதரித்தால் விண்ணில்
உள்ளவன் உங்களை ஆதரிப்பான். 139
ஜனாதிபதியை மீண்டும் சந்தித்தார். 140
மதத் தலைவர்களுடன் மகிழ்வான சந்திப்பு. 140
பெண் ஜனாதிபதியுடன் மற்றுமொரு சந்திப்பு. 141
திறப்பு விழாவும் புத்தக வெளியீடும். 142
ஐக்கிய அரபு இராட்சிய ஜனாதிபதியோடு
இனியதோர் சந்திப்பு. 145
பயாகலை விகாரையில் ஜனாதிபதி மைத்ரியோடு சந்திப்பு 145

நன்றி மறப்பது நன்றன்று. 146
மகத்தான இலவச ஜனாஸா சேவை. 146
சேவைக்குப் பாராட்டு. 147
அனுபவங்கள் கற்க கலாசாலை சென்றார். 147
புதல்வரும், புதல்வியும் MBBS பட்டம். 148
வருமானம் பெற வழி அமைத்தார். 148
இலங்கையின் 69 வது சுதந்திர தினத்தில்..... 149
உயர்ந்த உள்ளங்களின் உயரிய சேவை. 149
ஊழியர்களை கௌரவித்து உள்ளம் நிறைந்தார். 150
மனைவியின் எண்ணத்தை வண்ணமாக்கிய கணவர். 151
நடமாடும் கூடாரச் சேவை தொடர்ந்தது. 151
நல்லடக்கத்திற்கான நற்சேவை. 152
மாணவ மனங்களிலும் நிலைத்தார் 152
நளீம் ஹாஜியார் கலாபீடத்திற்கு நஜீப் ஹாஜியார் விஜயம். 153
புதல்வருடன் 70 வது சுதந்திர தினத்தில் சங்கமிப்பு. 153
மூன்றாம் ஆண்டு நினையு தினம். 154
மஸ்ஜித் தக்வா திறப்பு விழா. 154
பனாப்பிட்டி பள்ளிவாசல் திறப்பு விழா. 154
பெண்கள் பயிற்சி நிலையத்திலும் ஒரு விசேட அதிதியாக. 155
தூதுவர்களை சந்தித்து சேவைகளில் செலித்து நின்றார். 156
ஐக்கிய அரபு இராடசியத்திலும் இலங்கை சிறார்களுக்குக் கலைப் போட்டி. 156
நன்கொடையும் திறப்பு விழாவும். 157
பிரதம அதிதிகளாக தந்தையும் புதல்வரும். 158
மஸ்ஜித் பிலால் அடிக்கல் நாட்டு விழா. 158
மத்ரஸா புணரமைப்பும் பிரதம அதிதியும். 158
இப்படியும் ஒரு விழாவில் விசேட அதிதியாக. 159
சிந்தையைக் கவரும் சிறுவர் பூங்கா. 159
ஞாபகமூட்டல். 160
பெண்களுக்குத் தொழுகை மண்டபம் அத்தியவசியமாகும். 161
மஸ்ஜித் பிலால் திறப்பு விழா. 161
சமுர்த்தி வங்கிக்கு நகல் எடுக்கும் இயந்திரம். 161
புதல்வருடன் தூர்வரைச் சந்தித்தல். 162
33 வருட சேவைக்காக கௌரவிப்பு. 162
களுத்துறை ஸாவியா தறப்பு விழா. 163

அநாதை இல்லம் குளிர்வான உள்ளம். 163
சீருடை வழங்கி சித்தம் குளிர்ந்தார். 164
பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு. 164
சேவைகள் தொடர்கின்றன தர்கா நகர் மஸ்ஜித் நூர். 164
ஆளுநரைச் சந்தித்தல். 165
நூல் வெளியீடும் இனாடாக வழங்கப்பட்டமையும். 165
மஸ்ஜிதுல் புஹாரி 3 வது மாடிக் கட்டிடம் திறப்பு விழா. 166
அநாதைகளை ஆதரித்தல். 168
நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தால் கிணறுகள். 168
பெண்கள் பாடசாலையில் ஒரு பள்ளி வாயல். 169
சுதந்திர தின விழாவும் பரிசளிப்பு விழாவும். 170
முஸ்லிம் கலாச்சார விவகார செயலகத்திற்கு விஜயம். 170
இப்தார் நிகழ்ச்சி. 171
கிரிக்கட் போட்டியில் சிறப்பு விருந்தினராக. 171
ஆயுள் கால உறுப்பினராக. 171
தூதுவரின் பாராட்டு நெஞ்சமதில் தாலாட்டு. 172
முதன்முதலில் குத்பா பிரசங்கமும் இரண்டாம் மாடி
திறப்பு விழாவும். 173
நூற்றாண்டு விழாவும் முத்திரை வெளியீடும். 174
அடிக்கல் நாட்டு விழாவும் சிறப்புரையும். 174
அனாதை இல்லத்தில் அரபு மொழியில் உரை. 175
முதலாம் ஆண்டு மாணவர்கள் அனுமதி வரவேற்பு நிகழ்வு. 176
சர்வதேச மனித உரிமைகள் ஒருங்கிணைப்பாளராக நியமனம். 176
சபாநாயகருடன் ஒரு சந்திப்பு. 177
கருவறையிலிருந்து கல்லறைவரை 177

# சிறுபராயமும் கல்வியும்

## நஜீப் அவர்களது பிறப்பு.

தர்கா நகர் அமீர் ஆலிம், பாதும்மா தம்பதியினருக்கு 1957 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.20 மணிக்கு தர்கா நகர் ஹாஜியார் வீதியில் அமைந்துள்ள பாதும்மா அவர்களின் தந்தையாகிய முஹம்மது காஸிம் அவர்களது இல்லத்தில் ரபியுல் ஆஹிர் மாதம் பிறை 28 இல் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு “முஹம்மது நஜீப்” எனும் அழகிய பெயர் சூட்டப்பட்டது. நஜீப் என்ற பெயருக்கு “புத்திகூர்மை உள்ளவன்” என்பது பொருளாகும்.

பாலகர் நஜீபின் பாட்டனார் வெளிப்பன்னையைச் சேர்ந்தவர். ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலத்தில் வெளிப்பன்னைத் தொகுதியில் கிராம சேவராக அவர் பணியாற்றியுள்ளார். அமீர் ஆலிம் பாத்தும்மா தம்பதியர்க்கு ஐந்து பிள்ளைச் செல்வங்கள். பாலகர் நஜீப் தனது பெற்றோர்க்கு நான்காவது பிள்ளை. நூருல் கைரியா, முஹம்மது பாயிஸ், பாத்தும்மா சாகிரா ஆகியோர் நஜீபிற்கு மூத்தவர்களாகவும் பைலூர் ரஹ்மா அவருக்கு இளையவராகவும் இருந்தார்கள்.

## “தாய் சொல்லைத் தட்டாதே”
## தட்டியதால் ஏற்பட்ட விபரீதம்.

முஹம்மது நஜீப் சிறுபராயத்தில் இருக்கும்போது அவருக்கு ஏற்பட்ட மெய் சிலிர்க்கும் நிகழ்வொன்றை அவரது குறிப்பேட்டில் பதிவு செய்துள்ளார். அவர் சிறுவனாக இருந்தபோது ஒரு நாள் அவரது தந்தை, சமையலுக்காக கீரைக் கட்டொன்றை வாங்கி வந்திருக்கிறார். அதனைக் கண்ட சிறுவன் நஜீப்,

“உம்மா........ இதே மாதிரியான கீரை பக்கத்தில் உள்ள ஐ.எல்.எம். இன் தோட்டத்தில் ஏராளமாக இருக்கிறதே...... இதை வாப்பா ஏன் காசு கொடுத்து வாங்கி வந்திருக்கிறார்....? நான் போய் உங்களுக்கு வேண்டியளவு பறித்துக் கொண்டு வரட்டுமா....?” என்று ஆர்வமாய்த் தாயாரிடம் கேட்டார். ஆனால் அவரின் தாயாரோ பதறிப் போய்விட்டார்.

“ஐயோ வேண்டாம்..... நீ அங்கு போய் கீரை கொண்டு வர வேண்டாம்..... அது நல்ல கீரை அல்ல.... நச்சுக் கீரை.... அது மட்டுமல்ல அங்கு பூச்சி புழுக்களும் இருக்கும்..... அத்தோடு அக்காணியைச் சுற்றி முட்கம்பி வேலியும் போடப்பட்டுள்ளது.... அதில் நீ சிக்கினால் உனக்கு காயங்களும் ஏற்படலாம்.....” அவரது தாய் அன்போடு அவரை அணைத்து உருக்கமாகச் சொன்னார்.

ஆனாலும் சிறுவன் நஜீப் அதை செவியில் வாங்கிக் கொள்ளவில்லை. ஏனெனில் அவரது வயது அப்படியாக இருந்தது. ஓடிப்போய் தோட்டத்திலிருந்து குறித்த கீரையைக் கைநிறையப் பறித்தெடுத்தார். திரும்பி வரும்போது கம்பிவேலியைத் தாண்டுகையில் கம்பி நஜீபின் கையில் கொழுவிக் கொண்டது. ஆம் அவரது இடது முழங்கைக்கு கீழே முட்கம்பி ஆழமாகப் பாய்ந்தது. சிறுவன் நஜீபிற்கு மிகவும் வேதனையாக இருந்தது. உடனே முதலுதவி செய்யப்பட்டதோடு வைத்தியரினால் தையலும் போடப்பட்டது. இருப்பினும் குணம் கிடைக்கவில்லை. பிறகு களுத்துறை நாகொடை வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு அதன் பின்னரே சுகமடைந்து வீடு திரும்பினார். இந்நிகழ்வால் ஏற்பட்ட தழும்பு தற்போதும் தனது கையிலே அடையாளச் சின்னமாக இருப்பதாகத் தெரிவிக்கும் நஜீப் ஹாஜியார், அது போன்றே மற்றொரு தழும்பும் தனது மனதிலே அழுத்தமாய்ப் பதிந்துவிட்டது என்று நெஞ்சைத் தொட்டுச் சொல்கிறார்.

"உண்மையிலேயே எனது தாய் கூறியது போல் அது நச்சுக் கீரை தான். நல்ல கீரையையும் நச்சுக் கீரையையும் பிரித்தறியும் அறிவு என்னிடம் அப்போது இருக்கவில்லை. அது ஒரு புறமிருக்க எனது அன்புத் தாயின் பேச்சைக் கேட்டிருந்தால் இந்த நிலைமை எனக்கு வந்திருக்காது." என்று கலங்கிய மனதுடன் கூறும் அவர் இது தனக்கு நல்லதொரு படிப்பினையாகவும் அமைந்தது என்கிறார்.

*தாய் என்பவள் ஓர் விலைமதிக்க முடியாத படைப்பு. ஏனெனில் இந்த சுயநல உலகில் எப்போதும் நீ மகிழ்ச்சியாய் இருப்பதைப் பார்க்க விரும்புபவள் அவள் மட்டுமே.*

## துள்ளித்திரியும் புள்ளி மானாய் பள்ளிப் பருவத்தில்.......

கள்ளமே இல்லாத வெள்ளை உள்ளத்துடன் மான் போன்று துள்ளித் திரிந்த பள்ளிப் பருவம் அது. 1963 ஆம் ஆண்டு ஆரம்பக் கல்வியைத் தொடங்குவதற்காக சிறுவன் நஜீப் தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரியில் சேர்க்கப்பட்டார். ஸாஹிராவில் ஒரு சில வருடங்கள் கற்றுக் கொண்டிருந்தபோது ஏதோ ஒரு காரணத்தால் அவர் அல்ஹம்றா மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டார். அங்கும் கல்வியினை திறம்படக் கற்ற போதிலும் ஆரம்ப கல்வி கற்ற இடமே அவருக்கு விருப்பமானதாக இருந்தது. எனவே மீண்டும் ஸாஹிராகக் கல்லூரிக்கே திரும்பிய அவர் உற்சாகத்துடன் கல்விப் பயணத்தைத் தொடர்ந்தார். 1970 ஆம் ஆண்டளவில் சிறுவன் நஜீப் பாடசாலைக்குச் சென்ற அதே வேளை மாலை நேரங்களில் அரபு மொழி மற்றும்

மார்க்கக் கல்வியைக் கற்பதற்காக அரபு மத்ரஸாவுக்கும் செல்லத் தொடங்கினார். (இம் மத்ரஸா 2004 ஆம் ஆண்டு நஜீப் ஹாஜியார் அவர்களினால் புதுப் பொலிவுடன் கட்டப்பட்டு அவர்களின் கரங்களினாலேயே திறந்து வைக்கப்பட்டமையை வாசகர்களாகிய நீங்கள் பின்னர் படிப்பீர்கள்.)

அதே போல் 1970ம் ஆண்டின் முதற் பகுதியில் அன்றைய பிரதமர் டட்லி சேனாநாயக்க அவர்கள் பேருவளை சீனன்கோட்டைக்கு விஜயம் செய்தபோது நஜீப் அவர்களும் அவரது பாடசாலை மாணவர்களும் சேர்ந்து பிரதமரை வரவேற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். படிப்பில் கெட்டிக்காரனாக இருந்தபோதும் காலப் போக்கில் சிறுவன் நஜீபுக்கு பாடசாலை செல்வதில் ஆர்வம் குறைந்து கொண்டு சென்றது. பெற்றோரின் விருப்பத்திற்கு அப்பால் தனது மனம் நாடியதைச் செய்ய விரும்பினார். 1972 ஆம் ஆண்டு பாடசாலை செல்வதை விட்டும் சற்று விலகியதால் அவரது வாழ்க்கை சுமார் மூன்று மாத கால அளவு வீட்டிலே பயனின்றிக் கழிந்தது. நாட்கள்தான் யாருக்காகவும் காத்திருப்பதில்லையே! அது தன்பாட்டுக்கு ஓடிக் கொண்டிருந்தது. சிறுவன் நஜீபின் இந்நிலையை அவதானித்த பெற்றோரின் மனதில் மாற்றுச் சிந்தனை ஒன்று உதித்தது.

நஜீபை மார்க்கக் கல்வி கற்கச் செய்தால் என்ன என்பதுதான் அந்தச் சிந்தனை. அந்தச் சந்தர்ப்பத்தில் அதுவே அவர்களுக்கும் சரியாகப்பட்டது. ஏனெனில் முப்பத்தைந்து மாணவர்கள் உள்ள வகுப்பில் மூன்றாவது இடத்தைப் பெற்றதோடு வேறு பரீட்சைகளிலும், போட்டிகளிலும் நற் சான்றிதழ்களைப் பெற்றுவந்த தமது பிள்ளையின் மனநிலையில் ஏற்பட்டிருந்த சரிவுக்கு அவரை மார்க்கக் கல்வியில் நுழைத்து விட்டால் நிச்சயமாக ஒரு மாறுதல் கிடைக்கும் என அவர்கள் நம்பினர். அதனால் அவர்கள் தமது அபிப்பிராயத்தை மகன் நஜீபிடம் கூறிய போது அவர் அதை மறுத்தார். ஏனோ அப்போது அவருக்கு அது கூட அலுப்பாகவும் வெறுப்பாகவுமே தோன்றியது. கற்க வேண்டும் என்ற சிந்தனை அவரது சிந்தையில் படர்ந்திருந்த போதிலும் தனது எதிர்காலத்தைப் பற்றி யோசிக்கும் அளவுக்கு அது அவரை வழிநடத்தாமையே அதற்கான காரணம். அந்நாட்களில் பெற்றோர் அவரைப் பற்றி சிந்திக்காத நாட்களே இல்லை. நிலைமைகள் சீராகும் நாள் வரும் வரை கவலையோடு காத்திருந்தனர். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தனர்.

*கல், கற்றுக் கொடு, கற்க உதவு, உலகமே மாறும்.*

## ஆசை யாரைத்தான் விட்டது? அரபு மார்க்கக் கல்வி கற்க காலிக்குப் பயணம்.

1972 ஆம் ஆண்டு கால கட்டமது. ஓடி ஆடித்திரியும் விளையாட்டுப் பருவத்திலும் மனச் சோர்வுற்றிருந்த சிறுன் நஜீபின் உள் மனதை அவரது அன்புத் தந்தை நன்கு புரிந்து கொண்டார். மகனின் எண்ணத்தை மாற்றி எப்படியாவது ஒரு உயர்ந்த நிலைக்கு கொண்டு வர வேண்டுமென்று அவர் நினைத்தார். விடாமுயற்சி செய்ய வேண்டும் என்ற சிந்தனையுடன் செயலில் இறங்கினார். ஒரு நாள் தனது மகனை அழைத்து வீட்டு முற்றத்தைக் காட்டி

"நஜீப்.... முற்றத்தில் வளர்ந்திருக்கும் புல் பூண்டுகளை துப்பரவு செய்தால் உன்னை நான் கொழும்பு, காலி எல்லா இடங்களுக்கும் கூட்டிச் செல்வேன். செய்வியா...?" என்று கேட்டபோது நஜீபின் நெஞ்சில் ஆசை அலை பாயத் தொடங்கியது. சந்தோஷம் மின்னியது. சந்தன மலராக அவர் மலரத் தொடங்கினார். உடனே மண்வெட்டியை எடுத்து வந்து துப்பரவு செய்தார். பயணம் செல்வதில் அவருக்கு அத்தனை பிரியம்.

நஜீபின் உற்சாகத்தைப் பார்துக் கொண்டிருந்த அவரது தந்தையின் இதயம் பனிக்கட்டியாய்க் குளிர்ந்தது. தான் சொன்னபடியே மறுநாள் மகனை காலிக்கு அழைத்துச் சென்றார் அவர். காலி சோலையில் அமைந்திருக்கும் முபாரக் மௌலானாவின் தக்கியாவுக்குக் கூட்டிச் சென்று அன்குள்ளவற்றைக் காட்டினார். அந்த மத்ரஸாவில் மார்க்கக் கல்வியைக் கற்க வந்திருந்த மாணவ மணிகள் வெண்புறாக்களாய்ச் சிறகடித்துப் பறந்து கொண்டிருப்பதைக் கண்டு பரவசமடைந்தார் நஜீப். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அங்கு வந்து கல்வி கற்கும் சகோதரர்களுடன் தானும் கதைத்துப் பல விடயங்களையும் அறிந்து மகிழ்ந்தார் நஜீப்.

இனி ஆசை வராதா என்ன? மத்ரஸா மாணவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த நஜீபின் உள்ளத்தை அந்த மாணவர்களின் இதமான வார்த்தைகள் வெகுவாகக் கவர்ந்தன. அவர்களுடன் சேர்ந்து தானும் அங்கு கல்வி கற்க ஆசைப்பட்டார் நஜீப். அவரது விருப்பத்தை அந்த மாணவர்களிடம் சொல்லி தனது தந்தையிடம் இது விடயமாக பேசும்படி கேட்டுக் கொண்டார். அவர்களும் தம்மோடு புதியதோர் உறவு இணையப்போவதை நினைத்து பரவசமைடைந்தனர். நஜீபை தம்மோடு படிக்க வைக்குமாறு அவரது தந்தையிடம் வேண்டினர். நஜீபின் தந்தைக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. மத்ரஸாக் கல்வியை முதலில் கேட்டபோது மறுத்த நஜீப் இப்போது அதனை விரும்பி தானே அங்கு சேர ஆசைப்படுவது தந்தைக்கு மன நிறைவைத் தந்தது. ஏதோவொரு மனச் சிக்கலில் சிக்கி கல்வி

கற்பதில் இருந்த ஆசையை விட்டும் விலகியிருந்த தனது மகன் மீண்டும் கற்பதற்குத் தன்னைத் தயார்படுத்தியிருப்பது கண்டு இறைவனுக்கு நன்றி செலுத்தினார். நஜீபின் தந்தை.

தான் மார்க்கக் கல்வி கற்க வேண்டும் என்ற ஆசை நஜீபின் மனதில் இன்னுமின்னும் அதிகரித்தது. அவரது இந்த மாற்றத்தைக் கண்ட தந்தை அவரை பேருவளை சேகு முஹம்மது பின் அப்துஸ்ஸமி அவர்களிடம் அழைத்துச்சென்று முதன் முதலில் அரபு மார்க்கக் கல்வியை ஆரம்பம் செய்து வைக்கச் சொன்னார். மாஷா அல்லாஹ் அதன் படி அன்னவரும் நஜீபுக்கு ஆரம்ப மார்க்கக் கல்வியை புகட்டி வைத்தார்.

மின்னல் வெட்டினாற்போல் சில காலங்கள் மறைந்தன. நஜீப் அவர்கள் பொன்னான நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. பொதுவாக சிறுவர்கள் மாலை நேரத்தை விளையாட்டில் கழிப்பார்கள். நஜீப் அந்த நேரத்தில் தான் மார்க்கக் கல்வியை கற்றால் என்ன என்று நினைத்தார். 1970ல் தந்தையின் விருப்பத்துடன் தர்கா நகர் பெரிய பள்ளி அரபுக் கலாசாலையில் மார்க்கக் கல்வி கற்பதற்காக மாலை நேர வகுப்புக்குச் சென்றார் அவர். அந்த இனிய மாலைப் பொழுதுகள் அவருக்குப் பெறுமதி மிக்க பொன் மாலைப் பொழுதுகளாகவே கழிந்தன.

## குறும்புக்காரனாக இருந்து மாமனிதனாக மாற அல்லாஹ்வின் அருள் கிடைத்தல்

நஜீபின் தந்தை அம்பலாங்கொடையில் ஒரு சாப்பாட்டுக் கடை திறந்து வைத்தார். அந்தக் கடையை நஜீபின் சகோதரர் பாயிஸ் அவர்களே நடாத்தி வந்தார். அந்நாட்களில் நஜீப் மிகவும் குறும்புக்காரராக இருந்தார். நஜீபின் தாயார் அவரது சில்மிசங்களையும் குறும்புத்தனங்களையும் கண்டு சில வேளைகளில் கடிந்து கொள்வார்.

“இவன் பெண் பிள்ளையாக பிறந்திருந்தால் அடுப்பங்கரைக்காவது உதவியாக இருந்திருப்பானே! படிப்புக்காக இவனுக்கு தந்தை எவ்வளவு பணத்தை வீணாகச் செலவு செய்கிறார்.” என்று அவர் கவலைப்படடுக் கொண்டதும் உண்டு. இதனால் நஜீபின் தந்தை அவரை விடுமுறை நாட்களில் அந்த ஹோட்டலுக்கு அழைத்துப் போவது வழக்கம். அப்படி ஒரு விடுமுறை நாளில் நஜீப் அங்கு சென்றார்.

என்ன அதிசயம், கடையின் முகப்பிலே வைக்கப்பட்டிருந்த பதாகையில் மூன்று மொழிகளிலும் “நஜீப் ஹோட்டல்” என

பெயரிடப்பட்டிருப்பதைக் கண்டார். ஆச்சரியப்பட்டார் நஜீப். அவரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வடிந்தது. அவருக்கு சகோதர சகோதரிகள் இருந்த போதும் தன் மீது பாசம் கொண்டு "நஜீப்" என்ற தனது பெயரைக் கடைக்கு சூட்டி இருப்பதைக் கண்டு தனது பெற்றோரின் மீது அவருக்கிருந்த மதிப்பு மென்மேலும் உயர்ந்தது. அவர்களின் பெருந்தன்மையையும் உயர்ந்த செயல்களையும் எண்ணி ஆனந்தக் கடலில் மூழ்கினார் அவர்.

பெற்றோர் மேற்கொண்ட இப்படியான நடவடிக்கைகள் நஜீபின் உள்ளத்தில் ஒரு மாற்றத்தைத் தோற்றுவித்தது. அவர் தனது மனதை உறுதிப்படுத்திக் கொண்டார். எல்லாம் வல்ல இறைவனிடம் இரு கரமேந்தி "இனி நான் ஒரு நல்ல பிள்ளையாக எவ்விதமான வீண் விளையாட்டுக்களுமின்றி உனக்கு அஞ்சியவனாக பெற்றோர் சொல் கேட்டு மார்க்கத்துக்கும் சமூகத்துக்கும் பிரயோசனமுள்ளவனாக இருக்க யா அல்லாஹ் நீ எனக்கு அருள் புரிவாயாக" என்று பிரார்த்தனை செய்தார்.

பிரார்த்தனைகளின் மகிமை மிகவும் உன்னதமானது. சிறுவன் நஜீபின் மனதில் உதித்த மகத்துவமான எண்ணம் ஈடேறி பிற்காலத்தில் வண்ணக் கோலம் போட்டு அவன் மாமனிதனாக மாற அந்தப் பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டுள்ளமை ஆச்சரியப்படத்தக்க விடயம் அல்ல. அல்லாஹ் தான் விரும்பியவர்களின் பிரார்த்தனைகளை அங்கீகரிக்கிறான். அவர்களை வாழ்நாளில் உயர்வடையச் செய்கிறான்.

*ஆசை என்பது முடிவில்லாத விளையாட்டு என்பதை நீங்கள் புரிந்து கொண்டால்*
*சாதனையாவதும் வேதனையாவதும் உங்கள் கையில்.*

## காலி மத்ரஸாவில் கால் பதித்த வேளையிலே.

எந்தவொரு தந்தையும் தனது பிள்ளையை நல்லதொரு நிலைமைக்கு கொண்டுவரத்தான் நினைப்பார். அதே போல் நஜீபின் தந்தையும் தனது மகனை மார்க்கத்தில் சிறந்தவராக, ஒரு கல்விமானாக உயர்த்திப் பார்க்க வேண்டுமென்றே நினைத்தார். அதற்காக அயராது பாடுபட்டார்.

02.03.1972 ஆம் திகதி சில்லென்று வீசிய இளந்தென்றல், இதமாக வருடிச் செல்ல சுகமான குளிரின் தடவலோடு இனிய காலைப் பொழுது மலர்ந்தது. வசந்த காலத்து வண்ண மலராக நஜீப் காணப்பட்டார். நெஞ்சில் சூழ்ந்திருந்த இருள் மெல்ல மெல்ல விலகி ஒளி கொடுக்கத் தொடங்கியது. ஆம் நஜீபை அவரது தந்தை காலி

சோலையிலிருக்கும் முபாரக் மௌலானா தக்கியா மத்ரஸாவில் இஸ்லாமிய மார்க்கக் கல்வியை அரபியில் கற்பதற்காக அழைத்துச் சென்றார். ஆரம்பக் கல்வியை அப்துல் ரஹ்மான் ஆலிம் கற்பிக்க, நஜீபின் இதயம் சந்தோச வானில் சிறகடித்துப் பறக்க ஆரம்பித்தது.

நஜீப் மார்க்கக் கல்வியில் பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டிருந்தார். அவருக்கு பகல் போசனமும், இராப் போசனமும் ஹம்ஸா ஹாஜியாரின் வீட்டிலும், இன்னுமொரு ஹாஜியாரின் வீடடிலும் வழங்கப்பட்டது. பகல் சாப்பாட்டுக்காக செல்லும் வேளைகளில் அங்கு இரண்டு சிறார்கள் இருப்பது வழக்கம். அவர்கள் பிறருக்குத் தொல்லை கொடுப்பதில் கெட்டிக்காரர்கள். அந்த அளவு குறும்புக்காரர்கள். நஜீப் அங்கு சென்றால் சமையல் தயாராகும் வரை காத்திருக்க வேண்டியிருக்கும். அந்தக் காத்திருப்பு வேளையில் அச்சிறார்கள் நஜீபுக்கும் பெருந் தொல்லை கொடுத்தார்கள். காலப்போக்கில் பிள்ளைகளின் வெகுளித் தனமும் தொல்லையும் அவருக்கு பழக்கப்பட்டிருந்த போதும், அது அவரது பொறுமையை மிகவும் சோதித்தது. பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தார் அவர்.

ஒரு நாள் நஜீபின் உடையில் அவர்கள் சேற்றை அள்ளிப் பூசிவிட்டதுடன் மேனியில மண்ணையும் போட்டார்கள். அந்தத் தருணத்தில் அவர் பொறுமையை இழக்க வேண்டியதாயிற்று. அவருக்கு வந்த கவலையை அடக்கிக் கொண்டு யாருக்கும் சொல்லாமல் சாப்பிடாமலேயே மத்ரஸாவுக்குத் திரும்பிவிட்டார். பசியின் கொடூரம் அதிகரிக்கவே நஜீப் பாணும் பழமும் வாங்கிச் சாப்பிட்டார். நடந்த விடயத்தை அதிபரிடம் சொல்லி வேதனைப்பட்டார். அதன் பின் அதிபர் இரவுச் சாப்பாட்டை வழங்கும் ஹம்ஸா ஹாஜியாரின் வீட்டிலேயே பகல் சாப்பாட்டையும் பெற ஏற்பாடு செய்து கொடுத்தார். நஜீபை மற்ற நண்பர்கள் “சிறுவர்களின் அட்டகாசத்தால் சாப்பாட்டை வெறுத்த வாலிபன்“ என்று கேலி செய்து சிரித்தனர். நஜீப் மூன்று, நான்கு மாதங்களுக்கு ஒருமுறைதான் வீடு வருவார். வீட்டுக்கு வருவதென்றால் அவருக்கு அப்படியொரு சந்தோஷம். அந்த நாள்களில் எல்லாம் அவருக்கு கொண்டாட்டம் தான்.

*நல்லதை நாடு! நாளும் சிறக்கும் வாழ்வும் ஜொலிக்கும்.*

## பிஞ்சு நெஞ்சின் துஆ அங்கீகரிக்கப்பட்டது.

1973 ஆம் ஆண்டு காலி புகையிரத நிலையத்துக்கு முன்பாக அமைந்திருக்கும் பூங்காவுக்கு நஜீப் சென்றிருந்தார். நஜீபின் கையில் 50 சதம் மாத்திரமே இருந்தது. அங்கே ஒருவன் பனங்காய்களை விற்றுக் கொண்டிருந்தான். பதினைந்து வயதை எட்டியிருந்த நஜீபுக்கு

பனங்காய் சாப்பிட வேண்டும் போலிருந்தது. வியாபாரியிடம் சென்று விலையைக் கேட்ட போது இரண்டு பனங்காய்களுக்கு 25 சதம் என்றார். கையில் இருப்பதோ 50 சதம். பனங்காய் வாங்கினால் வேறு தேவைகளுக்கு காசு போதாமலாகிவிடும் என்பதால் அவர் பனங்காய் வாங்காமல் சோகத்தோடு பூங்காவில் ஓரிடத்தில் அமர்ந்தபடி யோசித்த வண்ணம் இருந்தார். அவர் உட்கார்ந்திருந்த இடத்தில் பனை மரமொன்று அவரைப் பார்த்துப் புன்னகைத்தது. அவருக்கு ஆச்சரியம். இறைவனிடம் இரு கரமேந்திப் பிரார்த்தித்தார். உடனே இரண்டு பணங்காய்கள் நஜீபின் அருகே வீழ்ந்தன. சந்தோசத்துடன் அவற்றை எடுத்துச்சென்று தனது சக தோழர்களுடன் பகிர்ந்து சாப்பிட்டார் அவர். பிஞ்சு நெஞ்சின் பிரார்த்தனையை அல்லாஹ் நிறைவேற்றியமை மகிழ்ச்சிக்குரியதே!

நஜீப் மார்க்கக் கல்வியை நெஞ்சோடு சுமந்து தொடர்ந்து கொண்டிருக்கும் வேளை 1975 ஆம் ஆண்டில் தவிர்க்க முடியாத சில காரணங்களினால் மத்ரஸாவை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது. கனத்த இதயங்களைச் சுமந்தபடி சோகத்தோடு மாணவர்கள் வீடு திரும்பினர். நஜீப் தனது பொன்னான நேரத்தை மீண்டும் வீணடிக்க விரும்பவில்லை. அவருடைய தந்தையின் எண்ணமெல்லாம் “காற்றுள்ள போதே தூற்றிக் கொள்” என்பதாக இருந்தது. அவரும் தந்தையின் எண்ணப்படி விடா முயற்சி செய்து படிக்க வேண்டும் என்றே நினைத்தார். அருட்கொடையாகக் கிடைத்துள்ள காலத்தை பயனுள்ளதாக அமைத்துக்கொள்ள வேண்டும் என்றே எண்ணினார்.

எனவே 1975 ஆம் ஆண்டு அரபுக் கலாசாலையில் அதிபராக கடமை புரிந்து ஒய்வு பெற்றிருந்த காலி தடாலியைச் சேர்ந்த நஜிபுதீன் ஆலிமிடம் மார்க்கக் கல்வியை தொடர்வதற்காக நஜீபை அவரது தந்தை அனுப்பினார். சிறிது காலத்தில் ஆலிம் ஆவர்கள் நோய்வாய்ப்பட்டு காலஞ்சென்றுவிடவே தர்கா நகரைச் சேர்ந்த மற்றுமொரு ஒய்வு பெற்ற அதிபர் அப்துல் ரசாக் ஆலிமிடம் நஜீப் அனுப்பப்பட்டார். சிறிது காலத்தில் அவரும் மரணித்து விட நஜீபின் தந்தையின் நண்பரான பாணந்துறை மத்ரஸாவின் அதிபரிடம் கல்வியைத் தொடரச் சென்றார் நஜீப். ஆனால் அவரோ மீண்டும் ஆரம்பத்திலிருந்தே கல்வியைத் தொடர வேண்டும் எனக் கூறியதால் துரதிஷ்டவசமாக அன்றிலிருந்து நஜீபின் மார்க்கக் கல்வி கற்றல் முடிவுக்கு வந்தது.

*நல்ல நேரத்தில் நல்லதைக் கேளுங்கள்! இறைவன் நிச்சயம் ஏற்றுக் கொள்வான்.*

ஆனாலும் அவர் சிறுபராயத்தில் கற்ற அரபு மொழிக் கல்வி பிற்காலத்தில் அவருக்கு எவ்வாறெல்லாம் பயனளித்தது என்பதை இந்நூலைத் தொடர்ந்து வாசிக்கும் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

கல்விக்கு அழிவில்லை. தாம் கற்ற கல்வி ஒருபோதும் வீணாகப் போவதில்லை. அது ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தமக்குக் கைகொடுக்கும் என்பதை நஜீப் ஹாஜியார் அவர்களின் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து எல்லோரும் கற்றுக் கொள்ளலாம்.

# இளமைக் காலமும் தொழில் முயற்சிகளும்

## உறுதி கொண்டால் உதயம் காணலாம்.

ஒரு மனிதனுக்கு மனதில் உறுதியும், துணிச்சலும் கண்டிப்பாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவனது வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காணலாம். வாழ்க்கையும் செழிப்பாக அமையும். நஜீபின் மனதிலும் உறுதியும், துணிவும், நம்பிக்கையும் ஒளி வீசிக்கொண்டிருந்தன. எப்படியாவது விடா முயற்சி செய்து வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காண வேண்டும் என்று அவர் நினைத்தார்.

தர்கா நகரில் இவரது சகோதரர் பாயிஸ் சில்லறைக் கடையொன்றை நடத்தி வந்தார். நஜீப் அவர்களும் அந்தக் கடைக்கு உதவியாக இருந்தார். கொஞ்ச நாட்கள் கழிந்தன. நஜீபின் மனதில் தானும் தனியாக ஒரு கடையை நடத்த வேண்டும் என்ற எண்ணம் உதயமானது. இறைவனின் நாட்டத்தால் ஊரில் பிராதான இடமொன்றில் ஒரு கடை கிடைத்தது. அந்தக் கடையில் பழவகைகளுடன் குளிர்பான வியாபாரம் செய்தால் நன்றாக இருக்குமென நஜீப் நினைத்தார். ஆனால் அதற்கு அவரிடம் பணம் இருக்கவில்லை, யோசித்தார். அந்தக் காலத்தில் மூவாயிரம் ரூபா இருந்தால் சமாளித்து கடையைத் திறந்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் குறிப்பிட்ட தொகையை தனது தந்தையிடம் கேட்டார். தந்தைக்கு அதில் இஷ்டமில்லை போலும் அவர் அதற்கு உடன்படாமல் மறுத்துவிட்டார். காரணத்தை தந்தையிடம் வினவியபோது,

“நீ கடை செய்து பழக்கப்பட்டவனல்ல... முதலில் எங்காவது ஒரு கடையில் வேலைபார்த்து வியாபாரத்தைப் பற்றி தெரிந்து கொண்டு வா....” என்று சொல்லி விட்டார். இந்த வார்த்தை நஜீபின் இதயத்தில் ஈட்டியாய்ப் பாய்ந்தது. அவருக்கு வைராக்கியம் பிறந்தது. பொத்துக் கொண்டு வந்த கோபத்தை அடக்கியவாறு தந்தையிடம் சொன்னார்.

“வாப்பா..... நான் எவர்கிட்டயும் தலை குனிந்து வேலை செய்பவனல்ல... எனக்கென்று ஒரு மரியாதை இருக்கிறது.... நினைத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை இருககிறது... எனது முயற்சி ஒரு நாளும் வீணாகாது.... உங்கள் பணம் எனக்குத் தேவையில்லை.” என்று சொல்லிவிட்டு வேகமாக அவ்விடத்தை விட்டு நகர்ந்துவிட்டார். சில நாட்கள் முயல் வேகத்தில் மறைந்தன. மூவாயிரம் ரூபாவுக்காக விழிகள் மூடாது வழி தேடினார் நஜீப். காலியில் தெரிந்த பணம் படைத்த ஒருவரிடம் கடன் உதவி கேட்டார். நஜீபின் உண்மை நிலவரத்தைப் புரிந்திருந்த போதும் அவர் பொய் காரணங்களைச் சொல்லி தட்டிக்களித்துவிட்டார். அவரிடம் பரந்த மனமோ, திறந்த குணமோ, உதவி செய்யும் எண்ணமோ துளி கூட

இருக்கவில்லை. கவலையும் வேதனையும் நெஞ்சை அடைக்க ஏமாற்றத்தோடு வீடு திரும்பினார் நஜீப்.

*துணிந்து நில், உறுதியாய் இரு, உதயம் கண்டு உலகையே ஆழலாம்.*

## கடன் பெற்றுக் கண் திறந்தார்.

முன் வைத்த காலை பின்னே வைக்கக் கூடாது என்ற எண்ணத்தில் எப்படியாவது காரியத்தில் இறங்கி செயல்பட வேண்டு என்று நினைத்தார் நஜீப். 1976 ஆம் ஆண்டின் முதல் பகுதி அது. கோப்பி விலை உயர்ந்திருந்த காலம். 500 ரூபாய் இருந்தால் கோப்பி வியாபாரம் செய்து தான் எதிர்பார்த்த 3000 ரூபாயையும் சேர்த்து விடலாம் என்று நினைத்தார் அவர். நஜீப் அந்த 500 ரூபாவைக் கூட தந்தையிடம் கேட்கக் கூடாது என்ற முடிவில் இருந்தார். சுய முயற்சியில் முன்னேறிக் காட்ட வேண்டும் என்ற எண்ணம் அவரது நெஞ்சு முழுவதும் படர்ந்திருந்தது.

அப்போது தான் பேருவளையைச் சேர்ந்த அவரது நண்பர் (கராக்கொல) முஹம்மது ஹாஜியாரின் முகம் அவரது கண் முன்னே வந்து பளிச்சிட்டது. அவரிடம் போய் 500 ரூபாய் கடனாகக் கேட்டால் நிச்சயமாகத் தருவார் என்ற நம்பிக்கையோடு அவரிடம் சென்றார். முஹம்மத் ஹாஜியார் ஒரு மாணிக்கக் கல் வியாபாரி. இளகிய மனம் உள்ளவர், எவருக்கும் உதவிக்கரம் நீட்டுபவர். நஜீப் அவரைப் போய்ச் சந்தித்தபோது பூமுகத்தில் புன்னகை தவழ வரவேற்று வந்த விடயத்தை கேட்டார் ஹாஜியார். ஆனால் அவர் தன்னிடம் அப்போது கைவசம் பணம் இல்லையென்றும் பழுதான சில மாணிக்கக் கற்களை காட்டி இவற்றை விற்று 500 ரூபாவைப் பெற்றுக்கொள்ளும்படியும் கூறி அக்கற்களைக் கொடுத்தார். அந்த நேரத்தில் நஜீபிற்கு அது பெரிய உதவியாக இருந்தது. நன்றிப் பெருக்குடன் மாணிக்கக் கற்களைப் பெற்றுக் கொண்ட நஜீப் தான் அவற்றை விற்பனை செய்வதுபோல் கற்பனைக் கோட்டைகளைக் கட்டியவாறு மாணிக்கக் கல் வியாபாரத்தில் பிரபலமான பேருவளை சீனன்கோட்டைக்கு சென்று அதை விற்பதற்காக கடுமையாக பாடுபட்டார். ஆனால் அவர் கூறிய விலைக்கு அந்தக் கற்களை வாங்க எவரும் முன்வரவில்லை.

அதனால் கவலையடைந்த நஜீப் சோர்ந்து போனவராய் தனது மைத்துனரைச் சந்தித்து அவரிடம் விடயத்தைச் சொல்லி மன வேதனைப்பட்டார். நஜீபின் நிலைமையைப் புரிந்து கொண்ட மைத்துனர் அவரைக் கொழும்புக்கு அழைத்துச் சென்று அந்த மாணிக்கக் கற்களை ஒரு வியாபாரிக்கு 403 ரூபாய்களுக்கு விற்றுக் கொடுத்தார். அந்தக் கற்களுக்கு அளவுதான் கிடைக்கும் என்ற

திருப்தியுடன் அப்பணத்தைப் பெற்றுக்கொண்டு கற்களின் உரிமையாளரான நண்பரைச் சந்தித்து விபரங்களைச் சொல்லிவிட்டு கிடைத்த பணத்தைக் கொண்டு தான் நினைத்த காரியத்தில் இறங்கினார் நஜீப்.

*சிறு துளிதான் பெரு வெள்ளம், காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும்.*

## முயன்றால் முன்னேறலாம்.

அசைக்க முடியாத நம்பிக்கையோடு நஜீப் கோப்பி வியாபாரம் செய்ய தயாரானார். தர்கா நகர் வடக்கில் ஒரு முஸ்லிம் கிராமம். அங்கு அவருடைய தந்தையின் சிறிய தாயாரின் வீடு இருந்தது. சிறிய தாயாரின் பேரப் பிள்ளைகளின் ஒருவரான சகோதரருடன் நஜீப் ஒரு நாள் அங்கு சென்று தொடர்பு கொண்டார். கிராமங்களுக்குப் போய் குறைந்த விலையில் கொஞ்சம் கொஞ்சமாக கோப்பி விதைகளை வாங்கிச் சேகரித்து அதைக் கூடிய விலைக்கு விற்பனை செய்வோம் என்று தனது அபிப்ராயத்தைக் கூறி அவரை உதவிக்கு அழைத்த போது அவரும் விருப்பத்தோடு வருவதற்குச் சம்மதித்தார்.

ஒரு நாள் அதிகாலை நான்கு மணிக்கு நஜீப் கோப்பி விதைகளை நிரப்பிப் போடுவதற்கு சாக்கொன்றும், அளப்பதற்கு சுண்டொன்றும் தயார்படுத்திக் கொண்டு வெய்யிலில் காயாமலும் மழையில் நனையாமலும் இருப்பற்காக தலையில் அணிய தொப்பி ஒன்றையும் எடுத்துக்கொண்டார். தனது புதிய முயற்சியைப் பெற்றோரிடம் சொல்லி அவர்களது பிரார்தனைகளையும் பெற்றுக் கொண்டு பயணமானார். முன்பு குறிப்பிட்ட நபருடன் கோப்பி விளையும் சிங்களக் கிராமங்களுக்குப் போய் 150 ரூபாய்களுக்கு 28 இறாத்தல் கோப்பி விதைகளைச் சேகரித்தார். கையில் மீதமாக இன்னும் 250 ரூபாய்கள் பணம் இருந்தது நஜீபுக்குத் திருப்தியைக் கொடுத்தது. அந்தி சாய்ந்து விட்டதனால் மறுநாள் வேறு கிராமங்களுக்குச் சென்று பணியைத் தொடரலாம் என்று இருவரும் தீர்மனித்தனர். இருள் சூழும் அவ்வேளையில் சிறிய தாயாரின் வீட்டுக்குத் திரும்பிச் சென்றுகொண்டிருந்தனர். அப்போது சந்தேகத்திற்கிடமான சிலர் அவர்கள் இருவரையும் பின்தொடர்ந்து வந்து “எங்களிடமும் நல்ல கோப்பி இருக்கிறது, குறைந்த விலைக்குத் தருகிறோம்” என்று சொன்னார்கள். அவர்களின் பேச்சையும், முகபாவத்தையும் அவதானித்த நஜீப், அவர்கள் மோசடிக்காரர்கள் என்பதை உணர்ந்து கொண்டார். அவர்களுடன் பேச்சுக் கொடுத்து சிக்கலில் மாட்டிக் கொள்ளாமல் இருவரும் அவ்விடத்தை விட்டு வேகமாக நகர்ந்து சிறிய தாயாரின் வீட்டுக்குத் திரும்பிவிட்டார்கள்.

*எட்டும் வரை எட்டு, முயற்சியை கை விடாதே வானை தொட்டு சாதனை புரியலாம்.*

## கூட இருந்து குழி பறித்தல்.

காலையிலிருந்து முழு நாளும் நஜீபும், அவருடன் சென்றவரும் ஊரூராய்ச் சுற்றித் திரிந்துவிட்டு வந்ததால் களைத்துப் போயிருந்தார்கள். நேரத்தோடு சாப்பாட்டை முடித்துக் கொண்டு படுக்கைக்குச் செல்ல நினைத்தார் நஜீப். ஆனால் அப்போது அவர் தந்தையின் சிறிய தாயார் கதை சொல்ல ஆயத்தமானார். நஜீபுக்கு அவர்மீது எப்போதும் மரியாதை இருந்ததனால் நண்பரோடு சிறிய தாயாரின் கதைக்குச் செவிமடுக்கலானார். சற்று நேரம் செல்லும்போது இருவருக்கும் தூக்கம் கண்களில் முட்டி மோதியது. இருந்தாலும் சிறிய தாய் தம்மைத் தப்பாக நினைத்துவிடக் கூடாது என்பதற்காக நஜீப் கதையைக் கேட்டுக் கொண்டே இருந்தார். நேரம் பம்பரம் போல சுழன்று கொண்டிருந்தது.

“உம்மம்மா... நேரம் நன்றாகச் சென்றுவிட்டதே, களைப்பு வேறு, தூங்குவோமா?” நஜீபுடன் இருந்தவர் தகப்பனின் சிறிய தாயைப் பார்த்துக் சொன்னார். அவரும் நிலைமையை உணர்ந்தவராய் சரியென தலையசைத்தார். மூவரும் படுக்கைக்குச் சென்றனர். நஜீப் தான் கொண்டு வந்த கோப்பிச் சாக்கை வாசலில் சாய்த்து விட்டு, அணிந்திருந்த சேட்டைக் கழற்றி தான் உறங்கும் கட்டிலில் ஒரு பக்கமாக வைத்து விட்டே தூங்கச் சென்றார்.

அதிகாலை நான்கு மணியிருக்கும், எங்கோ தூரத்தில் நாய் ஊளையிடும் சப்தம் செவியில் வந்து பயங்கரமாக மோத வீட்டில் உள்ளவர்கள் எல்லோரும் விழித்துக் கொண்டனர். நஜீப் மட்டும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

“ஐயோ அந்தப் புள்ளைய எழுப்புங்கோ” இது அந்த வீட்டில் உள்ள பெண்மணியின் குரல். என்ன நடந்தது? என்ற கேள்விக் குறியோடு திடுக்கிட்டவராய் நஜீப் சட்டென எழுந்து கட்டிலில் அமர்ந்து கொண்டார். தகப்பனின் சிறிய தாய் கண்ணை மூடிட்டாவோ அழுகைச் சத்தம் கேட்குதே. அடுக்கடுக்காய் எழுந்த சந்தேகங்களுடன் புலம்பிக் கொண்டிருந்தவர்களை நெருங்கி என்ன நடந்ததென்று கேட்டார் நஜீப்.

“தம்பியைக் காணோம். வாசல் கதவு திறந்திருக்கு. கோப்பிச் சாக்கும் இல்லையே” அவர்களின் பதிலைக் கேட்டு அதிர்ந்து போனார் நஜீப். உடனே போய் தனது சேர்ட் பொக்கட்டைப் பார்த்தார். அதில் இருந்த 250 ரூபாய்களும் மாயமாகி இருந்தது. நஜீபுக்கு உலகமே வெறுத்தது போலிருந்தது. காரணம் அவரிடத்தில் பஸ்ஸுக்குக் கூட பணம் இருக்கவில்லை. கூடவே இருந்து ஒன்றாக உண்டு களித்த அவன் இப்படிச் செய்வான் என்று நஜீப் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

அடுத்த நாள் காலை திருடியவரின் சகோதரியுடன் அகலவத்தை வரை நஜீப் நடந்து வந்தார். திருடியவன் கொழும்பு பஸ்ஸில் ஏறியிருப்பான் என்று நினைத்துக் கொண்டு பஸ் நிலையத்துக்கு வந்த போது திருடிச் சென்றவனின் சகோதரி வந்து மத்துகம பொலிஸில் முறையீடு செய்வதற்காக அழைத்தார். அதற்கு நஜீப் உடன்படவில்லை. ஆனாலும் அவளும் விடவில்லை. என்னதான் தம்பியாக இருந்தாலும் செய்தது பெரிய குற்றம், துரோகம் என்று சொல்லி நஜீபைக் கட்டாயப்படுத்தியதால் பொலிஸுக்குப் சென்று இருவரும் முறையீடு செய்தனர். திருடியவனின் சகோதரியே இந்த விடயத்தில் நஜீபுக்கு சாட்சியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அன்று காலை வெலிப்பன்னையைச் சேர்ந்த பஸ்லூன் ஹாஜியாரின் மத்துகம ஹோட்டலில் தேநீர் அருந்தினார் நஜீப். அவரின் கையில் ஒரு சதம் கூட காசு இல்லாமல் போனதனால் பஸ்லூன் ஹாஜியாரிடம் இரண்டு ரூபாய்கள் வாங்கிக் கொண்டு பஸ்ஸில் ஏறி வீட்டுக்குத் திரும்பினார் நஜீப். அவர் கட்டிய மனக்கோட்டை ஒரே நாளில் இடிந்து விழுந்ததை எண்ணியெண்ணி வேதனைப்பட்டார்.

தனது தந்தையிடம் விட்ட சவால்கள் எல்லாம் சுக்குநூறாகிப் போயிருந்தன. தாயிடம் நடந்த விடயத்தைச் சொன்னார் நஜீப். தாயார் அதைத் தந்தையின் காதில் ஊதி விடவே செய்தி வீட்டில் அனைவரினதும் காதுகளில் வேகமாய்ப் பரவியது. உடனே தந்தை நஜீபை அழைத்து இது பற்றிக் கேட்டபோது, கவலை தொண்டையை அடைக்க நடந்ததை விளக்கமாகச் சொன்னார் நஜீப்.

“நான் சொல்லியும் கேட்காமல் நீ அவனுடன் சென்றாய். அவன் திருட்டுப் புத்தியுடையவன் என்று படிச்சுப் படிச்சுச் சொல்லியும் அவனுடன் சென்றாயே. இப்ப எல்லாம் போச்சு. விட்டுட்டு வேலையப் பாரு....” என்று கோபத்துடன் சொன்னார் தந்தை. தந்தையின் பேச்சு நஜீபுக்கு மிகவும் அவமானமாக இருந்தது. தான் எப்படியாவது உழைத்து அந்த 403 ரூபாய்களையும் கடன் தந்தவருக்கு கொடுப்பதாகச் சொல்லித் தந்தையைச் சமாளித்தார் அவர். 1981 ஆம் ஆண்டு அவர் அபுதாபிக்கு முதன் முதலில் சென்று விடுமுறையில் நாடு திரும்பிய போது 1976 ஆம் ஆண்டு தான் பெற்ற அந்த 403 ரூபாய்கள் கடனைத் திருப்பிக்கொடுத்து நிம்மதியடைந்தார்.

*துரோகம் செய்ய ஒரு போதும் எண்ணாதே, தவறு செய்பவனை மன்னிக்கலாம்.*
*துரோகம் செய்பவனை மன்னிக்கவே முடியாது*

## கள்வனைத் தேடி வலை விரிப்பு.

நஜீபுக்கு எப்படியாவது அந்தத் திருடனைத் தேடி கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆவல் மேலோங்கியிருந்தது. சதா அதே சிந்தனையாகவே இருந்தார் அவர். தான் கற்பனை செய்து வைத்திருந்த அத்தனை திட்டங்களையும் அவன் தவிடுபொடியாக்கியதில் நஜீபினது ஆத்திரம் இன்னும் தணிந்திருக்கவில்லை. பல இடங்களிலும் கள்வனைத் தேடி வலை விரிக்கலானார் அவர். அந்தத் திருடன் ஒரு சினிமாப் பிரியன் என்பதை அவர் அறிந்துகொண்டார். ஆகையால் அக்கம்பக்கத்து ஊர்களில் உள்ள தியேட்டர்களுக்கெல்லாம் சென்று படக் காட்சிகள் முடியும் வரை காத்திருந்து கள்வனைத் தேடினார். ஆனாலும் அவன் அகப்படவில்லை. தான் கதிர்காமம் போனதில்லை, அங்கு செல்ல ஆசையாக உள்ளது என்று ஒரு முறை அவன் சொன்னது நஜீபுக்கு ஞாபகம் வந்தது. எனவே அங்கும் சென்றும் பார்த்தார். இருப்பினும் ஒரு பலனும் கிடைக்கவில்லை.

நஜீபின் பணத்தையும் கோப்பியையும் திருடிய அந்தத் திருடன் பின்பு வீடுகளையும் கடைகளையும் உடைக்கும் அளவுக்கு பெரிய திருடனாக மாறியிருப்பதாகவும் அவன் சிறைச்சாலைக்கும் போய் வருவதாகவும் அவனது தாய் மூலம் நஜீபிற்க்குத் தெரிய வந்த போது மிகவும் கவைலப்பட்டார் அவர்.

*தவறு செய்யாத மனிதன் இல்லை. தவறை உணர்ந்து திருந்தி வாழாதவன் மனிதனே அல்லன். திருந்தாத உள்ளங்கள் திருந்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தாலும் திருந்தவே திருந்தாது.*

## மனதைக் கவர்ந்த மாணிக்கமும் அடியோடு வெறுத்த வியாபாரமாகி விட்டது

சரியான தொழிலின்றி சதா சிந்தனையில் ஆழ்ந்திருந்த நஜீபை மாணிக்கக் கல் வியாபாரம் செய்யும்படி 500 ரூபாய்கள் பணத்ததைக் கொடுத்து, இரத்தினபுரி, பலாங்கொடை, கஹவத்தை போன்ற இடங்களுக்கு அனுப்பி வைத்தார் தந்தை. இதில் முன்னேற்றத்தைக் கண்டால் தான் இன்னும் மேலதிகமாக பணம் தருவதாகவும் சொல்லி வைத்தார். நஜீப் மாணிக்கக் கல் வியாபாரத்தில் ஈடுபடலானார். அவர் தன்னுடன் இன்னொருவரையும் பங்காளராகச் சேர்த்துக் கொண்டார். குறித்த ஊர்களுக்கெல்லாம் சென்று கற்களை வாங்கிக்கொண்டு ஐந்தாறு நாட்களில் இருவரும் வீட்டுக்கு வருவார்கள். வாங்கிவந்த கற்களை ஊரில் விற்பனை செய்துவிட்டு மீண்டும் செல்வார்கள். இப்படி இருக்கும் போது நஜீபுடன் பங்காளியாகக் கூட இருந்த நபரும் பணத்துக்கு மோசடி செய்துவிட்டார். நஜீபுக்கு அன்றிலிருந்து

மாணிக்கக்கல் வியாபாரமும் அடியோடு வெறுத்து விட்டது. அவர் மனதால் மிகவும் உடைந்து போனார்.. வாழ்க்கையில் உழைத்து முன்னேறுவது எப்படி என்ற சிந்தனையில் சதாவும் ஆழ்ந்து போகலானார்.

*வெறுப்பு உன்னில் குடி கொண்டால் சோர்ந்து போய் விடாதே, எதிர் நீச்சல் போட்டு பொறுப்போடு போராடு. வெறுப்பு தானாக விலகி விடும்.*

## மாசி வியாபாரமும் ராசி இல்லாமல் போனது.

நஜீப் தனது தந்தையிடமும், சகோதரர் பாயிஸிடமும் ஐநூறு ரூபாய்கள் கடனாகப் பெற்று மாசி வியாபாரம் செய்யலாம் என்று நினைத்தார். தர்கா நகரைச் சேர்ந்த உஸைன் என்பவருடன் சேர்ந்து இத்தொழிலில் ஈடுபட்டார். இவரும் மன்னார் போன்ற தூரப் பகுதிகளுக்குச் சென்று மாசி கொண்டு வந்தனர். முதன் முதலில் சகோதரனின் கடைக்கே மாசியைக் கொடுத்தது மறக்க முடியாததாகும்.

அடுத்த தடவை மாசி வாங்க அங்கு சென்ற போது அவர்களுக்கு மாசி கிடைக்கவில்லை. எனவே இருவரும் பேசாலை கருவாட்டு வாடிக்குச் சென்றனர். கருவாடு வாங்குவதற்கு ஒரு தமிழ் சகோதரரின் வீட்டுக்குத் தான் செல்ல வேண்டியிருந்தது. அந்த வீட்டில் நல்ல கருவாடு மலிவாகக் கிடைக்கும் என்று ஏற்கனவே கேள்விப்பட்டிருந்ததால் அந்த வீட்டுக்குச் சென்றார்கள். ஒரு இறாத்தல் கருவாடு இரண்டு ரூபாய்களும் ஐம்பது சதங்களுமாகும். ஒரு ரூபா எழுபத்தைந்து சதங்களுக்குக் கேட்கும் படி உஸைன் கூற நல்ல யோசனைதான் என்று நினைத்து இருபத்தைந்து இறாத்தல்கள் எடுத்தால் நிறைய இலாபம் பெறலாம் என்றெண்ணி அவர் சொன்னபடியே விலை பேசினார் நஜீப். அப்படிக் கேட்டதும் அந்த வியாபாரிக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. அவரின் முகம் சிவந்தது. கூடாத வார்த்தைகளும் வாயிலிருந்து வெளியே வந்தன. கை நீட்டும் அளவுக்கு வந்துவிட்டார்.

“என்னடா கேட்டாய்? நீ வியாபாரம் செய்யவா இங்கு வந்தாய்?” வியாபாரியின் வார்த்தைகளில் மிகவும் அவமானப்பட்டுப் போன இருவரும் நிலைமையை உணர்ந்து அவரைச் சமாதானப்படுத்தி தாழ்மையாக அவரிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு மெல்ல அந்த இடத்தை விட்டு நகர்ந்தார்கள். நஜீபுக்கு அத்தோடு மாசி வியாபாரமும் அலுத்துப் போனது, கருவாடு வியாபாரமும் வெறுத்தே போனது.

*ராசி இல்லை என்பதற்காக தூய எண்ணங்களை சிதற விடாதே! நன்றாக யோசித்து சுவாசித்தால் ராசி எல்லாம் வாழ்வில் தாசி*

## சோதனையோடு சாதனை.

சாதனைகள் புரிவதென்றால் சோதனைகளைச் சந்தித்தே ஆக வேண்டும். எத்தனை முறை சோதனைகளைச் சந்தித்தாலும் சாதனை புரிய விரும்புபவர்கள் அவற்றைத் தாண்டியே ஆகவேண்டும்.

சைக்கிளில் கொழும்புக்குச் செல்வதென்பது எவ்வளவு கஷ்டமான காரியம்? நஜீபும் அவரது நண்பன் (குளிசை) பாஹிமும் ஒரு நாள் தர்கா நகரிலிருந்து கொழும்புக்கு சைக்கிளில் சென்று வர நினைத்தனர். வீட்டுக்குத் தெரிந்தால் பிரச்சினையாகிவிடும் என்பதால் பஸ்ஸில் செல்வதாகச் சொல்லிவிட்டு இருவரும் சைக்கிளில் கொழும்புக்குச் சென்று வந்தனர். நஜீபின் பெற்றோருக்கு இந்த விடயம் தெரிந்திருக்கவில்லை. ஆனால் எப்படியோ பாஹிமின் வீட்டுக்குத் விடயம் தெரிய வந்துவிட்டது. பாஹிமின் பெற்றோர் அவருக்குப் புத்திமதிகளைச் சொல்லி தண்டித்ததுடன் நஜீபுடன்தான் சென்றதாக நஜீபின் பெற்றோரிடமும் சொல்லி கோபப்பட்டனர். விடயம் அறிந்ததும் நஜீபின் தந்தை மிகுந்த கோபம் கொண்டார், நஜீபின் மீது அனலாய்ப் பாய்ந்தார் அவர். கேள்விக்கு மேல் கேள்வி நஜீபிடம் கேட்டு அவரைத் துளைத்தெடுத்தார் தந்தை.

பொய்க்கு மேல் பொய் சொன்னால் பிரச்சினை மேலும் அதிகமாகிவிடும் என்ற காரணத்தால் பொய் சொல்லாமல் சைக்கிளில் சென்றதாக உண்மையை ஒத்துக் கொண்டார் நஜீப். இதனால் தந்தையிடமிருந்து மிகக் கடுமையான வார்த்தைகளைப் பெற வேண்டியிருந்தது.

*சோதனை மனித வாழ்வில் இயல்பு, அதற்காக துவண்டு விடக்கூடாது சாதனையால் உயர்வு பெற்று வெற்றியைக் காண முடியும் என்பதை செயலில் காட்டு.*

## மகிழ்வைக் கொடுத்த மலை நாட்டுச் சுற்றுலா.

1976 ஆம் ஆண்டு அரபிக் கலாசாலையில் நஜீப் அவர்களுடன் கல்வி கற்ற மாணவர்களும், நண்பர்களும் பேருவளையைச் சேர்ந்த முக்தார், அப்துர் ரஹ்மான் மற்றும் கம்பளையைச் சேர்ந்த நிசார் என்பவர்களுடன் நஜீப் மலை நாட்டுக்குச் சுற்றுலா ஒன்று மேற்கொண்டிருந்தார். ஐந்து நாட்கள் கொண்ட இந்தப் பயணம் நஜீபுக்கு மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது. பயணங்கள் மனதில் இருக்கும் கவலைகளை மறக்கச் செய்கின்றன. அதே போன்றே மனதுக்குப் புத்துணர்ச்சி தருகின்றன. இந்த அனுபத்தை நஜீப் அப்பயணத்தினூடாகக் கண்டு கொண்டார். அதே சமயம் கம்பளையில் நிசாரின் சகோதரனின் திருமணம் நடைபெற்றது. நண்பர்

முபாரக்கும் குடும்பத்தினருடன் அங்கு வந்திருந்தார். நஜீப் அவர்களும் சென்றிருந்தார். முபாரக்கின் வீடு நாவலப்பிட்டி ஹபுகஸ்தலாவையில் அமைந்திருந்தது. இரண்டு நாட்கள் அங்கு சந்தோசமாகப் பறந்தன. இவர்கள் இருவரினதும் உறவு மிகவும் நெருக்கமானது. இவர்களது நட்பு ஒரு கொத்துப் பூக்கள் போன்று வாசனை வீசியது.

ஐந்து நாட்கள் சுற்றுலாவை முடித்துவிட்டு வந்த நஜீபுக்கு ஒரு இனிய செய்தி தென்றலாய் வந்து தொட்டுச் சென்றது. ஏற்கனவே முபாரக் அவர்களிடம் அவரது ஊரில் தொழில் ஏதாவது இருந்தால் பார்க்கும்படி சொல்லி வைத்திருந்தார் நஜீப். அவருக்காக ஒரு தொழிலை ஏற்பாடு செய்திருந்த முபாரக் அவர்கள் நஜீபை நாவலபிட்டிக்கு வரும்படி சொன்னார். உடனடியாக அந்தத் தொழிலில் சேர வேண்டும் என்ற ஆவலில் ஹப்புகஸ்தலாவைக்கு பயணமாக ஆயத்தமானார் நஜீப்.

*மகிழ்ச்சி என்பது அல்லாஹ்வின் அருட்கொடைகளில் ஒன்றாகும்.*

## உற்றாரைப் பிரிந்து
## உதயம் காண்பதற்காய்......

இனித்திடும் இதமான காலைப் பொழுது சில்லென்று தேகத்தை தழுவிச் செல்லும் தென்றலின் வருடலுடன் புலர்ந்திருந்தது. அன்று காலையிலேயே ஹப்புகஸ்தலாவைக்குச் செல்ல ஆயத்தமானார் நஜீப். தான் அங்கு செல்லவிருக்கும் விடயத்தை பெற்றோரிடம் சொன்னபோது அவர்கள் மகனை விட்டு பிரிய மனமின்றி போக வேண்டாம் என்றே சொன்னார்கள். ஆனால் அவரோ தனது நோக்கத்தை இதமாக எடுத்துச் சொல்லி அதனால் கிடைக்கும் பயன்களைப் பெற்றோரிடம் புரியவைத்து அவர்களிடமிருந்து பிரியாவிடை பெற்றுப் பயணமானார். அவரது தாயார் அவர் தெருமுனையில் சென்று மறையும் வரை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருந்தார்.

ஹபுகஸ்தலாவையைச் சென்றடையும் போது மாலை நேரமாகி விட்டது. நீல வானம் மெல்ல மெல்ல சிவந்து கொண்டிருந்தது. சுதந்திரமாய்ச் சுற்றித் திரிந்த பறவைகளெல்லாம் தமது கூடுகளுக்குப் திரும்பிக் கொண்டிருந்தன. பலவிதமான சிந்தனைகளுடன் நண்பர் முபாரக்கின் வீட்டைத் தேடினார் நஜீப். ஒருவாறு அவரது வீட்டைக் கண்டுபிடித்து அங்கு சென்றார். நண்பர் முபாரக் முகத்தில் புன்னகை தவழ நின்று கொண்டிருந்தார். நஜீபை அன்புடன் வரவேற்று உபசரித்து இதமாக உரையாடினார்.

அந்த வீட்டில் முபாரக், அவரது மனைவி உட்பட அவர்களது இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் பிள்ளையும் தான் இருந்தனர். ஆக அது ஒரு சிறிய குடும்பம் என்பதை நஜீப் அனுமானித்துக் கொண்டார். இருவரும் அமர்ந்து நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர்.

“உங்களிடம் யார் கேட்டாலும் நீங்கள் எனது கம்பளையைச் சேர்ந்த மச்சான் என்று சொல்லுங்கள்.” உரையாடலின் இடையே முபாரக் அவர்கள் நஜீபைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சொன்னார். நஜீபும் சரி என்று தலையசைத்தார். நஜீப் முபாரக் அவர்களுடன் சேர்ந்து கடையில் வியாபாரம் செய்யத் தொடங்கினார். ஆனாலும் அவருக்கு அந்தத் தொழிலில் சில விடயங்கள் புரியாத புதிராகவே இருந்தன. நண்பர் முபாரக் முழுமையாக தொழில் இரகசியங்களைக் காட்டிக் கொடுக்கவும் இல்லை. இந்நிலையில் குழம்பிப் போயிருந்தார் நஜீப்.

முபாரக்கின் மனைவி ஒரு மௌலவியா என்று பிறகுதான் அவருக்குத் தெரிய வந்தது. பிள்ளைகளுடன் அன்பாகப் பழகியதால் அவர்கள் நஜீபை மாமா என்று செல்லமாக அழைத்தார்கள். மலைப் பிரதேசம் என்றபடியால் இரவு வேளைகள் தாங்க முடியாத குளிராக இருந்தது. நிலத்தில் பாய்க்கு மேலே நூலினாலான சாக்கினைப் போட்டுத்தான் நஜீப் தூங்குவார். அப்படித் தூங்கினால் தான் குளிர் சற்றுக் குறைந்து நித்திரா தேவி அரவணைத்துக் கொள்வாள். குளிரான தண்ணீரில் குளிப்பதும், குளிரோடு விழிப்பதும் அவருக்கு ஒருவிதமான அனுபவத்தை, சந்தோசத்தைக் கொடுத்தது. பள்ளிவாசல் பக்கத்திலேயே அமைந்தருந்ததனால் ஐவேளையும் பள்ளிக்குச் சென்று விடுவார் நஜீப். எச்சந்தர்ப்பத்திலும் தொழுகையை விடாத அவர், பள்ளிவாசலில் இமாம் இல்லாத நேரங்களில் இமாமாக நின்று தொழுவிப்பதும் உண்டு. இதனால் நஜீப் அவ்வூர் மக்களை காந்தம் போல் கவர்ந்திருந்தார். எல்லோரும் அவருடன் நட்பாகப் பழகினர்.

முபாரக்கைப் பற்றி பின்னர் கேள்விப்பட்ட நஜீப் ஆச்சரியமடைந்தார். ஆம் முபாரக் ஹபுகஸ்தலாவையை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த செல்வச் சீமான் யாவன்னா என்பவரின் சிரேஷ்ட புதல்வர் என்பது நஜீபுக்கு அப்போதுதான் தெரிய வந்தது

*தொலை தூரம் சென்றேனும் தொழில் செய்து பிழைப்பது தான் ஒரு ஆணுக்கு அழகு*

## வேட்டையாடச் சென்ற போதும் கோட்டை விடவில்லை.

நஜீபின் நற்குணங்களையும் மார்க்கப் பற்றையும் கண்டு கவரப்பட்ட நண்பரின் சகோதரர்கள் இருவர் அவரை அவர்களது வீட்டுக்கு வரும்படி அடிக்கடி அழைத்தனர். அவர்களது வேண்டுகோளை ஏற்று

ஓய்வு நேரங்களில் நஜீப் அங்கு செல்வதுண்டு. அவர்கள் மான், மரை வேட்டையாடச் செல்வதில் வல்லவர்கள். நஜீபுக்கும் அவர்களுடன் சென்று வேட்டையாட வேண்டும் என்ற ஆசை மனதில் ஏற்பட்டது. தனது ஆசையை அவர்களிடம் சொன்னபோது அவர்களும் அதற்கு விருப்பம் தெரிவித்தனர். மனித நடமாட்டம் இல்லாத காட்டில் வேட்டையாடுவது என்பது மிகவும் கஷ்டமான காரியம். பகல் சாப்பாட்டையும் எடுத்துக்கொண்டு அதிகாலையிலேயே பஸ்ஸில் சிறிது தூரம் செல்ல வேண்டும். வேட்டையாடி விட்டு திரும்பும் போது மாலையாகி இருட்டி விடும். என்றாலும் வாலிப வயதில் அதுவுமொரு சந்தோசம் தானே? இப்படியாக நஜீப் இரு தடவை அவர்களுடன் காட்டுக்குச் சென்று வேட்டையாடிய இறைச்சியைக் கொண்டு வந்து நண்பரின் வீட்டில் சமைத்து அனைவருமாகச் சாப்பிட்டுள்ளனர்.

*நிதானம் இழக்கக்கூடாது காரியத்தில் கண்ணாக இருக்க வேண்டும்*

## இமாமாக நின்று தொழுகை நடாத்தி தேகம் குளிர்ந்தார்.

நல்லதை நாடிச் சென்றால் என்றும் நன்மையே கிடைக்கும். நஜீப் எப்போதும் பள்ளிவாசலில் இருப்பதால் ஊர் மக்களுக்கு அவர் நெருக்கமாக இருந்தார். இதனால் அவருக்கு ஊரிலுள்ள கௌரவமானவர்களுடன் சகஜமாகப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

ஒரு நாள் பள்ளிவாசலில் சித்தீக் லெப்பை என்பவரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

“பக்கத்து ஊரான பொல்வதுரை பள்ளிவாசலுக்கு ஒரு இமாம் தேவை. விரும்பினால் நீங்கள் சேரலாமே“ என்று அவர் சொன்ன போது நஜீப் யோசித்தார். ஒரு நாள் சித்தீக் லெப்பை பொல்வதுரை பள்ளிவாசலுக்கு நஜீப் அவர்களை அழைத்துச் சென்றார். அது வெள்ளிக்கிழமை நாள் என்ற படியால் சித்தீக் லெப்பை ஜும்மா பிரசங்கத்தை நடாத்த நஜீப் ஜும்மாத் தொழுகையை தொழுவித்தார். அதன் பிறகு பள்ளிச் சங்கத் தலைவர் ஜமாத்தாரைக் கூட்டி, நாம் பள்ளிவாசலுக்கு ஒரு புதிய இமாம் ஒருவரை சேர்ப்பதற்காக உத்தேசித்துள்ளோம் எனத் தெரிவித்தார். ஊர் மக்கள் எல்லோரும் அதற்கு ஆமோதித்தனர். பின்பு நஜீப் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

பள்ளிவாசலின் தலைவர் சஹாப்தீன் துரை நஜீப் அவர்களிடம் பொல்வதுரை பள்ளிவாசலில் இமாமாகச் (தொழுகை நடத்துபவர்) சேர்வதற்கான நியமனக் கடிதத்தை தபால் மூலம் அனுப்புவதாகச் சொன்னார். அதே வேளை ஐவேளைத் தொழுகையை நடாத்த

பொறுப்பேற்குமாறும் சுமார் 75 பிள்ளைகளுக்கு மாலை நேர குர்ஆன் வகுப்பு நடாத்துமாறும் வேண்டிக் கொண்டார். நஜீப் அதை மனமுவந்து பொறுப்பேற்ற போது ஜும்மாத் தொழுகையை நடாத்துமாறும் கூறினார். இரண்டு மாதங்கள் கழிந்து ஜும்மாத் தொழுவிப்பதைப்பற்றி சொல்லி வைத்தார்.

வேடிக்கை என்ன வென்றால் அவர்கள் நஜீபின் ஊர் கம்பளை என்றும், முபாரக் அவர்களின் மச்சான் என்றும் நினைத்துக் கொண்டிருந்தமையே, எல்லோரும் அப்படி நினைக்கக் காரணம் சித்தீக் லெப்பையும் அவரை அப்படியே அறிமுகம் செய்து வைத்தமை ஆகும்.

நஜீப் பள்ளிவாசலில் சேர்ந்தது அவருக்கு மன ஆறுதலைக் கொடுத்தது. மாதச் சம்பளம் 50 ரூபாவாக இருந்த போதிலும் குத்பா நடாததத் தொடங்கிய பின்பு 75 ரூபாவாக உயர்த்தப்படும் எனவும், மூன்று வேளை சாப்பாடும், தேநீரும் ஏற்பாடு செய்து தரப்படும் எனவும் கூறிய போது வேறு வழியின்றி இதுவும் அல்லாஹ்வுடைய ஏற்பாடு தானே என நினைத்து மன நிம்மதியடைந்தார். 1975 ஆம் ஆண்டு காலியிலிருந்து அப்போது மதரசாவை விட்டு வெளியேறி வீட்டுக்கு வந்த போது நஜீபின் தந்தை ஒரு நாள் சொன்னது ஞாபகத்தில் வந்தது.

“மகன் நஜீப்..... நீ மத்ரஸாவில் நல்லறிவைப் பெற்று, மார்க்கக் கல்வி கற்று வந்தது சந்தோசம். ஆனால் ஹஸ்ரத், லெப்பை தொழில் செய்வதை நினைத்துப் பார்க்காதே. ஏனென்றால் அது உனது முன்னேற்றத்துக்கு பெருந்தடையாக இருக்கும். ஏதாவது ஒரு நல்ல தொழிலைச் செய்து வாழ்வில் முன்னேறப் பாரு. இல்லையென்றால் உனக்கு வாழ்க்கையில் கஷ்டம், நஷ்டம் தெரியாமல் போய்விடும். அதுமட்டுமல்ல ஊர் சாப்பாட்டில் ஊறி வளர்ந்தவன் என்ற பெயர் எடுக்கவும் நேரிடும்”. தந்தை அன்று சொன்ன சொல் நினைவில் வந்த போதும் அவரால் இத் தொழிலை ஏற்காமல் இருக்க முடியவில்லை. அவரது கண்களிரண்டும் கங்கையாகின. நஜீப் பள்ளிவாசலில் இருக்கும் போதெல்லாம் வீட்டுச் சிந்தனைகளும், தந்தையின் முகமும் மனதில் புகுந்து மணம் பரப்பும். அப்போதெல்லாம் அவரின் உள்ளம் வாடிப் போவதுண்டு. என்றாலும் அங்கு சூழவிருந்த இயற்கையின் எழில் கொஞ்சும் இனிய காட்சிகள் அவருக்கு சந்தோசத்தைக் கொடுத்தன.

பாய்ந்தோடும் மகாவலி கங்கை. தேயிலைத் தோட்டங்களுக்கு நடுவே அமைந்திருக்கும் பள்ளிவாசல், சுற்றி வர பச்சைப் பசேலென்ற தேயிலைச் செடிகள் கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்தன. காலையிலே கண்களை மேய விட்டால் இளம் பெண்கள் முதல்

வயது வந்தவர்களும், முதியோர்களும் தேயிலைத் தோட்டத்தில் வரிசையாக அணி வகுத்துச் சென்று தேயிலை பறிக்கும் கண்கொள்ளாக் காட்சிகள் நிரம்பிய இந்தக் குளிர்ப் பிரதேசத்தில் தான் இப்படியான ஒரு தொழிலைச் செய்யக் கொடுத்து வைக்க வேண்டும் என்று அல்லாஹ்வைப் புகழ்ந்தார்.

மேடு பள்ளங்கள் அடங்கிய அப்பிரதேசத்தில் சிவனொளிபாத மலையும் கண்ணுக்குக் கனிவைக் கொடுத்தது. நாட்கள் நகர்ந்தன. ஊர் மக்கள் அவருடன் அன்போடும், மரியாதையோடும் நடந்து கொண்டனர். அனைவரும் ஹஸ்ரத் என்றே நஜீபை அழைத்தனர். அவரும் அவர்களுக்கு பிடித்தமான முறையில் நடந்து கொண்டனர்.

பள்ளிச் சங்கத் தலைவர்களான சஹ்ராப்தீன் துரை அவரது மகன் சபீக்கும், ஷரீப்தீன் காக்கா, அவர் மகன் அன்சாரும் குடும்பத்தினரும் அவரை ஒரு குடும்ப அங்கத்தவராக இணைத்துக் கொண்டனர். அங்குள்ள மூதாட்டிகளின் துஆக்கள் அவருக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தன. சந்தோசம் பொங்கி வழிய எல்லாம் மறந்து பள்ளிவாசலில் பம்பரமாய் சுழன்றார் நஜீப். அவருக்கு அப்போதெல்லாம் பள்ளிவாசலுக்காக உழைக்க வேண்டும் என்ற எண்ணமே சதாவும் மனதில் தோன்றியது. கடுமையாக தன்னை அர்ப்பணித்து பள்ளிவாசலின் முன்னேற்றத்திற்காக பாடுபட ஆரம்பித்தார் அவர்.

பள்ளிவாசல் சம்பந்தமான சில பொறுப்புக்கள் அவருக்கே கொடுக்கப்பட்டிருந்தன. அனைத்தையும் கண்ணும் கருத்துமாக பொறுப்பேற்று பொறுமையோடு செய்து வந்ததால் அனைவரும் அவரைப் போற்றினார்கள். சந்தோச ராகமிசைத்து சந்தன மலராக மலர்ந்து ஜொலித்துக் கொண்டிருந்த அவரின் வாழ்வில் கஷ்டங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தன. அதேபோன்று தனது தந்தைக்கும், சகோதரனுக்கும் கொடுக்க வேண்டிய பணத்தையும் திருப்பிக் கொடுத்து நிம்மதிப் பெருமூச்சு விட்டார். நஜீப் மாணவர்களுக்கு மார்க்கக் கல்வி கற்றுக் கொடுத்தும், மௌலூது ஓதுவதற்காக வீடுகளுக்குச் சென்றும் மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொண்டார். அவரின் நிலைமைகள் சீராக அமைந்து வாழ்க்கைச் சக்கரம் இனிதே சுழல ஆரம்பித்தது.

*தலைமைப் பண்பு இருந்தால் அதைவிட வேறென்ன வேண்டும்.*

## குத்பா ஓதி ஜும்மா பிரசங்கம் - முதல் சந்தர்ப்பம்.

எந்தவொரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் ஒரு மனிதனுக்கு முதன் முதலில் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அளவில்லா

சந்தோசத்தைக் கொடுக்கின்றன. அது புனித ரமழான் மாதம் மலரக் காத்திருந்த இனிய காலம். ஒரு வெள்ளிக்கிழமை பள்ளிச் சங்க உறுப்பினர்கள் நஜீப் அவர்களை ஜும்மாவை நடாத்தும் படி முதன் முதலில் சொன்ன போது அவர் மெய் சிலிர்த்துப் போனார். தனக்குக் கிடைத்த இனிய சந்தர்ப்பத்தை தட்டிக் கழிக்காமல் மனமுவந்து ஏற்றுக் கொண்டார். முதல் தடவை என்ற படியால் அவருக்குச் சற்று தயக்கமும் ஏற்படத்தான் செய்தது. என்றாலும் சந்தோசம் நெஞ்சில் நிறைந்து வழிந்தது.

*ரசிப்பது மனித மனதிற்கு குளிர்ச்சியைத் தரும் அதுவும் ஒரு தனி அழகுதான்*

## பணிபுரிந்த ஊரிலே பனிமழை.

பொல்வதுரை ஊரிலே பேரும் புகழும் பெற்று காணப்பட்டார் நஜீப் அவர்கள். நல்ல குணத்தாலும் சிறந்த நடத்தையாலும் நற் பெயர் வாங்கிய அவர் அவ்வூர் மக்களின் இதயங்களில் தனியிடத்தை பெற்றிருந்தார். ஆதலால் அவ்வூரில் உள்ள பலர் தங்களது பெண் பிள்ளைகளுக்காக அவரை மாப்பிள்ளை கேட்டும் வந்தனர். பெற்றோர்களால் நிச்சயிக்கப்படும் திருமணத்துக்கே தான் விருப்பம் தெரிவிப்பதாக ஒரே வார்த்தையில் சொல்லி மறுத்துவிட்டார் நஜீப்.

*முதல் சந்தர்ப்பம் ஒரு மனிதனை மகிழ்ச்சியின் உச்சகட்டத்துக்கே கொண்டு செல்லும் உள்ளத்தை குளிர்ப்பாக்கி பனி போலாக்கும்.*

## சொந்த ஊரிலே செந்தூரமானார்.

நஜீபின் தந்தைக்கு தூரத்து ஊரொன்றில் தொடர்ந்தும் அவர் இருப்பது பிடிக்கவில்லை. தர்கா நகர் சொந்த ஊருக்கே எப்படியாவது தனது மகனை அழைத்து விட வேண்டுமென்று நினைத்தார். மீண்டும் மாணிக்கக் கல் வியாபாரம் செய்ய பணம் தருவதாகவும் ஊருக்கு வந்துவிடும்படியும் கூறி கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தர். தந்தையிடமிருந்து கடிதம் வந்த விடயத்தை நஜீப் பள்ளிச் சங்கத்தில் அறிவித்தார். அவர் ஊருக்குத் திரும்புவதற்கு முடிவெடுத்திருந்தார். நஜீபின் இந்த முடிவு ஊர் மக்களுக்கு கவலையை ஏற்படுத்தியது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் அவரது பிரிவைத் தாங்க முடியாமல் துயரத்தை வெளிப்படுத்தினர்.

ஒரு மூதாட்டி நஜீப் அவர்களை அவரது இல்லத்துக்கு பகல் போசனத்திற்காக அழைத்திருந்தார். தனது பக்கத்தில் அமரச் செய்து சாப்பாட்டை அவரது கரங்களால் பிசைந்து ஊட்டி விடும் படி

கேட்டுக் கொண்டார். நஜீப் அவர்களும் அப்படியே செய்து விட்டு கண்கள் கலங்க அங்கிருந்து வெளியேறினார். விட்டுப் பிரியும் கவலையோடு தொட்டுச் செல்லும் எண்ணங்களுடன் ஊர் திரும்பினார் அவர்.

1977 ஆம் ஆண்டு வீட்டுக்கு வந்த நஜீபுக்கு தனது தந்தை சொன்னபடி மாணிக்கக் கல் வியாபாரம் செய்ய வசதிகள் செய்து கொடுக்கவில்லை. தொழிலின்றி சும்மா இருந்த அவருக்கு மீண்டும் வாழ்க்கையே அலுத்துப் போனது. சிகரட் புகைக்கும் பழக்கமுடையவராக அவர் இருந்ததால் அதற்குக் கூட வசதியின்றி தடுமாறிக் கொண்டிருந்தார் நஜீப். இதை அவதானித்த அவரது தந்தை அவருக்கு ஒவ்வொரு நாளும் ஐந்து ரூபாய்கள் வீதம் கொடுத்து வந்தார். அதில் மூன்று ரூபாய்களை சிகரட் பக்கெட் ஒன்றுக்காகச் செலவு செய்து விட்டு மீதி இரண்டு ரூபாய்களை ஏனைய செலவுகளுக்கு வைத்துக் கொள்வார்.

*நற்குணத்தோடு என்றும் இரு ஏனென்றால் நற்குணம் நறுமணம் வீசும் பூவை போன்றது வாடிப் போனால் பயனற்றதாய் போய்விடும்.*

## கடவுச் சீட்டுக்காக பட்ட கஷ்டங்கள்.

நஜீபின் தலையில் ஓய்வின்றி பலவித சிந்தனைகள் ஓடிக் கொண்டே இருந்தன. மத்திய கிழக்கு நாடொன்றுக்காவது சென்றால் தனது எதிர்காலத்தை அழகான முறையில் அமைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தார். வெளிநாட்டுக்குப் பிரயாணம் செய்வதென்றால் நாட்டுக்குள் டிக்கெட் எடுத்து பஸ்ஸில் பயணிப்பது போன்று செல்ல முடியாதல்லவா? கடவுச்சீட்டு கட்டாயம் தேவை. சகல நாடுகளுக்குமான (All Countries) கடவுச் சீட்டை எடுப்பதற்காக தர்கா நகரைச் சேர்ந்த முன்னாள் நகர சபைத் தலைவர் பளீல் ஹாஜியாரின் மைத்துனர் முஹம்மது அலி அவர்களுடன் கடவுச்சீட்டு அலுவலகத்துக்கு (Passport Office) சென்றார் நஜீப். போதிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததன் காரணத்தால் அன்று அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

வரி ஒரு வருடத்துக்கு பன்னிரெண்டாயிரம் ரூபாய்களுக்கு மேல் செலுத்தும் ஒருவரின் அனுசரணையின்றி அந்த நாட்களில் கடவுச்சீட்டு பெறுவது மிகவும் கஷ்டமான விடயமாக இருந்தது. அப்போது நயீம் ஜேபி அவர்கள் நஜீபின் கடவுச்சீட்டு விடயமாக செய்து கொடுப்பதற்கு திணைக்களத்திற்கு காரில் வந்து கொண்டிருக்கும் போது நோய் வாய்ப்பட்டு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் நளீம்

ஹாஜியாரின் மருமகன் இம்ரான் ஹாஜியார் அவர்களின் மாணிக்கக் கல் நிறுவனத்தின் பெயரில் (ஹொங்கொங்) ரவுப் என்பவர் அவரது தந்தையின் அறிமுகத்தைக் கொண்டு ஓப்பம் வைத்து சகல நாடுகளுக்குமான கடவுச் சீட்டைப் பெற்றுத் தந்தார்.

*எங்கு தான் உயரப் பறந்து சென்றாலும் சொந்த ஊரை போல வருமா?.*

## மத்திய கிழக்கில் வேலை தேடி மங்கிப் போன இதயமாய்......

நஜீபின் சிந்தனை ஓய்வின்றிச் சுழன்றது. வெளிநாடு செல்ல எந்த நிறுவனத்தைத் தொடர்பு கொள்வது என்று யோசித்தார். அப்போதுதான் “ஷம்ஸ்” என்ற முகவர் நிறுவனம் அவருக்கு ஞாபகத்தில் வந்தது. காலியைச் சேர்ந்த சட்டத்தரணி மன்சூர் மரிக்காரையும், அமைச்சர் அலவி மௌலானாவையும் நாடிச் சென்று சிபாரிசுக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டார்.

தனது தந்தையுடன் ஷம்ஸ் என்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்துக்கு (Agency)க்கு சென்று முயற்சித்த போதும் அது சரியாக அமையவில்லை. அதற்குப் பிறகு வேறொரு நிறுவனத்துக்கு மூவாயிரம் ரூபாய்கள் கொடுத்து கடவுச்சீட்டையும் கொடுத்துக் காத்திருந்தார். அதுவும் ஏமாற்றத்திலேயே முடிந்தது. அவருக்குவெளிநாடு செல்லக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. சிந்தனைகள் மேலும் அவரை ஆட்டிப்படைக்க எப்படியாவது வெளிநாடு போயாக வேண்டும் என்ற முயற்சி அவரை விட்டும் அசையவில்லை.

நஜீப் முயற்சியைக் கைவிடவில்லை. அவர் தொடர்ந்தும் பல வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களை நாடிச் சென்றார். இறுதியில் இலங்கை தொழில் திணைக்களத்துக்கு வெளிநாட்டில் சாதாரண வேலைக்காக ஆட்கள் தேவை என கேள்விப்பட்டதும் அன்றைய உப சபாநாயகராக இருந்த பாக்கீர் மாக்காரிடம் சிபாரிசுக் கடிதம் ஒன்றைப் பெற்றுக்கொண்டு தொழில் திணைக்களத்தில் கொடுத்த போதும் அதுவும் கைகூடாமல் போனது மிகவும் கவலைக்குரியதாக இருந்தது. அதன்பின் நஜீப் கொழும்புக்கு வேலை தேடி முகவர் நிலையங்களுக்கு செல்லும் போதெல்லாம் தாயார் சமைத்துத் தரும் பகற் போசனத்தை எடுத்துக் கொண்டே செல்வார்.

பலமுறை பலவிதத்திலும் நன்றாக யோசித்த நஜீப் அவசரப்படக் கூடாது என்று நினைத்தார். இவ்விடயத்தில் சற்று நிதானத்தைக் கடைபிடிக்கத் தொடங்கினார். தர்கா நகரைச் சேர்ந்த பத்தாஹ் ஹாஜியார், டொக்டர் நஸீர், நூர்தீன் ஜேபி ஆகியோரிடம் சிபாரிசு

கடிதங்களைப் பெற்று தேவைப்படும் போது சமர்ப்பிக்கலாம் என்ற நோக்கத்தில் தன்னோடு வைத்திருந்தார்.

*கஷ்டப்படாமல் எவராலும் வாழ்க்கையில் முன்னேற்றத்தை காண முடியாது. எந்த அளவுக்கு கஷ்டப்படுகிறாரோ அந்த அளவுக்கு அவரால் வெற்றிகாண முடியும்.*

## சோதனை மேல் சோதனை.

நஜீப் மதுகமையில் இருக்கும் போது ஒரு நாள் "ஸ்ரீலங்கா ஸ்டோர்ஸ்" எனும் பெயரில் இயங்கிய ஸஹ்ரானின் தந்தையின் கடைக்கு ஸஹ்ரானுடன் சென்றார். அவரின் சகோதரி மௌலவியா ஸக்கீயா டீச்சர் ஊரில் உள்ள சகோதரி நஸீமாவுக்கும், கனீமா டீச்சருக்கும் கொடுக்கச் சொல்லி இரண்டு கடிதங்களைக் கொடுத்தார்.

டீச்சரும், நஸீமா டீச்சரும் காதியாவத்தையில் ஒரே வீதியைச் சேர்ந்தவர்கள். நஜீப் சைக்கிளில் கடிதத்தைக் கொடுப்பதற்காகச் அவர்களின் வீடு தேடிச் சென்றார். வானம் இருட்டி மழை பொழியத் தயாராய் இருந்தது. அந்தத் தருணத்தில் நஜீப் சைக்கிளில் வருவதைக் கண்ட வீதி நாய்கள் சில குரைக்கத் தொடங்கின. நாய்கள் என்றாலே நஜீபுக்கு பயம். அவரின் இதயத்துடிப்பு அவ்வேளை இரட்டிப்பானது.

வேகமாக சைக்கிளை மிதித்து ஒருவாறு கனீமா டீச்சரின் வீட்டை அண்மித்து விட்டார். ஆனால் அவருக்கு ஏற்பட்ட பயம் அவரை விட்டு இன்னும் அகன்றிருக்கவில்லை. ஹலீமா டீச்சரின் வீட்டுக்குப் பக்கத்தில்தான் ஜொஹரா டீச்சரின் வீடு, அங்கு கட்டுமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்த இடத்தில் புது மலசலக்குழி ஒன்று திறந்த நியையில் வைக்கப்பட்டிருந்தது, பயத்துடன் வந்துகொண்டிருந்த நஜீப் அதனை அவதானிக்கவில்லை. வந்த வேகத்தில் அப்படியே மலசலக் குழியில் விழுந்துவிட்டார். சைக்கிளுடன் விழும் சத்தம் கேட்டதனால் உடனே அக்கம் பக்கத்தவர்கள் அங்கு கூடி விட்டார்கள். அவரைக் கூட்டிக் கொண்டு கனீமா டீச்சர் வீட்டுக்குப் போய் முதலுதவிகளைச் செய்ததுடன் அங்கு வந்திருந்தவர்கள் வேனில் ஏற்றிக் கொண்டு நஸீர் டாக்டரிடம் சென்றனர். அவ்வேளை அவரது சகோதரன் பாயிஸ் அவ்வழியே வந்து கொண்டிருந்தார். நஜீபின் நிலைமையைக் கண்டு தடுமாறிப் போன அவர் உடனே தனியார் மருத்துவமனையில் நஜீபை அனுமதித்தார். விடயம் வீட்டாருக்கு அறிவிக்கப்பட்டபோது அவர்கள் துடித்துப் போனார்கள். யாரிடமும் சொல்லாமல் போனமைக்காக நஜீபைத் திட்டினார்கள். அந்த நிகழ்வு நஜீபுக்கு ஒரு பாடமாய் அமைந்தது.

*உழைப்பில் உயர்வைக்கான வேண்டுமெனில் நம்பிக்கையோடு உள்ளத்தை உறுதியாய் வைத்துக்கொள் நீ நீயாகவே இரு.*

## கடையில் சேர்ந்ததால் கிடைத்த நன்மைகள்.

நஜீபின் அன்றாட நாட்கள் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தன. வெளிநாட்டு முயற்சிகள் எல்லாம் தோல்விலேயே முடிவடைந்தன. வீட்டிலிருந்து கொண்டு சும்மா பொழுது போக்குவதைவிட எங்காவது வெளியே சென்றால் ஏதாவது பயன் கிடைக்கும் என்று அவர் நினைத்தார்.

அப்போது தான் நஜீப் நண்பன் இர்பானைச் சந்தித்தார். இர்பானின் தந்தை இப்ராஹீம் ஹாஜியார் சுகயீனமுற்று கொழும்பில் ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் இறையடி சேர்ந்தார். ஜனாசாவை நஜீபும் இர்பானும் சேர்ந்து வேனில் வீட்டுக்கு கொண்டு வந்தார்கள். ஏற்கனவே தான் வந்த விடயத்தை நஜீப் இர்பானிடம் சொல்லி வைத்திருந்தார். அடுத்த நாள் இப்ராஹீம் ஹாஜியாரின் ஜனாசா நல்லடக்கம் செய்யப்பட்டது. தொடர்ந்து மூன்று நாட்கள் முற்றுப் பெற்ற நிலையில் அவருடைய புதல்வர்களான புர்கான், இர்பான், ஸஹ்ரான் மூவரும் சேர்ந்து தமது தந்தையின் புடவைக் கடையைத் திறக்க இருப்பதாகச் சொன்னார்கள். நஜீபையும் அவர்களுடன் சேர்ந்து கடையைச் செய்ய அழைத்தார்கள். நஜீப் நிதானமாக யோசித்தார். பிறகு ஒரு முடிவுக்கு வந்தார். தொடர்ந்து அவர்கள் நஜீபை ஆர்வமூட்டியதால் நஜீப் முகத்தில் புன்னகை தவழ அவர்களைப் பார்த்தார். நஜீபின் புன்னகை நிறைந்த பார்வையை அவர்கள் சம்மதம் என எடுத்துக் கொண்டனர்.

"உங்களுக்கு சம்பளம் இவ்வளவுதான் என்று குறிப்பிட்டுச் சொல்ல மாட்டோம். உங்கள் தேவைகளுக்கு ஏற்றாற்போல் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரத்தையும் கற்றுக் கொண்டு வெளிநாட்டு முயற்சியையும் மேற்கொள்ளுங்கள்." அவர்களது வார்த்தைகள் நஜீபின் இதயத்தில் தேன் வார்த்தது. அவர்களின் தாயாரின் சம்மதத்துடன் கடையில் சேர்ந்தார் நஜீப். புதிய இடத்தில் புதிய பணி இனிதே தொடங்கியது.

*சோதனையும் அல்லாஹ்வின் அருட்கொடை தான், ஏனென்றால் அதற்குப் பின்னால் பெரியதொரு நன்மை காத்திருப்பதை நீ அறிய மாட்டாய்.*

## இனக் கலவரமும் காய்ச்சலும்.

1977 ஆம் ஆண்டு இனக் கலவரம் சூடு பிடித்துக் கொண்டிருந்த காலகட்டமது. கலவரக் காரர்கள் பாமரர்களான பொது மக்களை கண்டபடி தாக்கியும், கடைகளைத் தீ வைத்தும் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்துக் கொண்டும் இருந்தனர். கலவரம் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த சமயம் நஜீப் நண்பர் ஸஹ்ரானுடன் வீதியில் சென்று கொண்டிருந்தார். அப்போது ஆயுதங்களை ஏந்திய கலவரக்காரர்கள் இவர்கள் இருவரையும் எதிரிகள் என்று நினைத்து வாளை உயர்த்தி வெட்ட முயன்றனர்.

நஜீபும், ஸஹ்ரானும் "அல்லாஹு அக்பர்" அல்லாஹ் மிகப் பெரியவன் என்று உள்ளுக்குள் சொல்லிக் கொண்டனர். நல்ல வேளை ஏந்தயவர்களின் வாள் வேறு திசையில் சென்றது. அல்லாஹ்வின் அருளால் நஜீபும் நண்பரும் மயிரிழையில் உயிர் தப்பினார்கள்.

இருப்பினும் இருவரும் மிகவும் பயந்து நடுங்கினர். நஜீபுக்கு பயத்தினால் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. மருத்துவம் செய்து பார்த்தும் பயன் கிடைக்கவில்லை. அவரது தந்தை சில அல் குர்ஆன் ஆயத்துக்களை முறைப்படி ஓதி முகத்தில் ஊதிய பின்னரே குணம் கிடைத்தது.

*உன் எண்ணத்தை அழகாக்கு, உன் நிலைமையை அல்லாஹ் அழகாக்குவான்*
*பிறருக்கு நீ நல்லதை விரும்பு. நல்லவை உன்னை வந்து சேரும்.*

## முன்வைத்த காலை பின் வைக்கவில்லை.

நஜீபின் எண்ணங்கள் எல்லாம் வெளிநாடு போக வேண்டும் என்பதாகவே இருந்தது. அந்த முயற்சியில் அவர் முன் வைத்த காலை பின் வைக்கவேயில்லை. முயற்சியைத் தொடர்ந்து கொண்டே இருந்தார். இர்பானும் நஜீபும் நாள்தோறும் ஒன்றாகவே இருந்ததனாலோ என்னவோ இர்பானுக்கும் நஜீபுடன் வெளிநாடு போக வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. தொழிலின்றி தோய்ந்து போன மனசல்லவா நஜீபின் மனசு. ஒட்டிக் கொண்ட நண்பர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாமல் இருவரும் இடை விடாமல் முயற்சி செய்தனர். எத்தனையோ முகவர் நிலையங்களை நாடிச் சென்றனர். செல்வாக்குள்ள பெரியவர்களின் சிபாரிசுக் கடிதங்களைக் கொடுத்தும் கூட துளியளவும் பயன் கிடைக்கவில்லை. கவலையோடு அல்லாஹ்வின் மீது பாரத்தைச் சுமத்தி நம்பிக்கையோடு காத்திருந்தார் நஜீப்.

*அஞ்சா நெஞ்சத்துடன் இருந்தால் அஞ்ச வேண்டிய அவசியமே இல்லை.*

## சிங்கத்திடமிருந்து தப்பிய மான்கள்.

இன்பத்திலும், துன்பத்திலும் கலந்து நட்புறவாடுவது நல்ல நண்பர்கள் மட்டும்தான். அதற்கு உதாரணமாக நஜீபும், இர்பானும் இருந்தனர். எது நடந்தாலும் எச்சந்தர்ப்பத்திலும் இருவரும் எதையும் ஒருவருக்கொருவர் மறைக்கவில்லை. ஒழிவு மறைவின்றி வெளிப்படையாக இருந்ததுடன் எந்த விடயமானாலும் இருவரும் ஒன்றாய்க் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

ஒரு நாள் நஜீபும் இர்பானும் மத்துகமையிலிருக்கும் போது ஒரு இளைஞன் இர்பானை அழைத்து தான் இரத்தினபுரியில் மாணிக்கக் கற்கள் தோண்டும் இடத்தில் வேலை செய்வதாகவும் பெறுமதியான கல்லொன்று தன்னிடம் இருப்பதாகவும் சொன்னார். தான் அதை ஓரிடத்தில் மறைத்து வைத்துள்ளதாகவும் தன்னோடு வந்தால் கல்லைத் தர முடியும் என்றும் அதை எப்படியாவது விற்றுத் தரும் படியும் கேட்டார். சற்று யோசித்த இர்பான் விடயத்தை நஜீபிடம் சொன்னார்.

நஜீபுக்கு அதில் ஏதோ ஒரு வில்லங்கம் இருப்பதாகத் தோன்றியது. அவனையே அந்தக்கல்லை எடுத்து வரும்படி இர்பானிடம் சொல்லச் சொன்னார். அதற்கு அவன் மறுப்புத் தெரிவித்ததனால் இருவரும் அவனுடன் பஸ்ஸுக்கு மாத்திரம் பணத்தை எடுத்துக் கொண்டு சென்றனர். இரத்தினபுரியை சென்றடைந்ததும் காடுகள் நிறைந்த மனித நடமாட்டமே இல்லாத ஒரு மலைப் பகுதியில் அமைந்த வீதியில் அவர்கள் இருவருக்கும் அவன் வழிகாட்ட சற்று சந்தேகத்துடனேயே இருவரும் சென்றனர். அப்போது அந்த வழியில் ஒரு வைத்தியசாலை போன்ற ஒரு கட்டிடம் தென்பட்டது.

“நீயே போய் மாணிக்கக் கற்களை எடுத்துக் கொண்டு வா. நீ வரும் வரை நாம் இந்த இடத்தில் இருக்கிறோம்.” என்று நஜீப் அவனிடம் சொன்னார். அவனும் சரி என்று சொல்லிக் விட்டுப் போனான். போனவன் போனவன் தான் திரும்பி வரவேயில்லை. ஏமாற்றுபவர்கள் இருக்கும் வரை ஏமாறுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். என்பதை இருவரும் உணர்ந்து கொண்டனர்.

*அடுத்த மனிதர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு காரணமாக இருங்கள். அல்லாஹ் உங்களது தேவைகளை அழகாக நிறைவேற்றித் தருவதற்கு ஆயிரம் வழிகளை வசதிப் படுத்தித் தருவான்.*

# வெளிநாட்டு அமைச்சர்களை BMICH இல் சந்திப்பு.

1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அன்றைய போக்குவருத்து அமைச்சர் எம்.எச். முஹம்மதின் கண்காணிப்பில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் தலைமையில் உலக இஸ்லாமிய மாநாடு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெற்ற இம் மாநாட்டில் நஜீப் அவர்களுக்கும் பங்குபற்ற வாய்ப்புக் கிடைத்தது. நஜீபின் தந்தையின் நண்பர் கொழும்பைச் சேர்ந்த ஹம்ஸா ஹாஜியார் ஜே.பி. நஜீபுக்கு இந்த அரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். ஐந்து நாட்களாக வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு உதவியாளராக பணியாற்றக் கிடைத்தது அவருக்குப் பூரிப்பைக் கொடுத்தது.

இம்மாநாட்டில் முதல் நாளில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன இன்னும் பல அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம். அமைச்சர் எஸ். தொண்டமான், வெளிநாட்டு அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட், சபாநாயகர் பாக்கிர் மார்க்கார் உட்பட இன்னும் பல பிரமுகர்கள் மற்றும் தலைவர்களை நஜீபுக்கு சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்தமை இங்கு பதிவுசெய்யத்தக்கதாகும். அன்றைய பிரதமராகவும் 1989 முதல் 93 வரை இலங்கை ஜனாதிபதியாகவும் இருந்த திரு. ஆர். பிரேமதாசவுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டமையை ஒரு வரப்பிரசாதமாகவே நினைத்தார் நஜீப். போக்குவருத்து அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச். முஹம்மத் அவர்களே பிரதமர் பிரேமதாசாவிடம் நஜீபை அறிமுகம் செய்து வைத்தார்.

அத்துடன் நளீம் ஹாஜியார் அவர்களையும் சந்தித்தார். இறுதி நாளன்று அமைச்சர்களுடன் ஒப்ரோய் ஹோட்டலில் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டது மட்டுமல்லாமல் புகைப்படம் எடுத்துக் கொள்ளக் கிடைத்தமையும், ஆட்டோகிராபில் கையொப்பம் பெற்றுக்கொள்ளக் கிடைத்தமையும் அவருக்கு இறைவன் வழங்கிய பரிசுகள் என நினைத்துக் கொண்டார்.

மாநாட்டின் இறுதி நாளன்று பிரதமர் ஆர். பிரேமதாச முதல் அனைத்து மாநாட்டு பிரமுகர்களுடனும் ஹோட்டல் ஒப்ரோயில் நஜீப் தனது வாழ்க்கையில் முதன் முதலாக “புஹ்பே” விருந்தில் கலந்து கொண்டார். நஜீபின் தந்தையும் மாநாடு ஆரம்பித்தது முதல் இறுதி நாள் வரை சகல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு நஜீபுக்கு உதவியாகவும், வழிகாட்டியாகவும் இருந்தார்.

# தர்கா நகர் ஆலிம்ஸாஹிப் அப்பாவின் தக்கியாவில் வருடாந்த கந்தூரியும் நீண்ட கால முயற்சி நிறைவேறப் போகும் மகிழ்ச்சியும்

தர்கா நகரில் அடங்கப்பட்டிருக்கும் செய்கு ஹஸன் இப்னு மஹ்தூம் (ரஹ்) அவர்களின் தக்கியாவில் கந்தூரி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கந்தூரி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் வேளையிலும் தனது வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறைவேற வேண்டும் என நினைத்து இறைவனை வேண்டிக் கொண்டார் நஜீப். அடுத்த வருட கந்தூரிக்கு முன்பு தான் வெளிநாட்டில் இருக்க வேண்டும் என்றும் இறைவனிடம் மன்றாடினார்.

மாலை நேரம் பிற்பகல் 2 மணியிருக்கும். அன்றைய தினசரிப் பத்திரிகையில் மூழ்கியிருந்தார் நஜீப். சைக்கிள் மணியோசை கேட்டு ஓடிப் போய் வெளியே எட்டிப் பார்த்தார். தபால்காரன் நஜீபின் பெயரைச் சொல்லி ஒரு கடதாசியை நீட்ட என்னவாக இருக்கும் என்று யோசித்தவாரே அதைக் கையில் எடுத்தார். நஜீபின் பெயருக்கு ஒரு "தந்தி" வந்திருந்தது. அந்தத் தந்தி ஒரு வெளிநாட்டு வேலைவாய்பபு முகவர் நிலையத்திலிருந்தே வந்துள்ளது என்று தபால்காரன் சொன்னதும் நஜீபின் இதயம் பூவாய் மலர்ந்தது. அவசரமாகத் தந்திக் கடதாசியை விரித்துப் பார்த்தார். "பாஸ்போர்ட் சகிதம் குறிப்பிட்ட இடத்துக்கு உடன் வரவும்" என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்ட நஜீப் இயந்திரமானார். சந்தோசத்தில் மூழ்கிப் போனார். தந்தையிடம் விடயத்தைச் சொல்லி கொழும்பு செல்வதற்காக 10 ரூபாவைப் பெற்றுக் கொண்டார். அவர் கொழும்புக்கு இறக்கை கட்டிப் பறந்தார்.

நஜீப் சென்ற இடம் தெமட்டகொடை வீதி, மருதானை, கொழும்பு. என்ற முகவரியில் ஏ.ஸி.எம். புவாத் அவர்களின் மகன் நிறுவகித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம். அபூதாபியில் விவசாயப் பண்ணை ஒன்றுக்கு தொழிலாளர்கள் தேவைப்படுவதாகவும் அங்கு செல்ல விரும்பினால் பண்ணையில் வேலை செய்தபடி அனுபவ சான்றிதழ், பொலிஸ் கடிதம் போன்றவற்றைக் கொண்டுவந்து தரும்படியும் நஜீபிடம் கூறினார். கடவுச்சீட்டை ஒப்படைக்கும்படியும் கேட்டுக் கொண்டார். நஜீப் ஓயாது சுழலத் தொடங்கினார். அவரது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எல்லாம் முடிந்து வெளிநாடு செல்லும் நாள் வரும் வரை காத்திருந்தார் நஜீப். ஒரு தினம் அந்த நாளும் வந்தது. அதிலும் ஒரு துரதிர்ஷ்டம் விமானத்தில் ஆசனம் கிடைக்காததால் பயணம் பின்

போடப்பட்டது. அதற்கிடையில் நஜீபின் தந்தை புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்கா சென்று விட்டார். தனது தந்தை வந்த பிறகே தான் வெளிநாடு போகக் கிடைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார் நஜீப். அவரது நாட்டப்படியே தந்தை திரும்பி வந்து மூன்று வாரங்களில் 12-12-1978 அதிகாலையில் நஜீப் 4.30 மணிக்கு விமானம் ஏறத் தயாரானார்.

*பிரயாணங்களின் போதும் உன் கடமையைச் செய்யத் தவறாதே அதுவும் ஒரு வகையில் உனக்கு இன்பத்தைத் தரும்.*

## நிறைவேறிய ஆசை.

நஜீபுக்கு நடப்பது கனவா? நனவா? என்று நம்பவே முடியவில்லை. நீண்ட நாள் ஆசை நிறைவேறிய மகிழ்ச்சி இதயத்துக்கு குளிர்ச்சியாய் இருந்தது. விடா முயற்சி கை கூடும் போது யாருக்குத்தான் சந்தோசம் இல்லாமல் போகும்? இன்ப வானில் இறக்கைகள் கட்டிப் பறந்தார் அவர். வாழ்க்கையில் எத்தனை ஏமாற்றம். எத்தனை அவமானங்கள், எத்தனை துரோகங்கள் இவை அனைத்தையும் தாண்டி எத்தனை முகவர் நிலையங்களில் ஏறி இறங்கிய அலைச்சல்? அலுத்துச் சலித்துப்போன ஒரு கட்டத்தில் இவை அனைத்தையும் உடைத்துத் தகர்த்துப் போடும் வகையில் கை கொடுத்த விடா முயற்சியால் அவரது வாழ்வில் வசந்தம் பொங்கி வீசும் பொன்னான நாள் உருவாகியிருந்தது. அன்று அயலவர்கள், குடும்பத்தினர்கள், நண்பர்கள் அனைவரிடமும் விடைபெற்று கண்கள் குளமாக மாற குடும்பத்தவர்களுடன் விமான நிலையம் சென்றார். ஒட்டியிருந்த உறவுகளை விட்டுப் பிரிந்து செல்லும் கவலை அவரை சுழற்றி எடுத்தாலும் முன்னோக்கிய பாதையில் உதயம் காணப் போவதை நினைத்து அவரது இதயத் தடாகத்தில் மகிழ்ச்சி ஊற்றெடுத்து ஓட ஆரம்பித்தது.

விமான நிலையத்தை அடைந்ததும் எல்லோரிடமும் விடை பெற்று விமானம் ஏறச் சென்ற போது பச்சை நிறம் கொண்ட பாகிஸ்தான் விமானப் பணிப் பெண்களின் வரவேற்பு மனதுக்குக் குளர்ச்சியைக் கொடுத்தது. தனக்குரிய ஆசனத்தில் சென்று அமர்ந்து கொண்டார் நஜீப். விமானம் பறக்க முன்பே அவரது மனம் வானில் பறந்தது.

*நல்லவர்களைச் சந்திக்க கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவ விடாதே நழுவ விட்டால் மீண்டும் சந்திக்க கிடைப்பது சாத்தியமற்றது.*

இந்தப் பயணம் அவரது வாழ்க்கையில் எத்தகைய ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் என்பதை அவர் அப்போது நினைத்துக்கூடப் பார்த்ததில்லை. இந்நூலைத் தொடர்து வாசிக்கும் நீங்கள் அந்தத் திருப்பம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் போகிறீர்கள்.

# வெளிநாடும்
# குடும்ப வாழ்க்கையும்

## கஷ்டப்பட்டேனும் கரை சேருதல்.

விமானமேறிய நஜீபின் மனம் பல கற்பனைக் கோட்டைகளைக் கட்டியது. அது தன்னை மறந்து பறக்கத் தொடங்கியது. விமானம் கராச்சியினூடாகவே அபூதாபி செல்ல வேண்டியிருந்ததால் விமானம் கராச்சியில் நிறுத்தப்பட்டது. அங்கு அவருக்கு விமான நிலையத்திலிருந்து வெளியே செல்லச் சந்தர்ப்பமும் கிடைத்தது.

பாகிஸ்தானில் வெற்றிலை வியாபாரம் நல்ல இலாபத்துக்குச் செய்யலாம் என ஏற்கனவே அவர் தெரிந்து வைத்திருந்ததனால் வெற்றிலை ஒரு தொகையைத் தன்னோடு கொண்டு வந்திருந்தார். அந்த வெற்றிலைகளை விற்பனை செய்து கிடைத்த பணத்தில் பாகிஸ்தானிய கைப்பணிப் பொருட்கள் சிலவற்றை வாங்கிக் கொண்டார். மீண்டும் அவர் பகல் 12 மணிக்கு விமானம் ஏறி பிற்பகல் 3.30 மணிக்கு அபுதாபி விமான நிலையத்தில் இறங்கினார். சந்தோசம் நெஞ்சில் களைகட்ட செவ்விதழ் விரிக்கும் செந்தாமரையானார் நஜீப் அவர்கள்.

சில நிமிடங்கள் கடந்து சென்றன. உரிய இடத்துக்குக் கூட்டிச் செல்ல மலையாளசகோதரர் ஒருவர் வந்திருந்தார். அவருடன் இலங்கையர்கள் 10 பேர் சென்றனர். ஒரு ஹோட்டலுக்குக் கூட்டிச் சென்று பகல் சாப்பாட்டைச் சாப்பிடத் தந்துவிட்டு திறந்த வண்டியில் (பிக்அப்) உரிய இடத்துக்குக் கூட்டிச் சென்றார் அந்த மலையாள சகோதரர்.

அது ஒரு பாலைவனம். குளிர்ப் பிரதேசம், வெளிச்சமே இல்லாத இருள் சூழ்ந்த இடம், பார்க்கவே பயமாக இருந்தது. அன்று இரவு சாப்பாட்டுக்குக்கூட வழியின்றி திண்டாட்டத்தோடு யோசித்தபடி நஜீப் அவர்களும் உடன் சென்றவர்களும் இருந்தனர். தான் கொண்டு வந்த பொறித்த இறைச்சியை அனைவரும் சாப்பிட்டு அரைகுறையாக பசியை தணித்துக் கொண்டு எல்லோருமாக உறங்கச் சென்றனர்.

சுவைஹான் என்ற அந்த இடம் அவர்களுக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. அதிகாலையில் கண் விழித்த போது மிருகங்கள் பறவைகளின் சத்தங்கள் கூட துளியளவும் கேட்கவில்லை. மலசல கூடம், குளிக்க வசதிகள் கூட இருக்கவில்லை. குடிப்பதற்கு தண்ணீர் கூட அபூதாபியிலிருந்து தான் கொண்டு வருவதாக அறியக் கிடைத்தது. உவர்ப்புத் தன்மை கொண்ட தண்ணீரையே அருந்த வேண்டியிருந்தது.

பின்புதான் இவர்களுக்கு வேலையைப்பற்றித் தெரிய வந்தது. நஜீபின் கற்பனைகள் எல்லாம் காற்றோடு கலந்து மறைந்தன.

பாலைவனத்தைச் சோலைவனமாக்குவதுதான் இவர்களது முதல் வேலையாக இருந்தது. மரங்களை நட்டு தோட்ட வேலை செய்தல், சீமெந்து மூட்டைகளைத் தூக்குதல், பெரியளவில் சீமெந்து குழைப்பதற்காக கல், மண் சுமத்தல் மற்றும் பெரிய குழிகள் தோண்டுதல் போன்ற செய்வதற்கு மிகவும் கடினமான வேலைகளே இவர்களுக்குக் காத்திருந்தன. அத்துடன் ஏனைய நண்பர்களுக்கு மொழிபெயர்ப்பு செய்ய வேண்டியும் இருந்தது. ஏனெனில் அங்கு பொறியியலாளராக பாலஸ்தீன் நாட்டவர் ஒருவரும் அவருக்கு உதவியாளராக எகிப்து நாட்டைச் சேர்ந்தவர்களுமே இருந்தனர். இதனால் நஜீப் மொழிபெயர்ப்பு வேலையையும் செய்ய வேண்டியிருந்தது. கூடவே சமைத்து உண்ண வேண்டியும் இருந்ததால் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. எப்படியாவது சமாளித்துக் கொண்டு கஷ்டப்பட்டேனும் கரை சேர வேண்டுமென்ற எண்ணத்தோடு வேலை செய்ய ஆரம்பித்தார் நஜீப்.

*மகிழ்ச்சியான விடயங்கள் நடைபெறும் போது தன்னை மறந்து விடக் கூடாது. அது அல்லாஹ்வை மறந்து போதல் போன்றதாகும்.*

## இடம்மாற வேண்டி இறைவனை இறைஞ்சுதல்.

1979 காலங்களில் நஜீப் வெளிநாட்டில் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்து கொண்டிருந்தார். பாரமான வேலைகள் அவரது உடம்புக்கு மட்டுமல்ல இதயத்துக்கும் வலியைக் கொடுத்தன. பல்லைக் கடித்துக் கொண்டிருந்தபோதும் அவரால் தொடர்ந்தும் சரியாக வேலை செய்ய முடியவில்லை. அவருடன் இலங்கையைச் சேர்ந்த இன்னும் நான்கு பேர்கள் கஷ்டத்தை அனுபவித்தனர். ஒழுங்காக வேலை செய்யவில்லை என்ற காரணத்தைச் சொல்லி பொறியியலாளர் முகாமையாளரிடம் முறையிட்டார். 5 பேரையும் அடுத்த வாரமே இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதாக அவர்கள் சொன்னதும் நஜீபுக்கு தூக்கி வாரிப் போட்டது. கட்டிய கனவுகளெல்லாம் கலைந்துவிடுமோ என்ற சிந்தனையில் வீழ்ந்து போனார் அவர்.

மலசல கூட வசதிகளில்லை, போசாக்கான சாப்பாடு இல்லை, பாலைவனத்தில் கூடாரத்தில் தான் தங்க வேண்டும். அது கடுமையான குளிர் காலமாகவும் இருந்தது. அனைத்தையும் தாங்கிக் கொண்டு தனது எதிர்காலத்தை மட்டும் நினைத்து பொறுமையுடன் தொடர்ந்து மீண்டும் அவ்விடத்திலேயே தொழில் செய்வதற்காக முகாமையாளரிடம் மன்னிப்புக் கேட்டுத் தம்மைத் தொடர்ந்து வேலை செய்ய அனுமதிக்குமாறு கேட்டார் நஜீப். அவரது வேண்டுகோள் நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இவ்வாறே நாட்கள் மந்தமாகக் கடந்து வருடங்களை எட்டிப் பிடித்தன. நஜீப் கம்பனி சாரதி முஸ்தபா என்பவருடன்

காரியாலயத்துக்குச் சென்று தன்னை காரியாலயத்தில் பணி புரியும்படியான ஒரு வேலை மாற்றித் தரும்படி கேட்டும் அது கைகூடவில்லை. வந்த நோக்கத்தை அடைய வேண்டுமென்ற எண்ணத்துடன் ஐவேளையும் தொழுது அல்லாஹ்வை பிரார்த்தித்தவராக மிகவும் கவலையோடு இயந்திரம் போல் இயங்கினார் நஜீப்.

*அளவுக்கு அதிகமாக ஆசைப்படக்கூடாது. நிறைவேறாத ஆசைகளால் வேதனைப் பட நேரிடும்.*

## இடம் மாறி குணத்தால் வென்றார்.

1979.04.09 ஆம் திகதி நஜீபின் முகாமையாளர் ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டிருந்த ஐந்து பேரையும் "அல்ஜன்" என்ற பிரதேசத்திற்கு இடம் மாற்றினார். அவர்கள் ஒரு அரேபியரின் வீட்டில் தங்க வைக்கப்பட்டு இரவுச் சாப்பாடு கடையால் வாங்கிக் கொடுக்கப்பட்டது.

ஐந்து பேரையும் அழைத்து பொறியியலாளர் உங்களில் யார் திறமைசாலியாக இருக்கிறாரோ அவருக்கே பொறுப்பான பதவி தருவதாகச் சொன்னார். அந்தப் பதவிக்குத் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென இறைவனை வேண்டிக் கொண்டார் நஜீப்.

ஐந்து பேருக்கும் ஆயுதங்களின் பெயர்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. இயந்திரங்களை ஒழுங்காகப் பொருத்த வேண்டும் என்று அவர்கள் பணிக்கப்பட்டனர். ஒருவர் முறைப்படி முதலாவதாக பொருத்தினார் நஜீப் இரண்டாவது நபராக இயந்திரத்தைப் பொருத்தினார்.

இடமாற்றம் பெற்ற ஐந்து பேரிலும் நஜீபிடம் மட்டும்தான் மார்க்கப்பற்று இருந்தது. தனக்கு நல்லதே நடக்க வேண்டுமென அல்லாஹ்விடம் ஐவேளையும் மனமுருகி துஆ கேட்டுக்கொண்டே இருந்தார் அவர்.

மூன்று மாதத்துக்குள் நல்ல தேர்ச்சி பெற்றவரை, தான் ஆரம்பிக்கப்போகும் புதுக் கம்பனிக்கு மேற்பார்வையாளராக நியமிக்கவிருப்பதாகச் சொன்னபோது நஜீப் மிகவும் நிதானமாக இயங்கினார்.

5 பேரிலும் கொழும்பைச் சேர்ந்த ஒருவர் நஜீப் அவர்களை விட திறமைசாலியாக இருந்த போதிலும் நஜீப் அவர்களுக்கே மேற்பார்வையாளர் (சுபவைசர்) பதவி கிடைத்தது. இதற்குப் பல காரணங்கள் ஏதுவாய் அமைந்திருந்தன. அவரது நற்குணம், நன்நடத்தை அதே போன்று மார்க்கப் பற்று போன்றன காரணங்களாய்

அமைந்தன. அத்துடன் அவர்கள் குறித்த பொறியியலாளருடன் வேலை செய்யும் போது பொறியியலாளர் அவர்களுக்கு மோசமான வார்த்தைகளால் கடிந்து கொள்வதுண்டு. அவ்வாறான சந்தப்பங்களில் ஏனைய நண்பர்கள் பொறியியலாளருடன் ஒன்றுக்கொன்று பேசி எந்நேரமும் மோதிக் கொள்வதுண்டு. நஜீப் அதற்கு மாற்றமாக அவற்றைப் பொறுத்துக் கொண்டு அவருடன் இதமாகப் பேசி மரியாதையோடு நடந்து கொள்வார். அவரது அரபு மொழித் தேர்ச்சியும் பொறியியலாளரின் மனதைக் கவர்ந்தது. இது மேற்பார்வையாளராகப் பதவி உயர்வு செய்வதற்கு மற்றுமொரு காரணியாக அமைந்ததெனலாம்.

மூன்று மாதங்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்பட்டது. கம்பனி ஆரம்பமாகும் நாளும் வந்தது. தனக்குக் கிடைக்கப் போகும் வேலையை நினைத்து பூரித்துப் போனார் நஜீப். இனி அவரது மகிழ்ச்சியைச் சொல்லவும் வேண்டுமா?

*ஒரு மனிதன் குணத்தால் வென்று எதையும் சாதிக்க முடியும் ஆகையால்*
*எப்போதும் நற்குணம் உள்ளவனாய் இரு.*

## பொறாமையின் போதும் பொறுமையைக் கண்டவர்.

நஜீபின் வாழ்க்கையில் அதிஷ்டக் காற்று வீச ஆரம்பித்தது. ஜூலை மாதம் 1979 ஆம் ஆண்டு நஜீப் அவர்களை மேற்பார்வையாளராகவும் மலையாளி கோபால் என்பவரை இயந்திர இயக்குனராகவும் (ஒப்பரேட்டர்) ஏனைய 4 பேரையும் கார்களைச் சுத்தம் செய்வதற்கும் கேட் மூடுவதற்குமாக நியமித்தனர். நஜீப் அவர்களை ஏனைய நால்வரும் கேள்விக்குறியோடு பார்த்தனர். அவர்கள் நான்கு பேரும் நஜீப் மீது பொறாமை கொண்டனர். இந்தப் பொறாமையும், கோபமும் நாளுக்கு நாள் அதிகரித்தது. நஜீபுக்கு எதிராக அவர்கள் பல சூழ்ச்சிகள் செய்தும் அவை பயனளிக்கவில்லை. இதனால் நஜீபை விட நன்றாக வேலை செய்த ஒருவன் நஜீபுடன் சதா பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டே இருந்தான்.

இப்படியிருக்கும் போது கோபால் என்ற ஒபரேட்டர் கம்பனியின் பணத்தைத் திருடிக் கொண்டிருந்தான். இந்தத் திருட்டை நஜீப் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொடுத்தார். அன்றிலிருந்து கோபாலின் இயக்குனர் வேலையும் நஜீப் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. அத்தோடு நஜீபுக்கு சம்பளமும் உயர்த்தப்பட்டது.

*பொறாமை தன்னை அறியாமலேயே அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும்*
*ஒரு சிறிய தீய செயலாகும். ஒருவன் மீது பொறாமைப்படும் போது அவன்*
*மென்மேலும் உயர்ந்து பெருமைக்குரியவன் ஆகிறான்.*

## ஹஜ் பிரயாணம்.

1980 ஆம் ஆண்டு எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கிருபையால் நஜீபுக்கு ஹஜ் கடமையை நிறைவேற்றும் பாக்கியம் கிடைத்தது. மலையாளி நண்பர்கள் 4 பேர்களுடன் தனது சொந்தச் செலவில் ஹஜ் கடமையை முடித்துக் கொண்டார். இருள் சூழ்ந்திருந்த வாழ்வில் ஒளி வீச ஆரம்பித்தது. அல்லாஹ் நாடினால் எதுவும் நடக்கும். அவனது நாட்டமின்றி அணுவும் அசையாது என்பதற்கிணங்க அவரது வாழ்க்கை பிரகாசமானது. பொறுமை காத்ததனால் பெருமை அவருக்குக் கிடைத்தது. பெருமிதமடைந்தார் அவர். இந் நற்செய்தியைக் கேட்ட குடும்பத்தினரும் சந்தோசப்பட்டனர்.

*இறுதிக் கடமை ஹஜ்ஜை நிறைவேற்றும் ஒவ்வொரு மனிதனும் பாவக்கறைகளை நீக்கி மனிதனாக மாறுகின்றான் மட்டுமல்லாது அன்று பிறந்த பாலகனைப் போல் ஆகின்றான்.*

## கார் விபத்து.

1981 ஆம் ஆண்டு கம்பனியில் திருப்தியோடு நஜீப் ஹாஜியார் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவருக்குக் கார் ஓட்ட வேண்டுமென்று ஆசை மனதில் ஊற்றெடுத்தது. என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் ஒரு நாள் அவரின் தொழிலிடத்திற்கு ஒரு அரேபியர் வந்தார். அவர் ஓட்டிவந்திருந்த பழைய காரை தான் ஓட்டிப் பார்க்க ஆசைப்பட்டார். அதை அந்த அரபியிடம் சொன்ன போது அவரும் மறுப்புத் தெரிவிக்காமல் சரி என்று கூறி காரின் சாவியை நஜீப் ஹாஜியாரிடம் கொடுத்தார். சந்தோசம் பொங்க மிகவும் ஆர்வத்துடன் காரைச் செலுத்தத் தொடங்கினார் அவர். காரில் பிரேக் இல்லாத விடயம் நஜீப் ஹாஜியாருக்குத் தெரிந்திருக்கவில்லை. அதைப் பற்றி முன்கூட்டியே விசாரிக்க வேண்டும் என்ற எண்ணமும் அவருக்குத் தோன்றவில்லை. முதன் முதலில் காரோட்டப் போகும் ஆவலில் சிந்திக்காமல் காரை ஓட்டத் தொடங்கினார். துரதிஷ்டவசமாக கார் எதிரே இருந்த மதிலில் போய் மோதியது. "படார்" என்ற சத்தத்துடன் மதில் இடிந்து விழுந்தது. காரின் சில பாகங்களும் சேதமடைந்தன. இறை நாட்டத்தால் உயிர் தப்பினார் நஜீப் ஹாஜியார். அவர்களின் மேற்பார்வையாளர் நடந்த விடயத்தைக் கேட்டறிந்த போது மிகவும் கோபப்பட்டார். நஜீப் ஹாஜியாரின் செலவிலேயே மதிலைக் கட்டித் தருமாறு வேண்டினார். இதே கம்பனியில் மேசன் வேலை செய்யும் இந்திய நண்பன் ஒருவன் இருந்தான். அவனது உதவி அவருக்குக் கிடைத்ததில் வேலை இலகுவாய் போய்விட்டது. அரபியின் காருக்கு சிறிது சேதம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அவர் அதைப் பெரிதுபடுத்தவில்லை. அத்தோடு மன்னித்து மறந்தார்.

*மன்னிப்பு உறவுகளைப் பலப்படுத்த உதவுகிறது. ஒரு தவறு நடந்தால், மன்னிப்பின் மூலம் மீண்டும் நம்பிக்கையையும் புரிதலையும் வளர்க்க முடியும்.*

## தாய் நாடு திரும்புதலும் சிங்கப்பூர் பயணமும்.

வெளிநாடு சென்ற ஒவ்வொருவரும் தாம் சென்ற நாளிலிருந்து ஒவ்வொரு நாளையும் எண்ணி எண்ணியே கழிப்பார்கள். அப்படி இருப்பவர்கள் தாய் நாடு திரும்புவதென்றால் சொல்லவும் வேண்டுமா? அதே போன்றுதான் தாய் நாட்டில் கால் வைக்கப் போகும் மகிழ்ச்சி, குடும்பத்தினரை சந்திக்கப் போகும் மகிழ்ச்சி இப்படியாக நஜீப் ஹாஜிாரின் உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பியிருந்தது. ஆம் அவர் மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் மத்திய கிழக்கிற்குச் சென்று அங்கு எதிர்பாராத பல துயரங்களை அனுபவித்து இன்று நாடு திரும்பத் தயாராகியிருந்தார்.

01.07.1981 ஆம் நாள் நஜீப் ஹாஜியார் நாடு திரும்பினார். பெற்றோரையும், மற்ற உறவினர்களையும் சந்தித்து பரவசமடைந்தார். தனது அனுபவங்களை அவர்களுடன் பரிமாறிக் கொண்டார். சில நாட்கள் மின்னல் வெட்டியது போல் வேகமாக மறைந்தன. 29.08.1981 ஆம் திகதி 8 நாட்கள் நஜீப் ஹாஜியார் அவர்கள் சிங்கப்பூருக்கு சுற்றுலா சென்றார். மீண்டும் வெளிநாடு செல்வதை அவரது தந்தை விரும்பவில்லை. மாணிக்கக் கல் வியாபாரம் செய்யும்படி அவருக்கு ஆலோசனை கூறினார். அது அவருக்கு நல்ல யோசனையாகத் தோன்றியது. தன்னிடம் அதற்குப் போதுமான பணம் இருந்ததனால் நஜீப் ஹாஜியார் மீண்டும் மாணிக்கக் கல் வியாபாரத்தில் இறங்கினார். கூட இருந்த நண்பருடன் சேர்ந்து அவர் மாணிக்ககல் வியாபாரம் செய்து கொண்டிருக்கும்போது நல்ல இலாபம் உழைத்தார். இப்படியே சில காலம் கடந்து சென்றது. வழக்கம்போல கூட இருந்த நண்பர்கள் சதித் திட்டங்கள் செய்து அவரைத் தோற்கடித்தனர். ஏமாற்றமும் கவலையும் கொண்ட நஜீப் ஹாஜியார் மீண்டும் வெளிநாடு செல்ல வேண்டிய நிலைக்கு உள்ளானார்.

*உயர உயர எங்குதான் பறந்தாலும் தாய் நாடும் உறவுகளும்தான் மனதிற்கு இதத்தையும், திருப்தியையும் கொடுக்கின்றன. என்றாலும் அதற்காக அத்தியாவசிய பயணங்களும் முக்கியமானதே.*

## மீண்டும் அபூதாபி பயணம்.

இந்நிலையில் செய்வதறியாது யோசித்த நஜீப் ஹாஜியார் 02.10.1981 அன்று மீண்டும் அபுதாபி பயணமானார். 10 நாட்கள் பம்பரம் போல்

சுழன்று சென்றன. அது ஒரு வெள்ளிக்கிழமை மாலை நேரம். இருட்டு கௌவிக் கொள்ளும் வேளை ஏழு மணியிருக்கும். கம்பனிக்கு இயந்திரங்களுக்கான எண்ணெய் வாங்கிக் கொண்டு நஜீப் ஹாஜியார் டெக்ஸியில் வந்து கொண்டிருந்தார். அத்தியாவசியத் தேவை ஒன்றுக்காக டெக்ஸி ஒரு பாதையோரத்தில் நிறுத்தி வைக்கப்படடிருந்தது. நஜீப் ஹாஜியார் அதனுள் அமர்ந்திருந்தார் அப்போது எதிரே வேகமாக வந்த இராணுவப் படையினரின் லாரி ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டெக்ஸியில் மோதியது. நஜீப் ஹாஜியார் அடிபட்டு வாகனத்தினுள் அப்படியே மயக்கமானார். அவசரமாக அம்பியூலன்ஸ் வண்டி வரவழைக்கப்பட்டு அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவசர சிகிச்சைகள் நடைபெற்றன. அது பற்றி கம்பனி அறிந்திருக்கவில்லை.

அடுத்த நாள் காலை 9.30 மணிக்கு அவரின் மயக்கம் தெளிந்தது. கண் திறந்து பார்த்த போதுதான் தான் வைத்தியசாலையில் இருப்பதை அவரால் உணர முடிந்தது. கம்பனிக்கு எப்படி அறிவிப்பதென யோசித்தார். வைத்தியசாலையில் வேலை செய்யும் ஒருவர் மூலம் கம்பனியின் தொலைபேசி இலக்கத்தை கொடுத்து அறிவிக்கும் படி சொன்னார். பின்பு கம்பனியிலிருந்து அவரைப் பார்ப்பதற்காக வந்தனர்.

ஆறு நாட்கள் கழிந்தன. விபத்து விடயமாக வழக்கு போடப்பட்டிருந்தது. நஜீப் ஹாஜியார் திரும்பி வரும் வரை லாரி சாரதியை சிறையில் வைத்திருந்தனர். இரண்டு மாதங்களாக தொழிலின்றி சும்மா இருந்த போதும் எந்த விதமான நட்டஈடுமின்றி சாரதியை விடுவிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார். அவரின் உயர்ந்த உள்ளத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

*பாதையில் விபத்துக்கள் ஏற்படுகின்றதென்பதற்காக வீதியில் பயணிக்காமல் இருக்க முடியுமா? அவதானமாக இருந்தால் விபத்துக்களைத் தடுக்க முடியும்.*

## அகம் குளிர வைத்த அதிர்ஷ்டம்.

சோலைவனத்துப் புஷ்பமாய் மலர்ந்து கொண்டிருந்த நஜீப் ஹாஜியாரை 1982 ஆம் ஆண்டு புது வருடம் அகம் குளிர வந்து முத்தமிட்டது. அந்த ஆண்டில் அவருக்கு அதிர்ஷ்டம் காத்திருப்பதை அப்போது அவர் அணுவளவும் அறிந்திருக்கவில்லை. தனது வேலைத் தளத்தில் அவர் வழமைபோல் தன் பாட்டுக்கு இயங்கிக் கொண்டிருந்தார். அப்போதுதான் அவருக்கு குணதாஸவின் நட்புக் கிடைத்தது. குணதாஸ அவர் வேலை செய்யும் இடத்துக்கு அடிக்கடி வந்து போவதுண்டு. ஆகையால் அவர்கள் இருவரினதும் பழக்கம் நெருக்கமாகி நட்பாக மாறியது.

ஒரு நாள் குணதாஸ வேலைதளத்துக்கு வந்த போது நஜீப் ஹாஜியார் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். தான் ஒரு சிங்களப் பெண்மணியான இலங்கையர் ஒருவரின் வழக்கு விடயமாக நீதி மன்றம் போனதாகவும் சிங்களத்தை அரபியில் தனக்கு மொழி பெயர்க்கும்படி சொன்னதாகவும், தெரியாததால் வழக்கு பின் போடப்பட்டத்தாகவும் குணதாஸ சொன்னார். நஜீப் ஹாஜியார் அவரை வியப்போடு பார்த்தார். அந்தப் பார்வை குணதாஸவை ஆச்சரியப்படுத்தியது.

"உங்களால் இதைச் செய்துதர முடியுமா?" என மறு கணமே கேட்டார் குணதாஸ. புன்னகைத்தபடியே ஆம் என்று தலையசைத்தார் நஜீப் ஹாஜியார். வழக்கின் அடுத்த தவணை சூடான் நாட்டைச் சேர்ந்த நீதிபதியின் முன்னால் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. நஜீப் ஹாஜியாரின் வருகையை அங்கு எவரும் அறிந்திருக்கவில்லை. தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு நபரை முன் ஆஜராக்கினார்கள். புனித அல் குர்ஆனில் சத்தியப் பிரமாணம் எடுத்து சிங்களப் பெண்மணியிடம் பெயரைக் கேட்கும்படி நீதிபதி சொன்னார் அவர் தமிழராய் இருந்ததனால் தமிழ் மொழியிலேயே அவளிடம் பெயரைக் கேட்டதும் அவளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஒன்றும் புரியாமல் தவித்தாள். நீதிபதிக்கு அன்றும் இது பெரியதொரு சிக்கலாய் இருந்தது.

நஜீப் ஹாஜியாருக்கு எங்கிருந்து வந்த தைரியமோ தெரியவில்லை. அவர் உடனே எழுந்து நின்று ஸலாம் சொல்லிவிட்டு, தனக்கு இந்தப் பெண் பேசும் பாசை தெரியும் என்று சொன்ன போது நீதிபதியும் அங்கிருந்தவர்களும் வியந்தனர். நீதிபதி ஆச்சரியத்துடன் பார்க்க நஜீப் ஹாஜியாரை சத்தியப் பிரமாணம் செய்ய வைத்தனர். வழக்கு இனிதே தொடர்ந்து சிறந்த முறையில் முடிந்தது.

நீதிபதி நஜீப் ஹாஜியாரைப் பார்த்து வியந்துபோய் "நீங்கள் நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக பணி புரிவீர்களா?" என்று கேட்டார். நஜீப் ஹாஜியாருக்கு இது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவர் இதை எதிர்பார்க்கவே இல்லை. அதிர்ஷ்டக் காற்று தன் பக்கம் வீசத் தொடங்கியிருப்பதை உணர்ந்தார் அவர். உடன் சம்மதம் தெரிவித்தார். அன்று தொடக்கம் நஜீப் ஹாஜியாருக்கு நீதிமன்றத்தில் சிங்கள மொழியிலிருந்து அரபுக்கு பெயர்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் ஒரே நாளில் 4 மொழிகளிலான வழக்கொன்றையும் மொழி பெயர்த்துள்ளார்.

*வாழ்வில் கரைசேர வேண்டுமெனில் கடுகளவும் அலுக்காமல் சலிக்காமல் இயந்திரம் போல் இயங்கி விடு.*

## நீதிபதியின் சிபாரிசு.

நீதிபதிக்கு நஜீப் ஹாஜியாரை நன்றாகப் பிடித்துப்போயிருந்தது. அவரை நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக நியமனம் பெற விண்ணப்பிக்கும்படி வேண்டினார். தேடி வந்த அதிர்ஷ்டத்தை விடுவாரா அவர்? உடனே தனது தந்தைக்கு அறிவித்தார். தனக்குக் கிடைத்திருந்த சான்றிதழ்களை அனுப்பி வைக்கும்படி சொன்னார். அவர் வேண்டிக் கொண்டபடியே அவைகள் அனைத்தும் வந்து சேர்ந்தன. நஜீப் ஹாஜியார் அவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனாலும் தேர்வு பிற்போடப்பட்டது. அது அவருக்குக் கவலை தந்த போதிலும் அவர் சோர்ந்து போகவில்லை. இருந்தாலும் அவர் முயற்சி செய்து கொண்டே இருந்தார். "அல்ஜன்" நீதிமன்ற அமைச்சிடம் எப்படியாவது தன்னை அதே நீதிமன்றத்துக்கே அனுப்புமாறு வேண்டினார்.

1983 ஆம் ஆண்டு அவருடன் ஒட்டி உறவாடிய லெப்டினன் கேர்னல் துகைரா முஹம்மது சுல்தான் என்ற பொலிஸ் அதிகாரியிடம் நஜீப் ஹாஜியார் இந்த விடயம் தொடர்பாக எடுத்துச் சொன்னார். அவர் அல்ஜன் பொலிஸ் உப அத்தியட்சகரிடம் பேசி வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாக ஹாஜியாரிடம் உறுதியளித்தார். அதே போன்றே அவ்வேளையில் தனது சான்றிதழ்களை எடுத்துக் கொண்டு பொலிஸ் அத்தியட்சகருடன் சென்று அவர் கையொப்பமிட்ட பத்திரத்தை அபூதாபி பொலிஸ் மா அதிபர் அவர்களுக்கு சமர்ப்பித்தார்.

ஓய்வு நேரங்களில், இலங்கையிலிருந்து வரும் பணிப் பெண்களை உரிய வீடுகளுக்கு அழைத்துச் செல்வதிலும், அங்கிருந்து நாடு திரும்ப இருக்கும் பணிப்பெண்களை இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடுகளையும் செய்வதிலுமாக தனது மேலதிக நேரங்களைச் செலவழித்தார்.

*அதிர்ஷ்டக் காற்று வீசும் போது இறைவனைத் தவிர வேறு*
*எவராலும் தடுக்க முடியாது.*

## நாடு திரும்பியதும்
## திருமணம் எனும் நறுமணம் வீசியது

காலச் சக்கரம் சுழன்று கனிவாய் மலர்ந்து மணம் வீசியது. மகிழ்வு மாலைகளை தனது நெஞ்சமதில் சூடிக் கொண்டிருந்தார் நஜீப் ஹாஜியார். 1983.06.10 நஜீப் ஹாஜியார் இரண்டாவது தடவையாக தாய் நாட்டுக்குத் திரும்பும் போது அத்தியாவசியப் பொருட்களுடன், அவசியம் என நினைத்த சில ஆடம்பரப் பொருட்களையும் சந்தோசத்தையும் சுமந்தவராய் வீடு வந்து சேர்ந்தார்.

சில தினங்கள் கழிந்தன. அணுவளவும் கவலையின்றி மகிழ்ச்சியோடு காணப்பட்டார் நஜீப் ஹாஜியார். திருமண வயதை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் வாலிப வயதல்லவா அவருக்கு. தனது மகளுக்கோ அல்லது மகனுக்கோ திருமண வயது வரும்போது எந்தப் பெற்றோர்தான் சும்மா இருப்பார்கள்? பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுக்கும்வரை அது அவர்களின் மனதுக்குப் பாரம் அல்லவா? நஜீப் ஹாஜியாரின் பெற்றோரும் அவருக்குக் கல்யாணம் செய்து வைக்க ஆசைப்பட்டனர். அவர்கள் திருமணப் பேச்சில் இறங்கினர். நஜீப் ஹாஜியாரின் சாச்சியின் சகோதரியின் மகள் பேருவளை மருதானையைச் சேர்ந்த பௌசுல் ஹினாயாவை நஜீப் ஹாஜியாருக்குத் திருமணம் பேசினார். ரமழான் மாதம் பிறை 11 இல் 20.06.1983 ஆம் தினம் அவருக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

பல செல்வந்தர்களிலிடமிருந்து சொத்து சுகத்தோடு வரன்கள் தேடி வந்த போதும் சீதனமின்றி கரம் பற்ற வேண்டும் என்று நினைத்த நஜீப் ஹாஜியார் பௌசுல் ஹினாயாவை மனைவியாக ஏற்றுக் கொள்ள சம்மதம் தெரிவித்தார். அது அவருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது.

*ஒருவருக்கு ஒருவரைப் பிடிபட்டால் அதாவது கவரப்பட்டால் எவ்வளவுதான்*
*முயன்றாலும் அவர்களை பிரிக்கவே முடியாது. மதிப்புதான் அதிகரிக்கும்.*

## மறக்க முடியாத இனிய நாள்

திருமண நாள் என்பது வாழ்வில் மறக்க முடியாத ஒரு தினம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. இரு உள்ளங்கள் ஒரு உள்ளமாகி நீண்ட கட்டிடமாய் எழவிருக்கும் புது வாழ்க்கைக்கு அத்திவாரம் போடும் நாளல்லவா? கணவன், மனைவி என்ற தாத்பரியத்துக்குள் ஒன்றாகி குடும்ப வண்டியை ஓட்டி பரவசத்தை பிரசவமாக்கும் நாளல்லவா? அந்த வகையில் கற்பனை எதிர்பார்ப்புகள் கனியும் மணவாழ்வை பலப்படுத்த தயாரானார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அந்த நாளை எண்ணி எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவரின் நாட்டப்படியே அந்த நாளும் வந்து மனதைக் குளிர வைத்தது. 22.07.1983 ஆம் தினம் இரவு நஜீப் ஹாஜியாருக்கும் பௌசுல் ஹினாயாவுக்கும் திருமணம் நடந்தது. கல்விமான்கள், அரசியல்வாதிகள், குடும்பத்தவர்கள், நண்பர்கள் போன்றோர் மத்தியில் அவர்களது வாழ்த்துகளுடன் இஸ்லாமிய முறைப்படி வைபவம் சிறப்பாக நடைபெற்றது. சந்தோசத்தின் உச்சிக்கே சென்றார் நஜீப் ஹாஜியார் அவர்கள்.

அன்றைய பழைய பாராளுமன்றத்தின் இறுதி சபாநாயகரும் புதிய பாராளுமன்றத்தின் முதல் சபாநாயாகருமான பாக்கீர் மார்க்கார், நஜீப்

ஹாஜியாரின் தந்தையின் நண்பரான, நீதி அரசர் அப்துல் காதர் ஆகிய இருவரும் வைபவத்திற்கு வருவதாக ஏற்பாடாகியிருந்த போதும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் சமூகமளிக்கவில்லை. ஆனாலும் அவர்கள் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்திருந்தனர். இம்தியாஸ் பாக்கிர் மார்க்கார், பத்தாஹ் ஹாஜியார் ஆகியோர் முக்கிய பிரமுகர்களாகக் கலந்து கொண்டனர். மறுநாள் மாலை வேளையில் சபாநாயகர் பாக்கிர் மார்க்கார் அவர்கள் வீடு தேடி வந்து புதுமணத் தம்பதியினரை வாழ்த்தினார்.

*சின்னஞ்சிறு விஷயத்துக்கு கூட உங்கள் உள்ளம் இறைவனிடத்தில் எப்போதும் கையேந்தி கொண்டே இருக்கட்டும் அவன் கொடுத்தால் மட்டுமே உங்களால் பெற முடியும்.*

## பிரிய மனமின்றி மீண்டும் பறந்தார்

நாட்கள் மலர்ந்து உதிர்ந்தன. அது போன்றே விடுமுறை காலமும் முடிந்தது. மீண்டும் அபூதாபிக்கு செல்லும் நாள் அண்மையில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. மனைவியையும் தன்னோடு கூட்டிச் செல்ல விரும்பினார் நஜீப் ஹாஜியார். அதற்காக மனைவிக்கு கடவுச் சீட்டையும் பெற்றார். ஆனாலும் அது சாத்தியப்படவில்லை. முதலில் அவர் அங்கு போய் மனைவியை அழைப்பதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டியதாயிற்று. ஆகவே பிரிய மனமில்லாதபோதும் மனைவி மற்றும் குடும்பத்தினரை பிரிந்து மீண்டும் அவர் அபூதாபி சென்றார்.

திருமணம் முடிந்து செல்வதால் அவரது கையில் இருந்த பணமெல்லாம் செலவழிந்திருந்தது. இந்த நிலையில் சென்ற அவருக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. தான் 1979 ஆம் ஆண்டு முதல் செய்து வந்த காசாளர், மேற்பார்வையாளர் அகிய பதவிகள் பறிபோயின. இயந்திர இயக்குனராக இருந்த வேலு கோபால் என்பவர் கம்பனியை குத்தகைக்கு எடுத்திருந்ததால் இந்த நிலைமைக்கு ஆளானார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அவரை வேறு ஏதாவது இடத்தில் வேலை தேடிக் கொள்ளும்படி வேலு கோபால் கூறியதும் அதிர்ந்து போனார் அவர். திருமணம் முடிந்து பல எதிர்பார்ப்புகளுடன் வந்த அவருக்கு இது பெரும் ஏமாற்றமாக இருந்தது. சிலைபோல் ஆனார் அவர்.

*விதைக்குள் ஆயிரம் கனவுகள் இருந்தாலும் அது விழுகின்ற இடத்தைப் பொருந்தத்தான் பலிக்கும்.*

## புதிய வேலையில் புன்னகைத்தார்.

அபூதாபியில் போக்குவரத்துச் சேவைகள் வழங்கும் லொறிகளை வாடகைக்குவிடும் கம்பனி ஒன்றில் காரியாலயத்தில் எழுத்து வேலை மற்றும் இயந்திர சாதனம் திருத்தும் உதவியாளராக நஜீப் ஹாஜியார் வேலைக்குச் சேர்ந்தார். அந்த இடத்தில் சாப்பாட்டுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. பழைய ரொட்டிகளே பசியை சிறிது ஆற்றின. வேறு எந்த வசதியும் அங்கு இருக்கவில்லை. தனிமையும் அவரை கூடவே வாட்ட கவலையில் மூழ்கினார். 1984 ஆம் ஆண்டு நஜீப் ஹாஜியார் அவர்களை திட்டம் போட்டு முடக்கியது போலிருந்தது. அவரால் தொடர்ந்து அந்த இடத்தில் வேலை செய்ய முடியவில்லை. நீண்ட காலம் அல்ஜனில் வேலை செய்து பழக்கப்பட்ட அவருக்கு இது சிரமமாகவிருந்தது. தனது முயற்சியால் மீண்டும் மிகவும் கஷ்டப்பட்டு 16.01.1984 முதல் மீண்டும் அல்ஜனில் முன்னைய கம்பனியிலும் பகுதி நேர வேலைகளைச் செய்து பயன் பெற்றுக் கொண்டார்.

இப்படிக் கவலையுடனும் சிந்தனையுடனும் அவரது வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது. நஜீப் ஹாஜியார் புகைக்கும் பழக்கமுடையவர் என்று ஏற்கனவே வாசித்தறிந்திருப்பீர்கள். நல்ல சிந்தனை தோன்றுவதற்கு புகைத்தல் சிறந்த மருந்தெனக் கூறும் மடையர்களுக்கு மத்தியில் அவர் என்ன விதிவிலக்கா? ஆனாலும் 27.03.1984 ஆம் திகதி தொடக்கம் புகைக்கும் பழக்கத்தை அவர் கைவிட்டார். ஒரு நாள் மாலை தேநீர் அருந்திவிட்டு சிகரட் புகைக்கத் தொடங்கியபோது அவருக்கு பலமாகத் தலைவலி ஏற்பட்டது. கூடவே இதயமும் சேர்ந்து வலித்தது. உடனே அவர் சிகரட்டை கீழே போட்டு மிதித்து விட்டார். இனிமேல் சிகரட் புகைக்க மாட்டேன் என்று தனக்குத் தானே சத்தியம் செய்து கொண்டார்.

அன்றிலிருந்து சிகரட் புகைத்தலுக்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டார். நஜீப் ஹாஜியார். அவர் நம்பிக்கயுள்ளவராக இருந்ததனால் ஹிந்தி, மலையாளி நண்பர்கள் ஆயிரக்கணக்கான திர்ஹம் பணத்தைப் பாதுகாப்பாக அவரிடம் கொடுத்து வைத்திருந்தார்கள். 1984.04.09 அன்று சங்கைக்குரிய மாப்பிள்ளை ஆலிமின் பேரப்பிள்ளை செய்கு சுஹைப் ஆலிம் அவர்களை துபாய் விமான நிலையத்தில் சந்தித்தார் நஜீப் ஹாஜியார் அவர்கள். சுஹைப் ஆலிம் அவர்கள் நஜீப் ஹாஜியாரின் தந்தையின் நெருங்கிய நண்பராவார்.

*அடுத்த மனிதர்களது தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு காரணமாக இருங்கள் இறைவன் உங்களது தேவைகளை நிறைவேற்றித் தருவதற்கு ஆயிரம் வழிகளை வசதிப் படுத்தித் தருவான்.*

## பரவசமூட்டிய மனைவியின் முதல்ப் பிரசவம்.

நஜீப் ஹாஜியார் வெளிநாட்டிலிருந்தபோதும் சதாவும் மனைவியின் சிந்தனையிலேயே இருந்தார். தனது மனைவி கர்ப்பமுற்றிருக்கும் வேளையில் தான் அவரருகில் இல்லையே என்று மன வேதனைப்பட்டார். நிறைமாதக் கர்ப்பிணியாக இருக்கும் தருவாயில் இருவருக்குமிடையில் அடிக்கடி கடிதம் பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது. தொலைபேசி வசதி இல்லாத அக்காலத்தில் தொலைதூரத்தில் அவர் இருந்ததனால் கடிதம் ஒன்றே பிரதான தொடர்பாடல் முறையாக இருந்தது.

இப்படிக் காலம் கடத்திக் கொண்டிருக்கும் போதுதான் அவர் எதிர்பார்த்திருந்த அந்த சுகந்தமான செய்தியைத் தாங்கி வந்தது அந்த மடல். 30.04.1984 காலை 11 மணியளவில் களுத்துறை தனியார் வைத்தியசாலையில் (பெர்னாண்டோ கிளினிக்) மனைவி ஒரு பெண் குழந்தையை பிரவசித்திருந்தார். நஜீப் ஹாஜியாரின் தந்தை குழந்தைக்கு பாங்கு, இகாமத் சொல்லி அவர் விருப்பபடியே பாத்திமா ஹுஸ்னா என்று பெயரையும் சூட்டியிருந்ததாக அவரது குறிப்பேட்டில் எழுதப்பட்டுள்ளது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த நாளான திங்கட்கிழமையன்று தனது புதல்வி பிறந்ததையிட்டு பரவசமடைந்தார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அவரது சந்தோசத்தைக் கூட இருப்பவர்களுடன் மனங்குளிரப் பகிர்ந்து கொண்டார்.

*எவ்வளவுக்கு எவ்வளவு ஒருவன் கஷ்டப்படுகிறானோ அவனுக்கு அதையும்*
*விட பல மடங்கு சுகம் கிடைக்கும் என்பது திண்ணம்.*

## தப்புச் செய்யாமல் கிடைத்த தண்டனை.

நஜீப் ஹாஜியாரின் பொறுப்பிலிருந்த ஒரு பணிப் பெண்ணை நாட்டுக்குத் திருப்பி அனுப்பும்படியும், நட்டஈடாக ஆயிரம் திர்ஹங்கள் அறவிட்டுத் தரும்படியும் பணிப்பெண்ணின் எஜமான் கூறினார். நஜீப் ஹாஜியார் அப்பெண்ணின் உறவினர் ஒருவரிடம் விடயத்தை எத்திவைத்தார். இது தொடர்பாக மிகவும் கவலைப்பட்டார். அந்தப் பெண்ணின் எஜமானர் நஜீப் ஹாஜியாருக்கு எதிராக கடவுச்சீட்டு செயலகத்தில் முறைப்பாடு செய்தார். 1984.05.30 இல் நஜீப் ஹாஜியார் வேலை செய்யும் இடத்துக்கே பொலிசார் வந்து அவரின் கைகளில் விலங்கிட்டுச் செயலகத்துக்குக் அழைத்துச் சென்றனர்.
அப்போது செயலகத்தில் பொறுப்பான கடமைகளில் இருந்தவர்கள் நஜீப் ஹாஜியாரின் கையில் விலங்கிடப் பட்டிருந்ததைக் கண்டதும்

அதிர்ந்து போனார்கள். உடனே அதை நீக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அவர்களே ஆயிரம் திர்ஹங்களைக் கொடுத்துதவினார்கள். அடுத்த நாள் நடந்த விடயத்தை அந்தப் பெண்ணின் உறவினரிடம் கூறியபோது அவர் ஆயிரம் திர்ஹங்களைத் தந்தார். அப்பெண்ணும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். ஒரு தவறும் செய்யாமல் தான் அனுபவித்த தண்டனை வாழ்வில் ஏற்பட்ட கசப்பான அனுபவம் என்கிறார் நஜீப் ஹாஜியார் அவர்கள்.

## மனைவிக்காக தடுப்புக் காவலில்.

தனது மனைவி தன்னோடு இருப்பதைத்தானே எந்தக் கணவரும் விரும்புவார். அன்பு மழையில் நனைந்து அகம் குளிர பக்கத்தில் இருக்கும் போதுதான் கணவனின் நிறைவைக் காணலாம் என்பது பொய்யல்லவே. தான் வெளிநாட்டில் தொலைதூரத்தில் இருப்பதை நஜீப் ஹாஜியார் விரும்பவில்லை. எப்படியாவது மனைவியை தன்னிடம் வரவழைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் முயற்சி செய்தார். அதற்கான ஏற்பாடுகளை அவர் செய்யலானார். ஆனால் மனைவியை வெளிநாட்டுக்கு வரவழைக்கக் கூடிய தகைமை அவருக்கு போதாமல் இருந்தது. அந்நாட்டுச் சட்டமும் இதற்கு இடமளிக்கவில்லை. இந்த வேளையில் நஜீப் ஹாஜியார் ஒரு அரபியைச் சந்தித்தார். இந்த விடயம் தொடர்பாகக் கதைத்த போது அவர் தனது அனுசரணையில் விசா தருவதாகவும் ஒரு வாரத்தில் வரும்படியும் கூறி விண்ணப்பப் படிவத்தை எடுத்துச் சென்றார்.

24.05.1984 அன்று நஜீப் ஹாஜியார் அவர்களும், அந்த அரபியும் காரியாலயத்துக்குச் சென்றனர். காரியாலயத்தில் விண்ணப்பப் படிவத்தை கொடுத்த போது இது யாருடையது என்று அதிகாரி கேட்டார். அரபி நஜீப் ஹாஜியார் அவர்களைக் காட்டினார். அவர் சட்ட விரோதமாகச் செயல்படுவதாகவும், அத்தோடு இலங்கையிலிருந்து பணிப் பெண்களை சட்ட விரோதமாக வெளிநாட்டுக்கு வரவழைப்பதாகவும் அந்த அதிகாரி சந்தேகித்தார். உடனே நஜீப் ஹாஜியாரை தடுப்புக் காவலில் வைத்தார்.

அன்று முதல் பணிப்பெண்களை வரவழைப்பதைக் கைவிட்டு அதற்கு முற்றுப்புள்ளி வைத்தார் நஜீப் ஹாஜியார். இதற்கு முன் சில தினங்களுக்கு முன்னர் நஜீப் ஹாஜியார் அவர்களை கையில் விலங்கிட்டு அங்கு அழைத்துச் சென்றதை வாசகர்களாகிய நீங்கள் அறிவீர்கள். இந்திய நாட்டை சுதந்திரம் பெறச் செய்வதற்காக மாமனிதர் மகாத்மா காந்தி சிறையில் அடைக்கப்பட்டார். அடிமைத் தலையை அறுத்து தனது மக்கள் சுதந்திரமடைய டாக்டர் அம்பேத்கார் சிறைவாசம் செய்தார். இவ்வாறு பல மகான்கள் தமது நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் சிறைவாசம் செய்துள்ளார்கள்.

ஆனால் நஜீப் ஹாஜியார் அவர்கள் தனது மனைவியை தன்னோடு சேர்த்துக் கொள்ளும் முயற்சியில் சிறைவாசம் அனுபவித்தார் என்பது மனைவி மீதான அவரின் அன்பையே வெளிப்படுத்துகின்றது.

இருந்தபோதிலும் மனைவியைத் தன் அருகிற்கு வரவழைக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார் நஜீப் ஹாஜியார். இந்த விடயமாக சிலருக்கு பணம் கொடுத்து ஏமாற்றமும் அடைந்தார். கவலையில் துவண்டு போன நஜீப் ஹாஜியார் நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக சேர்வதற்கான முயற்சியிலும் தீவிரம் காட்டினார். அரசாங்கத் தொழில் பெறும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் எதுவும் பயனளிக்கவில்லை. பிறகு பொலிஸ் அதிகாரி நுகைராவின் பிள்ளைகளுக்கு மாலை நேர ஆங்கில வகுப்பு நடத்தும் ஆசிரியராகக் கடமையாற்றினார். இக்காலப் பிரிவில்தான் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் கொல்லப்பட்டதும், இலங்கை முஸ்லிம் தலைவர் சேர் ராஸிக் பாரீத் அவர்கள் காலமானதும் குறிப்பிடத்தக்கது.

## இறுதி முடிவு இடையில் மாற்றம்.

எடுத்த முடிவுகள் அனைத்தும் வீணாகிப் போயின. மனைவியின் சிந்தனையிலே இருந்த நஜீப் ஹாஜியாரின் விசாவும் முடியும் தருவாயில் இருந்தது. அடுத்த வருடம் வேலையை இராஜினாமாச் செய்வதாகக்கூறி விலகல் கடிதத்தையும் கொடுத்துவிட்டார். அவர் இலங்கைக்குச் சென்று தன்னாலியன்ற தொழில் ஒன்றை செய்ய வேண்டுமென நினைத்துக் கொண்டார். அப்போது அவரது குழந்தைக்கு வயது ஒரு வருடம் ஆகியிருந்தது. தான் வங்கியில் இரண்டு வருடங்களாகச் சேர்த்து வந்த பணத்தைக் கொண்டு ஒரு சிறிய கடையையாவது செய்து மனைவி, பிள்ளையுடன் சந்தோசமாக இருக்கப் போவதாகவும் சொல்லி மனைவிக்கு கடிதம் எழுதினார் நஜீப் ஹாஜியார்..

1985 ஆம் ஆண்டு மலாந்தது. ஆறு மாதங்கள் கழிந்தன. கம்பனி முதலாளியின் சிறிய தந்தையுடைய வாகன சாரதி அப்துல் காதர் அவர்கள் (மலையாளி) நஜீப் ஹாஜியார் அவர்களைச் சந்திக்க வந்த போது, தான் தாய் நாடு திரும்பப் போவதாகச் சொன்னார் நஜீப் ஹாஜியார். தனது முதலாளி அபூதாபி பொலிஸ் உப அதிபராகக் கடமையாற்றுவதாகவும் அல்ஜன் மாவட்டத்திற்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்படுவதாகவும் அதற்காக பொலிஸ் உப அதிபருக்கு கடிதம் ஒன்று கொடுக்கும் படியும் அப்துல் காதர் நஜீப் ஹாஜியாரிடம் சொன்னார். அந்த வார்த்தைகளைக் கேட்டதும் நாடு திரும்பவிருந்த நஜீப் ஹாஜியாரின் மனம் சற்று இலேசாகியது. உப அதிபரின் பொலிஸ் சாரதி அப்துல் காதரின் வார்த்தையை மதித்து

மீண்டும் செயல்பத் தொடங்கினார் அவர். அதன் பயனாக 05.09.1985 அன்று அவர் மொழிபெயர்ப்பாளராக பதவியேற்றார்.

## புதிய வேலை, மொழிபெயர்ப்பாளர் பதவி.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால் 1985.09.05 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் அல் ஐன் மாவட்டத்தில் இலங்கைக்கான மொழிபெயர்ப்பாளராக நியமிக்கப்பட்டார். காலை 7.30 முதல் 1.30 வரை தனது பணியை சிரமேற்கொண்டு செய்து வந்தார். தனது அரபுக் கல்வியை மென்மேலும் விருத்தி செய்துகொள்வதற்காக கல்வித் திணைக்களத்தினால் பொலிஸ் மைதானக் கட்டிடமொன்றில் மாலை வேளைகளில் நடத்தப்பட்ட வகுப்புக்களில் அரபு மக்களுடன் சேர்ந்து தானும் அரபுக் கல்வியைக் கற்றுக் கொண்டார்.

இதற்காக அவர் தான் ஏற்கனவே தங்கியிருந்த கம்பனியை விட்டுவிட்டு பொலிஸ் நிலையத்திலே தங்கி தனது கல்வியைத் தொடர்ந்தார் மொழிபெயர்ப்புப் பணியுடன் தொடர்ந்து தான் ஏற்கனவே நீதிமன்றத்தில் செய்து வந்த வழக்குகளை மொழிபெயர்க்கும் வேலையையும் செய்தார். அவர் மொழிபெயர்ப்பாளராக பதவியேற்றபின் அதிகாரிகளின் தொடர்புகள் கிடைத்ததால் தனது மனைவியையும், பிள்ளையையும் இங்கு வரவழைக்கும் முயற்சியை மேலும் வலுப்படுத்த உதவியது. நஜீப் ஹாஜியார் மேற்படி பதவியேற்ற விடயம் சம்பந்தமான செய்தி 1986.01.18 ஆம் திகதி இலங்கையில் வெளிவரும் தினசரி, தினகரன் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

இதுதான் தக்க சமயம் என்று உணர்ந்த நஜீப் ஹாஜியார் தான் இலங்கைக்கு போகும் தீர்மானத்தைக் கைவிட்டு பதிலாக தனது மனைவியையும், பிள்ளையையும் தன்னிடம் கொண்டு வருவதற்காக கடும் முயற்சி செய்தார். ஆனாலும் சட்டச் சிக்கல்கள் இருந்தன. நஜீப் ஹாஜியார் தனது குடும்பத்தை தன்னோடு அழைத்துக் கொள்ள மேற்கொண்ட முயற்சிகள் கொஞ்சம் நஞ்சமல்ல. அன்றைய குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் முகாமையாளரும் தனக்கு முதலில் வேலை வழங்கியவருமான பிரிகேடியர் அலி கமீஸ் என்பவரை அணுகி இது விடயமாக தனக்கு முடியுமான உதவியைச் செய்யும்படி கோரியபோது அவர் குறிப்பிட்ட பொலிஸ் உயரிடத்திலிருந்து சான்றிதழ் எடுத்து வரும்படி கூறினார். பொலிஸ் நிலையத்தோடு தொடர்பு கொண்டு கேட்டபோது அதற்குப் பொறுப்பானவர்கள் அதனை மறுத்து விட்டனர்.

## அபூதாபியில் மொழிபெயர்ப்பாளர் என தினகரனின் பிரசுரிப்பு.

தர்கா நகரைப் பிறப்பிடமாக கொண்ட அல்ஹாஜ் எம். ஏ. எம். நஜீப் அபூதாபி அரசாங்கத்தால் அல் ஐன் மாவட்டத்துக்கு தமிழ் மொழிபெயர்ப்பாளராக அல் ஐன் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஆரம்பக் கல்வியை தர்கா நகர் அல் ஹம்றா மகா வித்தியாலயம், சாஹிரா கல்லூரியிலும் காலி, சோலை மத்ரஸதுல் முஸ்தபவிய்யா முபாரக்கியாவில் அரபுக் கல்வியையும் கற்றுள்ளார். சென்ற 12.12.1978 இல் வெளிநாட்டில் தொழில் வாய்ப்புப் பெற்று அபூதாபி சென்று இரண்டு தனியார் நிறுவனங்களில் கடமையாற்றிய பின் 05.08.1985 முதல் மொழி பெயர்ப்பாளராகப் பதவியேற்றார். இவர் மலையாளம், உருது மொழிகளையும், அரபு மொழியில் மொழி பெயர்க்கத் தகுதியானவரும், பாகிஸ்தான், சிங்கப்பூர், சவூதி அரேபியா நாடுகளுக்கும் விஜயம் செய்துள்ளவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நிராகரிக்கப்பட்ட இராஜினாமா கடிதம்.

மனைவி, பிள்ளையை தன்னிடம் கொண்டுவரும் முயற்சிகளெல்லாம் கானல் நீராயின. இதனால் மனமுடைந்து போன நஜீப் ஹாஜியார் அவர்கள் 1986.03.02 ஆம் திகதி தனக்கு இந்தப் பதவி தேவையில்லை என இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்தார். ஆனாலும் அவரது விண்ணப்பம் பகுதிப் பொறுப்பாளர்களால் நிராகரிக்கப்பட்டது. பதிலாக அவரது குடும்பத்தை அழைத்துவர எல்லா வகையிலும் தாம் உதவி செய்வதாக அவர்கள் ஒப்புக் கொண்டனர். இறுதியில் கேப்டன் சகரசாத் பெண் பொலிஸ் அதிகாரியின் மூலமாக சான்றிதழ் கிடைக்கப் பெற்றது. இதன் மூலம் மனைவியையும், பிள்ளையையும் வரவைழைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. அவரின் நீண்ட நாள் முயற்சிக்கு தக்க பலன் கிடைத்தது.

## மனம் குளிர வைத்த மனைவி மகளின் வருகை.

தனது மனைவியையும் மகளையும் தன்னிடம் எடுக்க நஜீப் ஹாஜியார் அவர்கள் பட்ட கஷ்டங்கள் ஏராளம். அல்லாஹ்வின் நாட்டத்தால் 1986.04.12 ஆம் திகதி நெஞ்சமது பஞ்சனையாக அது நிறைவேறியது. அன்றைய தினம் பொலிஸ் திணைக்களத்தின் அதிகாரி விசாவுக்குரிய தஸ்தாவேஜுகள் அனைத்தையும் நஜீப் ஹாஜியார் அவர்களிடம் கையளித்ததும் உடனடியாக அவர் அபூதாபி குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்குச் சென்று உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

## பூக்கள் இரண்டும் மணம் வீச சமூக சேவை ஆரம்பம்.

1986.05.02 ஆம் திகதி வழிமேல் விழி வைத்து எதிர்பார்த்துக் கொண்டிருந்த நஜீப் ஹாஜியாரின் மனைவியும் மகளும் இலங்கையிலிருந்து அபூதாபி விமான நிலையம் வந்தடைந்தனர். தனது அன்புக்குரிய மனைவியையும், மகளையும் கண்ட நஜீப் ஹாஜியாரின் வதனம் அன்று மலர்ந்த செந்தாமரை போல் விரிந்து பிரகாசித்தது. அப்போது மகளுக்கு 2 வயது பூர்த்தியாகி இருந்தது. அன்றிலிருந்து அவர் தனது மனைவி மகளுடன் ஒரு சிறிய குடும்பமாக அபூதாபியில் மகிழ்வோடு வாழ்க்கையை ஆரம்பித்தார்.

*நம்பிக்கை மற்றும் பிரார்த்தனை இரண்டும் கண்ணுக்குத் தெரியாதது ஆனால்*
*அவை இரண்டும் சாத்தியமற்ற விஷயங்களை சாத்தியம் ஆக்குகிறது.*

## முதியோர் கல்வித்திட்டத்தீன் கீழ் அரசாங்கப் பாடசாலையில் சேர்ந்து மேலும் அரபுக் கல்வியை கற்றல்.

UAE அரசாங்கத்தின் கல்வித் திட்டத்துக்கமைய அரச பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த முதியோர் கல்விப் பாடநெறிகளில் மாலை நேரங்களில் இணைந்துகொண்ட நஜீப் ஹாஜியார் தனது அரபுக் கல்வியறிவை மேலும் உரமிட்டுக் கொண்டார். அப்பாடநெறிகளில் அரபு நாட்டவர்களே கல்வி கற்று வந்தனர். நஜீப் ஹாஜியாரின் அரபுத் தேர்ச்சி காரணமாக அரபிகளை விட கல்வியில் முன்னிலை வகித்தார் அவர். பரீட்சைக் காலங்களில் அரபிகளுக்கு பாட விளக்கங்கள் சொல்லிக் கொடுத்து அவர்களுக்கு உதவி செய்து அவர்களின் மனதிலும் இடம்பிடித்தார். தம்மில் இந்த அரபு மொழி ஆற்றலை வளர்த்துக் கொள்ள தாம் இலங்கையில் அரபு மொழியைத் திறம்படக் கற்றதே காரணமென அவர் கூறினார். ஆனாலும் காலப்போக்கில் அந்நிலையத்தில் அரபு மொழியை திறம்படக் கற்பதை நிறுத்திவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அவருக்கு ஏற்பட்டது. காலை முதல் அயராது வேலை செய்யும் நஜீப் ஹாஜியார் மாலையானதும் மீண்டும் படிப்பிலேயே தனது முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டியிருந்ததனால் அவருக்கு சரியான ஓய்வு கிடைக்கவில்லை. இதனை அவதானித்து வந்த அவரது மனைவி மிகவும் கவலைப்பட்டார். இதனால் வேறு வழியின்றி படிப்பை இடை நிறுத்தினார் அவர்.

*கற்றுத் தெளிவது கல்வி. பட்டுத் தெரிவது அனுபவம். கற்றது*
*மறந்தாலும் பட்டது மறக்காது.*

## இரண்டாவது பிரசவம் நிஃமத்

ஹிஜ்ரி 1407 ஜமாதுல் ஆஹிர் மாதம் பிறை 11 ஆவது நாள் 1987.02.09 ஆம் திகதி திங்கட் கிழமை பி.பகல் 2.45 மணிக்கு அபூதாபி அல் ஐன் UAE அரசாங்க வைத்தியசாலையில் நஜீப் ஹாஜியாரின் மனைவி இரண்டாவது செல்வமாக ஒரு ஆண் குழந்தையைப் பிரசவித்தார். நஜீப் ஹாஜியார் அபூதாபியில் வேலை தேடிப்பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல என்பதை நீங்கள் வாசித்தறிந்திருப்பீர்கள். 1982 முதல் ஆரம்பித்த வேலை தேடல் இறுதியில் 1985 ஆம் ஆண்டே அவருக்கு மொழிபெயர்ப்பு வேலை கிடைத்ததனூடாக முடிவுக்கு வந்தது. அதன் பின் அவர் மனைவி பிள்ளையுடன் அபூதாபியில் சந்தோசமாக இருக்கும்போது அவரது மனைவி இரண்டாவது குழந்தையைப் பிரசவித்திருப்பதைக் கண்டு அது வல்ல நாயன் அல்லாஹ்வின் நிஹ்மத் என நினைத்த அவர் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் முகமாக தனது ஆண் குழந்தைக்கு "நி.ஃ.மதுல்லாஹ்" எனப் பெயர் சூட்டினார்.

*நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். நம் செயல்களில் நமக்கே தெரியாமல் பல விஷயங்களை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள்.*

## குடும்பத்துடன் தாய்நாடு திரும்புதல்.

1987.07.30 இல் நஜீப் ஹாஜியார் அவர்கள் குடும்பத்துடன் துபாய் விமான நிலையத்திலிருந்து ஓமான் வழியாக இலங்கை வந்து சேர்ந்தார். அப்போது இலங்கையில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. அன்றைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்த போது இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளை அடக்குவதற்காக இந்திய இராணுவத்தினரை வடக்கு கிழக்கில் ஈடுபடச் செய்வது தொடர்பாக இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்திருந்தார். அதற்கு எதிராக மக்கள் வீதிகளில் மரங்களை வெட்டியும் சொத்துக்களைக் கொளுத்தியும் பெரும் கலவரம் செய்துகொண்டிருந்தனர். இந்த இக்கட்டான நேரத்திலேயே நஜீப் ஹாஜியார் அவர்கள் குடும்பத்துடன் இலங்கை வந்திறங்கினார். விமான நிலையம் வந்திறங்கிய நஜீப் ஹாஜியார் குடும்பத்தை வீட்டுக்கு அழைத்துச் செல்ல எவராலும் அங்கு வர முடியவில்லை. அந்நாட்களில் தகவல் பரிமாற்ற ஊடகங்கள் மிகக் குறைவாக இருந்தமையால் அவர்கள் விமானம் ஏறும் போது நாட்டு நிலைமையை அறிந்திருக்கவில்லை. நிலவரம் இவ்வாறிருக்க அவர்கள் வாடகை வாகனமொன்றில் செல்லவேண்டியதாயிற்று. பல இடங்களில் கொள்ளைக்காரர்கள், ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர்கள்

பயணித்த வாகனத்தை வழிமறித்து கொள்ளையடிக்க முயன்றனர். காலி வீதி புகை மண்டலமாக காட்சியளித்துக் கொண்டிருந்தது. ஊரடங்கு சட்டமும் அமுல் படுத்தப்பட்டிருந்தபோதும் கலவரக்காரர்கள் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தனர்.

நஜீப் ஹாஜியார் குடும்பம் பயணித்த வாகனம் விமான நிலையத்திலிருந்து வருவதால் வீதித் தடைகளில் செல்வதற்கு அனுமதி கிடைத்தது. ஆனாலும் கொள்ளையர்களின் அட்டகாசமும், பயமுறுத்தல்களும் தொடர்ந்து கொண்டே இருந்தன. கொள்ரைளயர்களைக் கண்டு நஜீப் ஹாஜியார் மனம் தளரவில்லை. அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து தைரியமாக இருந்தார். வாகனத்தை எக்காரணம் கொண்டும் நிறுத்த வேண்டாம் என சாரதியிடம் பணித்தார். கொள்ளையர்கள் அத்துமீறி வந்தால் அவர்களை மோதி வீழ்த்துவதற்கு தயங்க வேண்டாம் எனவும் சொல்லி வைத்தார். பிரயாணம் தொடர்ந்தது. அல்லாஹ்வின் கிருபையால் எந்தவிதமான சேதமும் இன்றி குடும்பத்துடன் ஒருவாறு வீடு வந்து சேர்ந்தார் நஜீப் ஹாஜியார் அவர்கள்.

*கஷ்டங்களை வெறுக்காதீர்கள் அவை நயவஞ்சகர்களை உங்களை விட்டும் தூரமாக்கும். நேர்மையானவர்களை உங்களுக்கு சமீபமாக்கும்.*

## ஊரிலே வீடு கட்ட காணி வாங்குதல்.

1987.09.08ம் திகதி நஜீப் ஹாஜியார் அவர்கள் தர்கா நகர் சென்றல் வீதியில் ஒரு லட்சம் ரூபாய்களுக்கு காணியொன்றை வாங்கினார். இதற்காக தந்தையிடம் 50,000 ரூபாய் கடனாகவும் பெற்றிருந்தார். காணி வாங்குவதற்கான இதர செலவுகள் 15,000 ரூபாய்களாக இருந்தன. குறிப்பிட்ட காணியை வாங்குவதற்கு எல்லா வழிகளிலும் பாயிஸ் நானாவே உதவி புரிந்தார். ஒரு பேர்ச்சஸ் 4000 ரூபாய்கள் வீதம் பெறப்பட்ட இக்காணியை தனது குடும்பத்தினருக்கு ஒரு வீடு கட்டும் நோக்கிலேயே அவர் வாங்கி வைத்தார். தனது குடும்பத்திலிருந்தோ மனைவியின் குடும்பத்திலிருந்தோ சொத்துக்களைப் பெறக் கூடாது என்ற நல்லெண்ணத்துடனேயே அவர் அக் காணியை வாங்கினார். தந்தையிடமிருந்து பெற்ற கடனை சிறிது சிறிதாக கொடுத்து ஆறுதலடைந்தார்.

*விழித்தவன் தூங்கக் கூடாது. எழுந்தபின் விழுதல் ஆகாது.*

## மனை கட்ட மனம் கொண்டார்.

தனக்கு தாய் நாட்டில் சொந்தமாக வீடு ஒன்று இருக்க வேண்டுமென அவர் உணர்ந்திருந்தார். தான் ஏற்கனவே வாங்கி வைத்திருந்த

காணியில் கட்டுவதற்கு அழகான தோட்டத்துடன் வீட்டு திட்டம் ஒன்றை மனதில் பதித்து வைத்திருந்தார் அவர். 1987.12.22 ம் திகதி தனது சகோதரன் பாயிஸ் நானாவிடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நஜீப் ஹாஜியாரின் வீட்டுத் திட்டத்தை வடிவமைத்து கடிதத்தோடு அனுப்பி வைத்தார்.

*நல்ல மனம் இருந்தால் போதும் பணம் அவசியம் இல்லை இதயத்திற்குள் ஒரு மாளிகையையே கட்டி விடலாம்.*

## மூன்றாவதாக கிடைத்த ரஹ்மத்

ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 7வது நாள் அதவது1988.7.21 வியாழன் காலை 11.10 மணிக்கு அபுதாபி வைத்தியசாலையில் நஜீப் ஹாஜியாரின் மனைவி மூன்றாவது பிரசவமாக ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். தனது முதல் ஆண் மகன் நிஹ்மத்துல்லாவுக்குப் பிறகு ரஹ்மத்தாக அல்லாஹ் தந்த பரிசுக்கு ரஹ்மத்துல்லாஹ் (அல்லாஹ்வின் அருட்கொடை) எனப் பெயரிட்டு மகிழ்ச்சி அடைந்தார் நஜீப் ஹாஜியார்.

*உன்னிடத்தில் இருந்து எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி உனக்காக அல்லாஹ்விடத்தில் கையேந்தும் ஒரு உறவை நீ பெற்றிருந்தால் இந்த உலகத்தில் நீ சம்பாதித்த மிகப்பெரிய சொத்து அதுவேயாகும்.*

## கொலையாளிக்கும் கருணை காட்டியவர்.

1990 களில் ஒரு நாள் இந்திய நாட்டைச் சேர்ந்த ஒருவனால் பங்கலாதேஷ் பிரஜை ஒருவன் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டான். சம்பவம் இடம்பெற்று இரண்டு நாட்கள் கடந்திருந்த போதிலும் விசாரணைகள் ஒழுங்காக இடம்பெறவில்லை என அறியப்பட்டது. எனவே இது பற்றி பூரண விசாரணை நடத்தும் படி சூடான் நாட்டைச் சேர்ந்த போலீஸ் சார்ஜன் ஒருவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இவ்விடயத்தில் அந்த சார்ஜனுக்கு ஒத்தாசை செய்யும்படி நஜீப் ஹாஜியார் அவர்களும் வேண்டப்பட்டிருந்தார்.

அன்று காலை முதல் மாலை வரை வழக்கு விசாரணை இடம்பெற்றது. பகற் சாப்பாட்டு நேரமது. நஜீப் ஹாஜியார் அவர்களுக்கு பகல்ப் போசனத்திற்காக வீட்டுக்குப் போய் வர சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. விசாரணையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு அவர்களது பகுதி நேர முகாமையாளர் பகல் சாப்பாட்டை கடையிலிருந்து வாங்கி வந்தார். கொலைக் குற்றச்சாட்டில் கைதாகியிருந்த இந்தியப் பிரஜைக்கு சாப்பாடு

கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது. அதைக் கண்ட நஜீப் ஹாஜியாரின் மனம் உருகியது. அவன் மீது கொலைக் குற்றச்சாட்டு இருந்த போதிலும் அவனுக்கும் பசி தாகம் வரத்தானே செய்யும். அத்தோடு அவன் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தால் சாப்பாடு கிடைத்திருக்குமே. கைதி விசாரணை கூடத்தில் இருந்ததால் தானே சாப்பாடு வந்து சேரவில்லை என அவர் எண்ணினார். கைதியை விசாரணை செய்யாமல் தடுப்பு காவலுக்கும் அனுப்பவும் முடியாத நிலை. எனவே தனது சொந்தச் செலவில் பக்கத்து ஹோட்டலில் இருந்து சாப்பாடு வாங்கி வந்து அவனுடன் ஒன்றாக இருந்து சாப்பிட்டார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அதன் பிறகே விசாரணை தொடர்ந்தது. கொலையாளிக்கும் கருணை காட்டிய நஜீப் ஹாஜியாரின் உயர்ந்த எண்ணம் அங்கு பலராலும் பாராட்டப்பட்டது.

*பிறருக்காக இறக்கப் படுவதில் தவறில்லை. ஆனால் நாம் ஆடாய் இருக்கும் போது ஓநாய்க்காக வருத்தப் படுவததான் முட்டாள் தனம்.*

## உதவிக்கு கிடைத்த பரிசு கொலை மிரட்டல்.

நஜீப் ஹாஜியாரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கடுமையான கஷ்டத்தில் இருந்தார். இதை அறிந்த நஜீப் ஹாஜியார் தனக்குத் தெரிந்த அரபி ஒருவரிடம் விடயத்தைச் சொல்லி அவருக்கு ஒரு வேலையை எடுத்துக் கொடுத்தார். 1990.12.17 ஆம் திகதி அவர் அபூதாபி வந்து வேலையில் சேர்ந்து கொண்டார். ஒருநாள் அவர் திடீரென நஜீப் ஹாஜியாரை அழைத்து தன்னால் வேலை செய்ய முடியாது என்று சொன்னார். வேலை இல்லாமல் சம்பளம் கிடைக்காதே, எனவே பொறுமையுடன் இருக்கும்படி நஜீப் ஹாஜியார் அவர்கள் எவ்வளவோ அறுதல் சொல்லிப் பார்த்தும் அவர் கேட்கவில்லை. இதனால் முதலாளிக்கும் குறித்த நபருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. அது இறுதியில் சண்டையில் முடிந்தது. ஆகவே தன்னை உடனடியாக இலங்கைக்கு அனுப்பும் படி அவர் நஜீப் ஹாஜியாரிடம் வேண்டி நின்றார். நஜீப் ஹாஜியார் குறித்த நபரின் அரபியுடன் பேசிப்பார்த்த போதும் அவரை நாட்டுக்கு அனுப்ப அரபி மறுத்துவிட்டார். சில காலம் கழித்து அனுப்பி வைப்பதாகச் சொன்னார். கோபமடைந்த குறித்த நபர் தனது நண்பருடன் இது விடயமாக முறைப்பட்டிருந்தார். அது குறித்த நபரின் சகோதரரின் செவிகளுக்குச் செல்ல சகோதரன் நஜீப் ஹாஜியாருக்கு கொலை மிரட்டல் செய்து கடிதம் ஒன்றை எழுதி அனுப்பியிருந்தார். வாழ்வில் உயர்வை காண வேண்டும் என நினைத்து உதவி செய்த நஜீப் ஹாஜியார் அதிர்ச்சி அடைந்தார்.

*பொருளோ அல்லது மனிதனோ உபயோகித்த பிறகு வெறும் குப்பை போல.....*

## மொழிபெயர்ப்பில் கண்ட அனுபவம்.

ஒரு நாள், வீடொன்றில் பணிபுரிந்து வந்த இலங்கை பெண் ஒருவருக்கு அநீதி இழைக்கப்பட்டது. இச்சம்பவத்தின் போது பொலீஸ் நிலையம் முதல் நீதிமன்றம் வரை நஜீப் ஹாஜியார் அப் பெண்ணுக்காக மொழிபெயர்ப்பு பணியில் ஈடுபட்டார். குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டவருக்கு ஆயுட்கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு 30,000 திர்ஹங்கள் நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்பெண் விரும்பினால் வேறொரு இடத்தில் வேலை பார்க்கலாம் அல்லது அவளது விருப்பப்படி தாயகம் செல்லலாம் என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. தீர்ப்பின்படி அப்பெண் தான் மீண்டும் வேலையை செய்ய விரும்பவில்லை எனக் கூறிவிட்டார்.

சில நாட்களின் பின் அப்பெண் நஜீப் ஹாஜியார் அவர்களைச் சந்தித்து தான் தாயகம் திரும்ப போவதாகவும் தனக்கு சேர வேண்டிய நட்டஈட்டுத் தொகையை தனக்காகப் பொறுப்பு நின்று அதனை பெற்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் நஜீப் ஹாஜியார் தன்னால் பணத்தோடு சம்பந்தப்பட்ட விடயங்களில் பொறுப்பு நிற்க முடியாதென்றும் இவ்விடயத்தில் தான் அல்லாஹ்வைப் பயப்படுவதாகவும் கூறி அதனை மறுத்துவிட்டார். நீதி தவறி விடக்கூடாது என்பதில் அவர் எப்போதும் பேணுதலாகவே நடந்து கொண்டார்.

*வாழ்க்கையில் அனுபவங்கள் கற்றுத் தருவது வாழ வழியை மட்டுமல்ல, வாழ்வில் வந்து போகும் மாற்றங்களையும் மாறிச் செல்லும் மனித குணங்களையும் தான்.*

## தன்னைப் பற்றிய சுயசரிதை.

1990.11.08 அன்று நஜீப் ஹாஜியார் அவர்களுக்கு ஓய்வு தினம். ஓய்வு நேரத்தை வீணாக்காமல் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தார் அவர். என்ன செய்யலாம் என யோசித்தபோது அவரது சிந்தனையில் கடந்து சென்ற காலங்களின் நிகழ்வுகள் பளிச்சிட்டுச் சென்றன. ஆம் நஜீப் ஹாஜியார் அவரது வாழ்க்கையில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்களை நாளேடுகளில் குறித்து வைத்துள்ளார். 1978 ஆம் ஆண்டு முதல் 1982 ஆம் ஆண்டு வரை நடந்த முக்கிய சம்பவங்களை எழுதி வைத்திருந்தார் அவர். எனினும் சில விடயங்கள் விடுபட்டிருந்தன. ஆகையால் 1983 முதல் ஒருநாள் தவறாமல் அன்றாட வாழ்வில் இடம்பெற்ற ஒவ்வொரு சம்பவத்தையும் டயரிக் குறிப்புகளாக எழுதி வந்தார். அந்த டயரிகள் அனைத்தையும் பேணிப் பாதுகாப்பாக வைத்துள்ளார் அவர். எனவே அவருக்கு தான் டயரிகளில் குறித்து வைத்திருந்த விடயங்களை வைத்து தனது

கடந்த காலத்தைச் சுயசரிதையாக ஓய்வு நேரங்களில் எழுத வேண்டும் என்ற எண்ணம் உருவானது. இன்று உங்கள் கரங்களில் நூலுருப் பெற்று திகழ அவரது டயரிக் குறிப்புகளிலிருந்து தொகுக்கப்பட்ட சுயசரிதையாகும்.

*துணியாத வரை வாழ்க்கை பயங்காட்டும் துணிந்து பார் வாழ்க்கை வழிகாட்டும்.*

## அரபு மொழிப் பசி இன்னும் தீரவில்லை.

1991.04.30 இல் நஜீப் ஹாஜியார் தனியார் அரபுக் கல்விக் கூடம் ஒன்றில் தனது அரபு மொழித் தாகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக தனது பெயரைப் பதிவு செய்து கொண்டார். அங்கு தனது அரபு மொழி ஞானத்தை விருத்தி செய்து கொண்டிருந்த சமயம் அவர்கள் அரபியில் நடாத்திய குறுக்கெழுத்துப் போட்டிகளிலும் பங்குபற்றினார். சட்டரீதியான சான்றிதழ் ஒன்றை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அர்பப்ணிப்புடன் செயற்பட்டார். இறுதியில் சிறந்த முறையில் சித்தி எய்தி எதிர்பார்த்தது போல் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார். இதனால் அவரது அரபு ஞானம் மேலும் வளர்ச்சயடைந்தது.

*பசித்தவனுக்கு தான் விரும்பியபடி புசிக்க கிடைத்தால் அதை விட மேலானது ஒன்றுமில்லை.*

## இஸ்லாத்தை தழுவியவர்களுடன் இரண்டாவது ஹஜ்.

இந்தியாவின் கேரளாவைச் சேர்ந்த அஹ்மத் குட்டி என்பவர் புனித ஹஜ்ஜுக்குச் செல்ல வேண்டும் என்று தீராத ஆசை கொண்டார். ஆனால் அவரிடம் போதிய பண வசதி இருக்கவில்லை. தனது ஆசையை கூற பொருத்தமானவர் நஜீப் ஹாஜியார்தான் என அஹ்மத் நினைத்தார். அப்படியே விடயத்தை அவரிடம் சொன்னார். அஹ்மத்தின் உத்வேகத்தைப் புரிந்து கொண்ட நஜீப் ஹாஜியார் அவர்கள் கவலைப்பட வேண்டாம் எனக் கூறி அஹ்மதை ராணுவ பிரிகேடியர் முகம்மது சமலிடம் அழைத்துச் சென்றார்.

அஹ்மதின் ஆசையை எடுத்துச் சொல்லி அவரை ஹஜ்ஜுக்கு அனுப்பி வைக்கும்படியும் அதற்கான வசதி அவரிடம் இல்லை என்ற விபரத்தையும் விளக்கப்படுத்திக் கேட்டுக் கொண்டார் நஜீப் ஹாஜியார். அது நடக்குமாயின் அதன் நன்மைகளின் பங்கு உங்களுக்கு கிடைக்கும் என்பதையும் தெளிவுபடுத்தினார். என்ன ஆச்சரியம் உடனே அதற்கு ஒப்புக்கொண்டார் பிரிகேடியர் சமல்.

அது மட்டுமல்லாது ஹஜ் செய்வதில் ஆர்வமுடைய நீங்கள் கற்பித்த இஸ்லாத்தை தழுவிய மற்றவர்களையும் கூட்டிச் செல்லுங்கள் என்றும் போகும் வழியிலும் ஹஜ் கிரியைகளின் போதும் இஸ்லாம் பற்றி மேலும் தெளிவு படுத்துங்கள் என்றும் சொன்னார். அத்தோடு அதற்கான சகல ஏற்பாடுகளையும் தான் செய்து தருவதாகவும் 1991.05.02 ஆம் திகதி உறுதியளித்தார்.

அல்லாஹ்வின் கிருபையால் 1991.06.09 ஆம் திகதி புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய இருவருடன் நஜீப் ஹாஜியார் தரை மார்க்கமாக புனித ஹஜ் யாத்திரையை ஆரம்பித்தார். இரண்டு நாட்கள் தொடர்ச்சியான பிரயாணத்தின் போது புதிய முஸ்லீம்களான அவர்களுக்கு மார்க்க விடயங்களைப் போதித்ததுடன் ஹஜ்ஜை பற்றி விளக்கங்களையும் வழங்கினார். அத்தோடு புனித மக்கா சென்றதும் அங்குள்ள விடயங்களையும் விளக்கிக் கூறினார். முக்கிய இடங்களை தரிசித்து அவற்றின் வரலாறுகளைப் பற்றியும் விளக்கமளித்தார். 1991.06.27 ஆம் திகதி வல்ல நாயன் அல்லாஹ்வின் கிருபையால் ஹஜ் கடமையை முடித்துக்கொண்டு அபுதாபி திரும்பினார். பின்னர் அவர்களைக் அழைத்துக் கொண்டு ஈமானை பலப்படுத்துவதற்காக அல்ஜனுக்கு சென்றார். அங்கு அமைந்திருக்கும் மார்க்கப் பிரசங்க நிலையத்தில் பிரதி வியாழன் தோறும் இடம்பெறும் முஸ்லிம்களின் நடைமுறைகளை அவர்களுக்குக் காண்பித்தார். இவையெல்லாம் பிரிகேடியர் முஹம்மது சமலின் வேண்டுகோளுக்கிணங்க மேற்கொள்ளப்பட்ட செயல்களாகும்.

*இனி வாழவே முடியாது என்ற நிலைக்கு சென்றவனால் தான் இதுவரை யாருமே வாழாத வாழ்க்கையை வாழ்ந்து காட்ட முடியும்.*

## கண் கவரும் புது இல்லம்.

நஜீப் ஹாஜியாரின் வீட்டைக் கட்டிப் பூரணப்படுத்துவதற்கு அவரிடம் போதிய அளவு பண வசதி இருக்கவில்லை. என்றாலும் தனது பெற்றோரின் மூச்சு அடங்குவதற்குள் வீட்டைக் கட்டி குடிபுக வேண்டும் என்று நினைத்தார் அவர். ஆனபோதிலும் செய்வதற்கு இன்னும் சில வேலைகள் இருந்த போதும் பூரணபடபடுத்தப்படாத நிலையில் அல்லாஹ்வின் அருளோடு 1991.11.01 அன்று வெள்ளிக்கிழமை காலை தனது தந்தையின் அன்பு கரங்களால் வீட்டை திறந்து வைத்து குடிபுகுந்தார் நஜீப் ஹாஜியார். வீட்டின் வசீகரத் தோற்றம் வந்தவர்களின் கண்களைக் கவர்ந்தது.

*எந்தவொரு பொருளானாலும் கண்களை மட்டும் கவர்ந்தால் பொருந்தாது. உள்ளத்தையும் கவர்ந்தாலேயே அது பொருந்தும்.*

## 15 வருடங்களுக்குப் பின் சந்தித்த சுவையான நிகழ்வு.

1991.11.23 அன்று நஜீப் ஹாஜியார் அவர்கள் தனது உறவினர்களை சந்திப்பதற்காக அவர்களின் வீடுகளுக்குச் சென்றிருந்தார். அப்போது நடைபெற்ற ஒரு சம்பவம் சுவாரஸ்யமாய் அமைந்தது. 1976 ஆம் ஆண்டு தனது உறவினர் ஒருவருடன் கோபி வியாபாரம் செய்தபோது கோபிச் சாக்கைத் திருடிக் கொண்டு தலைமறைவாகியவரை வாசகர்களாகிய உங்களுகு நினைவிருக்கும். நஜீப் ஹாஜியார் 1991.11.23 ஆம் திகதி திருடியவரின் வீட்டுக்கு அவரது குடும்பத்தினரை நலம் விசாரிக்கச் சென்றிருந்தார். அப்போது திருடியவன் அங்கு இருப்பதை கண்டு வியந்து போனார். நஜீப் ஹாஜியாரைக் கண்டதும் அவன் திக்குமுக்காகி விழித்தான். அவன் சில வருடங்களாக மத்திய சிறைச்சாலையில் இருந்து விட்டு தண்டனைக் காலம் முடிவடைந்து அப்போதுதான் வீடு திரும்பியிருந்தான்.

“நீ 15 வருடங்களுக்கு முன்பு எனது கோப்பியை திருடிய பணத்தை திருப்பித் தர வேண்டும்”. நஜீப் ஹாஜியார் அவனிடம் நகைச்சுவையாகக் கேட்டார். அதற்கு அவன் “தற்போது உங்களிடம் நிறைய பணம் இருக்கிறது. தரவேண்டிய அவசியமில்லை“ என்று மழுப்பிவிட்டான். “சரி ஒரு சதமும் திருப்பித் தர வேண்டிய அவசியம் இல்லை. நான் அதற்கு ஹலால் சொல்லிவிட்டேன். நல்ல ஹலாலான முறையில் உழைத்து வாழ். உனது தாயையும் சகோதரியையும் நன்றாகப் பார்த்துக் கொள்“ என்று புத்திமதி சொல்லிவிட்டு அங்கிருந்து வெளியேறினார் நஜீப் ஹாஜியார்.

அவன் திருந்தவேயில்லை. பிற்காலத்தில் அவன் ஒரு பெரிய திருடனாக மாறி சிறையில் இருந்தது மட்டுமல்லாது பெற்றோருக்கும் உதவாக்கரையாகப் போனான்

*மன்னிப்பதால் கடந்த காலத்தில் நடந்தவைகள் எதுவும் மாறாது. ஆனால் எதிர்காலத்தில் நடக்க இருப்பவற்றை மாற்றலாம்.*

## மாலை தீவுச் சுற்றுலா.

1991.12.23 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் மாலைதீவு பயணமானார். அது பல தீவுக்கூட்டங்களைக் கொண்ட ஒரு சிறிய நாடாகும். விமான நிலையமும் ஒரு தீவிலேயே அமைந்திருந்தது. விமான நிலையத்திலிருந்து தலைநகருக்குப் படகிலே செல்ல வேண்டும். அது மட்டுமல்லாமல் அந்த நாட்டில் எங்கு சென்றாலும் படகில்தான் செல்ல வேண்டும். ஏறத்தாழ 650 தீவுகள் அங்கு காணப்பட்டன.

மறுநாள் காலை தலைநகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு மாலையாகும்போது இலங்கை திரும்பி விட்டார் அவர். அங்கு பார்ப்பதற்கு விசேடமாக ஒன்றும் இருக்கவில்லை. மீன்பிடித் தொழிலும், ஏராளமான மீன்களுமே காணப்பட்டன. ஆனாலும் அந்தப் பயணம் அவருக்கு ஒரு புதிய அனுபவத்தைக் கொடுத்தது.

*அறிவு விருத்தி அடைந்து குளிர்ச்சியான ஒரு விருப்பத்தை காண வைக்கிறது மட்டுமல்லாமல் உள்ளத்துக்கும் ஒரு குளிர்ச்சியான சுகத்தை தருகிறது சுற்றுலா.*

## எகிப்தின் உப ஜனாதிபதியின் மனித நேயம்.

2012 இறுதியில் உலகத்தின் தாயான (உம்மு துன்யா) எகிப்தின் உப ஜனாதிபதியாக பதவியேற்ற மதிப்பிற்குரிய மஹ்மூத் அல் மக்கி அவர்கள் 1992 யு. ஏ. இ. மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நீதிபதியாகக் கடமையாற்றிய சமயத்தில் ஒரு அபூர்வமான சம்பவம் இடம்பெற்றது. நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று தேநீர் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டன. நீதிமன்ற சேவையாளரிடம் தனக்கும் நஜீப் ஹாஜியாருக்கும் சேர்த்து தேநீர் கொண்டு வரும்படி நீதிபதி உத்தரவிட்டார். இரண்டு வகையிலான, இரண்டு நிறக் கோப்பைகளில் தேநீர் கொண்டுவரப்பட்டது. கோபம் அடைந்த நீதிபதி அவர்கள் ஏன் வித்தியாசமாக கொண்டு வந்தீர்? இரண்டு கோப்பைகளும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமல்லவா? என கோபத்துடன் கேட்டார். உடனே தனது தேநீர் கோப்பையை நஜீப் ஹாஜியாருக்கு கொடுத்துவிட்டு நஜீப் ஹாஜியாரின் கோப்பையை தான் வாங்கிப் பருகினார். நீதிபதியின் இந்த உயரிய பண்பு அந்த இடத்தில் நஜீப் ஹாஜியாரின் உள்ளத்தை கவர்ந்தது. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் உம்முதுன்யாவின் உப ஜனாதிபதியானார் அவர்.

*மற்றவர்கள் உங்களை வேண்டுமென்றே பிழையாகப் புரிந்து கொள்ளும் போது நீங்கள் உங்களை நியாயப்படுத்தக் கலைப்படையாதீர்கள். மனிதநேயம் அற்றவர்களிடம் நியாயப்படுத்துவது பிரயோசனமற்றதாகும்.*

## நேர்முக சபைக்கு தலைவரானார்.

நஜீப் ஹாஜியார் பல நாட்டு பாஷைகளையும் அறிந்து வைத்திருந்தமையாலும் மொழிபெயர்ப்புத் துறையில் அனுபவம் பெற்றிருந்தமையினாலும் மொழிபெயர்ப்புத் துறைக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தும் சபைக்கு முகாமையாளரினால் தெரிவு செய்யப்பட்டார்.

மொழிபெயர்ப்புத் துறைக்கு ஆட்கள் சேர்க்கப்படும் போது விண்ணப்பதாரர்களின் மொழியறிவு நுணுக்கம், தொடர்பாடல் ஆற்றல், நன்னடத்தை, நம்பிக்கை, நாணயம் என்பன துல்லியமாக பரிசீலிக்கப்பட வேண்டியதால் நேர்முகப் பரீட்சை சபையின் தலைவராக 1992.03.09 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் நியமிக்கப்பட்டார். அன்று முதல் பல்வேறு பாஷைகளையும் தெரிந்தவர்களை தேறிய முறையில் வேலைக்கு அமர்த்தும் பணியில் நஜீப் ஹாஜியார் தனது சேவையை வழங்கத் தொடங்கினார்.

*எல்லோருக்குமே ஒரு கஷ்டப்பட்ட கதை இருக்கு ஜெயிச்சதுக்கு பிறகு*
*சொன்னால்தான் காதுகொடுத்து ஆயிரம் பேர் கேட்பாங்க.*

## பணத்தை உதறித் தள்ளிவிட்டு மதத்தை மதித்தார்.

பிற நாடொன்றைச் சேர்ந்த பணிப்பெண் ஒருத்தி அந்நாட்டு முகவர் மூலமாக யு.ஏ.இ. வந்திருந்தாள். இலங்கையைச் சேர்ந்த அப்பெண்ணின் முகவர் எஜமான் வீட்டுக்கு பக்கத்தில் வசிக்கும் ஒருவரிடம் அப்பெண்ணை அவளின் எஜமானிடம் அமானிதமாக ஒப்படைக்கும்படி வேண்டிக் கொண்டார். ஆனாலும் பரிதாபம், போகும் வழியிலே அப்பெண்ணுக்கு அநீதி இழைக்கப்பட்டது. வேலைக்கமர முன்பே மோசமான அந்தச் சம்பவம் இடம்பெற்றது. இப்பெண் தனக்கு நடந்த பாதிப்பை தனது எஜமானிடம் வேதனையோடு சொன்ன மறுகணம் போலீஸ் முறைப்பாடு செய்யப்பட்டது. அவ்வழக்கில் நஜீப் ஹாஜியார் அவர்களே மொழிபெயர்ப்பாளராகக் கடமை ஆற்றினார்.

இவ்வழக்கு ஜனாதிபதி செய்கு ஸாயிதிடம் எத்தி வைக்கப்பட்டது. உடனே நாற்பதாயிரம் திர்ஹம்கள் நட்டஈடு வழங்குமாறு குற்றவாளிக்கு உத்தரவிடப்பட்டது. அத்துடன் குற்றவாளியிடம் அச்சமயம் அத்தொகை கைவசம் இல்லாதிருந்தததனால் அவனது சொத்துக்களை விற்று பணத்தைக் கொடுக்க வேண்டுமென நீதிபதி உத்தரவிட்டார்.

இறுதியில் ஜனாதிபதியே நாற்பதாயிரம் திர்ஹகங்களை அப் பெண்ணுக்குக் கொடுத்தார். உடனே அதில் இருபதாயிரம் திர்ஹகங்களை அப்பெண் நஜீப் ஹாஜியாருக்குக் கொடுத்தாள். ஏனெனில் இம்முறைப்பாடு தொடங்கியதில் இருந்து நஜீப் ஹாஜியார் நம்பிக்கையாகவும் நியாயமாகவும் நீதிமன்றத்திற்கு அவளை அழைத்துச்சென்று நல்லிதயத்துடன் மொழிபெயர்த்து அபராதம் கிடைக்கும் வரை தேவையான அத்தனை விடயங்களிலும் மனம் கோணாது செய்து கொடுத்தார். இதற்கு நன்றிக் கடனாகவே அவள் இவ்வாறு செய்தாள். ஆனால் அதனை முற்றாக மறுத்துவிட்ட நஜீப் ஹாஜியர் அவளுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தார்.

"பெண்ணே! எனக்கு உனது பணம் வேண்டாம். அது உனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குப் பகரமாகக் கொடுக்கப்பட்டது. அந்தப் பணம் உனக்கே சொந்தம். ஆனால் நான் உன்னிடம் ஒரு வேண்டுகோள் விடுகிறேன். உனக்கு விருப்பமாயின் நீ நன்றாகச் சிந்தித்து ஏற்றுக் கொள். நீ பாதிக்கப்பட்டது உண்மை. ஆனால் இஸ்லாமிய சட்டப்படி அப்பாதகனுக்குரிய தண்டனை வழங்கப்பட்டதோடு உன் மீது இரக்கம் கொண்டு உனக்கு நியாயபூர்வமாக உதவி செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இந்த நாட்டு ஜனாதிபதியின் நேர்மையை நீ விளங்கிக் கொண்டாயா? நீ விரும்பினால் உன்னை உனது நாட்டுக்கு திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும். இதுதான் இஸ்லாமிய ஆட்சியின் நியாயமான போக்கு. எனவே விரும்பினால் உனது தாயகத்துக்குப் போய் இஸ்லாத்தை மேலும் ஆராய்ந்து பார். இல்லாவிடின் இங்கு நீ இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன் வந்தால் நாம் எம்மால் முடிந்த அனைத்து உதவிகளையும் மேற்கொள்வோம்."

அவர் கூறியதைக் கேட்ட அப்பெண் இஸ்லாமிய சமூகத்தில் இவ்வளவு பெரிய மனிதப் புனிதர்கள் இருக்கின்றார்களே என வியந்தாள். தனது மான இழப்பை பொருட்படுத்தாது ஹாஜியாரின் வேண்டுகோளை நான் நிச்சயமாக நிறைவேற்றுவேன் என்று கூறிவிட்டு தாயகம் திரும்பும் முயற்சியில் ஈடுபட்டாள் அவள்.

*பணம் சம்பாதிக்க நல்லவன் கெட்டவன் எல்லோராலும் முடியும். மனிதர்களை சம்பாதிக்க நல்ல மனமுள்ள மனிதனால் மட்டுமே முடியும்.*

## பாலைவனத்தில் ஏற்பட்ட பயங்கர ஆபத்து.

1992.06.25 ஆம் திகதி வழக்கு விசாரணை ஒன்றுக்கான தடயங்களை சேகரிப்பதற்காக நஜீப் ஹாஜியார் போலீஸ் அதிகாரி ஒருவருடன் பாலைவனத்துப் பாதையொன்றில் வாகனத்தில் சென்று திரும்புகையில் பாலைவன மணலில் வாகனத்தின் சக்கரங்கள் புதைந்து விட்டன. சாரதி எவ்வளவு முயற்சித்தும் வாகனத்தை வெளியே எடுக்க முடியவில்லை. இருளும் மெதுவாக நெருங்கிக் கொண்டிருந்தது. கண்ணுக்கெட்டிய தூரத்தில் யாரையும் தெரியவுமில்லை. குடிப்பதற்குத் தண்ணீராவது கிடைக்கவில்லை. மனித நடமாட்டமே இல்லாத அப்பிரதேசம் நகரத்தை அண்மித்திருக்கவில்லை. போதாக்குறைக்கு போலீஸ் வாகனத்தின் வயர்லெஸ் கருவியும் செயலிழந்து இருந்தது. மூவரும் செய்வதறியாது அல்லாஹ்விடமே உதவி தேடியவர்களாக தெரிந்த சூராக்களை ஓதிக்கொண்டனர்.

அல்லாஹ்வின் கிருபையால் அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பொதுப் பாதையில் மின் குமிழ் வெளிச்சம் தெரிந்தது. அப்பாதையில் மனித நடமாட்டமோ, போக்குவரத்து ஊடகங்களோ காணப்படவில்லை. இரவு நேரமாகிவிட்டதால் முயல்கள் மட்டுமே அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டிருந்தன. பொலீஸ் வாகனத்தின் கட்டுப்பாட்டு அறையை வயர்லெஸ் கருவியின் ஊடாக பலமுறை முயற்சி செய்து ஒருவாறு மற்றுமொரு போலீஸ் வாகனத்திற்கு அறிவித்தல் கொடுத்தார்கள். அந்த அறிவித்தல்கள் சீரற்றதாக இருந்ததால் குறித்த போலீஸ் வாகனத்துக்கு அவர்கள் இருந்த இடத்தை தேடிக் கொள்ள முடியவில்லை.

நஜீப் ஹாஜியார் அந்த வெளிச்சம் தெரிந்த பொதுப் பாதையை நோக்கி இரண்டு கிலோமீட்டர் நடந்து செல்லத் தொடங்கினார். ஒருவாறு நடந்து அந்தப் பாதையை அடைந்ததும் அங்கே வேறோரு பொலீஸ் வாகனம் வருவதை அவதானித்தார் நஜீப் ஹாஜியார். அந்த போலீஸ் வாகனத்தில் ஏறி திரும்பிவந்து கொண்டிருக்கும் போது அந்த வாகனமும் மண்ணில் புதைந்தது. மிகவும் கஷ்டப்பட்டு அதனை மீட்டெடுத்த போது இருள் சூழ்ந்துவிட்டதனால் முன்னைய வாகனம் புதைந்திருந்த இடத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் போனது. அங்கும் இங்குமாகத் தேடி அலைந்து ஒருவாறு வாகனம் இருக்கும் இடத்தை கண்டு பிடித்தார் நஜீப் ஹாஜியார். பிறகு எல்லோருமாகச் சேர்ந்து சிரமப்பட்டு வாகனத்தை வெளியே எடுத்தனர். நள்ளிரவு 12:30 மணிக்கு போலீஸ் உயர் பீடத்தை வந்தடைந்தனர்.

“நாம் உங்களை அங்கிருந்து மீட்டி எடுப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் இருந்தோம். இன்னும் கொஞ்சம் முயற்சி செய்து பார்த்து விட்டு போலீஸ் ஹெலிகாப்டர் மூலமாகவாவது மீட்க எண்ணினோம்.” இவ்வாறு கூறினார் அப்போது அங்கு கடமையில் இருந்த உயர் அதிகாரி.

*கொசு கடித்த வலியை கூட பொறுக்காமல் சடார்னு அடிக்கும் நாம் தான்*
*வாழ்க்கையில் பல வலிகளை சாதாரணமாக கடந்து செல்கிறோம்.*

## நீதியரசரைச் சந்தித்து சந்தோசத்தில் சங்கமித்தார்.

இலங்கையின் முன்னாள் ஐந்து நிதியரசர்களுள் ஒருவராக பணியாற்றி விட்டு ஓய்வு பெற்று தற்போது U.A.E. க்கான இலங்கை தூதுவராகக் கடமையாற்றிவரும் தூதுவர் ஜெமீலை 1992.05.11 இல் நஜீப் ஹாஜியார் சந்தித்தார். அவரது காரியாலயம் சென்று தனது தொழில் சம்பந்தமான விடயங்களை உரையாடினார் அவர்.

*வசந்தக் காற்று தழுவிச் சென்றால் போதும் வாழ்க்கையில் சந்தோஷமே சங்கீதம்தான்.*

## கனவில் கண்ட தனது மரணம்.

1992.11.21 ஆம் திகதி நஜீப் ஹாஜியாரின் பிறந்தநாள். அவருக்கு வயது 35 பூர்த்தியானது. அன்று அவர் நித்திரையில் தான் மரணித்து விட்டது போலவும், தனது உடலைக் குளிப்பாட்டுவது போலவும் ஒரு கனவு கண்டார். அவர் இது போன்று பல தடவைகள் கண்டுள்ளார்.

1973 ஆம் ஆண்டு அவர் காலி சோலை முபாரக் மௌலானா அரபு கலாசாலையில் ஒரு மாணவனாக அரபு மார்க்கக் கல்வி கற்றுக் கொண்டிருந்த போது இன்றைக்கு 150 வருடங்களுக்கு முன்னர் காலம் சென்ற முபாரக் மௌலானாவால் கட்டப்பட்ட கட்டிடமான சிறிய தக்கியாவென அழைக்கப்பட்ட அந்த தக்கியாவில் அவர் உறங்குவது வழக்கம். அப்போது ஒரு நாள் அவர் உறங்கும் போது தான் வபாத்தாகி விடுவதாகவும், அவ்விடத்திலே அடக்கம் செய்யப்படுவதாகவும் கப்ரிலே இருளே இன்றி வெளிச்சம் காண்பதாகவும் கனவு கண்டார். அந்தக் கப்ரில் இருந்துகொண்டு நஜீப் ஹாஜியார் இப்படி சிந்தித்திருக்கின்றார்.

‘இவ்வளவு அழகான பிரகாசமான இடத்திற்கு இதற்கு முன்னரே வந்திருக்கலாம் அல்லவா? நான் இந்த இடத்தைப் பற்றி எவ்வளவு அச்சம் கொண்டிருந்தேன்.” அடுத்த நாள் அவர் உடனே அந்த இடத்திற்கு அண்மையில் தங்கி இருந்த அப்துல் சமீ ஆலிமிடம் போய் கண்ட கனவைப் பற்றி கேட்டார். அவர் பின்வருமாறு கூறினார்.

“உமக்கு நல்ல அறிவு வளர்ந்து வருகிறது. எதிர்காலத்தில் பெரியவர்களையும், நல்ல மகான்களையும் சந்திப்பதோடு உயர் பதவியினையும் வகிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றும் உனது உயிர் எப்போது பிரியும் என்பது பற்றியும் எத்தனையாவது வயதில் நீ மௌத் ஆகுவாய் என்பதையும் அந்த அல்லாஹ்வே அறிவான்” என்றும் கூறினார். அத்துடன் நீ முஹ்மினான மையத்தாக மரணிப்பதோடு எந்த வேதனையும் இன்றி இருளின்றி சுவனபதியை அடைய வேண்டுமென அப்துல் சமீ ஆலிம் அவர்கள் பிரார்த்தனை செய்தமை மனதுக்கு குளிர்ச்சியைத் தந்தது.

*உங்களின் பிள்ளைகளின் கல்வியைப் பற்றி நீங்கள் சிந்திக்காவிட்டால் நாளைய விடியலை நோக்கி உங்களால் ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாது. மரணத்தை நினைவு கூர்ந்து கொண்டே இருங்கள் ஏனெனில் அது உங்கள் உள்ளத்தைத் தூய்மையாக்கும்.*

## மனைவி மக்களின் மகிழ்வான வருகை.

1993.03.26 இல் நஜீப் ஹாஜியாரின் மனைவி, மகள் மற்றும் இரண்டு மகன் மார்களும் அபுதாபி விமான நிலையம் வந்து சேர்ந்தனர். அவர் விமான நிலையம் சென்று மனைவி மக்களை அழைத்துக் கொண்டு மகிழ்ச்சியோடு புதிய வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

*உங்களை விட்டுப் போகும் ஒன்றை எண்ணி கவலை வேண்டாம் யாவும் அவனின் திருப்பொருத்தம் இல்லாமலேயே விலகிச் செல்லாது. ஆகவே உமக்கானது வந்து சேரும் வரை பொறுமையாக இரு. சோகமான நேரம் கூட மாறிப்போகும் வலிகள் கூட தொலைந்து போகும் மனைவி மக்களுடன் கூட இருந்தால்.*

## பெருந்தகையின் இல்லத்தால் பரவசமானது உள்ளம்.

நஜீப் ஹாஜியார் அவர்கள் வசிக்கும் வீடு அந்நாட்டு ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியும் முன்னாள் ஐக்கிய அரபு இராச்சியத்தியத்தின் வெளிநாட்டு அமைச்சருமான அகமது கலீபா அல் சுவைதியின் மகளின் வீடாகும். அகமது கலிபாவின் மாளிகையும் அதற்குப் பக்கத்திலேயே அமைந்திருந்தது.

*உள்ளத்தில் இடமிருந்தால் இல்லத்தில் மட்டுமல்ல எங்குமே இடம் பிடிக்கலாம்.*

## ஆற்றலைக் கண்டு வியந்தார் கலீபா.

1993.06.23 ஆம் திகதி மாண்புமிகு கலீபா அல் சுவைதியை சந்திக்கும் வாய்ப்பு நஜீப் ஹாஜியாருக்கு கிட்டியது. அப்போது அவருடன் பல விடயங்கள் பற்றி உரையாடினார் நஜீப் ஹாஜியார். நஜீப் ஹாஜியாரின் அரபு மொழி ஆற்றலைக் கண்டு வியந்து போனார் கலீபா.

எங்கு? எப்படி? அரபு மொழியை கற்றீர்கள்? என்று கூட இருந்த அனைவரும் ஆர்வத்துடன் அவரைக் கேட்டனர். நஜீப் ஹாஜியாரின் பிள்ளைகளை அரசாங்க பாடசாலையில் சேர்ப்பதற்கு நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாகவும் அவர்கள் உறுதியளித்தனர்.

*ஆற்றல் உள்ளவன் எங்கு வேண்டுமானாலும் போற்றப்படுவான் அவனுக்கென்று ஒரு தனிச்சிறப்பும் மதிப்பும் உள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.*

## நான்காவது மகனின் பிறப்பு ஒரு தனிச்சிறப்பு.

1994.02.19 ஆம் திகதி அல்ஜன் அபுதாபி U.A.E அரசாங்க வைத்தியசாலையில் இரவு 10.40 மணிக்கு அல்லாஹ்வின் அருளால் நஜீப் ஹாஜியாரின் மனைவிக்கு நான்காவது பிள்ளையாக ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்தது. தனது பிள்ளைக்கு ஹிதாயத்துல்லாஹ் என பெயர் சூட்டினார் நஜீப் ஹாஜியார். அதே தினத்தில் தான் மூத்த மகன் நிஹ்மதுல்லாவும் கிடைக்கப்பெற்றதை நினைவு கூர்ந்த அவர் "தனக்கு ஒரே தினத்தில் இரண்டு பிள்ளைகள் கிடைக்கப் பெற்றதை எண்ணி அகம் மகிழ்ந்தார்.

*பிள்ளைச் செல்வத்தில் கிடைக்கும் மகிழ்ச்சி வசதியில் இல்லை என்று கவலை படாதீர்கள் வாழ்வதில் உள்ளது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.*

## கார் வாங்கியதன் அவசியம்.

நஜீப் ஹாஜியாரின் நாளாந்தத் தேவைகளுக்கு மோட்டார் வாகனமொன்று மிகவும் அவசியமாக இருந்தது. அவர் 1995.01.24 ஆம் திகதி கார் ஒன்றை வாங்கினார். முதல் முதலாக வாங்கிய கார் என்றபடியால் அவருக்குள் ஓர் இனம் தெரியாத சந்தோசம் பாய்ந்தோடியது. ஏற்கனவே அரபு நாட்டுக்குரிய லைசென்ஸ் பெற்று வைத்திருந்ததால் அவருக்கு இலகுவாக இருந்தது. அது மட்டுமல்லாமல் தனது நாளாந்த தேவைகளை செய்து கொள்ள அது மிகவும் உதவியாகவும், பிரயோசனமாகவும் இருந்தது.

நஜீப் ஹாஜியார் தனது மூத்த பிள்ளைகள் மூவரையும் தனது காரிலேயே பாடசாலைக்கு அழைத்துச் செல்வது வழக்கம். வழக்கம் போல் மூவரையும் கூட்டிச் செல்வதற்காக அவர் காரை கராஜிலிருந்து வெளியே எடுக்கும்போது பின்பக்க டயரில் ஏதோ தட்டுப்படுவதாக உணர்ந்தார். அதேவேளை அவரின் மகள் பாத்திமா ஹுஸ்னா "வாகனத்துக்கு கீழ் பிள்ளை.... பிள்ளை...." எனக் கத்தினாள். உடனே காரை நிறுத்தி பதட்டத்துடன் வெளியே இறங்கினார் நஜீப் ஹாஜியார். நான்காவது மகன் பாலகன் ஹிதாயத்துல்லாஹ் மூச்சுத் திணறி கீழே விழுந்த நிலையில் காணப்பட்டான். யாருக்குத் தெரியாமல் குழந்தை காருக்கு அடியில் சென்றிருக்கிறது.

உடனே மனைவியையும் ஏற்றிக் கொண்டு அவர் வைத்தியசாலைக்கு விரைந்து சென்றார். நஜீப் ஹாஜியாரின் கைகளும், கால்களும் நடுங்கின. ஒழுங்காக அவரால் காரைக்கூட ஓட்ட முடியவில்லை. மனைவியின் வாய் ஓதல்களில் மூழ்கிப் போய் இருந்தது. ஒருவாறு வைத்தியசாலையை வந்தடைந்தனர். குழந்தைக்கு நல்லபடியாக சிகிச்சை நடைபெற்றது. அல்லாஹ்வின் அருளால் பெரிய ஆபத்துக்கள் ஏதும் இன்றி பிள்ளை காப்பாற்றப்பட்டது.

## குடும்பத்துடன் ஹஜ் பயணம்.

நஜீப் ஹாஜியார் குடும்பத்துடன் ஹஜ்ஜுக்குப் போக ஆயத்தமானார். 1995.03.08 ஆம் திகதி சவுதி தூதுவராலயத்தில் அவருக்கும் மனைவி மக்களுக்குமான விசாக்களை பெற்றுக் கொண்டனர். அவரது வாகனத்திலேயே ஹஜ்ஜுக்கு செல்ல ஏற்பாடுகளைச் செய்து கொண்டார். அத்துடன் தனது மனைவியின் தந்தை ஹுஸைன் மாமாவையும் இலங்கையிலிருந்து ஹஜ்ஜுக்காக வரவழைத்திருந்தார்.

## மனக் கண்முன் நிழலாடும் மறக்க முடியாத நிலவு நிகழ்வுகள்.

1997.01.01 புதன் கிழமை அன்று பகல் நேரம் அல்ஜீரியாவின் முன்னாள் கௌரவ வெளிநாட்டமைச்சர் அப்துல் அஸீஸ் பூ தப்லிகாவுடனும் கௌரவ அஹமத் கலீபாவுடனும் அஹ்மத் சுவைதியின் மஜ்லிஸின் உள்ளே பகற் போசனம் அருந்தினார் நஜீப் ஹாஜியார். 1999 ஆம் ஆண்டு அல்ஜீரியாவின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற கௌரவ அப்துல் அஸீஸ் அவர்களுடன் பகற்போசனம் அருந்தக்கிடைத்தமை ஒரு வரப்பிரசாதமாகவே இருந்தது.

அக் காலப்பகுதியில் நஜீப் ஹாஜியாருக்கு மாலை வேளையிலேயே பணி இருந்தது. காலை வேளை அவருக்கு ஓய்வு நேரமாகவே இருந்தது. ஓய்வு நேரத்தை வீணாக்காமல் நீதிமன்றத்திற்குச் சென்று நூற்றுக்கணக்கில் இருந்த சிறைக் கைதிகளின் வழக்கு விசாரணை சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டார் நஜீப் ஹாஜியார். 1997.07.02 திகதி அப்படிச் செல்லும்போது அவருடைய கார் சடுதியாக இன்னுமொரு காருடன் மோதியது. தவறு இவருடையது. ஆகையால் 600 திர்ஹங்கள் நஷ்ட ஈடாக வழங்க வேண்டியிருந்தது.

அதே காலப்பகுதியில் நீதிமன்றத்தில் இலங்கை முஸ்லிம் பெண் ஒருவருக்கும் இந்திய நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கும் திருமணம் செய்து வைக்கப்பட வேண்டும் என அனுமதி கோரப்பட்டது. திருமணத்தை முடித்து வைக்க ஏற்பாடு செய்வதற்காக ஒரு அரபி நஜீப் ஹாஜியாரைக் கூட்டிச் சென்றார். பெற்றோர் சம்மதம் இன்றி திருமணம் நடத்த நீதிவான் மறுத்துவிட்டார். ஆனால் நஜீப் ஹாஜியார் சாட்சியாக இருக்க சம்மதித்தால் திருமணத்தை நடத்தி வைக்க முடியும் என நீதிவான் சொன்னார். நஜீப் ஹாஜியார் அதை மறுத்தார். அவர்களது பெற்றோர் தொலைபேசி மூலமாகவாவது தனக்கு அறிவித்தால் மட்டுமே சாட்சியாக இருக்க முடியும் என்று சொல்லிவிட்டார். பெற்றோரின் தொலைபேசி இலக்கத்தைத் தனது வீட்டுக்கு

கொண்டு வந்து தரும்படி கூறி அங்கிருந்து மெல்ல விலகிக்கொண்டார் அவர். அப்பெண் அதன் பின்னா நஜீப் ஹாஜியாரிடம் வரவே இல்லை. அது அவருக்கு ஆச்சரியமாக இருக்கவில்லை. திருட்டுத்தனமான இந்த திருமணத்திற்கு தான் சாட்சியாக இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என ஒரு கணம் யோசித்துப் பார்த்தார் அவர். மறுகணம் வல்ல நாயன் அல்லாஹ்வை சுகூர் செய்து கொண்டார்.

1997.12.24 ஆம் திகதி கல்முனையைச் சேர்ந்த இலங்கைத் தூதுவர் கௌரவ சம்சுதீன் அவர்கள் அல்ஜன் வந்தார். அத்தியாவசிய வேலைகளுக்காக ஒரு காரியாலயத்தை அங்கு திறந்து வைத்தார். இவ்விடயம் பற்றி இலங்கையர் ஒருவரின் வீட்டில் அவருடன் கூடி ஆராயப்பட்டது.

## பண்பைக் கண்டு பதவி உயர்வு.

U.A.E யின் அமைச்சர்கள் ஆறு பேர்கள் இன்னும் அல்ஜன் மாவட்ட போலீஸ் அதிபர், குடிவரவு குடியகழ்வுத் திணைக்களத்தின் முகாமையாளர் மற்றும் உயர் பதவிகளில் இருக்கும் சிலர் இன்னும் முக்கியமான பிரமுகர்கள் 1998.04.28 ஆம் திகதி ஷேக் அஹமது கலீபாவின் மாளிகைக்கு வரவிருப்பதாக அறிவித்திருந்தனர். அவர்கள் அனைவரையும் மாளிகையின் பிரதான வாயிலில் இருந்து வரவேற்கும்படி ஷேக் அகமது ஹலிபா நஜீப் ஹாஜியாரை கேட்டுக்கொண்டார். அவரது வேண்டுகோளை ஏற்ற நஜீப் ஹாஜியார் அனைவரையும் வரவேற்று நல்லபடியாக உபசரித்தார்.

தொடர்ந்து அவர்கள் அனைவருக்கும் காலை உணவு பரிமாறப்பட்டது. பிறகு ஷேக் அஹ்மத் கலீபா சுவைதி, உள்விவகார அமைச்சரான Dr. முஹமட் சஹீத் அல் பாதி அவர்களிடம் நஜீப் ஹாஜியாரை அறிமுகம் செய்து வைத்தார். ஏனைய அமைச்சர்கள் அனைவரும் அந்நிகழ்வை அவதானித்துக் கொண்டிருந்தனர். தொடர்ந்து அஹமது கலீபா அமைச்சரிடம் உடனடியாக நஜீப் ஹாஜியாருக்கு பதவி உயர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். கூட்டம் கலைந்த பின்பு ஷேக் அஹ்மது கலீபா அவர்களும் அமைச்சர்களும் ஓமான் நாட்டு மன்னரை சந்திப்பதற்காக தரை மார்க்கமாகச் சென்றனர். 1998.06.06 அன்று நஜீப் ஹாஜியார் அவர்கள் பதவி உயர்வு செய்யப்பட்டார்.

## இறையடி சேர்ந்தார் அன்புத் தந்தை.

2000.06.05 ஆம் திகதி நஜீப் ஹாஜியாருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவரின் பெரியம்மாவின் மகன் அபுல் ஹசன் நானா

தான் பேசினார். ஆனால் அவரது குரலில் சோகம் கலந்திருந்தது. மிகவும் சாதுவாகப் பேசினார்.

“உங்களது தந்தையின் உடல் நலம் மிகவும் மோசமாக உள்ளது. அடிக்கடி உங்களைத்தான் கேட்கிறார். முடியுமாயின் நீங்கள் அவசரமாக வந்தால் நன்றாக இருக்கும்.” அபுல் ஹசனின் வார்த்தைகளைக் கேட்டதும் நஜீப் ஹாஜியார் தடுமாறிப் போனார். தொலைபேசியை வைத்த மறுகணமே அவர் இலங்கை திரும்புவதற்கான ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினார்.

கடவுச்சீட்டைக் கையிலெடுத்துப் பார்த்த போது அது காலாவதியாகியிருந்தது. இறைவா இது என்ன சோதனை என்று நினைத்தபடியே அதனைப் புதுப்பிப்பதற்கான முயற்சியை முதலில் செய்தார் நஜீப் ஹாஜியார். உயரிடங்களில் அவருக்கு செல்வாக்கிருந்ததனால் கடவுச் சீட்டை உடனடியாகப் புதுபித்துக் கொள்ள அவரால் முடிந்தது. 2000.06.07 திகதி அன்று கடவுச் சீட்டைப் பெற்றுக் கொண்டார். நினைத்ததுபோல் அவசரமாக இலங்கை வந்தடைந்தார்.

2000.06.09 திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணி அளவில் நஜீப் ஹாஜியார் ஊரை வந்தடைந்தார். உடனடியாக தனது தந்தையைப் பார்ப்பதற்காக வீட்டுக்குச் சென்றார். வைத்த கண் வாங்காமல் அவரையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டே இருந்தார். நஜீப் ஹாஜியாரின் குரலைக் கேட்டதும் தந்தை தனது பார்வையை அவரின் பக்கம் திருப்பி அவரைப் பார்த்துக் கொண்டே இருந்தார். ஆனால் அவரால் பேச முடியவில்லை.

வாப்பா நான் உங்கள் மகன் நஜீப் வந்திருக்கிறேன். எனக் கண்ணீர் வடிய விம்மிய வார்த்தைகளில் சொன்னார். தந்தையின் பக்கத்திற்குச் சென்று ஸம்ஸம் நீரை அவருக்குப் பருக்கினார். அப்படியே அவர் பக்கததிலேயே இருந்தார். சரியாக மாலை 5 மணிக்கு உறவினர்கள் சூழ்ந்திருக்க, அல்குர்ஆன் பாராயனத்திற்கு மத்தியில் முகத்தில் சின்னதாய் புன்முறுவலுடன் நாவு மெல்ல அசைய அமைதியாக தந்தையின் உயிர் பிரிந்தது.

இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

ஜனாஸாவில் கலந்து கொண்டவர்கள் எல்லோரும் நஜீப் ஹாஜியாரின் தந்தையின் நற்குணங்களையும் நன்னடத்தைகளையும் போற்றிப் பேசினர். தர்கா நகரின் ஒரு நல்ல மனிதர், சமூக போதகராய் இருந்த ஒருவரின் இழப்பு சமூகத்திற்கு பெரும் இழப்பாகும் என்று பலரும் கதைத்துக் கொண்டனர்.

2000.06.10 ஆம் திகதி அஸர் தொழுகைக்குப் பின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா தொழுகையை அவரது சிஷ்யர்களின் ஒருவரான கொழும்பு மருதானை போபஸ் லேன் புகாரி தக்கியா பள்ளியின் தர்மகர்த்தாக்களின் தலைவர் ஷாஹுல் ஹமீத் ஹாஜியார் அவர்கள் நஜீப் ஹாஜியாரின் வேண்டுகோளுக்கிணங்க நடத்தினார்.

## இஸ்லாம் காட்டும் இலகுவான வழி
## மர்ஹும் அமீர் ஆலிமீன் அரும் பணி.
## (தீத்தார் பெருணம்)

வெலிப்பன்னையை பிறப்பிடமாகவும் தர்கா நகரை வசிப்பிடமாகவும் கொண்ட எச்.எம். அமீர் ஆலிம் அவர்களின் (அல்ஹாஜ்) மறைவு பிரதேசத்திற்கு ஒரு பேரிழப்பு ஆகும். சிறிது காலம் நோயால் பீடிக்கப்பட்டிருந்து 2000 ஜுன் 9 ஆம் திகதி அவர் இறையழைப்பேற்றார். மர்ஹும் அல்ஹாஜ் அமீர் ஆலிம் 1915 நவம்பர் முதலாம் திகதி ஜனாப் ஹஸன் மரிக்கார் கிராம விதானையாருக்கும் ஜனாபா ஹபீபா உம்மாவுக்கும் மகனாக வெலிப்பன்னையில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை வெலிப்பன்னை கலவன் பாடசாலையில் பெற்றார். பிறகு தர்கா நகர் பெரிய பள்ளிவாசலில் அமையப்பெற்ற முய்யத்துல் இஸ்லாம் அரபு மத்ரஸாவில் அரபு மொழி, மார்க்கக் கல்வி என்பவற்றை பெற்று தேர்ச்சி கண்டார். தொடர்ந்து மகரகமை அரபுக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்று பின்னர் தனியார் கல்வி கலாசாலையான கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் அதிபராக இருந்த வேளையில் அக்கல்லூரியில் அரபு, இஸ்லாம் கற்பிக்க இவர் நியமனமானார். அங்கு சேவையாற்றிய அவர் தென்னிந்திய காயல்பட்டினத்தில் அரபு மொழி, இஸ்லாமிய மத ஞானம் என்பவற்றில் உயர்ந்த தேர்ச்சி பெற்றவராக இருந்ததனால் வெளி நாட்டுக்கும் செல்ல வாய்ப்புக் கிடைத்தது.

அரபு மொழியில் மார்க்கக் கல்வியில் மேல்நிலை தேர்சியுடன் நாடு திரும்பிய அல்ஹாஜ் எச்.எம். அமீர் ஆலிம் அவர்கள் இலங்கையில் பல பாகங்களிலும் பள்ளிவாசல்களில் பிற்காலத்தில் கதீபாக கடமை ஆற்றியுள்ளார்.

கொழும்பு மருதானை போபஸ் லேன் புகாரி தக்கியாவில் பேஷ்இமாமாகவும் ஆலிமாகவும் அவர் கடமை புரிந்தார். மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் கலீபாவாக விளங்கி அத்தக்கியாவிலேயே அடங்கி இருக்கும் தரீக்கத்துல் காதிரியாவின் பிரதிநிதியாக இருந்த ஹனீபா பின் வாப்பு மரைக்காருடைய தோழராக சில வருடங்கள் இருந்து பல அனுபவங்களைப் பெற்று தரீக்கா இல்முகளையும் அறிந்து கொண்டார்.

தர்கா நகரில் திருமணம் செய்து கொண்ட அல்ஹாஜ் எம்.எச். அமீர் ஆலிம் அவர்கள் தர்கா நகரையே தனது வாசிப்பிடமாகக் கொண்டார். சீதன ஒழிப்புச் சங்கம் ஒன்றை தர்கா நகரில் அமைத்து செயல்படத் தொடங்கினார். இந்தச் சங்கத்தின் கொள்கையை விளக்க நூல்களை வெளியிட்டார். உள்ளூரிலும், வெளியூர்களிலும் மேடையமைத்து சீதன ஒழிப்பு பிரசாரத்தில் ஈடுபட்டார். பள்ளிவாசல்களிலும் இவரது பிரசங்கம் இடம் பெற்றது. இதன் பலனாக சீதனம் வாங்காமல் "மஹர்" கொடுத்து இஸ்லாமிய முறையில் திருமணங்களை நடத்தி வந்தார். மாதாந்தம் சங்கத்தின் செயற்பாடு, அதன் பிரயோசனம் பற்றிய பிரசுரங்களை வெளியிட்டார். இனாமாகவும் இவை பகிரப்பட்டன. "இஸ்லாம் காட்டும் இலகுவான வழி" இவர் வெளியிட்ட ஒரு முக்கிய நூலாகும். இந்நூல் மூலம் முஸ்லிம் ஒருவர் மார்க்க ரீதியாக வாழ்க்கையை இலகுவாக அமைத்துக் கொள்வது எங்கணம் என விளக்கினார். ஏனைய சமூக ஆதாரங்களை பின்பற்றிய முஸ்லிம்களுக்கு இது ஒளி விளக்காக வழிகாட்டி நின்றது என்றால் பொருந்தும்.

அஸ்ராரூர் ரப்பானி மௌலிதை வெள்ளி இரவு, கஸீததுல் புர்தா மற்றும் ஔராதுகளை வெள்ளி தினங்களிலும் ஓதி வந்த அமீர் ஆலிம் ஹாஜி அவர்கள் நபிகள் முகமது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உவக்கும் பான்மை பற்றி மற்றவர்களுக்குப் பறைசாற்றித் தானும் செயல் மூலம் காட்டி நின்று இறை கடைமைகளை இனிதே நிறைவேற்றியவர் ஆவார். ஆத்மீக வழியில் நோய் நிவாரணம் பெற்று கொடுப்பதில் வல்லவராக திகழ்ந்த அமீர் ஆலிம் ஹாஜி அவர்களிடம் பலரும் வியாதிகள் பிரச்சனைகளில் விமோசனம் பெற்றுக் கொண்டனர். இத்தகைய சமூக வேலைகளுடன் தர்ம வழியிலும் உதவிகள் புரிந்து வாழ்ந்த இவர் பிறந்தகம், புகுந்தகம் ஆகிய இரண்டு ஊர்களிலும் முஸ்லிம் மக்கள் மீது நிறைந்த வாஞ்சை கொண்டவராக இருந்தார் என்றால் மிகையில்லை.

வெலிப்பன்னை எம். ஏ. எம். வை அரபாத்.

## வியக்க வைத்த வார்த்தைகள்.

எட்டு வருடங்களுக்கு முன் நஜீப் ஹாஜியார் விடுமுறையில் வீடு வந்திருந்த போது அவரது தந்தை கூறிய வார்த்தைகள் அற்போது அவருக்கு வியப்பைக் கொடுத்தன.

"மகனே! தர்கா நகர் பிரதான வீதியில் இருந்து எமது வீடு வரையுள்ள பாதையை நான் சீர் செய்துள்ளேன். இதற்கு நான் உடைத்த பழைய வீடுகளில் இருந்து அப்புறப்படுத்திய கல் மண் ஆகியவைகளை

பயன்படுத்தி இருக்கிறேன். அப்போது இச்செலவுகளில் பங்கு கொள்ள பாதைக்கு உரியவர்கள் சிலர் என்னிடம் வந்து கேட்டனர். நான் அதற்கு விருப்பப்படவில்லை. எனது சொந்தச் செலவிலேயே நான் மேற்கொண்டேன். ஏனென்றால் நான் மௌத்தாகும் தினத்தில் கடுமையான மழை பொழியும். அப்போது இப்பாதை எல்லாம் நீர் நிறைந்து வழியும். ஏராளமானவர்கள் எனது ஜனாஸாவில் கலந்து கொள்வார்கள். அவர்களது உடைகள் எல்லாம் சகதியால் அழுக்கடையாமலிருக்கவே இவ்வாறு செய்தேன்." தனது தந்தையின் வார்த்தைகள் உண்மையானதை நினைத்து மெய்சிலிர்த்துப் போனார் நஜீப் ஹாஜியார். அத்துடன் தனது தந்தையால் எழுதப்பட்ட முதல் நூலான "இஸ்லாம் காட்டும் இலகுவழி" என்ற புத்தகத்தை எமக்கு காட்டி இன்று பலராலும் எழுதப்படும் இஸ்லாமிய மூலாதார புத்தகங்களுக்கு தேவையான அடிப்படைகள் இப்புத்தகத்தில் புதைந்து காணப்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டினார்.

மறைந்த தனது தந்தையின் பெயரில் தர்மங்கள் பல செய்து மனநிறைவு கொண்டார் நஜீப் ஹாஜியார் அவர்கள்.

## தந்தையின் பெயரில் ஸதக்கா.

இலங்கையின் முதன்முதலாக கட்டப்பட்ட பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பள்ளியில் அமைந்திருக்கும் முகமதியா அரபுக் கல்லூரிக்கு அரபு மொழியை கற்றுக்கொள்ளத் தேவையான அனைத்து கிதாபுகளையும் நஜீப் ஹாஜியார் வபாத்தான தனது தந்தையின் பெயரில் அன்பளிப்புச் செய்தார்.

2000.12.25 இல் ஜன்னத்துல் முஅல்லாவுக்குச் சென்று அங்கு அடக்கப்பட்டுள்ள அனைவரது பெயரிலும் பாத்திஹா ஓதிக்கொண்டு இருக்கும்போது இனந்தெரியாத ஜனாஸா ஒன்று கொண்டு வரப்பட்டது. உடனே அந்த ஜனாஸாவை அடக்கும் கிரியைகளில் கலந்து பாத்திஹா ஓதியதுடன் அவ்விடத்தில் பணியாற்றியவர்களுக்கும் அவர் பணம் கொடுத்து உதவினார். இதே தினத்தில் பேருவளை சீனங்கோட்டையிலிருந்து புனித மக்காவுக்கு வந்திருந்த பாரூக் ஹாஜியாரை சந்தித்து உரையாடும்போது அவர் நஜீப் ஹாஜியாரின் தந்தை பற்றிக் கதைத்தார்.

"நான் உங்கள் தந்தையிடம் குர்ஆன் ஓதினேன். அவர் எனது தந்தை போல என்னுடன் நடந்து கொண்டார். அவர் மார்க்கப்பற்று நிறைந்த மாபெரும் புனிதர். நிச்சயமாக அவர் ஒரு அவ்லியாவாகும்."

## பளிச்சிடும் 2004 ஆம் ஆண்டின் நிகழ்வுகள்.

2004.03.02 ஆம் திகதி யு.ஏ.இ. அரசாங்கத்தின் அபுதாபிக்கான அல் இத்திஹாத் விமான சேவை முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அவ்விமான சேவையின் மேலிடத்திலிருந்து 20 டிக்கெட்டுகள் யு.ஏ.இ. யின் இலங்கைத் தூதரகத்துக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இலங்கைத் தூதரகம் நஜீப் ஹாஜியாரையும் ஒரு விருந்தினராக தேர்வு செய்து அவருக்கும் ஒரு டிக்கெட் இலவசமாக வழங்கியது. யு.ஏ.இ யில் இலங்கைப் பிரஜைகள் சுமார் மூன்று இலட்சம் பேர் பணிபுரிகின்றனர். அன்று இலங்கைத் தூதரகத்தின் கவுன்சிலரும் துணைத் தூதுவருமாக கடமையாற்றிய லாபீர் அப்துல் லத்தீப் (கிண்ணியா) அவர்களே நஜீப் ஹாஜியாருக்கு இவ்வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தார்.

அன்று விமானத்தில் நஜீப் ஹாஜியாருடன் இலங்கை தூதுவர் மற்றும் இத்திஹாத் விமான சேவையின் உத்தியோகத்தர்கள் பிரயாணத்திற்காக ஆயத்தமாகினர். மறுநாள் அதிகாலை 4.10 மணியளவில் கொழும்பு விமான நிலையம் வந்திறங்கிய அவர்களை பூமாலை சூட்டி கோலாகலமாக விமான நிலையத்தினர் வரவேற்றனர்.

அதற்கு ஒரு வாரத்தின் பின்னர் நஜீப் ஹாஜியார் இலங்கையில் அமைந்துள்ள யு.ஏ.இ. இற்கான தூதுவராலயத்துக்கு தூதுவரை சந்திக்கச் சென்றார். தூதுவர் மாலைதீவு சென்றிருந்ததால் பிரதித் தூதுவர் வலீத் என்பவரை சந்தித்து ஒரு மணி நேரம் உரையாடினார். அவர் முந்தைய வருடம் இடம்பெற்ற தெருவுப் பள்ளி திறப்பு விழாவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

2004.03.12 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் இலங்கைக்கு வருகை தந்திருந்த விமானத்திலேயே மீண்டும் யு.ஏ.இ. யிற்குத் திரும்பிச் சென்றார். 2004.06.24 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் மகன் நிஹ்மதுல்லாஹ்வுடனும் செய்கு அஹமது கலீபாவுடனும் யு.ஏ.இ. யின் பாராளுமன்ற உப சபாநாயகரின் வீடு சென்று இரவு நேர விருந்தில் கலந்து கொண்டார்.

மீண்டும் 2004.07.18 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் இலங்கை திரும்பினார். 2004.07.23 ஆம் திகதி தர்கா நகர் பெரிய பள்ளிவாசலில் இஷாத் தொழுகையின் பின்னர் பள்ளிவாசல் தர்மகர்த்தாக்களுடனும், மத்ரஸா நிர்வாகிகளுடனும் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார். 2004.08.13 ஆம் திகதி மத்ரஸாவின் திறப்பு விழாவை கோலாகலமாகச் செய்வதென அக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

## இறையடியெய்திய ஜனாதிபதி.

2004.11.02 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ரமழான் மாதம் பிறை 19 யில் அன்றைய யு.ஏ.இ. யின் முதலாவது ஜனாதிபதி சாயித் பின் சுல்தான் இறையடி சேர்ந்தார். இவர் 1940 முதல் 1966 வரை அல்ஜன் மாவட்ட பிரதிநிதியாக இருந்தவர். தனது சகோதரன் அபுதாபி கவர்னர் ஆக இருந்த வேளை அவரது ஆட்சியின் கீழ் அல்ஜன் மாவட்ட பிரதிநிதியாக ஆட்சி செய்தார். 1966.08.06 ஆம் திகதி முதல் அபுதாபியின் கவர்னர் ஆனார். 1971.12.02 முதல் ஐக்கிய அரபு ராஜ்யம் ஒரு தலைமையின் கீழ் கொண்டுவரப்பட்டு அதன் முதல் ஜனாதிபதியாக அவர் தெரிவு செய்யப்பட்டார். இப்புதிய அரசாங்கத்தின் முதல் வெளிநாட்டு அமைச்சராக செய்கு அஹமது கலீபா சுவைதி நியமிக்கப்பட்டிருந்தார்.

1976 ஆம் ஆண்டில் அணிசேரா நாடுகளின் மாநாடு இலங்கையில் நடைபெற்றதுபற்றி அனைவரும் அறிந்ததே. உலகின் பல நாடுகளின் தலைவர்கள் பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இம் மாநாட்டில் கலந்து கொண்டனர். இம் மாநாட்டிற்கு அன்றைய இலங்கை பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களே தலைமை தாங்கினார். இம் மாநாட்டில் அன்றைய யு.ஏ.இ. ஜனாதிபதியாக இருந்த செய்கு சாயித் பின் சுல்தான் அவர்களும் அன்றைய யு.ஏ.இ. யின் வெளிநாட்டு அமைச்சராக இருந்த தர்கா நகர் தெருவுப் பள்ளிவாசல் மற்றும் பெரிய பள்ளிவாசல் மத்ரஸா என்பவற்றை கட்டி முடிக்க முழு பணத்தையும் அன்பளிப்புச் செய்தவருமான செய்கு அஹமது கலீபா சுவைதி அவர்களும் கலந்து கொண்டிருந்தார்.

ஜனாதிபதி செய்கு சாயித் பின் சுல்தான் அவர்களின் ஜனாஸா அவர் கட்டிக் கொண்டிருக்கும் யு.ஏ.இ. இற்கான பாரிய பள்ளிவாசலின் அருகாமையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

2004.11.05ஆம் திகதி தர்கா நகர் தெருவுப் பள்ளிவாசலில் ஜும்மா தொழுகைக்குப் பின் மறைந்த ஜனாதிபதி செய்கு சாயித் பின் சுல்தானின் பெயரில் நஜீப் ஹாஜியாரின் வேண்டுகோளுக்கிணங்க ஜனாஸா தொழுகை நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

## புதல்வியோடு புன்னகை துளிகள்.

2004.12.29 நஜீப் ஹாஜியார் தனது புதல்வி ஹுஸ்னாவுடன் பாகிஸ்தான் கராச்சிக்குச் சென்றார். நக்ஷபந்தியா தரீக்காவின் கலீபாவாகிய செய்யது ஆசிக் தங்கல் அவர்கள் இருவரையும் வரவேற்று தனது வீட்டிலேயே இருவரையும் தங்க வைத்துக்

கொண்டார். வெள்ளிக்கிழமைகளில் காலையிலும் இரவிலும் அங்கு திக்ரு மஜ்லிஸ் நடைபெற்று வந்தது.
மறுநாள் இம் மஜ்லிஸில் முன்னாள் இராணுவத் தளபதி ஒருவரும் கலந்து கொண்டார். தளபதியின் மார்க்கப் பிரசங்கத்தை செவி சாய்த்த நஜீப் ஹாஜியார் பின்வருமாறு குறித்து வைத்துள்ளார்.

இவர் முன்னாள் பாகிஸ்தான் தலைவர் சியாஉல் ஹக் அவர்களுடன் பணியாற்றியவர். சியாஉல் ஹக் 1988 விமான விபத்தில் காலமானதுடன் பெனாசீர் பூட்டோ பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்றார். பூட்டோவின் ஆட்சி தொடர்ந்த போது முன்னாள் ராணுவத் தளபதியும் இன்னும் சிலரும் சேர்ந்து பெனாசீர் பூட்டோவை பதவியில் இருந்து வீழ்த்துவதற்காக சூழ்ச்சி செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 07 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அந்த 07 ஆண்டுகளிலும் குர்ஆன் ஹதீஸ்களை நன்கு கற்றுத் தேர்ந்த அவர் தனது சன்மார்க்க அறிவை பெருக்கிக் கொண்டதன் விளைவாக சன்மார்க்க போதகராக இப்போது திகழ்கிறார். இஸ்லாமிய இயக்கம் ஒன்றை அமைத்து அதன் தலைவராக இருந்துவருவதுடன் சன்மார்க்க போதனையிலும் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றி வருகிறார்.

அடுத்த நாள் தனது புதல்வி ஹுஸ்னாவுடன் நஜீப் ஹாஜியார் பாக்கிஸ்தான் நாட்டுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்த மாமனிதர் முஹம்மது அலி ஜின்னாவின் கல்லறையைத் தரிசித்து விட்டு அவரின் வீட்டுக்கும் சென்றார். அங்கு அவரின் ஆடைகள், பாதணிகள், புத்தகங்கள், இரண்டு கார்கள் போன்ற பல விடயங்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. மகள் ஹுஸ்னாவை கராச்சி பல்கலைக்கழகத்தில் அனுமதித்து விட்டு நஜீப் ஹாஜியார் மீண்டும் யு.ஏ.இ. திரும்பினார்.

## இதயத்தைக் கவர்ந்தவை.

2005.05.04 நஜீப் ஹாஜியார் இலங்கைக்கான புதிய தூதுவர் ஜுனைத் என்பவரைச் சந்தித்து அவருடன் பல விடயங்களைப் பற்றி உரையாடினார்.

2005.07.08 இல் நஜீப் ஹாஜியார் தனது மூன்று புதல்வர்களுடனும் செய்கு அஹமது கலீபா உட்பட அவரது சிறிய புதல்வருடனும் கடற்கரை ஓரத்தில் அமைந்திருக்கும் அஹமது கலீபாவுக்குச் சொந்தமான விடுதிக்குச் சென்றிருந்தார். அங்கு அவர்கள் பொழுதுபோக்குவதற்க்காக கடலில் மீன் பிடித்ததுடன் கடலில் பயணித்தார்கள். அன்றைய இரவு அந்த விடுதியிலேயே தங்கினார்கள்.

## கொடை வள்ளலின் மறைவும் தாயின் சீரற்ற உடல் நிலையும்.

பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த பிரபல மாணிக்க வியாபாரியும் ஜாமியா நளீமியாவின் இஸ்தாபகரும் கொடைவள்ளலும் முஸ்லிம் சமூகத்திற்கு அளப்பரிய தொண்டாற்றிய தன்னிகரற்ற சமூக சேவையாளருமான நளீம் ஹாஜியார் அவர்கள் 2005.09.27 ஆம் திகதி இறையடி சேர்ந்தார். இந்தத் துயரச் செய்தியைக் கேள்விப்பட்ட நஜீப் ஹாஜியார் மிகவும் மனம் வருந்தியதோடு அன்னாரின் ஈடேற்றத்திற்காக அல்லாஹ்விடம் துவா பிரார்த்தனை செய்தார். 2005.10.03 ஆம் திகதி தனது தாயின் முகம் பார்க்க வேண்டும் என்பதற்காக நாடு திரும்பினார். ஊர் வந்து சேர்ந்ததும் உடனே தாயைப் போய்ச் சந்தித்தார். அவரின் உடல் நிலை பற்றி மிகவும் ஆர்வத்துடன் அறிந்து கொண்டார். பின்பு அவர் வைத்தியரை சந்தித்து தினம் தோறும் தனது வீட்டுக்குச் சென்று தேவையான மருத்துவ ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

## தாயின் மறைவும் தாங்க முடியாத துயரமும்

2006.01.05 இரவு நஜீப் ஹாஜியாருக்கு தாய் நாட்டிலிருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. தர்கா நகர் ஹரீஸ் ஹாஜியார்தான் மிகவும் கவலையோடு பேசினார்.

“ஹாஜியார் உங்களுடைய உம்மாவின் உடல் நலம் மிகவும் குன்றிய நிலையில் உள்ளது. உடனே புறப்பட்டு வாருங்கள்.” சொன்னதுதான் தாமதம் நஜீப் ஹாஜியார் துடித்துப் போய்விட்டார். அவர் சிறிதும் தாமதிக்காமல் உடனே நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அன்று இரவு நஜீப் ஹாஜியார் தனது மகன் நிஹ்மதுல்லாஹ்வுடன் விமான நிலையம் நோக்கி அவசரமாகச் சென்று கொண்டிருந்த வேளை 2006.01.06 அதிகாலை 1.45 மணியளவில் தாயின் உயிர் பிரிந்து விட்டதாக அவரது மனைவி யிடமிருந்து தொலை பேசி அழைப்பு வந்தது. கவலை தாங்காது மன வேதனையில் அப்படியே அழுது விட்டார் நஜீப் ஹாஜியார். ஒருவாறு மகன் நிஹ்மதுல்லாஹ் அவருக்கு ஆறுதல் கூறித் தேற்றினார். முற்பகல் 11.45 மணியளவில் இருவரும் ஊரை வந்தடைந்தனர். அன்றே தர்கா நகர் மீரா பள்ளி வாசல் மையவாடியில் அவரது கையாலே அவரது தாயை நல்லடக்கம் செய்தார் நஜீப் ஹாஜியார்.

‘இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.”

## சந்தோசமான சங்கமங்கள்.

2006.01.18 இல் நஜீப் ஹாஜியார் தனது 3 வது மகன் ஹிதாயதுல்லாஹ்வை அழைத்துக் கொண்டு பாகிஸ்தானுக்குச் சென்றார். கடந்த வருடம் தங்கிய இடத்திலேயே தங்கிவிட்டு மகள் ஹுஸ்னாவைக் காணப் பல்கலைக்கழகம் சென்றார். அதேபோல் இரண்டு தினங்கள் கழித்து நஜீப் ஹாஜியாரின் மனைவி, மகள் ஆமினாவுடன் பாகிஸ்தான் வந்தடைந்தார்.

2006.01.21 ஆம் திகதி நக்சபந்தியா தரீக்காவின் கலீபாவின் தகப்பனாரின் ஞாபகார்த்தப் பெருவிழா இடம் பெற்றது. அவ்வைபவத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். விழா மேடையில் நஜீப் ஹாஜியார் அவர்களும் பூமாலை சூட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

2006.01.27 இல் செய்கு அஹமது கலீபாவின் வேண்டுதலுக்கிணங்க அல்ஜன் மிருகக் காட்சி சாலைக்கு அருகில் அமைந்துள்ள ஒரு பள்ளி வாசலை பார்வையிட நஜீப் ஹாஜியார் சென்றார். அப்பள்ளிவாசலுக்குத் தேவையானதை செய்து கொடுக்குமாறு அஹமது கலீபா நஜீப் ஹாஜியாரிடம் சொல்லியிருந்தார். எனினும் பள்ளி வாசல் அமைந்துள்ள பிரதேசம் முழுவதும் அபிவிருத்திப் பணிகளுக்காக விரைவில் அரசாங்கத்தினால் உடைக்கப்படவிருப்பதாக அயலவர்கள் சொன்னதும் நஜீப் ஹாஜியார் அங்கிருந்து திரும்பி விட்டார்.

2006.03.02 இல் நஜீப் ஹாஜியார் தனது மகன் ரஹ்மதுல்லாஹ்வின் மருத்துவப் படிப்புக்காக சீனாவுக்கு மகனை அனுப்பும் விடயமாக முக்கிய நபாரொருவருடன் கலந்தாலோசித்தார்.

## கனவு நனவாகியது.

நஜீப் ஹாஜியார் 2006.05.18 அன்று இரவு உறக்கத்தில் ஒரு கனவு கண்டார். செய்கு அஹ்மது கலீபா சுவைதி அவர்கள் அவரது தாயுடன் காரில் சென்று கொண்டிருந்தார். நஜீப் ஹாஜியாரும் அவர்களது காரில் அவர்களுடன் பயணம் செய்தார். பயண முடிவில் கலீபாவின் தாய் நஜீப் ஹாஜியாரை அழைத்தார். நஜீப் ஹாஜியார் அவரருகில் ஓடிச் சென்றார். அவர் 130 திர்ஹம்களை எடுத்து நஜீப் ஹாஜியாரிடம் கொடுத்தார். அதனைப் பெற்றுக் கொண்டதும் நஜீப் ஹாஜியார் கண் விழித்துக் கொண்டார். ஓ... இது கனவல்லவா என எண்ணி சுதாகரித்துக் கொண்டார்.

மறுநாள் நஜீப் ஹாஜியார் தான் கண்ட கனவை செய்கு அஹமது கலீபாவிடம் விளக்கமாகச் சொன்னார். அதைக் கேட்ட அவர்

உடனே "ஆம் எனது தாய் கனவில் உங்களுக்குத் தந்த காசு உங்களிடம் சேரவில்லை. அதை கனவாகவே விட்டுவிடக் கூடாது. அந்தப் பணத்தை நான் உங்களுக்குத் தருகிறேன்" எனக்கூறி சரியாக 130 திர்ஹம்களை நஜீப் ஹாஜியாரிடம் கொடுத்தார். இதை தனது வாழ்வில் மறக்க முடியாத ஒரு சம்பவம் என்கிறார் நஜீப் ஹாஜியார் அவர்கள்.

2006.06.17 இல் செய்கு அஹமது கலீபா நஜீப் ஹாஜியார் அவர்களிடம் 30 ஆயிரம் திர்ஹம்களை கொடுத்து அவரது வீட்டில் ஏற்கனவே வேலை செய்த இலங்கை முஸ்லிம் பெண்ணின் வீட்டை கட்டிக் கொடுக்கும்படி வேண்டினார். நஜீப் ஹாஜியார் தர்கா நகர் ஸப்வத் ஹாஜியார் மூலமாக அப்பணியைச் செய்து கொடுத்தார்.

2006.08.21 இல் நஜீப் ஹாஜியார் உம்ரா செல்வதற்காக ஜித்தாவுக்கு பயணமானார். 2006.08.24 இல் நஜீப் ஹாஜியார் புனித மக்காவில் உம்ராவை முடித்துக்கொண்டு மதீனாவுக்குச் சென்றார். அன்றிரவு அஹமது கலீபாவின் குடும்பத்தினரும் அங்கு வந்திருந்தனர். நஜீப் ஹாஜியார் அவர்களுடன் அன்றிரவு "இன்டர்கொன்டிநெண்டல்" ஹோட்டலில் தங்கினார்.

2006.08.30 இல் நஜீப் ஹாஜியார் அஹமது கலீபா மற்றும் அவரது குடும்பத்தினருடன் குளிரூட்டப்பட்ட பஸ் வண்டியில் மக்காவுக்கு புறப்பட்டு மற்றுமொரு உம்ராவை மேற்கொண்டார். 2006.09.01 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் அஹமது கலீபா சுவைதியின் மகள் மற்றும் மருமகனுடன் ரோயல் ஜெட் தனியார் விமானம் ஒன்றில் அபுதாபி நோக்கி புறப்பட்டார். மக்காவிலிருந்து ஜித்தா விமான நிலையம் வரை நஜீப் ஹாஜியாருக்கு யு.ஏ.இ. தூதரகத்தின் ஒரு வாகனம் அனுப்பி வைக்கப்பட்டு அதிலேயே அவர் விமான நிலையம் போய் சேர்ந்தார். அங்கு அவருக்கு விமான டிக்கெட் இன்றி போட்டிங் கார்டு மற்றும் இதர சோதனைகள் எதுவுமே இடம்பெறவில்லை. அவர் இமிகிரேசன் வரை போகவில்லை. செய்கு அவர்களின் பணியாளர் ஒருவர் கடவுச்சீட்டில் முத்திரை குத்திக்கொண்டு வந்து தந்தார். அவருக்கு தேநீர், குளிர் பானங்கள் வழங்கப்பட்டன. அவர் பயணித்த அந்த தனியார் விமானத்திலே இரு ஆசனங்கள் ஒன்றாக சேர்க்கப்பட்டு ஒவ்வொன்றும் சிறு அறைகள் போன்று காணப்பட்டன. ஐரோப்பிய நாட்டுப் பணிப் பெண்கள் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் வழங்கப்படும் உணவுகளை பரிமாறிக் கொண்டிருந்தனர். விமானத்தில் எந்த விதமான ஒலிபரப்புக்களும் இடம் பெறவில்லை. அமைதியாகவே காணப்பட்டது. அபுதாபியில் அவர்கள் விமான நிலையத்தில் இறங்கியபோது அவ்விமானத்தை விமான நிலையத்தின் அருகிலேயே நிறுத்தினார்கள். விமான வாயிலிலிருந்து முன்வாயில் வரை சிவப்பு தரை விரிப்பு விரிக்கப்பட்டு

இருந்தது. விமான நிலைய நுழைவாயிலில் ஒருவர் யு.ஏ.இ. சம்பிரதாயப்படி சந்தனப் புகைபிடித்து வரவேற்றார். அங்கு அவர்களுக்கு குளிர்பானம், சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. பின்னர் அவர்களது பொதிகளையும் கடவுச் சீட்டுக்களையும் கையில் கொடுத்தனர். இங்கும் நஜீப் ஹாஜியார் இமிக்ரேசனுக்குப் போகவில்லை. அவர்களே எல்லா வேலைகளையும் செய்து கொடுத்தார்கள்.

2006.10.09 நஜீப் ஹாஜியாரின் மகன் ரஹ்மத்துல்லாஹ் மருத்துவப் படிப்புக்காக சீனா தேசம் செல்வதால் நஜீப் ஹாஜியார் தனது மனைவி, மகன் ஹிதாயத்துல்லாஹ், மகள் ஆமினாவுடன் மாலையில் துபாய் விமான நிலையத்துக்குச் சென்றனர். அவர்களை இப்தாருக்காக ஒரு இலங்கைத் தம்பதியினர் அழைத்து இருந்த போதிலும் அவர்களால் உரிய நேரத்திற்கு அங்கு செல்ல முடியவில்லை. நஜீப் ஹாஜியாரின் வண்டி வாகனநெரிசலில் அகப்பட்டுக் கொண்டமையால் இந்நிலை ஏற்பட்டது. அந்த வேளையில் இப்தார் செய்வதற்கு வாகனத்தில் தண்ணீரோ எந்த வித உணவு வகைகளோ இருக்கவில்லை. அதான் சொன்ன பிறகும் நோன்பு திறக்க முடியாமல் அவர்கள் திண்டாடிய போது மூன்று வயது சிறுமியான ஆமினாவின் சிப்ஸை கொண்டு நோன்பு திறக்க வைத்தார்.

17-வது அன்று நோன்பைத் திறக்க தண்ணீர் கூட கிடைக்கவில்லை. அதேநேரம் அன்றைய தினம் பத்ரு யுத்த தினத்தை நினைவு படுத்தியது என்கிறார் நஜீப் ஹாஜியார். ஏனென்றால் இலங்கையின் வெலிப்பன்னை ஜும்மா பள்ளியில் வெலிப்பன்னை மக்கள் நோன்பு திறப்பதற்குரிய சகல வசதிகளையும் செய்து கொடுத்திருந்தார் நஜீப் ஹாஜியார். ஒரு ஊருக்கு நோன்பு திறப்பதற்காக ஏற்பாடு செய்து கொடுத்த அவருக்கு அவ்வேளை ஒரு சொட்டுத் தண்ணீர் கிடைக்காததும் இறைவனின் நாட்டமே என்று மனதைத் தேற்றிக் கொண்டார்.

## உழைப்பின் உன்னதம்.

2007.01.10 இல் நஜீப் ஹாஜியார் பாகிஸ்தான் பயணமானார். 2007.01.13 இல் நஜீப் ஹாஜியார் கராச்சியில் காரில் சென்று கொண்டிருந்த போது ஓரிடத்தில் சமிக்ஞ்சை விளக்கின் அருகில் வண்டி நிறுத்தப்பட்டது. அங்கு ஒரு காலை இழந்த ஒருவன் ஊன்றுகோலின் துணையுடன் நஜீப் ஹாஜியாரின் காரையும் இன்னும் சில கார்களையும் துடைத்துக் கொடுத்துவிட்டு அதற்கு சிறு கூலியைப் பெற்றுக் கொண்டான். அவனது உழைப்பின் உன்னதத்தை கண்டு வியந்து போனார் நஜீப் ஹாஜியார் அவர்கள்.

இன்னொருவன் சிறு குருவிகளைப் பிடித்து மக்களிடம் கொடுத்து அவற்றை பறக்கவிட்டு அதன் அழகை கண்டு களிக்கும்படி கூறி புதுமையான வியாபாரம் ஒன்றை செய்து கொண்டிருந்தான். தனது குடும்பத்தை வாழவைப்பதற்காக ஒவ்வொரு தனி மனிதனும் படும் கஷ்டங்களை எண்ணி வியந்து போனார் நஜீப் ஹாஜியார்.

## கிடைத்த வாய்ப்பு பொன்னானது.

2007.01.17 நக்ஷபந்தியா தரீக்கா கலீபாவின் உறவினர்களுடன் கராச்சியிலிருந்து சேவகன் ஷரீப் என்ற இடத்திற்கு நஜீப் ஹாஜியார் சென்றார். இன்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பு அவ்விடத்தில் வாழ்ந்த பெரியார்களின் கல்லறைகள் இருப்பதால் பாகிஸ்தானில் அவ்விடம் மிகவும் பிரசித்தமாய் இருந்தது. இன்று வரை 175 வருடங்களாக இங்கு வாழ்ந்து வந்த மகான்கள் ஒரே பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர் ஆன்மீகப் பெரியார்களின் வரிசையில் ஒருவர் பின் ஒருவராக புனிதமிகு ஆசனத்தில் அமர்ந்து வந்தனர். அவ்வறு ஆன்மீகப் பணி செய்து கொண்டு இருப்பவர்களில் இன்றைய ஆன்மீகப் பெரியார் டாக்டர் முஹம்மத் ஆதிப் அவர்களைச் சந்திக்கக் கிடைத்தமை பெரும் பெருமை எனக் கூறுகின்றார் நஜீப் ஹாஜியார்.

சுமார் 175 வருடங்களாக இந்த ஆன்மீக ஆசனத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் மகான்களின் வரிசையில் டாக்டர் முஹம்மது ஆதிப் இன்று ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வந்து அவரிடம் ஆசி பெற்றுச் செல்கின்றனர். அவர் வைத்தியராக இருந்த போதிலும் அவரது ஆன்மீக பரம்பரையிலேயே இறுதியாக இருந்த அவரது சிறிய தந்தைக்குப் பிறகு அப்பதவியை அலங்கரிக்க யாருமற்ற காரணத்தினால் அவரை அப்பணியைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு அவர்கள் பணித்தார்கள். ஏற்கனவே மார்க்கப் பற்றுடன் ஆன்மீகப் பணி புரிந்துகொண்டிருந்த டாக்டர் அவர்கள் அப்புனித ஆசனத்தில் அமர்ந்து 24 மணி நேரமும் தியானத்தில் ஆழ்ந்திருப்பதுடன் அவர்களைக் காண வருகின்ற நேசர்களுக்கு ஆன்மீக பயிற்சியும், போதனையும் அருளி வருகிறார். நக்ஷபந்திய தரீக்காக் கலீபாவின் உறவினர்களுடன் சென்றதால் நஜீப் ஹாஜியாரும் வரிசையில் நிக்காது அவரைச் சந்திப்பதற்கான அனுமதி கிடைத்தது. அவருடன் உரையாடும் பாக்கியத்தையும், அவருடைய பரக்கத்தையும் பெற்றுக் கொண்டார் நஜீப் ஹாஜியார்.

ஆம் டாக்டர் முஹம்மது ஆதிப் அவரது சிறிய தந்தை இறையடி சேர்ந்த பின்பு தனது வைத்தியத்துறையை உதறித் தள்ளிவிட்டு

அல்லாஹ்வுக்காக இவ்வாசனத்தில் அமர்ந்து அவரைத் தேடி வரும் இறை நேசர்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

## மருத்துவக் கல்விக்காக சீனா சென்றார்.

நஜீப் ஹாஜியாரின் புதல்வி பாகிஸ்தானில் மருத்துவக் கல்லூரியில் மருத்துவத் துறையில் கற்றுக் கொண்டிருக்கும் போது கராச்சியில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக கல்வி செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. அப்போது மகன் ரஹ்மத்துல்லாஹ் சீனா பல்கலைக்கழகம் ஒன்றில் தனது மேற்படிப்பை மேற்கொண்டு வந்ததால் மகள் ஹுஸ்னாவையும் அதே பல்கலைக்கழகத்தில் சேர்த்து விட்டால் வசதியாக இருக்கும் என்று அவர் கருதினார். அதனால் மகளை அங்கிருந்து விலக்கி சீனப் பல்கலைக்கழகத்தில் சேர்ப்பதற்கு முடிவு செய்தார்.

நஜீப் ஹாஜியார் 2007.10.16 இல் ஹுஸ்னாவையும் அழைத்துக் கொண்டு சீனா சென்றார். மறுநாள் பீஜிங் விமான நிலையத்தில் ரஹ்மத்துல்லாஹ் தனது தந்தையையும் சகோதரியையும் வரவேற்பதற்காக காத்திருந்தார். அன்று அவர்கள் ஹோட்டல் ஒன்றில் தங்கி அங்குள்ள கண்கவரும் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தனர்.

2007.10.18 ஆம் திகதியன்று 7 உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவரை பார்ப்பதற்காக மூவரும் சென்று வந்தனர்.

2007.10.19 இல் பீஜிங் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு வூஹான் எனும் மாகானத்தை வந்தடைந்தனர். அங்கிருந்த பல்கலைக்கழகத்திலேயே மருத்துவக் கல்லூரியும் அமைந்திருந்தது. மகளை சேர்ப்பதற்கான ஏற்பாடுகளை நஜீப் ஹாஜியார் தீவிரமாகச் செய்தார்.

மகள் ஏற்கனவே பாகிஸ்தான் மருத்துவக் கல்லூரியில் கல்வி கற்றிருந்ததனால் சீன மருத்துவக் கல்லூரியில் கல்வியை தொடர்வதற்கு அவர்களுக்கு மேலதிக விளக்கம் அளிக்க வேண்டி ஏற்பட்டது. பாகிஸ்தான் மருத்துவக் கல்லூரியில் அக்கால கட்டத்தில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்பட்டு விடுமுறை வழங்கப்பட்டுவந்ததனால் மகளின் கல்வி பாதிக்கப்பட்டதாகவும் அதே வேளை தனது மகன் சீனாவில் மருத்துவக் கல்லூரியில் பயில்வதனால் இருவரும் சேர்ந்து கற்பது வசதியாக இருக்கும் என்பதாலும் பிள்ளைகள் இருவரும் ஒரே இடத்தில் இருந்தால் அவர்களைப் பார்க்க வருவது இலகுவாக இருக்கும் என்பதாலும் தான் அங்கு தனது மகளைச் சேர்க்க விரும்புவதாக நிர்வாகத்தினருக்கு நஜீப் ஹாஜியார் விளக்கமளித்த பின்னரே மகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

பாகிஸ்தான் மருத்துவக் கல்லூரியை விட இது பன் மடங்கு விசாலமானதாக இருந்தது. இங்கு சுமார் 47000 மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். நூற்றுக்கும் அதிகமான பாடநெறிகள் கற்பிக்கப்பட்டதுடன் பல்வேறு பீடங்களும் பட்டப் பின் படிப்பின் பாடநெறிகளும் அங்கு காணப்பட்டன. அந்தப் பல்கலைக்கழகம் சுமார் 100 வருடங்களுக்கு முன் இஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் மாணவர்கள் அங்கு வந்து கல்வி கற்றனர். அங்கு அனுமதி பெறுவது மிகவும் கடினமாக இருந்தது. பல்வேறு விதிமுறைகள், கட்டுப்பாடுகளுக்கு கீழ் மாத்திரமே அனுமதி வழங்கப்படுகின்றது.

சீனப் பெருஞ்சுவரைப் பற்றி குறிப்பிடுகையில் இப்பெருஞ்சுவர் சுமார் 3000 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டு இன்றைக்கு 700 வருடங்களுக்கு முன்னர் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. 5000 கிலோமீற்றர்கள் நீளமுடைய இச்சுவர் பெரும் பாரங்கற்களால் கட்டப்படடிருந்ததோடு அப்பாராங்கற்கள் பொதுவாக மனிதனால் சுமக்க முடியாத அளவு பெரியதாகவும் இருந்தது. அவை பெரும் பெரும் மலை உச்சிகளில் இருந்து எடுத்து வரப்பட்டு ஒரே சீராக அடுக்கப்பட்டு கட்டப்பட்டிருந்தது. பார்ப்பதற்கு புதுமையாகவும் இருந்து. அதனை பார்ப்பதற்காக அவர்கள் சென்ற பகுதி அடர்ந்து செறிந்து வளர்ந்த வனாந்திர பகுதியாக இருந்தது. அக்காட்டு மரங்களின் இலைகள் எல்லாம் வண்ண வண்ண நிறங்களை கொண்டவைகளாகவும் அமைந்திருந்தன.

விண்வெளியிலிருந்து பூமியை நோக்கிப் பார்த்தால் சீனப் பெருஞ்சுவர் ஒரு நூலினால் வரையப்பட்ட கோடு மாதிரி தென்படும். அதிலும் விசேடமாக சந்திர மண்டலத்திலிருந்து பூமியை பார்த்தால் சீனப்பெருஞ்சுவர் மட்டுமே தென்படுவதாகவும் நஜீப் ஹாஜியாருக்கு தகவல் கிடைத்தது.

அதேபோல் சீன தேசத்தை பற்றி இன்னும் சொல்லப்போனால் உலக சனத்தொகையில் கூடுதலான மக்கள்தொகையைக் கொண்ட நாடுகளில் இரண்டாவது நாடாக கருதப்படும் சீனாவில் சுமார் 1411 மில்லியன் மக்கள் காணப்படுகின்றனர். முதலாமிடம் பிடித்த நாடான இந்தியாவில் 1438 மில்லியன் மக்கள் காணப்படுகின்றனர்.

சீனச் சந்தையில் மீன், இறால், நண்டு, ஆமை, தவளை, பாம்பு போன்றவை நீர் தொட்டிகளில் இடப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. கொள்வனவு செய்பவர்களுக்கு தேவையானவற்றை உடனே அதிலிருந்து பிடித்து வெட்டி துப்புரவு

செய்து கொடுக்கின்றனர். அத்துடன் பன்றி, நாய், மாட்டிறைச்சி என்பவையும் வெட்டி தொங்கவிட்டு வைக்கப்பட்டுள்ளன. நுகர்வோர்கள் விரும்பியபடி வாங்கக்கூடிய விதத்தில் அவற்றை வெவ்வேறாக வைத்துள்ளனர். விசேடமாக முஸ்லிம் வாடிக்கையாளர்கள் இலகுவில் அடையாளங் காணக்கூடிய விதத்தில் இஸ்லாமிய முறைப்படி அறுக்கப்பட்டவை என்பதை தெரியப்படுத்தும் விதமாக ஹலால் பெயர் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு பஸ் சாரதிகள் அனேகமாக பெண்களாகவே காணப்படுகின்றனர். பொது இடங்களில் அனேகமாக ஆண்களை விடப் பெண்களே அதிகமாக இருக்கின்றனர். சீனாவில் ஆண்களை விடப் பெண்களின் விகிதம் அதிகமாக இருப்பது இதற்கான காரணமாக இருக்கலாம். நாமிருவர் நமக்கிருவர் என்பதற்கு இணங்க சீனத் தம்பதிகளை இரண்டு குழந்தைகளுக்கு மட்டுப்படுத்தும் குடும்பக் கட்டுப்பாட்டுத்திட்டம் அரசாங்கத்தினால் வலியுறுத்தப்பட்டு வருகிறது. முதலாவது பிள்ளை ஆணாக இருந்தால் அத்துடன் கருத்தரிப்பதை நிறுத்த வேண்டும் எனவும் அப்படியில்லாமல் பெண் பிள்ளையாக இருந்தால் இன்னும் ஒரு பிள்ளையை பெற்றெடுக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுவாக இங்கு சைக்கிளில் பயணம் செய்வதே அனேகரின் வழக்கத்தில் உள்ளது. பெரும் பதவிகளில் வகிப்போரும், சாதாரணமானவர்களும் சைக்கில்களிலேயே பயணம் செய்கின்றனர். இங்கு நேரத்தை வீணாக்குவோர்களை காண அருமையாகவே உள்ளது. யாரும் எந்நேரமும் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பார்கள். அதே நேரம் இங்கு பிச்சை எடுப்பதும் கொடுப்பதும் தண்டனைக்குரிய குற்றமாகும். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடு கிடையாது. பஸ்ஸில் கூட குப்பை தொட்டிகளை வைத்துள்ளார்கள். அத்துடன் 80 வயதுக்கு மேற்பட்டோர் கூட ஊன்று கோல் இன்றி பாதைகளில் சகஜமாக நடமாடுவதைக் காண முடிகிறது. இங்கு நஜீப் ஹாஜியார் மற்றும் பிள்ளைகள் ஓர் அழகான ஆற்றங்கரைக்குச் சென்றார்கள். அதில் கப்பலில் பிரயாணம் செய்தார்கள். அவ்வாறான ஒரு நதியினை இலங்கையில் காணக் கிடைக்கவில்லை என கூறினார் நஜீப் ஹாஜியார்.

## திருடனைக் கண்டு பிடித்த தீர்க்கதரிசி.

2008.02.04 ஆம் திகதி தான் வேலை செய்யும் ஸ்தாபனத்திலேயே சதிசெய்து திருடிவிட்டு பின் தானே போலீஸில் போய் முறைப்பாடு செய்திருந்தார் ஒருவர். இந்த விடயத்தில் உண்மையை அறிய முடியாமல் போலீசார் தடுமாறி போயினர். அந்த வழக்கைத் தீர்த்து

வைப்பதற்காக நஜீப் ஹாஜியார் துணிந்து காரியத்தில் இறங்கினார். ஆம், திருடியவரின் நடவடிக்கைகளை உன்னிப்பாக நோட்டமிட்ட நஜீப் ஹாஜியார் அவரேதான் திட்டமிட்டுத் திருடியிருக்கிறார் என ஆதாரங்களோடு போலீசாருக்கு தெரியப்படுத்தினார். நஜீப் ஹாஜியாரின் இந்த சாதுர்யமான செயலைப் பாராட்டி போலீஸ் நிலையம் அவருக்கு சன்மானமாக ஒரு பணத்தொகையை வழங்கியது. அத்துடன் பாராட்டுச் சான்றிதழ் ஒன்றும் வழங்கப்பட்டது.

## குடும்பத்துடன் ஒரு சுற்றுலா.

2008.12.04 இல் நஜீப் ஹாஜியார் மனைவி மக்களுடன் அவரின் வாகனத்திலேயே தரை மார்க்கமாக ஓமானுக்கு சுற்றுலா சென்றார். அங்கு நஜீப் ஹாஜியாருடன் பணிபுரியும் பெண்ணின் வீட்டில் பகல் போசன விருந்து வழங்கப்பட்டது. பின்பு அவர்கள் ஓமானின் தலைநகரமான மஸ்கட் சென்றனர். அங்கு முக்கியமான பல இடங்களை சுற்றிப் பார்த்துவிட்டு அங்கேயே இரவு தங்கினார்கள். மறுநாள் இன்னும் சில ஊர்களுக்கும் சென்று வேறு சில இடங்களையும் பார்வையிட்டனர். ஓரிடத்தில் செய்கு அஹமது கலீபாவால் கட்டப்பட்டிருந்த பெரியதொரு பள்ளிவாசலைக் கண்ணுற்றனர். அத்தோடு அன்றைய தினம் மாலை யு.ஏ.இ. திரும்பினர்.

## தொடர்பாடல் கருத்தரங்கில் நஜீப் ஹாஜியார்.

2009.10.25 முதல் ஒரு வாரத்துக்கு போலீஸ் உயர் பீடத்தால் ஒழுங்கு செய்யப்படடிருந்த பொதுமக்களும் தொடர்பாடலும், பொதுமக்களை எப்படி அணுகுவது நல்ல முறையில் கருத்துப் பரிமாறுவது என்ற தொனியில் இடம்பெற்ற கருத்தரங்கில் நஜீப் ஹாஜியாரும் கலந்து கொண்டார்.

## உண்மை ஒருபோதும் பொய்யாவதில்லை.

2009.11.02 அன்று அந்த சோகமான செய்தி நஜீப் ஹாஜியாரின் செவிகளில் வந்து முட்டியது. அதைக் கேட்டதும் அவர் அதிர்ந்து போனார். ஆம் நஜீப் ஹாஜியாருடன் பணிபுரிந்த அரபு நாட்டைச் சேர்ந்த நண்பன் மரணமடைந்திருந்தார். நஜீப் ஹாஜியாருக்கு மிகவும் கவலையாக இருந்தது. உடனே அவர் நிலையத்தின் அனுமதியோடு சுமார் 10,000 திர்ஹங்களைச் சேர்த்துக்கொண்டு மரணித்த நண்பரின் இல்லத்துக்கு சென்றார். அங்கு இத்தாவில் இருக்கும் அவரது மனைவி மறைவில் இருந்து கொண்டு கையை நீட்டியதும் கையில்

ஒரு துணியை போட்டு துணியின் மேல் பக்குவமாக பணத்தை வைத்தார் நஜீப் ஹாஜியார். இன்னொரு நாள் அவர் தனது மனைவியையும் கூட்டிக்கொண்டு போய் அனுதாபத்தைத் தெரிவித்தார்.

சில மாதங்கள் மின்னல் வேகத்தில் மறைந்தன. என்ன ஆச்சரியம். நஜீப் ஹாஜியாரை அந்தச் செய்தி அதிர வைத்தது. அதாவது மரணித்ததாகச் சொல்லப்பட்ட நண்பர் மரணிக்கவில்லையென்றும் அவரது நாட்டில் உயிருடன் இருப்பதாகவும் நஜீப் ஹாஜியாருக்கு அறியக் கிடைத்தது இந்தப் பொய்யான செய்தியை அவருக்குச் சொன்ன நண்பனின் மகன் தலை மறைவாகியிருந்தான். இந்த விடயம் நஜீப் ஹாஜியாரை வேதனையடையச் செய்து.

அந்த நபருக்கு 4 மனைவிகள். அவர்களில் ஒருவருக்குத்தான் நஜீப் ஹாஜியார் பணத்தை கொடுத்துள்ளார். அது ஒரு மனைவியின் மகன் ஆடிய நாடகமென நஜீப் ஹாஜியாருக்கு அறியக் கிடைத்தது.

*பொய் ஒருபோதும் நிலைப்பதில்லை, உண்மை ஒருபோதும் பொய்யாவதும் இல்லை. ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள்.*

சமீபத்தில் துபாயில் நிறுவப்பட்ட உலகத்திலேயே மிக உயர்ந்த மாடிக்கட்டடமான “புரூஜ் கலீபா”வைப் பார்வையிட நஜீப் ஹாஜியார் 2010.02.05 இல் குடும்பத்தோடு அங்கு சென்றார். இக்கட்டிடத்தின் உயரம் 828 மீற்றர்கள் ஆகும். யு.ஏ.இ. யின் உயர்ந்த கட்டிடம் இதுவாகும்.

2010.06.21 ஆம் திகதி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் இறுதியாண்டு பரீட்சைக்கு தோற்றும் மாணவிகளுக்கான செய்முறைப் பயிற்சிப் பரீட்சை (Practical Test) நடைபெறுவிருந்தது. இப்பரீட்சையை நடாத்துவதற்காக ஐரோப்பிய பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பரீட்சகர்கள் அங்கு வருகைதர இருந்தனர். இந்தப் பரீட்சையில் நடைபெற இருந்த ஒரு செயன்முறைப் பரிசோதையில் பங்கேற்க நஜீப் ஹாஜியார் விருப்பம் தெரிவித்ததனால் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதேவேளை வைத்தியபீட மாணவிகள் சிறந்த முறையில் அவரைப் பரிசோதித்ததன் மூலம் (Practical Test) யில் பங்கேற்று புள்ளிகள் பெற்றிருந்தனர். இவ்விடயத்தில் நஜீப் ஹாஜியார் அவர்கள் ஒத்துழைப்பு வழங்கியதால் அவருக்கு மருத்துவ பீடத்திலிருந்து சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டது.

## நினைவின் நிழல்கள்.

2011.01.12 ஆம் திகதி நாஜீப் ஹாஜியாரின் போலீஸ் நிலைய முகாமையாளர் முபாரக் செய்ப் என்பவர் கருத்தரங்கு மண்டபத்தில் அனைத்து போலீஸ் அதிகாரிகளின் முன்னிலையில் நஜீப் ஹாஜியாரின் சேவையைப் பாராட்டிப் பேசி சான்றிதழ் ஒன்றும் வழங்கினார்.

2011.07.06 ஆம் திகதி இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கை தூதரகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்திற்கு நஜீப் ஹாஜியாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் மனைவி மக்களுடன் சென்றார். அவ்வைபவத்தில் உயர் கல்வி அமைச்சர் ஹமீத் கிதாமி உட்பட்ட பல நாட்டு தூதுவர்களுடன் அவர் கலந்து கொண்டார்.

இக்கால எல்லைக்குள்தான் நஜீப் ஹாஜியாரின் மகன் நிஹ்மதுல்லாஹ் அபுதாபி எரிபொருள் தலைமையகத்தில் முகாமையாளரின் செயலாளராக கடமை ஆற்றினார். 2011.03.26 இல் அவரது மகள் ஆமினா மகன் நிஹ்மதுல்லாஹ்வுடன் இந்திய சமூக கலாச்சார மண்டபத்திற்குச் சென்றார். அங்கு ஆசிய நாடுகளின் சமூக கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றன. பாகிஸ்தான், இலங்கை தூதுவர்களும் அங்கு சமூகமளித்திருந்தனர்.

## சிந்திக்க வைத்த சீனா பயணம்.

2017.06.21 ஆம் நாள் நஜீப் ஹாஜியார் குடும்பத்துடன் சீனாவுக்கு பயணமானார். அங்கே விமான நிலையத்தில் புதல்வி ஹுஸ்னாவும் புதல்வன் ரஹ்மத்துல்லாஹ்வும் தமது பெற்றோர், சகோதரர்களை வரவேற்று அழைத்துச் செல்ல வந்திருந்தனர்.

2011.06.25 அன்று சீனாவின் பெரிய ஆறொன்றில் நஜீப் ஹாஜியாரின் குடும்பத்தார் கப்பலில் பிரயாணம் செய்தனர். அன்றிரவு பல்கலைக்கழக வைத்தியசாலையில் சீன நாட்டு விசேட வைத்தியர் ஒருவர் பிரபலமான ஹோட்டல் ஒன்றில் நஜீப் ஹாஜியாரின் குடும்பத்திற்கு இராப்போசன விருந்து வழங்கினார். அப்போது வைத்தியரின் தாய் (80 வயது) தந்தை (85 வயது) இருவரும் விருந்தில் கலந்து கொண்டிருந்தனர். அந்த விருந்துபசாரத்தில் ஆட்டிறைச்சி, காய்கறிகள் பச்சையாகவே மேசையில் வைக்கப்பட்டிருந்தன.

அத்துடன் கொதித்துக் கொண்டிருக்கும் நீரும் மேசையில் காணப்பட்டது. நறுக்கப்பட்ட இறைச்சியும் காய்கறிகளையும் தத்தமது

தேவைக்கு ஏற்ப அவரவர்கள் கொதித்துக் கொண்டிருக்கும் நீரில் சில நிமிடங்கள் வேக வைத்துவிட்டு பின்னர் சட்னியுடன் சாப்பிட்டனர். குளிர்பானங்களும் அங்கு இருந்தன. அரிசியினாலோ மாவினாலோ செய்யப்பட்ட எந்த ஒரு உணவுவகையும் அங்கு இருக்கவில்லை. அந்த உணவு முறை உடல் ஆரோக்கியத்திற்கு உகந்ததென அந்த வைத்தியர் விளக்கினார்.

விருந்து முடிவடைந்து அவர்கள் தத்தமது வாகனங்களில் ஏறிச் சென்றனர். வைத்தியரின் பெற்றோர் மட்டும் அவர்களது வீட்டுக்கு நடந்து செல்லலாயினர். சுமார் நான்கு கிலோமீட்டர்கள் நடந்து செல்ல வேண்டுமாம். அதற்கான காரணத்தை அவர்களிடம் கேட்ட போது அவர்கள் அதிகமாக இன்று சாப்பிட்டதால் நடந்து செல்வது செரிமானத்திற்கு உதவும் என்று சொன்னார்கள். அதனால்தான் நடந்து செல்வதாக பதிலளித்தார்கள். நஜீப் ஹாஜியார் யு.ஏ.இ. யிற்குச் சென்றதும் கலீபா சுவைதியின் புதல்வர் காலிதிடம் விடயத்தைச் சொன்னார். அதற்கு அவர் உங்களுக்கு வெட்கம் இல்லையா? வயோதிபர்களான அவர்கள் நடந்து சென்றிருக்கும் போது நீங்கள் நடுத்தர வயதாகி இருந்தும் வாகனத்தில் சென்றிருக்கிறீர்கள். இதனால் நீங்கள் விரைவில் நோயாளியாகுவீர்கள் எனக் கூறிச் சிரித்தார். அதற்கு நஜீப் ஹாஜியார் தன்னுடன் மனைவியும் சிறிய மகள் ஆமினாவும் இருந்ததால் தன்னால் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டது என்று சொல்லிச் சமாளித்தார். இது ஒரு நல்ல படிப்பினை என்பதால் இச்சம்பவத்தை பகிர்ந்து கொண்டேன் என நஜீப் ஹாஜியார் நூலாசிரியரிடம் சொன்னார்.

## பிள்ளைகளின் மருத்துவ பட்டம்
## மகிழ்வை தந்த கட்டம்.

தாம் தூக்கி வளர்த்த பிள்ளைகள் படித்து டாக்டராக பட்டம் பெற்று வெளியேறுவது என்றால் எந்த பெற்றோருக்குத்தான் சந்தோசம் இருக்காது? அந்த இனிய நாள் 2011.06.23 ஆம் திகதி மலர்ந்தது. மகள் ஹுஸ்னாவும் மகன் ரஹ்மத்துல்லாஹ்வும் MBBS பட்டம் பெற்று மருத்துவர்களாக வெளியானார்கள். பிள்ளைகளின் இந்த சாதனையைக் கண்ட நஜீப் ஹாஜியாரும் அவரது மனைவியும் மனம் குளிர்ந்து பனிக்கட்டிபோல் ஆனார்கள்.

## யாழ்ப்பாணமும் நல்லவை நடந்ததும்.

2011.08.19 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் மனைவி மக்களான ஹுஸ்னா, ரஹ்மதுல்லாஹ், மனைவியின் சகோதரியின் மகள் யஸீரா ஆகியோர் யாழ்ப்பாணம் பயணித்தனர். அது நோன்பு காலமாக

இருந்ததனால் அன்று அவர்கள் குருநாகலையில் நோன்பு திறந்து விட்டு மாத்தளை கலேவெலையில் தராவீஹ் தொழுதார்கள். ஸஹர் வேளையாகையில் யாழ்ப்பாணத்தை அடைந்து அங்கு ஒரு முஸ்லிம் ஹோட்டலில் சஹரை முடித்துக் கொண்டனர். பின்னர் தாம் வாடகைக்கு எடுத்திருந்த வீட்டுக்குச் சென்று ஓய்வெடுத்தார்கள்.
மதியம் தாண்டி யாழ்ப்பாணத்தில் பல இடங்களைப் பார்வையிடச் சென்றார்கள்.

நைனா தீவுக்குச் சென்று முஸ்லிம்களின் நிலைமை பற்றி கண்டறிந்தனர். ஒரு பள்ளிவாசலில் நோன்பு திறப்பதற்காக நஜீப் ஹாஜியாரின் செலவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நோன்புக் கஞ்சி கொடுப்பதில் நஜீப் ஹாஜியாரும் பங்கேற்றார். பிறகு யாழ்ப்பாணம் கோட்டை, நூல் நிலையம் போன்ற பிரபல இடங்களையும் பார்வையிடச் சென்றனர். மீள்குடியேறிய முஸ்லிம் குடும்பங்களை சந்தித்து அவர்களில் வசதியற்றவர்களுக்கு தன்னால் இயன்ற பண உதவிகளையும் நஜீப் ஹாஜியார் செய்தார்.

2011.08.22 இல் காலை யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு திருகோணமலை சென்றடைந்தனர். அங்குள்ள இயற்கை துறைமுகத்தை பார்த்துவிட்டு திருகோணமலைக்கு அண்மையில் இருக்கும் ஓர் ஊரில் சேகு அஹமது கலீபாவின் வீட்டில் பணிபுரிந்த பெண்மணிக்கு கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீட்டையும் பார்வையிடுவதற்காகச் சென்றனர். திரும்பும் வழியில் தம்புள்ளையில் நோன்பு திறந்தார்கள். அப்படியே வரும் வழியில் குருநாகலையில் தராவீஹ் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டு நள்ளிரவில் தர்கா நகரை வந்தடைந்தனர்.

### பொழுதைக் கழித்த இனிய நாள்.

2011.12.29 இல் நஜீப் ஹாஜியாரின் மகன் நிஹ்மத்துல்லாஹ் பணிபுரியும் கம்பனியின் உயர்பீட உத்தரவுடன் எரிபொருள் எடுக்கும் இடத்திற்கு மகனுடன் நஜீப் ஹாஜியாரும் சென்று இருந்தார். அவர்கள் அங்கு தங்குவதற்காக நட்சத்திர வசதியுடன் ஒரு அழகான வீடு வழங்கப்பட்டிருந்தது. மூன்று வேளை உணவுகளும் கிடைத்தன. மறுநாள் காலை தல்மா எனும் தீவுக்கு கப்பலில் அவர்கள் சென்றனர். சுமார் ஒன்றரை மணித்தியாலப் பயணத்தின் பின்பே அவர்கள் அத்தீவை அடைந்தார்கள். அங்கிருந்த ஒரு அழகிய பூங்காவனத்தில் அன்றைய பொழுதைக் கழித்தார்கள். மீனைத் தீயிலிட்டு சுட்டுச் சாப்பிட்டனர். இது அவர்களுக்கு புது அனுவபத்தைக் கொடுத்தது. மாலை வேளையில் கப்பல் மூலமாகவே அவர்கள் தங்குமிடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

## அமைச்சரின் வருகையும் மகனின் MBA பட்டப்படிப்பும்.

இலங்கையின் 64வது சுதந்திர தினத்தை முன்னிட்டு 2012.02.06 திகதி லீமெரீடியன் ஹோட்டலில் ஏற்பாடாகியிருந்த வைபவத்தில் கலந்து கொள்வதற்காக துபாய் கவுன்சிலர் ஜெனரல் அப்துல் ரஹீம் (கல்முனை) அவர்களின் அழைப்பின் பெயரில் நஜீப் ஹாஜியார் தனது மனைவி, மகன் ஹிதாயத்துல்லாஹ், மகள் ஆமினா ஆகியோருடன் சென்றிருந்தார். அன்றைய இராப் போசன விருந்தில் அவர்கள் கலந்து கொண்டனர். அங்கு யு.ஏ.இ. யின் கலாச்சார அமைச்சர் அப்துர் ரஹ்மான் முஹம்மது உவைஸ் அவர்களும் வருகை தந்திருந்தார்.

2012.02.19 முதல் நிஹ்மதுல்லாஹ் அபுதாபி பல்கலைக்கழகத்தில் MBA படிப்பை ஆரம்பித்தார்.

2012.08.24 அன்று டாக்டர் ஹுஸ்னாவின் நிக்காஹ் வைபவம் தர்கா நகர் மீரிப்பன்னையில் மணமகன் முஹம்மத் காதர் வீட்டில் நடைபெற்றது. நிக்காஹ்வை முடித்த கையோடு நஜீப் ஹாஜியாரும் நிஹ்மதுல்லாஹ்வும் யு.ஏ.இ. திரும்பினர்.

## நறுமணம் வீசிய திருமணம்.

2012.12.21 ஆம் திகதியன்று நஜீப் ஹாஜியாரின் மகள் ஹுஸ்ணாவின் திருமணம் அல்லாஹ்வின் கிருபையால் பேருவளை ஓசன் கிராண்ட் விருந்துபசார மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மார்க்கார், பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். அஸ்லம், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், உலமாக்கள், பிரபல வர்த்தகர்கள், அரசியல்வாதிகள், ஊர்மக்கள், பிரமுகர்கள் என ஆயிரக்கணக்காவர்கள் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வந்து வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்.

இக்கால எல்லைக்குள் மகன் டாக்டர் ரஹ்மத்துல்லாஹ் 2011 இறுதிப்பகுதி முதல் 2012 இறுதி வரையிலான ஒரு வருட காலம் சீனாவில் அவர் கற்றுக் கொண்ட அதே பல்கலைக்கழக வைத்தியசாலையில் செய்முறை வைத்தியப் பயிற்சியாக சென்று வந்தார்.

*நம்மை தேடும் அளவிற்கு ஒரு உறவு கிடைத்தால் அது வரம் அல்ல அது உனக்கு சொந்தமான இன்னொரு உயிர்*

## நிகழ்ந்த சில நிகழ்வுகள்

2013.02.27 இல் நஜீப் ஹாஜியார் மகள் டாக்டர் ஹுஸ்னாவும் மகன் டாக்டர் ரஹ்மத்துல்லாஹ்வும் இன்னும் குடும்ப அங்கத்தவர்களும் மகன் ரஹ்மத்துல்லாஹ்வின் திருமணப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளும் விதமாக தர்கா நகர் சீ.எம். ஹமீத் மரிக்காரின் பேத்தியின் மகனான அல்ஹாஜ் ஏ.ஜே.எம். அக்பர் மாஸ்டர் வீடு சென்று அவர்களுடன் கதைத்ததோடு அக்பர் மாஸ்டரின் மகளை பெண் பார்த்தார்கள். அக்பர் மாஸ்டரின் தாயாரின் தகப்பனார் சகரியா பேருவளை புஹாரித் தக்கியா செய்கு அப்துஸ் சமி ஆலிம் அவர்கள் தாயின் சகோதரராவார்.

2013.03.10 இல் மகன் ஹிதாயத்துல்லாஹ் பெட்ரோல் கூட்டுத்தாபனத்தில் எரிபொருள் பற்றி டிப்ளோமா பட்டம் படிப்பை மேற்கொள்வதற்காக ஆயத்தமானர். மூன்றரை வருடப் படிப்பை பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றதால் இவர் இரண்டு வருடங்களாக்கிக் கொண்டார். இரண்டு வருடங்களுக்குப் பின் இன்ஷா அல்லாஹ் பெட்ரோல் கூட்டுத்தாபனத்தில் வேலை வாய்ப்புப் பெறுவார். 2013.05.12 யில் அபுதாபி போலீஸ் மேலிட உத்தரவின் கீழ் அபுதாபி கிரிஸ்டல் ஹோட்டலில் ஒரு கருத்தரங்கில் அந்த வாரம் முழுதும் கலந்து கொண்டார் நஜீப் ஹாஜியார். அங்கு பிரித்தானிய பெண் போலீஸ் அதிகாரி ஒருவர் விரிவுரையாற்றினார்.

2013.05.20 யில் மகன் டாக்டர் ரஹ்மத்துல்லாவுக்கு சீன நாட்டு அரசாங்கத்தின் புலமைப் பரிசில் கிடைத்தது. மூன்றாண்டு காலம் சத்திர சிகிச்சை மேற்படிப்புக்காக அனுமதி கடிதம் கிடைத்தது. செப்டம்பர் மாதம் முதல் இவரது மேற்படிப்பு சீனாவில் தொடர்ந்தது.

2013.06.01 யில் மகன் நிஹ்மதுல்லாஹ் அபூதாபி சர்வ கலாசாலையில் MBA படிப்பை முடித்தார். எல்லா பாடங்களிலும் “ஏ”தர சித்தி பெற்றார்.

2013.06.02 இல் நஜீப் ஹாஜியார் அபுதாபியில் ரொக்கி போட்டி என்னும் ஹோட்டலில் செவிப்புலன் அற்றவர்களின் பாஷை பற்றிய ஒரு கருத்தரங்கில் ஒரு வாரமாக கலந்து கொண்டார். அமெரிக்க நாட்டுப் பெண் ஒருவர் விரிவுரையாளராக இருந்தார்.

*உடைந்து போனாலும் சில நடந்த நிகழ்வுகளை மட்டும் காட்டத்*
*தவறியதில்லை கண்ணாடி.*

## இருமனம் இணைந்த திருமணம்

நஜீப் ஹாஜியாரின் மூத்த புதல்வர் நிஹ்மதுல்லாஹ்வின் திருமணம் 2013.08.17 ஆம் திகதி வெகு விமர்சையாக நடைபெற்றது. ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியரும் புகழ்பெற்ற சி.எம். ஹமித் ஹாஜியாரின் வாரிசுமான தர்கா நகரை பிறப்பிடமாகக் கொண்ட அக்பர் ஆசிரியரின் புதல்வி அஸீஸாவுக்கும், நிஹ்மத்துல்லாஹ்வுக்கும் புதுமணம் வீசும் திருமணம் இனிதே நடைபெற்றது. இது நஜீப் ஹாஜியார் அவர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திய மற்றுமொரு தருணம் ஆகும்.

*இருமனம் இணைந்த திருமண வாழ்வில் இடர் வந்து சூழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.*

## புதல்வரும் புதல்வியும் MBBS பட்டம்.

நஜீப் ஹாஜியாரின் இரண்டாவது மகன் டாக்டர் ரஹ்மத்துல்லாஹ்வும் மகள் டாக்டர் ஹுஸ்னாவும் 2011 ஆம் ஆண்டு MBBS டாக்டர் பட்டம் பெற்று சீன பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியிருந்தார்கள். டாக்டர் ரஹ்மத்துல்லாஹ் சீனாவின் ஒரு மாகாணமான, வூகானில் ஏற்கனவே படித்து பட்டம் பெற்ற பல்கலைக்கழகத்தில் சத்திர சிகிச்சை நிபுணராகக் கற்பதற்கு புலமைப்பரிசில் பெற்றிருந்தார். ஆகையால் அவர் அதற்குரிய பாடநெறியை தொடர்ந்தும் மேற்கொண்டார். இதனால் நஜீப் ஹாஜியார் அவர்கள் சந்தோசத்தின் உச்சிக்கே சென்றார். பிள்ளைகள் படித்து நல்ல நிலைக்கு வரும்போது பெற்றோரின் மனம் குளிராதா என்ன? டாக்டர் ரஹ்மத்துல்லாஹ்வின் சிறப்புக் கற்கை நெறி முடிவடைந்து அவரின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக நஜீப் ஹாஜியார் 25 .10. 2016 அன்று மூன்றாவது முறையாக சீன நாட்டுக்குப் பயணமானார்.

*யா அல்லாஹ் எங்களுக்கு வாழ்க்கையில் எவ்வளவு மகிழ்ச்சியையும் பரக்கத்தையும் நிம்மதியையும் அமைதியையும் உனது அருட்கொடைகளையும் நீ தந்தாயோ அதை விட பல மடங்கு அதிகமாக எங்கள் குழந்தைகளுக்கு தந்தருள்வாயாக என்று பிரார்த்தனை புரிய வேண்டும்.*

## மூன்றாவது மகன் ஹிதாயதுல்லாஹ்வின் முத்தான திருமணம்.

நஜீப் ராஜியாரின் முன்றாவது புதல்வர் ஹிதாயதுல்லாஹ்வின் திருமணம் 15.02.2017 ஆம் திகதி இனிதே நடைபெற்றது. நஜீப் ஹாஜியாரின் தாயாரின் உறவில் பூத்த பிரபல நகை வியாபாரியான

இல்லியாஸ் ஹாஜியாரின் புதல்வி இஸ்மாவை துணைவியாக கரம் பற்றினார் ஹிதாயதுல்லாஹ்.

இத் திருமண வைபவம் காலஞ்சென்ற ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி, அலுவலக முகாமையாளர் கௌரவ ஹமீஸ் புத்தி அவர்களும் தர்கா நகர் தெருவுப் பள்ளியை கட்டி முடிக்க பண உதவி புரிந்த முன்னாள் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதியின் தனிப் பிரதிநிதியான கௌரவ அஹமட் கலீபா அல் சுவைதியின் பேரனாகிய உமர் முஹமட் அவர்களும் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த ஆசிம் இன்னும் அம்மார் முஹம்மத் அஹம்மது அப்துல் காதர் ஆகியோருடன் இன்னும் மக்கள் வெள்ளத்திற்கு மத்தியில் கோலாகலமாக இனிதே நடை பெற்றது.

*திருமணம் முடிக்க எல்லோராலும் முடியும் ஒரு மனைவியையோ கணவனையோ வெல்ல அவர்களின் நல்ல மனசாலேயே முடியும்.*

## 33 வருடங்களாக ஓயாது சுழன்றவர் ஓய்வு பெற்றார்.

கடந்த 33 வருடங்களாக நீதி மன்றங்களிலும். பொலிஸ் நிலையங்களிலும் ஐந்து பாஷைகளை அரபியில் உடனுக்குடன் மொழி பெயர்த்து சேவையாற்றிய நஜீப் ஹாஜியார் அவர்கள் 01.07.2018 யில் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். அவர் தனது சேவை காலங்களில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் பற்றித் தன் கையால் எழுதிய பிரதியை ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைநகர் அபுதாபி பொலிஸ் மாஅதிபர் அலுவலகத்தில் ஒப்படைத்தார்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம், உர்து, மலையாளம் போன்ற 5 பாஷைகளை அரபியில் மொழி பெயர்க்கும் ஆற்றலைத் தன்னகத்தே கொண்டிருந்த காரணத்தினால் இப்பெறுமதிமிக்க பதவிக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தினால் நஜீப் ஹாஜியார் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது நிதர்சனமான உண்மை.

*ஓயாது சுழலும் ஒரு மனிதன் என்றால் என்றாவது ஒருநாள் ஓய்வு பெற்று தான் ஆக வேண்டும்.*

## ஓய்வு பெற்ற பின்னர் முதல் பயணம் லண்டன்.

நஜீப் ஹாஜியார் அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் முதன் முதலில் ஐக்கிய இராச்சியத்துக்கு விஜயம் செய்ய வேண்டுமென நினைத்தார்.

03.07-2016 யில் அவர் லண்டன் பயணமானார். Heathrow விமான நிலையத்தை வந்தடைந்ததும் கௌரவ அஹமத் கலீபா சுவைதி அவர்களின் தூதுவர் நஜீப் ஹாஜியாரை வரவேற்று அஹமத் கலீபா சுவைதி அவர்களின் தங்குமிடத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவரின் புதல்வர்கள் காலிதும் கலபும் அன்போடு அவரை வரவேற்று உபசரித்தனர். நஜீப் நாஜியார் அவர்கள் 04.07.2018 அன்று வண்டனில் பல இடங்களைப் பார்வையிட்டார். பின்னர் அஹ்மத் கலீபாவுடனும் அவர்களின் புதல்வர்களான மொஹம்மதும், காலிதும், இன்னும் ஜோர்தான் நாட்டைச் சேர்ந்த மஹ்மூத் என்பவருடனும் லண்டன் மாநகரில் புகழ்பெற்று விலங்கும் பூங்காவான Park Regent (ரீஜண்ட் பார்க்) இற்கு விஜயம் செய்தார்.

அஹ்மத் கலீபாவும் அவரது மகன்மார்களும் தினமும் உடற் பயிற்சிக்காக அங்கு செல்வது வழக்கமாகும்.

பின்னர் தர்கா நகரிலிருந்து சென்று குடியுரிமை பெற்று லண்டனில் வசிக்கும் ஊர்வாசிகளின் இல்லங்களுக்குச் சென்று அவர்களின் உள்ளங் குளிர்ந்த உபசரிப்புகளைப் பெற்றுக் கொண்டார். ஒரு நாள் எலிஸபத் மகாராணியின் உத்தியோகபூர்வ இல்லமான பெகிங்ஹாம் மாளிகையையும் சென்று பார்வையிட்டார்.

அன்றைய தினம் மெழுகு அருங்காட்சியகம் சென்று எலிஸபத் மகாராணி முதல் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் வரை உலகில் புகழ் பூத்தவர்களின் உருவச்சிலைகள் உயிர்ப்புத் தன்மையுடன் அமைக்கப்பட்டிருக்கும் விதத்தைக் கண்டுகளித்தார்.

இன்னொருநாள் லண்டன் நகரிலிருந்து லெஸ்டர் எனும் நகரை சென்றடைந்தார். அங்கு தர்கா நகர் மற்றும் இலங்கையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்களும் வசித்து வருகிறார்கள். இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருந்து அவர்களின் அன்பான உபசரிப்பைப் பெற்றுக் கொண்டார். பின்னர் மீண்டும் அவர் லண்டன் திரும்பினார். லண்டனில் வசிக்கும் தினங்களில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் பிரதி ஜனாதிபதியும், பிரதமருமான துபாய் ஆளுனர் முஹம்மத் பின் ராஷித் அவர்களையும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் அஜ்மான் ஆளுனருமான ஹுமைத் ராஷித் அவர்களையும் அஹமது சுவைதி அவர்களின் இல்லத்தில் நஜீப் ஹாஜியார் அவர்கள் சந்திக்கக் கிடைத்தமை அதிஷ்டமாக அமைந்தது.

இந்நாட்களில் வண்டன் நகரில் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தது மட்டுமல்லாமல் திறக்கும் பாலம் (London tower bridge) உள்ள இடத்துக்கும் சென்று கண்டு களித்தமையால் அது பரவசமூட்டிய பயணமாக அமைந்தது

*உறுதிக்கு உதாரணம் என்ற போதும் மோதும் தொடர் அலைகள் உருமாறித்தான் போகின்றன கடற்பாறைகள்.*

## பயணங்கள் முடியவில்லை.

லண்டன் பயணத்தை முடித்துக் கொண்ட நஜீப் ஹாஜியார் அவர்கள் 16-07-2018 அன்று கனடா நாட்டுக்குப் பயணமானார். அவர் கனடா நாட்டின் கல்கேரி எனும் மாநகரை விமானம் மூலம் போய்ச் சேர்ந்தார். அங்கு நஜீப் ஹாஜியாரின் உறவினரான நஸீம் அஹமட் அப்துல்லாஹ் அவர்கள் விமான நிலையம் வந்து நஜீப் ஹாஜியாரை வரவேற்று அவருடைய இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்.

மறுநாள் அவருடன் அவருடைய வாகனத்தில் சுமார் 1000 கிலோ மீற்றர் தூரம் செல்வதற்கு இருவரும் ஆயத்தமானார்கள். அவ்விடமானது அமெரிக்க நாட்டின் வொசிங்டன் மாநிலத்தை நெருங்கி இருந்தது. அங்கு பிரயாணித்த அவர்கள் வொசிங்டனுக்குப் பக்கத்திலுள்ள வெங்கூவரை வந்தடைந்தனர்.

இப்பயணம் கப்பல் மூலமாகச் செல்வதாயின் அமெரிக்காவின் கடல் பகுதி மூலமாகவே சென்றடைய வேண்டும். அங்கிருக்கும் பிரித்தானியர்கள் கொலம்பியா எனும் இடத்தை அமெரிக்காவின் ஊடாக கப்பல் மூலமாகவே வந்தடைந்தனர். நஜீப் ஹாஜியார் அவர்கள் கொலம்பியாவின் பாராளுமன்றத்தைச் சென்று பார்வையிட்டார். இரண்டு நாட்கள் அங்கு தங்கியிருந்துவிட்டு மீண்டும் சென்ற வாகனத்திலேயே கல்கேரி நகரை வந்தடைந்தார். இப்பிரதேசத்தின் பல இடங்களை மனம் குளிர சுற்றிப் பார்த்த நஜீப் ஹாஜியார் அவர்கள் பல்லாயிரம் வருடங்களுக்கு முன் டைனோஸர் மிருகங்கள் வாழ்ந்ததாக நம்பப்படும் இடத்தையும் சுற்றிப் பார்த்தார். இந்தப் பயணமானது அவரது வாழ்க்கையில் மறக்க முடியாததொரு பயணமாகும் என அவர் குறிப்பிடுகின்றார்.

31-07-2018 ஆம் திகதி தனது ஐரோப்பிய மற்றும் கனேடியப் பயணங்களை முடித்துக் கொண்ட நஜீப் ஹாஜியார் ஜேர்மனி வழியாக துபாய் வந்து சேர்ந்தார். அங்கிருந்து மீண்டும் இலங்கைக்குப் புறப்பட்டார். 06-08-2019 ஆம் திகதியன்று தனது மனைவியும், மகன் நிஹ்மதுல்லாஹ்வும் புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக மக்காவுக்கு செல்லவிருந்தமையால் இவ்விரு பயணங்களையும் குறுகிய காலத்துக்குள் முடித்துக் கொண்டு நஜீப் ஹாஜியார் அவர்கள் இலங்கை திரும்ப வேண்டியிருந்தது.

*விக்கலுக்குப் பயந்தால் வயிறு நிறையாது சிக்கலுக்குப் பயந்தால் வாழ்க்கை நிறையாது.*

## சேவைகளுக்கு மத்தியில் செல்வங்களின் மகிழ்ச்சியில்.

நஜீப் ஹாஜியார் அவர்களின் முன்றாவது புதல்வர் ஹிதாயதுல்லாஹ்வின் மனைவி முதல் பிரசவமாக இரட்டைக் குழந்தைகளாக இரு ஆண் மக்களை 11.12.2018 அன்று பெற்றெடுத்த செய்தி கிடைத்ததும் நஜீப் ஹாஜியார் மிகவும் மகிழ்ந்து போனார்.

குடும்பம் ஆனந்தக் கடலில் மூழ்கியது. பேரப் பிள்ளைகளின் வரவு பாட்டனாருக்கு சந்தோசத்தைக் கொடுக்காதா என்ன? மகிழ்ச்சியில் பூரித்துப் போனார் அவர்.

பேரப் பிள்ளைகள் இருவருக்கும் மேன்மை தங்கிய அஹமது கலீபா சுவைதி அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் அஹமத் எனும் அவரின் முதற் பெயரையும் முஹம்மத் எனும் நஜீப் ஹாஜியாரின் முதல் பெயரையும் சூட்டி மகிழ்ந்தார் நஜீப் ஹாஜியார்.

*அன்பு என்றாலே அழகுதான் பாசம் என்றாலே மகிழ்ச்சிதான்*
*இரண்டும் கிடைத்தால் வாழ்க்கை சிறப்பு தான்.*

## கப்பல்கள் கண்காட்சி.

20-01-2019 ஆம் திகதி ஐக்கிய அரபு இராட்சியத்தின் தலைநகர் அபுதாபியில் விமானங்கள் மற்றும் கப்பல்களின் கண்காட்சி ஒன்று நடைபெற்றது.

இக்கண்காட்சியில் இலங்கைக் கடற்படையின் கப்பல் ஒன்றும் முதன் முதலில் பங்குபற்றியது. அப்போதைய ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவர் சபருல்லாகான், நஜீப் ஹாஜியார் அவர்களுக்கும் ஒரு விசேட அழைப்பு விடுத்திருந்தார். அபுதாபி துறைமுகத்தில் தங்கி நிற்கும் இலங்கை கடற்படையின் கப்பலுக்கே அவர் அழைக்கப்பட்டிருந்தார். அங்கு இலங்கை கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் பல நிகழ்சிகளும் இலங்கையர்களின் பாரம்பரிய உணவு முறைக்கு அமைய இராப்போசனமும் கப்பலில் வைக்கப் பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சிகளில் இலங்கையின் ஒரு கடற்படைத் தளபதியும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஒரு கடற்படைத் தளபதியும் இன்னும் ஐக்கிய அரபு இராச்சியம் வாழ் முக்கிய பதவி வகிப்பவர்கள் ஒரு சிலரும் கலந்து கொண்டனர்.

நஜீப் ஹாஜியார் அவர்கள் இரு நாட்டுத் தளபதிகளுடனும் கலந்துரையாடியதன் மூலம் பல விடயங்களைப் பரிமாறிக் கெண்டார்.

இராப்போசன விருந்தில் நஜீப் ஹாஜியார் அவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்து படைத் தளபதிக்கு அங்கு வைத்திருக்கும் இலங்கைக்கான பாரம்பரிய உணவு முறைகளை அரபு மொழி மூலம் விபரித்தார். இந்நிகழ்வின் நினைவாக புகைப் படங்களையும் அவர் எடுத்துக் கொண்டார்.

*காணும் காட்சிகளில் எல்லாம் இதயத்தை தொலைக்காதே மனச்சாட்சி இருந்தால்*
*ஒருமுறை என்னோடு பழகிய நாட்களை நினைத்துப் பார்.*

## கலாநிதிப் பட்டத்திற்கான கௌரவிப்பு.

2022 இல் நாஜீப் ஹாஜியார் அவர்களுக்கு கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தமையை இட்டு நஜீப் ஹாஜியார் அவர்களினால் கட்டிக் கொடுக்கப்பட்ட புதிய கட்டிடமான தெருவுப் பள்ளியின் அப்போதைய தார்மகர்த்தாக்கள், தனவந்தர்கள், உலமாக்கள், ஊர் மக்கள் ஒன்று கூடி 04.11.2022 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்குப் பின்னர் பொன்னாடை போர்த்தி நஜீப் ஹாஜியார் அவர்களை கௌரவித்தனர்.

அத்துடன் தர்கா நகர் விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான Liver Pool விளையாட்டுக் கழகமும் இதற்காக நஜீப் ஹாஜியார் அவர்களைக் கௌரவித்தது.

## அறபு மொழியிலும் சுயசரிதையா?

நஜீப் ஹாஜியார் அவர்கள் தனது பிறப்பு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான அவரின் சுயசரிதையை அரபு மொழியில் எழுதி நூலுருவாக்கினார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சில் அன்றைய நாட்களில் பல நாடுகளின் தூதுவராக கடமையாற்றியவரும், தற்போது மேற்கூறிய அமைச்சில் ஒரு பொறுப்பு வாய்ந்த பதவியில் கடமையாற்றுபவருமாகிய கௌரவ அமீர் அஜ்வாத் அவர்களை வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்து முதற் பிரதியை கையளித்தார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அமீர் அஜ்வாத் அவர்கள் இறுதியாக “ஓமான்“ நாட்டுத் தூதுவராக கடமையாற்றியுள்ளார். 2024 ஆண்டு முதல் சவூதி நாட்டு தூதுவராக நியமிக்கப்பட்டார்.

அதேவேளை ஓமானுக்கும் இலங்கைக்கும் இடையிலான 40 ஆண்டு தொடர்பைப் பற்றி ஆங்கில மொழியில் அமீர் அஜ்வாத் அவர்கள் எழுதிய பிரதியை ஓமானிலும், இலங்கையிலும் உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைத்திருந்தார். இதன் பிரதியை 03.11.2022 இல் நஜீப் ஹாஜியாரிடம் அவர் கையளித்தார். அரபு மொழியிலான தனது சுயசரிதை நூலினை நஜீப் ஹாஜியார் அவர்கள் இலங்கையில் உள்ள அனைத்து அரபுக் கலாசாலைகளுக்கும் இலவசமாக விநியோகித்தார்.

மத்திய கிழக்கிலும் ஏனைய சில அரபு நாடுகளிலும் நஜீப் ஹாஜியார் அவர்களுக்கு அறிமுகமானவர்களுக்கும் புத்தகம் அனுப்பி வைக்கப்பட்டது.

*எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறு ஆவதில்லை வரலாறாய் ஆன யாரும் தனக்காக வாழ்ந்ததில்லை.*

## ஜோர்ஜியா சுற்றுலா.

19.11.2022 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் அவர்கள் அவரது மனைவியுடனும், இளைய புதல்வி ஆமினாவுடனும் ஜோர்ஜியா நாட்டுக்கு ஒரு சுற்றுலாவை மேற்கொண்டார். அது ஒரு குளிரான பிரதேசம் ஆகையால் அவர்களது மனங்களும் குளிர்ந்து போயின. சூழவுள்ள பனி மலைகள் உள்ளத்தைக் கவர்ந்தன. பல வகைகளிலான பழவர்க்கங்களைக் காணக் கிடைத்தது மட்டுமல்லாமல் உண்டு மகிழவும் கிடைத்தது என்று குறிப்பிடும் நஜீப் ஹாஜியார் அவர்கள் ரஷ்யாவின் எல்லை வரை சென்று மனங்கவரும் இடங்களைக் கண்டு களித்து விட்டு சுற்றுலாவை முடித்துக் கொண்டதாகக் மகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார்.

*எப்படி எல்லாம் வாழக்கூடாது என நினைத்தாலும் அப்படி எல்லாம் வாழ வைக்கிறது இந்த வாழ்க்கை.*

## குடும்ப மரக்கிளை.

நஜீப் ஹாஜியார் அவர்களும் அவரது மூத்த புதல்வர் நிஹ்மத்துல்லாஹ் அவர்களும் குடும்ப மரக்கிளை என்ற பெயரில் புத்தகம் ஒன்றை எழுத வேண்டும் எனத் தீர்மானித்தனர். நஜீப் ஹாஜியார் அவர்கள் அதற்கான முயற்சிகளில் செயற்படலானார்.
இதன் நோக்கம் என்னவென்றால் குடும்ப அங்கத்தவர்கள் தொழில் காரணங்களினாலும் தூர இடங்களில் திருமணம் செய்து இடம் பெயர்ந்து சென்ற காரணங்களினாலும் மற்ற குடும்ப

அங்கத்தவர்களைப் பிரிந்து சென்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தற்கால எதிர்கால சந்ததியினர்கள் குடும்பம் என்ற கூட்டமைப்பின் அங்கத்தினர்களை அறியாமல் குடும்ப தொடர்புகள் துண்டிக்கப்பட்டு இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயம். இதனை நிவர்த்தி செய்வதற்கே அப்படியான ஒரு யோசனையை நடைமுறைப்படுத்த எண்ணினார் நஜீப் ஹாஜியார் அவர்கள்.

2023 ஆம் ஆண்டுக்கு முந்தைய ஐந்து வருடங்களாக நஜீப் ஹாஜியார் அவர்கள் தனது தாய் தந்தையின் குடும்ப வாரிசுகளை சந்தித்து ஐந்து தலைமுறைகளின் பெயர்களை சேகரித்துக் கொண்டார். இதற்காக குடும்ப அங்கத்தவர்களின் வீடு வீடாகச் சென்று பெயர்களை சேகரிக்கலானார். அதேபோன்று தனது தந்தையின் தந்தை வழி தாயின் தந்தை வழி அங்கத்தவர்களிடமும் தனது தந்தையின் தாய் வழி குடும்ப அங்கத்தவர்களிடமும் சென்று பெயர்களைச் சேகரித்தார்.

இவ்வளவு சிரமப்பட்டு ஐந்து தலைமுறைகள் பற்றிய விபரங்களைச் சேகரித்ததன் காரணம் குடும்பங்களை ஒன்று சேர்க்கவும் அறிமுகப்படுத்தவும், ஒற்றுமையாக வாழ வைக்கவும், சுக துக்கங்களில் கலந்து கொள்ளவும் ஆகும். இனிமேலும் எதிர்கால சந்ததியினருக்கு குடும்ப அங்கத்தவர்களை அறியாமல் போகும் என்ற அச்சத்தில் இனி அவர்கள் இருக்கத்தேவையில்லை.

ஒரு தடவை நஜீப் ஹாஜியார் அவர்கள் ஒரு பொது இடத்தில் இரண்டு குடும்ப அங்கத்தவர்களைச் சந்தித்தபோது வினாவினார். நீங்கள் இருவரும் யார் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஏற்கனவே உங்கள் இருவருக்கும் இடையில் ஏதாவது அறிமுகம் உள்ளதா? என்று கேட்டபோது இருவரும் விழித்தனர். இருவருக்கும் இடையில் யாதொரு அறிமுகமும் இல்லை எனத் தமக்குள் உறுதிப்படுத்திக் கொண்டனர். நஜீப் ஹாஜியார் அவர்கள் நாம் மூவரும் தர்கா நகரை சேர்ந்த ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என அவர்களைப் பார்த்து விளக்கம் கொடுத்தார். நாம் மூவரில் நஜீப் ஹாஜியாரின் தாய் வழிபாட்டனாரும் ஏனைய இருவரில் ஒருவரின் தாய் வழி பாட்டனாரும், மூன்றாமவரின் தாயின் தாய் வழி பாட்டனாரும் மூன்று உடன் பிறந்த சகோதரர்கள் என்று நஜீப் ஹாஜியார் அவ்விருவருக்கும் விளக்கம் கொடுத்தார். இதனை கேட்ட இருவரும் வியந்து போய் நின்றனர். அறிமுகம் செய்து வைத்தமைக்காக நன்றி உணர்வோடு நஜீப் ஹாஜியாரைப் பாராட்டினர்.

இச் சம்பவத்தை எழுதக் காரணம் தர்கா நகரில் வாழ்ந்து வளர்ந்த இவ்விருவரும் ஒருவரை ஒருவர் தான் மற்றவரின் சொந்தக்காரர் என்பதை அறிந்திருக்காமையாகும் என்கிறார் நஜீப் ஹாஜியார் அவர்கள்.

நஜீப் ஹாஜியாரின் தாய் வழிப் பாட்டனார் மற்றும் தந்தை வழிப் பாட்டனார், தந்தையின் தாய் வழி பாட்டனார்களின் 5 தலைமுறைகளை கொண்ட 3 கிளைகளை அறிந்து கொள்ளக்கூடிய விதத்தில் 3 புத்தகங்களை எழுதத் தீர்மானித்திருந்தார் நஜீப் ஹாஜியார்.

29.07.2023 அன்று தமக்குச் சொந்தமான மர்ஹபா எனும் திருமண மண்டபத்தில் தாய்வழிப் பாட்டனார்களின் குடும்ப அங்கத்தவர்களை வரவழைத்து ஐந்து தலைமுறை குடும்ப அங்கத்தவர்களின் விபரங்களை அங்கிருந்து மேடையில் திரையிட்டுக் காட்டுவதன் மூலமாக அங்கத்தவர்களின் பெயர்களையும் அதன் வழிமுறைகளையும் நஜீப் ஹாஜியார் அவர்கள் விவரித்தார். இவ் வைபவத்திற்கு முக்கிய குடும்ப அங்கத்தவர்கள் மாத்திரம் அழைக்கப்பட்டிருந்தனர். சுமார் 350 குடும்ப அங்கத்தவர்கள் அங்கு சமூகம் தந்திருந்தனர். குடும்ப உறுப்பினர்கள் அறிமுகமாகி உறவாடி மகிழ்ந்தனர்.

அன்று சமூகமளித்தோர்களுக்கு பகல் போசனமும் வழங்கப்பட்டது. குடும்ப மரக்கிளை என்ற புத்தகமும் இனாமாக சமூகமளித்தவர் களுக்கு வழங்கப்பட்டது. 31.07.2023 அன்று நஜீப் ஹாஜியாரின் தகப்பனார் பிறந்த ஊரான வெலிப்பன்னை பிரதேசத்தில் அங்குள்ள திருமண மண்டபத்தை வாடகைக்கு எடுத்து தகப்பனார் அமீர் ஆலிமின் பெற்றோர் வழி குடும்ப முக்கிய அங்கத்தவர்களை அழைத்து ஐந்து தலைமுறைகளின் குடும்ப மரக்கிளையின் விளக்கத்தை திரையில் காட்டியதன் மூலமாக விபரித்தார். அங்கு சமூகமளித்திருந்த சுமார் 350 குடும்ப அங்கத்திருக்கு குடும்ப மரக்கிளை புத்தகம் பகல்போஷனத்தோடு இனாமாக வழங்கப்பட்டது.

மேற்கூறிய இவ்விரு வைபவங்களிலும் இலங்கையில் தூர பிரதேசங்களில் வசிக்கும் அங்கத்தவர்கள் நஜீப் ஹாஜியார் அவர்களை பாராட்டி இவ்வைபவத்தை நடத்தியமைக்காக நன்றி கூறி பிரார்த்தனையும் செய்து நினைவாக புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டனர்.

*நாம் தனிமையாக உணரும்போது, சவால்களை எதிர்கொள்ளும்போது*
*உறவுகள்தான் நமக்கு ஆதரவையும், ஆறுதலையும்,*
*பாதுகாப்பையும் அளிக்கின்றன.*

*சிலர் வேஷம் போடும் போது உறவுகள் அவர்களைத் தேடி வருவதனால் பாசமான*
*பழைய உறவுகள் மறந்தே போய்விடுகின்றன.*

## கிழக்கு மாகாணத்திற்கு இதமான பயணம்.

07.08.2023 இல் நஜீப் ஹாஜியார் அவர்கள் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தார். அங்கு நிறுவப்பட்டிருக்கும் சதாம் ஹுசைன் கிராமத்தைச் சென்று பார்வையிட்டார்.

இக்கிராமம் உருவாகக் காரணம் 1978 இல் இலங்கையில் இப்பிரதேசத்தில் கடும் சூறாவளியும் புயல் காற்றும் தாக்கி ஏராளமான முஸ்லிம்களின் வீடுகள் சேதம் அடைந்திருந்தன. இதன் காரணமாக அப்போதைய இலங்கைக்கான ஈராக் நாட்டின் தூதுவர் வாயிலாக தமது நாட்டின் அதிபரான சதாம் ஹுசைன் அவர்களுக்கு இச்சூறாவளி சேதத்தை பற்றி அறிவிக்கப்பட்டது.

அதிபர் சதாம் ஹுசைன் அவர்கள் 100 வீடுகளும் ஒரு பள்ளிவாயலும் அடங்கிய ஒரு கிராமத்தை அமைத்துக் கொடுத்தார். அக்கிராமத்தின் பெயர்தான் “சதாம் ஹுசைன் கிராமம்”. இக்கிராமத்தில் வீடுகள் சேதமடைந்த 100 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டிருந்தன. 1978 ல் இவ்விடயத்தை அறிந்த நஜீப் ஹாஜியார் அவர்கள் அன்று முதல் இக்கிராமத்தைச் சென்று பார்வையிட வேண்டும் என்று ஆவலுடன் இருந்தார். 07.08.2023 அன்று அவருடைய ஆவல் நிறைவேறியது.

ஈராக் அதிபர் சதாம் ஹுசைனின் இச்செயலை மத்திய கிழக்கிலும் அரபு இஸ்லாமிய நாடுகளிலும் குறிப்பாக ஈராக் நாட்டிலும் வசிக்கும் சகோதரர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என நஜீப் ஹாஜியார் அவர்கள் விரும்பினார்.

30.08.1990 இல் காத்தான்குடியில் இஷாத் தொழுகைக்கான ஜமாத் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பயங்கரவாதிகளால் துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டு வீச்சு மூலமாக சுமார் 127 சிறுவர்கள், பெரியவர்கள் கொல்லப்பட்டனர்.

அன்று முதல் இப்பள்ளிவாயலைத் தரிசிக்க நஜீப் ஹாஜியார் அவர்கள் ஆவலாய் இருந்தார். எனவே இப்பள்ளிவாயிலையும் தரிசிக்க அவர் சென்றிருந்தார். இன்று வரை (2023) அப்பள்ளிவாயிலின் சுவர்களில் துப்பாக்கி வேட்டுக்கள் துளைத்த இடங்களும் குண்டுகளால் இடப்பட்ட துளைகளும் எவ்விதப் புனர்நிர்மாணமும் செய்யப்படாமல் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அங்கு ஐவேளைத் தொழுகைகளும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. கொல்லப்பட்டவர்களின் பெயர்களும் அவர்களது வயதுகளும் பதிவு செய்யப்பட்ட ஒரு அட்டவணை தொங்கவிடப்பட்டுள்ளது. நஜீப் ஹாஜியார் அவர்கள் அன்று அங்கு சென்ற வேளையில் அன்றைய

விபத்தில் சிக்கி உயிர்தப்பியவர்கள் இருவரைச் சந்தித்து அது பற்றிக் கலந்துரையாடி விபரங்களை அறிந்து கொண்டார்.

அதன் பின்னர் அப்பள்ளிவாயிலின் பக்கத்தில் அமைந்திருக்கும் கொல்லப்பட்டவர்களின் மறைவிடத்திற்குச் சென்று அவர்களின் மறுமை வாழ்வுக்காகப் பிரார்த்தனை செய்தார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அவரின் அந்தக் கனவும் நனவாகியது. சமீபத்தில் காத்தான்குடியில் உலகிலேயே உள்ள புனிதமான மூன்று பள்ளிவாயில்களில ஒரு பள்ளிவாயிலான பலஸ்தீன நாட்டில் ஜெருசலத்தில் இருக்கும் மஸ்ஜித் அல் அக்ஸா வடிவமைப்பில் கட்டப்பட்ட பள்ளிவாயிலுக்கும் சென்று பார்வையிட்டு தனது மனதை ஆசுவாசப்படுத்திக்கொண்டார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அங்கு இருக்கும் அருங்காட்சியகத்திற்கும் சென்று பார்வையிட்டு திருப்தி அடைந்தார்.

2020 முதல் 2 வருடங்களாக உலகெங்கும் கொரோனா நோய் பரவியது யாவரும் அறிந்ததே. நோய் தொற்றியதால் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் இறந்தனர். பலர் குணமடைந்த போதும் அதன் அச்சத்தால் பாதிக்கப்பட்டவர்களும் ஏராளம்.

கொரோனா நோயினால் இறந்தவர்களின் உடல்கள் உலகமெங்கும் புதைக்கப்பட்டன. ஆனால் இலங்கையில் மாத்திரம் அப்போதைய அரசாங்கம் தகனம் செய்யும்படி கேட்டுக் கொண்டது. இறுதியாக 2021 பெப்ரவரி மாதம் இறுதியில் கொரோனா நோயினால் மரணித்த உடல்களை தகனம் செய்ய விருப்பப்படாதவர்களின் உடல்களை கிழக்கு மாகாணம் ஓட்டமாவடி பிரதேசத்தில் அடக்கம் செய்ய ஓரிடம் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. அன்று முதல் இந்நோயினால் மரணித்தவர்களின் உடல்கள் அந்த இடத்திலேயே நல்லடக்கம் செய்யப்பட்டன.

நஜீப் ஹாஜியார் அவர்கள் ஓட்டமாவடிக்கும் சென்று அங்கு அமைக்கப்பட்டிருக்கும் மையவாடிக்குச் சென்று பார்வையிட்டு அடங்கப்பட்டிருப்பவர்களுக்காக துவா பிரார்த்தனை செய்து கொண்டார். அங்கு பணிபுரியும் ஒரு ஊழியன் மூலமாக அவ்விடத்தை பற்றி பல விடயங்களையும் கேட்டு அறிந்து கொண்டார். அப்போது அங்கு ஒரு கட்டிடம் அமைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. இலங்கையின் பல இடங்களில் இருந்தும் தரிசனம் செய்வதற்காக வருகை தரும் உறவினர்களின் நலன் கருதியே அக்கட்டிடத்தை கட்டுவதாக தெரியவந்தது. பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த ஒரு தனவந்தரின் தாய் அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ளதால் அத்தாயின் பெயரிலேயே அக்கட்டிடம் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

இந்த பயனுள்ள விஜயத்தின் போது ஹாஜியாருடன் அவரது மனைவியும் இளைய புதல்வி ஆமினாவையும் இணைந்து கொண்டிருந்தனர்.

*பார்க்கத் தெரிந்தால் பாதை தெரியும் பார்த்து நடந்தால் பயணம் தொடரும் பயணம் தொடர்ந்தால் கதவு திறக்கும் கதவு திறந்தால் காட்சி கிடைக்கும் காட்சி கிடைத்தால் கவலை தீரும் கவலை தீர்ந்தால் வாழலாம்.*

## புதல்வரின் பட்டமளிப்பு விழாவிற்கு இந்தியா சென்ற வேளையில்.

உலகிலேயே முதலாவது பெரிய சனத்தொகையைக் கொண்டதாகக் கருதப்படும் நாடுதான் இந்தியா. பல நூற்றாண்டுகள் சரித்திரப் பின்னணி வாய்ந்த நாடான இந்தியா ஏற்கனவே பாகிஸ்தானையும் பங்களாதேஷையும் உள்ளடக்கி இருந்தது.

1947 யில் இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் பாகிஸ்தான் தனி நாடாக இந்தியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றது. அதன் பின்னர் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் 1971 இல் தனி நாடாக சுதந்திரம் பெற்றது.

இந்தியாவின் தலைநகர் புதுடில்லிக்கு நஜீப் ஹாஜியார் அவர்கள் 29.11.2023 அன்று தனது விஜயத்தை மேற்கொண்டார். அங்கு அவரது மூன்றாவது புதல்வர் டாக்டர் ரஹ்மத்துல்லாஹ் அவர்களின் நவீனமயமான முறையில் சத்திர சிகிச்சை மேற்படிப்பை முடித்துக்கொண்ட வேளையில் அவரது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காகவே அவர் சென்றிருந்தார். 30.11.2023 மறுதினம் உலகிலேயே ஏழு அற்புதங்களில் ஒன்றான ஆக்ரா பிரதேசத்தில் தாஜ்மஹாலை தரிசிக்கச் சென்றார். மன்னர் ஷாஜகானின் மூன்றாவது மனைவி மும்தாஜ் அவர்களின் பெயரில் நினைவுச் சின்னமாக கட்டப்பட்டதுதான் தாஜ்மஹால். இதைப்பற்றிச் சற்று கூறுவது பயனுள்ளதாக அமையும் என நினைக்கிறார் நஜீப் ஹாஜியார் அவர்கள்.

இக்கட்டிடம் 1632 ஆம் ஆண்டு தொடங்கி 1648 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டிடத்தை கட்டி முடிப்பதற்காக 20,000 வேலையாட்கள் பணிபுரிந்திருக்கிறார்கள். துருக்கி நாட்டைச் சேர்ந்த மொஹம்மத் ஈஸா அபந்தி ஹான் என்பவர் இக்கட்டிட நிர்மாணப் பணிகளை மேற்கொண்டுள்ளார்.

இக்கட்டிடம் இந்தியாவிலேயே நான்காவது நீண்ட நதியான யமுனா நதியை அண்மித்து அமைந்துள்ளது. மன்னர் ஷாஜஹானின்

மூன்றாவது மனைவி மும்தாஜின் உண்மையான பெயர் “அண்ஜீமான் பானு” என்பதாகும்.

மன்னர் ஷாஜஹான் 05.11.1592 யில் லாகூர் (தற்போது பாகிஸ்தான்) என்னும் ஊரிலே பிறந்தார். 22.01.1666 இல் தாஜ்மஹால் அமைந்திருக்கும் பிரதேசத்தில் ஆக்ராவில் உயிரிழந்தார்.

இக்கட்டிட மதில்களில் நாலா புறங்களிலும் திருக்குர்ஆனின் இதயமாக கருதப்படும் சூரா யாசின் செதுக்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. உள்ளே மன்னன் ஷாஜகானினதும் மனைவி மும்தாஜினதும் கல்லறைகள் அடுத்தடுத்ததாக உள்ளன.

தாஜ்மஹாலின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு கட்டிடங்கள் உள்ளன. வலது புறத்தில் விருந்தினர்களை உபசரிப்பதற்கான கட்டிடமும், இடது புறத்தில் ஒரு பள்ளிவாயிலும் அமைந்துள்ளன. வார நாட்களில் வெள்ளிக்கிழமைகளில் பொது மக்களின் வருகையை தவிர்க்கும் முகமாக அது மூடப்பட்டுள்ளது. பொது மக்களின் பார்வைக்காக மூடப்பட்டிருந்தாலும் ஜும்மா தொழுகை, பிரசங்கம் அங்கு நடைபெறுகின்றது.

## ஆக்ரா கோட்டை நஜீப் ஹாஜியாரின் பார்வையில்

ஆக்ரா கோட்டையானது மன்னன் ஷாஜகானின் பாட்டனாரினால் கட்டப்பட்ட கோட்டையாகும். இது மிகவும் பிரம்மாண்டமானதொரு கோட்டை. பெரும் பெரும் கற்களினால் செதுக்கப்பட்டு அமையப்பட்டுள்ளன. இக்கோட்டை 1565 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும்.

இக்கோட்டையில் இருந்து பார்க்கும்போது வெகு தூரத்தில் அமைந்திருக்கும் தாஜ்மஹாலையும், யமுனா நதியையும் காணலாம். யமுனா நதியிலிருந்துதான் தாஜ்மஹாலை கட்ட தேவையான நீர் பெறப்பட்டுள்ளது. இந்நீர் அருந்துவதற்கு உகந்ததல்ல. ஆக்ரா பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள பழம் பெரும் கட்டிடங்களை எல்லாம் நஜீப் ஹாஜியார் அவர்கள் கண்டு களித்ததை மகிழ்வோடு நினைவு கூறுகிறார்.

## மகாத்மா காந்தி, இந்திரா காந்தி நினைவாலயங்கள் செல்லவும் மறக்கவில்லை.

இந்தியாவின் சுதந்திரத் தலைவர் மகாத்மா காந்தியின் நினைவிடமான அவரது இல்லம், அவர் கொலை செய்யப்பட்ட இடம்

என்பவற்றையும் சென்று பார்வையிட நஜீப் ஹாஜியார் அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது.

மகாத்மா காந்தி அவர்கள் அவரது வீட்டில் எளிமையான முறையில் வாழ்ந்து வந்துள்ளார். அவரால் உபயோகிக்கப்பட்ட படுக்கையறை, அலுவலக அறை, நூல் நிலையம் போன்றவை பொது மக்களின் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

அதன் பிறகு உலகிலேயே இரண்டாவது பெண் பிரதமரான இந்திரா காந்தி அவர்களின் நினைவாலயம், அவரது இல்லம், அவரை கொலை செய்த இடம், அருங்காட்சியகம் மற்றும் அவரது புதல்வர் ராஜீவ் காந்தியின் அருங்காட்சியகம் போன்றவைகளையும் கண்டு களித்தார்.

அதனைத் தொடர்ந்து அப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் இந்திய நாட்டு முன்னாள் பிரதமர்களின் நினைவிடங்களுக்கும் சென்று வந்தார் நஜீப் ஹாஜியார் அவர்கள். குதுப் மினார் கோபுரம். 1199 ஆம் ஆண்டு குத்துப்புத்தீன் எனும் சக்கரவர்த்தியினால் கட்டப்பட்ட கோபுரம் தான் குத்துப்மினார் கோபுரம். இந்தக் கோபுரத்தின் பெயரையே அவ்வூருக்கும் சூட்டப்பட்டுள்ளது. அங்கு குத்துப்புதீன் சக்கரவர்த்தியின் கல்லறையும் அமையப் பெற்றுள்ளது.

அருகாமையில் பல இடிந்த கட்டிடங்களும் காணப்பட்டுகின்றன. இக்கட்டிடங்களில் ஒரு பள்ளிவாசலும் இருந்தது. இந்தியாவில் மிகவும் பழைமை வாய்ந்த பள்ளிவாசலான மஸ்ஜித் ஜாமாவை காணச் சென்ற நஜீப் ஹாஜியார் அவர்கள் அதன் சரித்திரத்தை பின்வருமாறு கூறுகின்றார்.

இப்பள்ளிவாயில் 1644 இல் கட்ட துவங்கி 1656 ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. 25,000
நபர்கள் ஒரே வேளையில் தொழக்கூடியதாக இப்பள்ளிவாயில் அமையப்பெற்றுள்ளது. இதன் கட்டிடம் மன்னன் ஷாஜஹானினால் இறுதியாக தனது தாயின் ஞாபகார்த்தமாகக் கட்டப்பட்டதாகும். என வியப்போடு விளக்கினார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அதுமட்டுமல்லாமல் செங் கோட்டையும் 1689 இல் ஷாஜஹான் மன்னனினால் கட்டப்பட்டதாகும். வருடா வருடம் இந்தியாவின் சுதந்திர தினத்தில் பிரதமர்கள் முதலில் கோட்டை வாயிலில் சென்று நாட்டு கொடியை ஏற்றுவார்கள் என அவர் குறிப்பிடுகின்றார்.

இத்தோடு 02.12.2023 இல் நஜீப் ஹாஜியார் அவர்களின் இந்திய பயணம் முடிவு பெற்றது.

17.11.2024 அன்று நஜீப் ஹாஜியார் அவர்களின் இளைய மகள் ஆமினா மலேசியாவின் Lincoln University College யில் தனது இளங்கலைக் கணினியியல் கற்கை நெறியை வெற்றிகரமாக முடித்து ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் (Bachelor of Computer Science) பட்டம் பெற்றார்.

11.07.2025 அன்று நஜீப் ஹாஜியார் அவர்களின் இளைய மகள் ஆமினாவுக்கும் தர்கா நகரில் பிரசித்தி பெற்ற வர்த்தகர் மொஹமட் பாஹிம் அஜ்வாத் அவர்களின் மகன் பயாஸ் அஹமதுக்கும் இடையிலான திருமண வைபவம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

நஜீப் என்ற சாதாரண மனிதர் எப்படித் தன்னை ஒரு உறுதியான இடத்தில் நிலைநிறுத்திக் கொண்டார்? அதற்காக அவர் பட்ட கஷ்டங்கள், அனுபவித்த வேதனைகள் பற்றியெல்லாம் நீங்கள் இந்த அத்தியாயத்தை வாசித்து அறிந்திருப்பீர்கள். முட்டுக்கட்டுகளைப் படிக்கட்டுகளாக மாற்றிக் கொள்வது எப்படி? துயரங்களைச் சந்தோசங்களாக மாற்றிக் கொள்வது எப்படி? என்ற பாடத்தை நஜீப் ஹாஜியாரின் கடந்த காலத்தைப் படித்த நீங்கள் உணர்ந்து கொண்டிருப்பீர்கள். ஒரு காலத்தில் சாதாரண துவிச்சக்கர வண்டி ஒன்றையே வாங்குவதற்று வசதியின்றித் தவித்த நஜீப் ஹாஜியார் சொந்தமாக ஒரு கார் வாங்கும் நிலைக்கு குறுகிய காலத்தில் உயர்ந்தார் என்றால் அது அவரது கடின உழைப்பையே காட்டுகிறது. இனி, அடுத்துவரும் அத்தியாயத்தில் ஒரு தனிமனிதனாக நின்று தனது நேர்மை, நம்பிக்கை, துணிவு என்பவற்றை மூலதனமாகக் கொண்டு சில மாமனிதர்களின் உதவியுடன் அவர் செய்த அல்லது செய்து வரும் சமூகப் பணிகளைத் தெரிந்து கொள்வீர்கள். தொடர்ந்து வாசியுங்கள்....

# சமூக நற்பணிகளும் மேன்மை தங்கியோரின் நட்பும்

## அல்ஜன் வாழ் இலங்கை முஸ்லிம்களுக்கான நலன்புரிச் சங்கம் ஆரம்பம். அதன் தலைவராக நஜீப் அவர்கள்.

அல்ஜன் மாவட்டத்தில் தொழில் புரியும் இலங்கை முஸ்லிம்கள் அனைவரும் சேர்ந்து 1986.03.14 இல் ஒரு நலன்புரிச் சங்கத்தை உருவாக்கினார்கள். இதன் தலைவராக நஜீப் ஹாஜியார் அவர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். அல்ஜனில் வாழும் இலங்கை முஸ்லிம்களின் நலன்புரிச் சங்கம் என இவ்வமைப்புக்குப் பெயரிடப்பட்டது. அங்கத்துவக் கட்டணமாக மாதாந்தம் 10 திர்ஹங்கள் அறவிடப்பட்டதோடு மாவட்டத்தில் 3 கிளைகள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு கிளைக்கும் ஒவ்வொரு தலைவர் நியமிக்கப்பட்டனர். மாதாந்த கூட்டங்கள் ஒவ்வொரு கிளையிலும் இடம்பெறும் போது அவற்றுக்கு நஜீப் ஹாஜியார் அவர்களே தலைமை தாங்கி வழிநடத்தினார். சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அவசர நிலைமைகள் ஏற்படும் போது அவர்களுக்கு உதவி புரிதல், இலங்கையிலுள்ள பள்ளிவாசல்கள், அநாதை இல்லங்கள், மதரஸாக்கள் என்பவற்றுக்கு உதவி செய்தல் என்பன இச்சங்கத்தின் நோக்கங்களாக இருந்தன. இச்சங்கத்தின் மூலமும் நஜீப் ஹாஜியாரின் தனிப்பட்ட விசேட ஏற்பாடுகளின் மூலமும் இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு அத்தியாவசிய தேவைகளுக்கு உதவிகள் செய்யப்பட்டன. அவற்றில் முக்கியமானவைகளை குறிப்பிட்டுக் காட்டலாம்.

இலங்கையில் பிரசித்திபெற்று விளங்கும் திஹாரிய அங்கவீனர் நிலையம், தர்கா நகர் அதிகாரிகொடை பள்ளிவாசல், மத்திய மலைநாட்டுப் பிரதேசத்தில் அமைந்துள்ள மாவனல்லை திப்பிட்டிய பள்ளிவாசல் என்பவற்றுக்கு நன்கொடைகள் வழங்கப்பட்டன. இலங்கைப் பெண்ணொருவர் அல்ஜன் அபுதாபி யு.ஏ.ஆர். வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அவருக்கு பண உதவி செய்யப்பட்டது. இச்சங்கத்தின் உதவியாளராக கொழும்பைச் சேர்ந்த சாஹுல் ஹமீத் பணியாற்றியதோடு தர்கா நகர், பேருவளை, களுத்துறை, கல்எளிய, கொழும்பு பேன்ற பிரதேசங்களிலிருந்தும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு கடமையாற்றினர்.

இக்காலப் பகுதியில் அவரது சமூக சேவைகள் மேலோங்க ஆரம்பித்தன. இலங்கை அல்ஜன் நலன்புரிச் சங்கத்தின் தலைவராகத் தொடர்ந்து பணியாற்றிய நஜீப் ஹாஜியார் தனது சொந்தப் பெயரிலே சங்கத்திற்கான வங்கிக் கணக்கினைத் திறக்க வேண்டுமென சங்க உறுப்பினர்கள் ஏகமனதாக வேண்டுகோள் விடுத்தனர். Bank of Middle East வங்கிக் கிளையில் கணக்கொன்றை ஆரம்பித்தார் நஜீப்

ஹாஜியார். அவரது சொந்த வங்கிக் கணக்கிலேயே அனைத்து வருமானங்களும் சேகரிக்கப்பட்டன. அத்துடன் சொந்தச் செலவில் பேருவளை மருதானை புதிய பள்ளிவாசலுக்கு எதிரே அமைந்திருக்கும் பூந்தோட்டத்துக்கு புல் வெட்டும் இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்தார். அத்துடன் திஹாரிய அங்கவீனர் நிலையத்துக்கென 500 திர்ஹங்களைச் சங்கத்தின் மூலம் அனுப்பி வைத்தார்.

### மூடப்பட்ட நலன்புரிச் சங்கம்.

நலன்புரிச் சங்கம் மும்முரமாக பல சமூக நலத் திட்டங்களுக்கு உதவி வந்த சமயத்தில் அபுதாபியில் சில கம்பனிகள் மூடப்பட்டதனால் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் பலர் இலங்கைக்குத் திரும்ப வேண்டிய நிலை உருவானது. இதனால் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருந்த நலன்புரிச் சங்கத்தை கலைக்க வேண்டிய துரதிஷ்ட நிலை ஏற்பட்டது. தர்கா நகர் அதிகாரிகொடையில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த பள்ளிவாசலுக்கு சங்கத்தின் நிதியிலிருந்து 500 திர்ஹங்கள் கொடுக்கப்பட்டதுடன் நஜீப் ஹாஜியாரின் வங்கிக் கணக்கில் மீதியாகவிருந்த 1209 திர்ஹம்கள் தாயகம் செல்லும் உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும் போதியளவு உறுப்பினர்கள் இல்லாமையினாலும் சங்கத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான பணப்பற்றாக்குறை ஏற்பட்டதனாலும் சங்கம் கலைக்கப்பட்டது.

*முடிவுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் முயற்சிக்கு முக்கியத்துவம் கொடுங்கள் முழுமையாக வெற்றி நிச்சயம்.*

## UAE இற்கான இலங்கை தூதுவர் சந்திப்பும்.

“பிரிகோ கார்கோ” அல்ஜன் அலுவலகத்தில் இலங்கைத் தூதரகத்திலிருந்து (அபுதாபி) மாதாந்தம் சில ஊழியர்கள் வந்தனர். அல்ஜனில் இருக்கும் இலங்கையர்களின் நலன்களை விசாரித்து குறைநிறைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்யும் வகையில் அங்கு தற்காலிகமாக ஒரு காரியாலயம் அமைக்கப்பட்டது. அதன் திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக அன்றைய அமீரகத்திற்கான இலங்கை தூதுவர் இஸட்.எம்.எம். ஸவாஹிர் (குருனாகல்) சமூகமளித்திருந்தார்.

அன்று நஜீப் ஹாஜியார் தூதுவருடன் இலங்கை இளைஞர்களின் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடிய பின்னர் அவருடன் புகைப்படமும் பிடித்துக்கொண்டார். ஸாஹிரா கல்லூரி அதிபர் (தர்கா நகர்) அல்ஹாஜ் ஐ.எல்.எம். சுஜப் அவர்கள் நஜீப் ஹாஜியாரிடம்

கொடுத்திருந்த கடிதம் ஒன்றையும் தூதுவரிடம் அவர் கையளித்தார். அதிபர் சுஹைப் அவர்கள் தூதுவருடன் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

*பயன்பெறக்கூடிய ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க கிடைத்தால்*
*அது உள்ளத்துக்கு குளிரூட்டும் வரப்பிரசாதம்தான்.*

## மார்க்கத்தை தழுவியவர்களுக்கு மகத்தான வழிகாட்டல்

UAE இன் ஆட்சியாளர் சாயித் பின் சுல்தான் அவர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் சில வருடங்களுக்கு முன்பு மாவட்டத்தில் புதிதாக இஸ்லாத்தை தழுவிக் கொண்டவர்களுக்கென ஒரு கல்விக்கூடம் அமைக்கப்பட்டது. அது பல்வேறு நாடுகளில் இருந்தும் பல்வேறு மதங்களிலிருந்தும் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டவர்களுக்காக அமைக்கப்பட்டிருந்ததால் அதற்கு தாருல் சாயித் என பெயரிடப்பட்டிருந்தது.

இவ் இல்லத்தில் மேற்பார்வையாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த ஈராக் நாட்டைச் சேர்ந்த சேகு அப்துர் ரஹ்மான் அவர்கள் நஜீப் ஹாஜியார் அவர்களை அழைத்து இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கு மாலை நேர வகுப்புக்களை நடத்தி இஸ்லாமிய ஆரம்பக் கல்வியை கற்றுக் கொடுக்கும் படி வேண்டினார். பல நாட்டு பாஷைகளையும் அறிந்து வைத்திருந்ததனாலேயே நஜீப் ஹாஜியார் அவர்களுக்கு இவ்வாய்ப்பு கிடைத்தது. அவர் இப்பணியை எவ்வித கட்டணமும் இன்றி அல்லாஹ்வுக்காக இலவசமாகச் செய்தார்.

வாரத்தில் மூன்று நாட்கள் கற்பித்தல் நடைபெற்றது. அவருக்கு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. முதல் முதலில் கற்பிக்க வேண்டிய விடயங்களை பற்றி பணிப்பாளர் நஜீப் ஹாஜியாருக்கு விளக்கம் அளித்தார். 1988.12.10 யிலிருந்து அவற்றை சிறப்பாக மேற்கொண்டு வந்ததோடு இவ்வகுப்புகளில் இலங்கையில் நடந்த விசேட அரசியல் நிலைமைகளையும் தனது மாணவர்களுக்கு அவர் விளக்கத் தவறவில்லை.

அதாவது 1988 டிசம்பரில் இலங்கையில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட அன்றைய பிரதமர் ஆர். பிரேமதாச ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வேட்பாளர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை வென்று இலங்கை ஜனாதிபதியாக தேரிவு செய்யப்பட்டார். அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன 1978 தேசிய தினம் முதல் பதவியில் இருந்து வந்ததையும் அவரது பதவிக்காலம் 1989 பெப்ரவரி மாதம் முடிவு பெறும் என்பதையும் நஜீப் தனது வகுப்பில் விளக்கினார். இதனால் அவரது அரசியல் அறிவையும் தெளிவையும் அவர் புதுப்பித்துக் கொண்டார்.

புதிய முஸ்லிம்களுக்கு அவர்களின் மொழியில் வெளியிடப்பட்ட புத்தகங்கள் தருவிக்கப்பட்டு வழங்கப்பட்டன. அத்தோடு புதிய புத்தகங்களையும் வெளியிட்டு மார்க்க விளக்கங்கள் வழங்கப்பட்டன. நஜீப் ஹாஜியார் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட இப்பணிகளுக்கான அனைத்து செலவுகளையும் கல்விக்கூடமே பொறுப்பேற்றுக் கொண்டது. அத்துடன் நூல்களில் கூடுதலான பிரதிகள் அச்சிடப்பட்டு வழங்கியதன் பின் மீதமாக இருந்த மேலதிக பிரதிகள் தொடர்ந்து வரும் புதிய மாணவர்களுக்காக அக்கல்விக் கூடத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டன. இன்னும் சில பிரதிகள் நீதிமன்றங்கள், நூல் நிலையங்கள் மற்றும் பொது இடங்களுக்கு இலவசமாகவும் கொடுக்கப்பட்டன.

ஆண், பெண் இரு சாராருக்கும் வெவ்வேறாக இரண்டு மாத காலங்கள் தொடர்ச்சியாக வகுப்புகளை நடத்தி வந்ததால் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்குக் கல்வி போதித்த ஆசிரியர்களுக்கு பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அச்சான்றிதழ் கவர்னர் காரியாலயத்திலிருந்து நஜீப் ஹாஜியாருக்கும் கிடைக்கப்பெற்றிருந்தது.

இக்காலவேளையில் தான் UAE இற்கான இலங்கைத் தூதுவர், அவரது செயலாளர் ஆகியோர் அடிக்கடி நஜீப் ஹாஜியார் அவர்களுடன் தொடர்பு கொண்டு அபூதாபியில் தொழில்வாய்ப்புப் பெற்றுள்ள இலங்கைப் பிரஜைகளின் பிரச்சினைகள் பற்றி அளவலாவினர். நஜீப் ஹாஜியார் உரியவர்களுக்கு உரிய விதத்தில் உதவி புரிந்ததோடு உதவி செய்யக்கூடியவர்களை தொடர்புபடுத்தியும் கொடுத்தார். தன்னால் முடிந்த உதவிகளை வழங்குவதில் நஜீப் ஹாஜியார் எப்போதும் துணிந்து முன் நின்று செயற்பட்டார்.

*படிப்பில் உறுதியாக இருந்தால் எண்ணியபடி உயரலாம் நமது கல்விதான் நம்முடைய எதிர்காலத்தை உருவாக்கும்.*

## மரணத்தை தழுவிய முன்னாள் அபுதாபி ஆட்சியாளர்.

முன்னாள் யு.ஏ.இ. யின் அபுதாபி ஆட்சியாளர் சேகு சஹ் பூத் பின் சுல்தான் 1989.02.12 அன்று ஞாயிற்றுக்கிழமை காலமானார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். அவர் அன்றைய யு.ஏ.இ. ஜனாதிபதி சேகு சாயித் பின் சுல்தானின் சகோதரர் ஆவார். அவர் 1966.08.06 ம் திகதி முதல் தனது மூத்த சகோதரர் சஹ்புத் பின் சுல்தானிடம் இருந்து அபூதாபி ஆட்சியை பொறுப்பேற்று நடத்தி

வந்தார். பின்னர் 1971.12.02 இல் அன்றைய ஜனாதிபதி தலைமையின் கீழ் ஐக்கிய அரபு இராச்சியம் உருவாக்கப்பட்டது. இது 7 எமிரேட்ஸுக்களை ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்ட நாடாகும்.

*எதிலிருந்து தப்பித்துக் கொண்டாலும் மனிதன் மரணப் பிடியிலிருந்து மட்டும் தப்ப முடியாது மரணம் நிச்சயம்.*

## இஸ்லாத்தை தழுவிய இளைஞர்களுக்கு இல்லம் சென்று கற்பித்தார்.

1989.05.08 ஆம் திகதி இராணுவ கர்னல் முகம்மது சமல் என்பவர் நஜீப் ஹாஜியாரின் காரியாலயத்துக்கு வருகை தந்தார். அவரின் வருகையைக் கண்டு என்னவோ ஏதோ என்று பயந்து போனார் நஜீப் ஹாஜியார் அவர்கள். ஆனால் அவர் பயந்தது போல் எதுவும் விபரீதமாக நடக்கவில்லை. கர்னல் ஸலாம் கூறியபடி வந்த விடயத்தை சொன்னார்.

“எனது வீட்டில் வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவர் இஸ்லாத்தை தழுவியுள்ளார். நீங்கள் வீடு வந்து அவருக்கு இஸ்லாம் மதம் பற்றி போதிக்க வேண்டும” என்று கூறியதும் நஜீப் ஹாஜியார் அவரது வேண்டுகோளை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு சம்மதம் தெரிவித்தார். அவரது வீட்டுக்குச் சென்று இஸ்லாத்தைப் பற்றி போதிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. தினமும் இராணுவ அதிகாரியின் வாகனம் நஜீப் ஹாஜியாரின் வீட்டுக்கு வந்து அவரை அழைத்துச் சென்றது. கற்பித்ததன் பின் மீண்டும் அவர் வாகனத்திலேயே கொண்டு வந்து விடப்பட்டார்.

*கற்றுக்கொடுங்கள் காலம் அவர்களை திருத்தி விடும் இல்லையேல் காலம் அவர்களுக்கு உணர்த்தி விடும் திருத்த நினைக்காதீர்கள் தோற்றுவிடுவீர்கள்.*

## மத்திய சிறைச்சாலையில் மார்க்கப் போதனை.

1991.07.24 ஆம் திகதி ஆகும் போது அல்ஜன் மாவட்டத்தின் மத்திய சிறைச்சாலையில் பல நாடுகளைச் சேர்ந்த சிறைக்கைதிகள் தத்தமது தண்டனை காலங்களை கழித்துக் கொண்டிருந்தனர். பலவகையான குற்றச் செயல்கள் நிரூபிக்கப்பட்ட ஏராளமான கைதிகள் அங்கு சிறைப்பட்டிருந்தனர். அப்போது நஜீப் ஹாஜியார் தமது பள்ளிவாசலில் பேஷ் இமாமாக கடமையாற்றிய ஆலிமுடன் அங்குள்ள சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளுக்கு சன்மார்க்கப் போதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டார். விசேடமாக மொழி பெயர்ப்பாளராகவும் பேஷ் இமாமுக்குத் துணையாகவும் சில காலங்கள் போதனையில் அவர் ஈடுபட்டார்.

*யார் நன்மை புரிய நாடுகிறார்களோ அல்லாஹ் அவர்களுக்கு அதிக துன்பங்களைத் தந்து இம்மை, மறுமை இரண்டிலும் வெற்றி பெற வைக்கிறான்.*

## நீதியரசரைச் சந்தித்து சந்தோசத்தில் சங்கமித்தார்.

இலங்கையின் முன்னாள் ஐந்து நிதியரசர்களுள் ஒருவராக பணியாற்றி விட்டு ஓய்வு பெற்று அச்சமயத்தில் U.A.E. க்கான இலங்கை தூதுவராகக் கடமையாற்றிய தூதுவர் ஜெமீல் அவர்களை 1992.05.11 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் சந்தித்தார். அவரது காரியாலயம் சென்று தனது தொழில் சம்பந்தமான விடயங்களை அவரோடு பகிர்ந்து கொண்டார். இந்தச் சந்திப்பு நஜீப் ஹாஜியாருக்கு மனத் திருப்தியைத் தந்தது.

*வசந்தக் காற்று தழுவி சென்றால் போதும் வாழ்க்கையில் சந்தோஷமே சங்கீதம்தான்.*

## இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கு (பெண்களுக்கு) இனிதே தொடர்ந்தும் கற்பித்தார்.

இஸ்லாத்தை தழுவியவர்களுக்கு முஸ்லிம் கல்வி நிலையத்தில் நஜீப் ஹாஜியார் மார்க்க கல்வியை கற்பித்தார் என்பது முன்னமே அறிந்த விடயம். அதேபோல் 1994.14.16 ஆம் திகதி அக்கல்வி நிலையத்தின் தலைவர் இஸ்லாத்தை தழுவிய பிற நாட்டைச் சேர்ந்த பெண்களுக்கு ஹாஜியாரின் வீட்டிலேயே மார்க்கக் கல்வியை கற்பிக்கும் படி கேட்டுக் கொண்டார். அதிலிருந்து கொஞ்ச காலம்வரை அந்தக் காரியத்தில் சிறப்பான முறையில் ஈடுபட்டார் நஜீப் ஹாஜியார்.

*கற்றுக்கொள்ளுங்கள் கற்பித்துக் கொடுங்கள். அவரவர் தமக்குரிய இடங்களிலேயே சிறப்பாக செயல்படுவதே நன்மை.*

## தர்மம் தலைகாக்கும்.

தர்மம் தலைகாக்கும் தக்க தருணத்தில் உயிர்காக்கும் என்பார்கள். ஆமாம் தர்மம் வழங்கும் பாக்கியம் நஜீப் ஹாஜியாருக்கு எதிர்பாராத விதமாக கிடைத்தது. 1994.07.09 ஆம் திகதி அஹ்மத் கலீபா அவர்கள் கையில் ஒரு தொகை பணத்தை கொடுத்து அதனை யு. ஏ.

இ. யில் உள்ள அயலவர்களுக்கு தர்மம் செய்யும்படி வேண்டிக் கொண்டார். நஜீப் ஹாஜியாரின் மீது வைத்துள்ள நம்பிக்கையே இதற்குக் காரணமாகும். ஆம் அன்று முதல் கலீபா அவர்கள் தர்மம் கொடுப்பதற்காக பணத்தொகை வழங்கும் போதெல்லாம் நம்பிக்கையுள்ளவராகவும் பொறுப்போடும் அதனைப் பகிர்ந்தளிப்பதில் தீவிர கவனத்துடன் செயற்பட்டார் நஜீப் ஹாஜியார்.

## பிரதி அமைச்சரை சந்திக்கக் கிடைத்த சந்தர்ப்பம்.

இலங்கையின் கைத்தொழில் பிரதியமைச்சர் திருமதி சுனேத்ரா ஜெயசிங்க அவரது கணவருடன் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அமீரகம் வந்திருந்தார். 1996.04.25 ஆம் திகதி அவர்கள் அபுதாபி வந்திறங்கினர். அவர்கள் அங்கு ஹில்டன் ஹோட்டலில் தங்குவதாகவும், அவர்களை போய் சந்திக்கும் படியும் இலங்கை தூதுவர் தொலைபேசி மூலம் நஜீப் ஹாஜியாருக்கு அறிவித்தார். நஜீப் ஹாஜியார் ஹில்டன் ஹோட்டல் சென்று அவர்களைச் சந்தித்தார். அங்கு U.A.E யின் விவகாரம், இலங்கையின் நிலைமை பற்றி அவர்களுடன் கலந்துரையாடினார்.

## நாட்டம் வைத்தல்.

1996 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒரு நாள் லுஹர் தொழுகைக்குப் பின் நஜிப் ஹாஜியார் தெருவுப் பள்ளிக்குச் சென்றிருந்தார். அங்கு அவரது சகோதரர் பாய்ஸும், தெருவுப் பள்ளி மஹல்லாவைச் சேர்ந்த ஹரீஸ் ஹாஜியாரும் கதைத்துக் கொண்டிருந்தனர். நஜீப் ஹாஜியாரைக் கண்டதும் அவருடன் ஸலாம் சொல்லி இருவரும் கதைக்கத் தொடங்கினர். மூவருமாகச் சேர்ந்து பள்ளிவாசலின் தற்போதைய நிலைமை பற்றிக் கதைத்தனர். இப்பள்ளிவாசலின் முன்பக்கத்தை ஊரார் சிலர் பணம் சேர்த்து கட்டி முடித்திருந்தனர். ஏனைய பகுதிகள் கட்டப்படாது பழைய நிலையில் இருந்தன. பழைய கூரையைக் காட்டி இங்கே சில பூச்சி புழுக்கள் நடமாடுவதால் தொழுகைக்கான இடம் எல்லாம் அசுத்தமாகிவிடுகின்றன. உங்களால் முடிந்தால் உட்பாகத்துக்கு சீலின் அடித்துத் தாருங்கள் என்று இருவரும் கேட்டனர்.

“பிரச்சனை இல்லை ஆனால் இதற்கு சீலின் அடிப்பது அனாவசியமாகும். ஏனெனில் பள்ளிவாசலின் ஏனைய பகுதிகளும் சீர் செய்ய வேண்டிய நிலையில் உள்ளதால் நாம் பழைய பகுதிகளை இடித்து புதியதொரு தோற்றத்தில் முழுமையாகவே கட்ட நிய்யத் வைப்போம். இன்ஷா அல்லாஹ் நான் அதற்கு என்னால் ஆன முயற்சியை செய்கிறேன்.” என தனது சகோதரர் பாய்ஸுக்கும் ஹரீஸ் ஹாஜியாருக்கும் வாக்கு கொடுத்தார் நஜீப் ஹாஜியார். தெருவுப்

பள்ளி விடயம் சம்பந்தமாக நல்லதொரு எதிர்பார்ப்பை விதைத்துவிட்டு தனது விடுமுறை முடிந்து U.A.E செல்ல ஆயத்தமானார் நஜீப் ஹாஜியர். அவரின் வேண்டுதலுக்கு இணங்க தர்கா நகர் ஜமாஅத் கவுன்ஸில் தலைவர் மஸா ஆலிமும் இது சம்பந்தமாக ஒரு கடிதத்தை வழங்கினார். அதில் தெருவுப் பள்ளிவாசலை கட்டி முடிப்பதற்கு ஆவண செய்யுமாறு கேட்கப்பட்டிருந்தது.

நஜீப் ஹாஜியார் இதைப்பற்றி பேசுவதற்காக பல தடவை அஹ்மத் கலீபாவைச் சந்திக்கச் சென்றார். பல வாய்ப்புகள் கிடைத்தும் கடிதத்தை அவரிடம் கொடுக்க தயங்கினார். ஏனென்றால் தேவையான பெருந்தொகை பணத்தை அவர் தருவாரா? என்ற சந்தேகம் அவரின் மனதில் தோன்றியது. பொறுமையோடும் நிதானமாகவும் செயல்பட வேண்டும் என அவர் நினைத்துக் கொண்டார்.

தெருவுப் பள்ளியைச் சென்று பார்த்தவர்களுக்குத் தெரியும், இவ்வளவு பிரமாண்டமான ஒரு பள்ளிவாசலை அதன் முழுமையான தோற்றத்துடன் கட்டி முடிப்பதற்கு எவ்வளவு பணம் செலவாகியிருக்கும? அவ்வளவு தொகைப் பணத்தை ஒரு கொடையாளி எடுத்த எடுப்பில் ஒருவருக்கு வழங்குவாரா? அப்படி வழங்குவராயின் அவர் மீது எந்தளவு நம்பிக்கை வைத்திருக்க வேண்டும? ஆம் நஜீப் ஹாஜியார் அஹ்மத் கலீபாவிடம் எந்தளவு நம்பிகையோடு நடந்திருப்பார் என்பதை இப்பள்ளிவாசலின் நிர்மாணப்பணியிலிருந்தே எம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. அந்தப் பணத்தொகையைப் பெற்றுக் கொள்ள அவர் எப்படியெல்லாம் பிரயத்தனம் செய்திருப்பார் என்பதையும் ஊகிக்க முடிகிறது.

## மகானின் வருகை மனதுக்குக் இனிமை.

பேருவளை புகாரி தக்கியா செய்க் அவர்கள் 1998.10.01 இல் U.A.E க்கு வருகை தந்தார். அவர்களுடன் நஜீப் ஹாஜியார் துபாயில் இருக்கும் அரூஸியதுல் காதிரியாத் தக்கியாவின் சேகு நாயகம் சுஐப் ஆலிம் அவர்களைச் சந்திப்பதற்காக அவர்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று அவரது துவா பிரார்த்தனையை பெற்றுக் கொண்டார்.

## தாய்நாட்டு அமைச்சர்களை தூதரகத்தில் சந்திப்பு.

நஜீப் ஹாஜியாருக்கு இலங்கைத் தூதுவராலயத்திலிருந்து அதன் அனுசரணையுடன் இலங்கை அமைச்சர்களான A.H.M. பௌசி, அலவி மௌலானா, லக்ஷ்மன் ஜெயக்கொடி ஆகியோருடன்

அன்றைய U.A.E இன் இலங்கை தூதுவர் கல்முனையைச் சேர்ந்த சம்சுதீன் மேலும் வேறு சில நாட்டுத் தூதுவர்களும் ஒரு ஹோட்டலுக்கு வந்திருப்பதாகவும் 1998.10.14 ஆம் திகதி தகவல் கிடைத்தது. அத்துடன் உடனடியாக அவரை அங்கு வரும்படியும் இலங்கைத் தூதுவர் அழைத்தார். அவரும் அங்கு சென்று அமைச்சர்களையும் பிரமுகர்களையும் சந்தித்தார். அங்கு பல முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அனைவருக்கும் அங்கேயே இராப் போசனம் வழங்கப்பட்டது. அன்று தனது உறவினரான நாஸிம் அவர்களையும் நஜீப் ஹாஜியார் அழைத்துச் சென்றார்.

## மறக்க முடியாத மகிழ்வான நினைவுகள்.

இலங்கையின் 51 வது சுதந்திர தின விழா அபுதாபி ஹில்டன் ஹோட்டலில் 1990.02.06 ஆம் திகதி மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. வைபவத்திற்கு நஜீப் ஹாஜியார் தனது மனைவியின் சகோதரியின் கணவர் ராமிஸ் அவர்களையும் அழைத்துச் சென்றார். இவ்விழாவில் U.A.E யின் பிரதியமைச்சரும் கலந்து சிறப்பித்தார். இலங்கையின் நீதி அமைச்சர் ஜோன் செனவிரத்ன அவர்களும் வருகை தந்திருந்தார். நஜீப் ஹாஜியார் அவருடன் இலங்கையர்களின் நிலைமை பற்றி கலந்துரையாடினார். அவருடன் புகைப்படமும் எடுத்துக் கொண்டார். விழாவில் இலங்கைத் தூதுவர் சம்சுதீன் உட்பட பல நாட்டு தூதுவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

## நற்பணிக்கு நிதி உதவி.

1972 - 1975 வரை நஜீப் ஹாஜியார் தான் அரபு மார்க்க கல்வியைக் கற்ற காலி சோலையில் அமைந்திருக்கும் முஸ்தவிய்யா அல் முபாரகியா அரபு மத்ரஸாவின் புனர்நிர்மாணப் பணிகளுக்காக 1999.04.24 ஆம் திகதி பண உதவி செய்தார். இந்தப் பணத்தொகை நஜீப் ஹாஜியார் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஷேக் அஹமது கலீபா சுவைதி அவர்ளினால் வழங்கப்பட்டது.

## தர்கா நகர் பெரிய பள்ளி மத்ரஸாவின் கட்டிட அடிக்கல் நாட்டு விழா.

இலங்கை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் யு.ஏ.இ தலைவரின் நிதியிலிருந்து 13,000 திர்ஹங்கள் தர்கா நகர் பெரியபள்ளி மத்ரஸாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. 1999.08.02 ஆம் திகதி தர்கா நகர் பெரிய பள்ளிவாசலின் மத்ரஸா அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. நஜீப் ஹாஜியார் அவ்வைபவத்தில் கலந்து

சிறப்பித்தார். 2003, 2004 ஆம் ஆண்டுகளில் 02 இலட்சம் திர்ஹங்களை கட்டட நிர்மாண வேலைகளுக்காக நஜீப் ஹாஜியார் ஷேக் அஹ்மது கலீபா மூலமாக பெற்றுக் கொடுத்தார். அந்நிதியினால் மத்ரஸா நிர்மாணப் பணிகள் நடைபெற்று 2004.08.13 ஆம் திகதி மத்ரஸா திறந்து வைக்கப்பட்டது.

1999.08.21 ஆம் தேதி ஐ.டி.என் தொலைக்காட்சியில் 12.40 மணிக்கு இடம்பெற்ற முத்துச்சரம் நிகழ்ச்சியில் நஜீப் ஹாஜியாரின் நேர்காணல் இடம்பெற்றது. அந்த நேர்காணலில் விஷேடமாக U.A.E ல் உள்ள இலங்கையர்களுக்கு நஜீப் ஹாஜியாரினால் ஆற்றப்படும் சேவைகள், உதவிகள் பற்றி ஆராயப்பட்டது.

1999.12.27 ஆம் திகதி அன்றைய இலங்கை உலமா சபையின் தலைவர் முபாரக் மௌலவி இலங்கை தூதரகத்தில் மொழிபெயர்ப்பாளராக கடமை ஆற்றும் செய்யித் அஹ்மதுடன் நஜீப் ஹாஜியாரின் வீட்டுக்கு வந்து நோன்பு திறந்தார். அந்தச் சந்திப்பில் அவர்கள் இலங்கை முஸ்லிம்களைப் பற்றி கலந்துரையாடினார்கள்.

## இதயத்தில் பதிந்த 2000 ஆம் ஆண்டு.

இக் காலகட்டத்தில் ஒரு பாகிஸ்தானியருக்கு புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக ஷேக் அஹ்மது கலீபா மூலமாக தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுத்தார் நஜீப் ஹாஜியார்.

இக்காலப் பகுதியில் நஜீப் ஹாஜியாரின் 4 பிள்ளைகளையும் அரபு, ஆங்கிலம் என்பவற்றை கற்று வந்த பாடசாலையிலிருந்து விலக்கி இந்திய மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் அரசாங்கப் பாடத்திட்டத்தை அமுல்படுத்தும் ஒரு தனியார் பாடசாலையில் நஜீப் ஹாஜியார் தம்பதியினர் சேர்த்தனர். ஏற்கனவே கற்ற பாடசாலையில் அரபு, ஆங்கிலம் கற்றுக் கொடுத்தமையால் ஹாஜியாரின் பிள்ளைகள் இரு மொழிகளிலும் சிறப்பு தேர்ச்சி பெற்றிருந்தனர். இங்கு ஒவ்வொரு தவணை பரீட்சை புள்ளிகளும் எகிப்து அரசின் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டு பின்னர் கல்வி அமைச்சு மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும் நடைமுறை உள்ளதால் நஜீப் ஹாஜியாரின் மூத்த மூன்று பிள்ளைகளிடமும் கல்வி அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட எகிப்திய அரசு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் உள்ளன.

எனினும் இந்திய அரசாங்கத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் புதிய பாடசாலையில் சர்வதேச மொழியாகிய ஆங்கில மொழியில் கூடுதலான பயிற்சி வழங்கப்படுவதன் காரணமாகவே நஜீப் ஹாஜியார் தனது பிள்ளைகளை அப் பாடசாலையில் சேர்த்தார்.

## சம்மதித்த பெருந்தகை

தர்கா நகர் தெருவுப் பள்ளியைக் கட்டித் தருமாறு நஜீப் ஹாஜியார் செய்கு அஹமது கலீபாவை பல தடவை கேட்ட போதும் அதற்கு சரியான பதில் கிடைக்கவில்லை. இதற்காக அவர் அல்லாஹ்வை பிரார்த்திக்காத நேரமே இல்லை. அனாலும் அவரது பிரார்த்தனை வீண்போகவில்லை. ஒரு நாள் புஹாரி தக்கியாவின் சேஹான செய்கு அஹமது பின் முஹம்மத் முன்னிலையில் செய்கு அஹமது கலீபா தெருவுப் பள்ளியைக் கட்டித் தர ஒப்புக்கொண்டார்.

மகிழ்ச்சியின் உச்சிக்குச் சென்ற நஜீப் ஹாஜியார் செய்கு அஹமது பின் முஹம்மத் அவர்களை அபூதாபியில் உள்ள தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று பகற் போசனமளித்து கௌரவித்தார். பின்னர் அவரை துபாய்க்கு அனுப்பி வைத்தார்.

2001.05.03 இல் முன்னாள் எகிப்தின் ஜனாதிபதி ஜமால் அப்துல் நாஸரின் மகள் ஹுதா செய்கு அஹமது கலீபாவின் மாளிகைக்கு விஜயம் செய்த போது நஜீப் ஹாஜியாரும் அவரைச் சந்தித்துப் பேசினார். ஹுதா அஹமது கலீபாவுடன் பல்கலைக்கழகத்தில் ஒன்றாக படித்தவர் ஆவார்.

## நிதி உதவியைக் கண்டு நிம்மதி அடைந்தார்.

2001.10.12 ஆம் திகதி தர்கா நகர் தெருவுப் பள்ளியைக் கட்டுவதற்கான நிதியை பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கினார் அஹமது கலீபா அவர்கள். இலங்கை நாணயப்படி அதற்கான பெறுமதியைத் தமக்கு அறியத் தருமாறு வேண்டிக் கொண்டார் அவர். இந்த உன்னதமான பணிக்காக 2001.10.16 அன்று நஜீப் ஹாஜியார் இலங்கை திரும்பினார். 2001.10.19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்மாவுக்குப் பின் தெருவுப்பள்ளியைப் புதுப்பித்துக் கட்டுவது தொடர்பான விடயங்களைத் தெளிவுபடுத்தினார் நஜீப் ஹாஜியார்.

2001.10.20 ஆம் திகதி பள்ளி வாசல் தர்மகர்த்தாக்கள், மேல் மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பிரதம நிறைவேற்றுப் பொறியியலாளர் அம்ஜாத் ஆகியோர் பள்ளி வாசல் கட்டுவது தொடர்பாக ஆலோசனை செய்தார்கள்.

## அல்லாஹ்வின் அருளோடு அடிக்கல் நாட்டப்பட்டது.

2001.10.26 ஆம் திகதி வெள்ளிக் கிழமை ஜும்மா தொழுகைக்குப்பின் தர்கா நகர் தெருவு பள்ளியின் புனர்நிர்மாண வேலைக்காக அடிக்கல்

நாட்டும் வைபவம் இடம்பெற்றது. நஜீப் ஹாஜியார் தனது கரங்களால் அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

2001.11.07 ஆம் திகதி செய்கு அஹமது பின் முஹம்மத் யு.ஏ.இ யில் நஜீப் ஹாஜியாரின் வீட்டுக்கு வந்து இரா போசன விருந்தில் கலந்து கொண்டதுடன் அவரது வீட்டிலேயே தங்கினார். மறுநாள் ஷேக் அவர்களுடன் அபுதாபியில் உள்ள கலாச்சார அமைச்சின் பிரதி அமைச்சரை சந்தித்து மார்க்கம் சம்பந்தமான பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினர். பிறகு அவரை துபாய் கொண்டு சேர்த்ததன் பின் நஜீப் ஹாஜியார் அல்ஜன் திரும்பினார்.

## 2002 ஆம் ஆண்டின் இனிக்கும் சில நிகழ்வுகள்.

2002.07.23 அன்று தர்கா நகரில் அலீப் தனியார் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அப்பாடசாலைக்கு முதலீடு செய்த பிரதான பங்காளர்களுள் நஜீப் ஹாஜியாரும் ஒருவர் ஆவார்.

2002.08.03 ஆம் திகதி தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரியில் கா.பொ.த. சாதாரண தரம், உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் நடைபெற்றது. இவ்வைபவத்தில் முன்னாள் அதிபர் சுஜப் அவர்கள் நஜீப் ஹாஜியாரின் கரங்களினால் சில மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் படி அவரை அழைத்தார். நஜீப் ஹாஜியார் பரிசில்களை வழங்கியதோடு தொடர்ந்து இப்படியான உற்சாகப்படுத்தும் நிகழ்வுகள் இடம் பெற வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

2002.08.15 ஆம் திகதி தெருவுப் பள்ளிக்கு தொழுகைக்காக சென்ற சமயம் அங்கு ஒரு பலகைத் துண்டு கண்டெடுக்கப்பட்டது. அதில் பள்ளிவாசல் ஹிஜ்ரி 1234 ஆம் ஆண்டு ரமழான் மாதம் பிறை 05 இல் கட்டப்பட்டது என எழுதப்பட்டிருந்தது. இந்தப் பலகை இப்பள்ளிவாசல் இன்றைக்கு 212 வருடங்கள் பழமை வாய்ந்தது என்பதைத் தெளிவுபடுத்தியது.

2002.08.17 அன்று தர்கா நகர் அல் ஹம்ரா மகா வித்தியாலயத்தில் இடம் பெற்ற சன்மார்க்க அறிவிப்பு போட்டியில் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராக நஜீப் ஹாஜியார் அவர்களும் கலந்து கொண்டார்.

## 2003 ஆம் ஆண்டின் சில நிகழ்வுகளும் நினைவுகளும்.

2003.07.16 ஆம் திகதி தர்கா நகரின் இரு பெரிய பள்ளிவாசல்களின் தர்மகர்த்தாக்களில் ஒருவரான நிஸாம் மசூர் மற்றும் தெருவுப்பள்ளி

கட்டிட நிர்மாணக் குழு உறுப்பினரான சபுவத் ஹாஜியார் ஆகியோர் இலங்கையில் இருந்து அகமது கலீபாவை சந்திக்க யு.ஏ.இ. வந்தனர்.

2023.08.08 ஆம் திகதி நடக்கவிருந்த தெருவுப் பள்ளி திறப்பு விழாவுக்கான அழைப்பிதழை செய்கு அஹமது கலீபாவுக்கு அவர்கள் வழங்கினர். இதற்குத் தேவையான ஏற்பாடுகளை எல்லாம் நஜீப் ஹாஜியார் அவர்கள் செய்து கொடுத்தார்.

2003.08.06 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் இலங்கை செல்வதற்கு விடை பெறுவதற்காக அஹமது கலீபாவிடம் சென்றிருந்த வேளை, திறக்கவிருக்கும் பள்ளிவாசல் சம்பந்தமாக நினைவுபடுத்தியதோடு இப்பள்ளிவாசல் கட்டுவது சம்பந்தமாக தனது உள்ளத்தில் இருந்த ஆசையையும் எதிர்பார்ப்பையும் அஹமது கலீபாவிடம் தனக்கிருந்த மரியாதை, நம்பிக்கையையும் சாந்தமானமுறையில் விளக்கிக் கூறினார். அதை கேட்ட கலீபா அவர்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றித் தந்த அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் என அல்லாஹ்வையே புகழ்ந்தார்.

மஹ்ரிப் தொழுகைக்குப் பின் நஜீப் ஹாஜியாரும் அஹமது கலீபாவின் தனிப்பட்ட காரியதாசியான கமீஸ் ஈஸாவும் ஜோர்தான் நாட்டைச் சேர்ந்த மஹ்மூத் முஹம்மத் அபூ வத்பா என்பவரும் செய்கு அஹம்மது கலீபாவிடம் விடை பெற்றுக்கொண்டு அரச வாகனத்தில் அபூதாபி விமான நிலையத்திற்கு புறப்பட்டனர். மறுநாள் காலை அவர்கள் இலங்கை வந்தடைந்தனர். அவர்களை வி.ஐ.பி. அந்தஸ்தில் விமான நிலையம் வரவேற்றது.

பள்ளிவாசலின் நிர்வாகக் குழுவினர் அம்மூவரையும் விமான நிலையத்தில் அன்போடு வரவேற்றதுடன் கொழும்பு கலதாரி ஹோட்டலில் அவர்களுக்கு காலை உணவையும் ஏற்பாடு செய்தனர். பின்னர் விருந்தினர்கள் அமூத்கமை ஈடன் நட்சத்திர ஹோட்டலுக்கு அழைத்து வரப்பட்டனர். ஹோட்டல் முகாமைத்துவம் அவர்களை இலங்கையின் சம்பிரதாயபூர்வமான நாட்டியத்துடன் வரவேற்றது. மாலையில் நஜீப் ஹாஜியார் அந்த முக்கிய பிரமுகர்களை தனது வீட்டுக்கு அழைத்து வந்தார்.

அங்கு பள்ளி பரிபாலன சபை மற்றும் பள்ளி கட்டட நிர்மாணக் குழுவுடனும் பள்ளிவாசல் பற்றியும் மறுநாள் நடக்கவிருக்கும் நிகழ்ச்சி பற்றியும் அவர்கள் கலந்து ஆலோசித்தனர். அமூத்கமை ஈடன் ஹோட்டலில் அவர்கள் தங்குவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதற்கு இடையில் சுகயீனமுற்றிருந்த தனது தாயைச் சென்று சந்திக்கவும் நஜீப் ஹாஜியார் தவறவில்லை.

2023.08.08 ஆம் திகதி வெள்ளி காலை 11 மணியளவில் நஜீப் ஹாஜியாரும் மற்ற இரண்டு பிரமுகர்களும் தங்கியிருந்த ஈடன் ஹோட்டலில் இருந்து தர்கா நகர் நோக்கி புறப்பட்டு வந்தார்கள். பெரிய பள்ளிவாசல் முன் வாயிலில் வைத்து ஊர்மக்கள் அவர்களை வரவேற்றனர். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்களான இம்தியாஸ் பாக்கிர் மார்க்கர், முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி, ரவூப் ஹக்கீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

U.A.E. நாட்டின் இலங்கைக்கான தூதுவர், குவைத் நாட்டின் இலங்கைகான தூதுவர், நகரசபைத் தலைவர் மஸாஹீம் ஹாஜியார், மர்ஜான் பளீல் மற்றும் உலமாக்கள் இன்னும் பெரியவர்களுடன் ஏறத்தாழ 8000 முஸ்லிம் சகோதரர்கள் பிரமுகர்களை கால்நடை ஊர்வலமாக பெரிய பள்ளிவாசலில் இருந்து பிரதான வீதியின் வழியே தெருவுப் பள்ளிவாசல் வரை அழைத்துச் சென்றனர். ஊர்வலத்தில் முன்வரிசையில் சிறுவர்கள் கஸீதா பாடியதுடன், கள்ளியடி விளையாட்டுகளும் இடம் பெற்றமை கண்கொள்ளாக் காட்சிகளாக இருந்தன.

பள்ளிவாசல் திறப்பு விழா வைபவத்தில் மஸா ஆலிம் அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. கமீஸ் ஈஸா அவர்கள் பள்ளிவாசலைத் திறந்து வைத்தார். செய்கு அஹ்ம்மது கலீபாவின் உரையை அரபியில் நிகழ்த்த செய்கு ஹைருல் பஷர் தமிழில் மொழி பெயர்த்தார். வைபவத்தில் நஜீப் ஹாஜியார் அரபியிலும் தமிழிலும் உரையாற்றினார். நிஸாம் மாஸ்டர் நன்றியுரை வழங்கினார். வைபவத்தில் கலந்து சிறப்பித்த அனைவருக்கும் பகல் போசனம் வழங்கப்பட்டது. நஜீப் ஹாஜியாரின் உரையை அன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பதிவு செய்து ஒலிபரப்புச் செய்தது. இப்பள்ளிவாசலைக் கட்டுவதற்கான செலவினை நஜீப் ஹாஜியார் தனது அயராத முயற்சியால் பெற்றுக் கொடுத்தார். தொடர்ந்து நஜீப் ஹாஜியார் பிரமுகர்களுடன் அமர்ந்து பெரிய பள்ளிவாசலில் அமைந்துள்ள அரபுக் கலாசாலையைக் கட்டி முடிப்பதற்கான வழிகளை பற்றி ஆராய்ந்தார். பின்னர் அவர் பிரமுகர்களுடன் தங்காலைக்குச் சென்று ஒரு ஹோட்டலில் தங்கினார்.

மறுநாள் காலை அவர்கள் கண்டிக்குச் சென்றனர். அங்கு வருடாந்தம் நடைபெறும் கண்டி பெரஹராவைக் கண்டுகளித்தனர். பெரஹராவில் நூற்றுக்கணக்கான யானைகள் அலங்கரிக்கப்பட்டு வரிசையாக சென்ற காட்சியை அரபு நாட்டு பிரமுகர்கள் மெய் மறந்து இரசித்துக் கொண்டிருந்தனர். பெரஹராவைப் பற்றிய சிங்கள மொழியிலான நேர்முக வர்ணனையை அரபு மொழியில் மொழிபெயர்த்து நஜீப் ஹாஜியார் பிரமுகர்களுக்கு விளக்கினார். அன்று கண்டியில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இரவைக் கழித்த மூவரும் மறுநாள்

காலை கொழும்பை வந்தடைந்தனர். அன்று இரவு கொழும்பு கலதாரி ஹோட்டலில் தங்கினார்கள்.
2003.08.11 ஆம் திகதி கமீஸ் ஈஸா யு.ஏ.இ. திரும்ப ஆயத்தமாக இருந்ததால் அவரை நஜீப் ஹாஜியார் மரியதைக்குரிய மஹ்மூத் முஹம்மத் அபூ வத்பா அவர்களுடன் கொழும்பு விமான நிலையத்துக்கு அழைத்துச் சென்றார். கமீஸ் ஈஸா அவர்களை வழியனுப்பியதன் பின்னர் அவ்விருவரும் நுவரெலியாவுக்குச் சென்று அன்றைய இரவை அங்கு கழித்தனர். மறுநாள் காலை அவர்கள் மீண்டும் அழுத்கமை ஈடன் ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தனர்.

2003.08.13 ஆம் திகதி நஜீப் ஹாஜியாரும் மஹ்மூத் அவர்களும் பேருவளை மருதானையில் உள்ள நஜீப் ஹாஜியாரின் மனைவி குடும்பத்தினர் சிலரை சந்தித்துவிட்டு பேருவளை புகாரி தக்கியா செய்கு அஹமது பின் முஹம்மத் அவர்களைச் சந்தித்தனர். பின்பு அவரையும் அழைத்துக் கொண்டு தர்கா நகர் தெருவுப் பள்ளியைக் காண்பிப்பதற்காக சென்றனர். தொடர்ந்து நஜீப் ஹாஜியாரின் வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேநீர் உபசாரத்தில் கலந்து கொண்டனர். அதன் பின்னரே செய்கு அவர்களை நஜீப் ஹாஜியார் மகிழ்ச்சியோடு அனுப்பி வைத்தார்.

2003.08.15 ஆம் திகதி நஜீப் ஹாஜியாரும் மஹ்மூத் பின் முஹம்மத் அவர்களும் அபுதாபிக்குத் திரும்பினர். அன்றிரவே செய்கு அஹமது கலீபா சுவைதியைச் சந்தித்த நஜீப் ஹாஜியார் பள்ளிவாசல் திறப்பு விழா பற்றிய விவரங்களை விரிவாக எடுத்துக் கூறினார். இதனால் சந்தோசமடைந்த கலீபா அவர்கள் தர்கா நகர் பெரிய பள்ளிவாசலில் அமைந்துள்ள மத்ரஸாவை முழுமையாக கட்டி முடிக்கத் தேவையான முழுப் பணத்தொகையையும் தருவதாக வாக்களித்தார்.

## ஜமாத் கவுன்சிலின் தலைவர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி மஸா ஆலிம் அவர்களின் வாழ்த்து.

எங்கள் ஊரில் ஏறக்குறைய 20-25 வருடங்களுக்கு முன் பார்க்கும் போது பழைமை மிக்க இரண்டு ஜும்மா பள்ளிவாயல் மாத்திரம் தான் இருந்தன. ஒன்று பெரிய பள்ளிவாயல் மற்றது இன்று நாம் திறந்து வைத்த புது தோற்றத்துடன் காட்சி தரும் தெருவுப் பள்ளிவாயல். இந்தக் காலத்தில் தெருவுப் பள்ளியிலே ஜும்மாத் தொழுகையை நிறைவேற்றுவதற்காக வரும் மக்கள் கூட்டம் பள்ளியின் வெளிப் பாதையில் அதேபோன்று சாவியா கடடடத்தில் தொழுகையை நிறைவேற்றுவதை கண்ட ஊர் ஜமாத்தைச் சேர்ந்த மர்ஹூம் அமீர் ஆலிமின் மகன் நஜீப் ஹாஜி அவர்களின் பெரும் முயற்சியினால் இன்று இப்பள்ளி வாசல் சிறந்த முறையில் இரண்டு மாடிக் கடடடமாக (மூன்றாவது மாடி பின்னர் கட்டப்பட்டது) காட்சியளிப்பதைக் காணும் போது மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது.

இதேபோல் இந்த பள்ளிவாசலை சிறந்த முறையில் அமைப்பதற்காக அதிகமான ஜமாஅத்தார்கள், மஹல்லா வாசிகள் மிகவும் குறுகிய காலத்தில் இதனை கட்டி முடிப்பதற்கு இரவு பகல் பாராமல் உதவினார்கள். அவர்களுக்கு அல்லாஹ் பூரண நன்மையைக் கொடுப்பவனாக.

## ஜும்மா பள்ளிகளின் தர்மகர்த்தாக்கள் சபைத் தலைவர் ஐ.எல்.எம். சுஜப் அவர்களின் வாழ்த்து.

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது. அவனது இறுதித் தூதர் முகமது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அல்லாஹ்வின் சாந்தி உண்டாவதாக. தர்கா நகரில் இரு கண்களைப் போன்று பழமை வாய்ந்த மஸ்ஜித்களில் ஒன்றான தெருவுப் பள்ளியென அழைக்கப்படும் பிரபல ஜும்மா மஸ்ஜித் புதிதாக இரண்டு மாடிகள் கொண்டதாக அழகாக நிர்மாணிக்கப்பட்டு இன்று 2003.08.08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 1424 ஜமாத்துல் ஆஹிர் மாதம் பிறை 10 இல் முற்பகல் 11 மணியளவில் திறந்து வைக்கப்படும் வைபவத்தை முன்னிட்டு மஸ்ஜிதின் தர்மகர்த்தாக்கள் சார்பாக இச்செய்தியை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையின் மேற்கு மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தில் பழங்காலம் தொட்டு முஸ்லிம்கள் திரண்டு வாழும் பகுதிகளில் தர்கா நகரும் ஒன்றாகும். இந்நகரின் பழம் குடிகள் அரபு நாடுகளில் இருந்து இலங்கையில் குடியேறிய அரபு மக்களின் பரம்பரையினராவர்.

அரபு நாடுகளில் ஒன்றான ஐக்கிய அரபு எமிரேத்தின் அரச குடும்பத்தைச் சேர்ந்த மேன்மை தங்கிய அஷ்ஷேய்க் அஹமது கலீபா அல் சுவைதி அவர்கள் இப்பழைமை வாய்ந்த மஸ்ஜிதை புனர்நிர்மாணம் செய்து புதுப்பித்துக் கட்டித்தர முன்வந்தமை அல்லாஹ் எமதூர் மக்களுக்குச் செய்த பெரிய பாக்கியமாகும்.

இப்பெரியார் இப்படி எம் ஜும்மா மஸ்ஜிதை நிர்மாணிக்க உதவி செய்ய முன்வர தற்போது எமிரேட்ஸில் வாழ்ந்து வரும் எமது ஊரைச் சேர்ந்த முஹம்மது நஜீப் பின் அமீர் ஆலிம் பெரும் காரணமாய் இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அல்லாஹ் பொருந்தி கொள்வானாக.

முதன் முறையாக கி.பி 1730 ஆண்டு இம் மஸ்ஜித் கட்டப்பட்டு காலத்துக்குக் காலம் ஜமாத்தாரின் தேவைக்கேற்ப பலமுறை கட்டப்பட்டு 1906 ஆம் ஆண்டு தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள பழைய கட்டிடம் கட்டப்பட்டது.

மஸ்ஜிதின் நிர்மாண வேலை 2001 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது பூரணமாகப்பட்டுள்ளது. இக்கட்டட வேலையை தர்மகர்த்தாக்களை உள்ளடக்கிய ஒரு கடடட நிர்மாணக்குழு பொறுப்பேற்று அக்குழுவில் அங்கம் வகிக்கும் மஸ்ஜித் மஹல்லாவை சேர்ந்த இளைஞர்கள் பெரும் முயற்சி செய்து உரிய காலத்தில் கட்டட வேலைகளை முடித்துள்ளனர். இவர்களது சேவையை அல்லாஹ் என்றும் பொருந்திக் கொள்வானாக. இப்போது மீரா மஸ்ஜிதிலிருந்து ஐங்காலமும் ஒலிக்கும் அதானுக்கு செவி கொடுத்து ஜமாத்தார்கள் தொழுது கேட்கும் துஆ இப்பள்ளி நிர்மாணத்துக்கு பெரிதும் உதவி செய்த அஷ்சேய்க் கலீபா அஸ் ஸுவைதி அவர்களுக்கும் இவ்வுதவியைப் பெற்றுக் கொடுக்க காரணமாக இருந்த முஹம்மது நஜீப் பின் அமீர் ஆலிம் அவர்களுக்கும் அல்லாஹ்வின் அருள் வேண்டிப் பிரார்த்திப்போமாக.

## அல்ஹாஜ் அமீர் ஆலிம் முஹம்மது நஜீப் அவர்களின் வாழ்த்து.

1972 ஆம் ஆண்டு பெரிய பள்ளிவாயலில் முதல் நாள் சிரமதானத்தில் நான் 14 வயது சிறுவனாக இருக்கும்போது கலந்து கொண்டேன். இன்று இத் தெருவுப்பள்ளியை எல்லாம் வல்ல இறைவன் அருளால் என் மூலமாக கட்டி முடிக்க வழி அமைத்ததற்காக அல்லாஹ்வைப் புகழ்ந்து தினமும் நன்றி செலுத்த நான் கடமைப்பட்டுள்ளேன்.

1996 ஆம் ஆண்டு நான் எடுத்த இந்த முயற்சி 2001 ஆம் ஆண்டு தொடங்கி 2003 ஆம் ஆண்டு முடிவடைந்துள்ளது. கொடைவள்ளல் மேன்மை தங்கிய அஹமது கலீபா ஸுவைதியை நான் முதன் முதலில் பள்ளியில் தான் சந்தித்தேன். நான் அவர் மாளிகையின் அருகாமையில் தான் இப்போது வசிக்கிறேன். அவருடன் பள்ளியில் ஏற்பட்ட சந்திப்பை அடுத்து என்னுடைய பூரண சுயசரிதையை கேட்டறிந்த அவர் என் மேல் நம்பிக்கை கொண்டு இப்பள்ளிவாசலை கட்டி முடிக்க நிதி உதவி புரிந்தார். இந்தப் பணத்தை பள்ளி பரிபாலன கட்டடக் குழுவிற்கு அனுப்பினேன். அவர்கள் நம்பிக்கையுடன் செயல்பட்டு நான் அனுப்பிய பணத்தை சரியான முறையில் செலவு செய்து பள்ளிவாசலைக் கட்டி முடித்தார்கள். இது எனக்குக் கிடைத்த பாக்கியமாகும். இப்பாக்கியம் எனது தகப்பனார் நேர்மையான ஒரு உலமாவாக விளங்கியதனால் கிடைத்ததாகும். ஊரில் ஏற்படும் பிரச்சனைகளை கேட்டு அறிந்து விளக்கம் கொடுத்ததாலும் அவரின் துஆவினாலும் எனக்கு கிடைத்த வெற்றியாகும்.

எனக்கு இப்பள்ளிவாசலைக் கட்ட முதல் முதலில் ஊக்கம் தந்த எனது சகோதரர் பாய்ஸ் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

## செய்கு அஹமது கலீபாவின் தாயார் மண்ணை விட்டு பிரிந்தார்.

2003.08.23 அன்று செய்கு முஹமது கலீபாவின் தாயார் காலமானார். கலீபாவின் தந்தை அடக்கம் செய்யப்பட்ட இடத்திற்குப் பக்கத்திலேயே தாயாரின் ஜனாஸாவும் நல்லடக்கம் செய்யப்பட்டது. நஜீப் ஹாஜியார் ஜனாஸாவின் எல்லா விடயங்களிலும் கலந்து கொண்டார். தர்கா நகர் பள்ளி நிர்வாகிகளிடம் அவரது பெயரில் ஜனாஸா தொழுகை நிறைவேற்றும்படி வேண்டிக் கொண்டார். வெள்ளிக்கிழமை ஜும்மாவுக்குப் பின் தெருவுப் பள்ளியில் அவரது பெயருக்கான ஜனாஸா தொழுகையோடு துஆப் பிரார்த்தனையும் நடைபெற்றது.

2003.08.26 ஆம் திகதி தற்போதைய யு.ஏ.இ. யின் ஜனாதிபதியும் அன்றைய முடிக்குரிய இளவரசருமாகிய செய்கு கலீபா பின் ஸாபித் அவர்களும் அஹம்மது கலீபா சுவைதியின் மாளிகைக்கு வருகை தந்தார். அவருடன் இன்றைய யு.ஏ.இ. முடிக்குரிய இளவரசரும் அன்றைய இராணுவ தளபதியுமான முகம்மது பின் சாயித், வெளிநாட்டு அமைச்சர் அப்துல்லாஹ் பின் சாயிதும், அல்ஜன் மாவட்ட ஆளுனர் தஹ்நூன் பின் முஹமத் ஆகியோரும் சமூகமளித்தனர்.

2003.08.27 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் செய்கு அஹமது கலீபாவுடன் அவரது தோட்டத்திற்குச் சென்றார். அன்று அமெரிக்காவின் துணைத் தூதுவர் செய்கு அஹமது கலீபாவைக் சந்தித்து அவருக்கு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

2003.09.06 ஆம் திகதி இந்திய கேரளாவைச் சேர்ந்த செய்கு ஏ.பி. அபூபக்கர் அஹமது கலீபாவைச் சந்திக்க வந்திருந்த போது நஜீப் ஹாஜியார் அவரை செய்கு அஹமது கலீபா சுவைதியின் உத்தரவின் பேரில் அழைத்து வந்தார். இவர் கேரளா மாநிலத்தில் பல சன்மார்க்க கூட்டங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் பல பொது சேவை நிலையங்களின் தலைவராகவும் கேரளா மாநிலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒருவராகவும் இருக்கின்ற அதேவேளை பிற்காலத்தில் இந்தியாவின் முப்தியாகவும் தெரிவு செய்யப்பட்டார்.

இக்கால இடைவெளியில் U.A.E ஜனாதிபதியின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரான செய்கு முகம்மது ஹம்தான் இலங்கைக்கு

வநதிருந்த போது தர்கா நகர் தெருவு பள்ளிக்கு சமூகம் அளித்தார். அவ்வேளை பள்ளிவாசல் தர்மகர்த்தாக்களும் கட்டிடக் குழுவும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவரது இலங்கை விஜயம் பற்றி அறிந்து கொண்டனர்.

அதாவது அவர் தப்லீக் ஜமாஅத் பணியில் 40 நாள்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். உடனே நஜீப் ஹாஜியார் செய்கு அஹமது கலீபாவுடன் தொடர்பு கொண்டு அவருடன் பேச வைத்தார். அவர்கள் பள்ளிவாசலையும், தர்கா நகர் மக்களையும் பாராட்டி பேசியதோடு அவர் இலங்கையில் பல பள்ளிகளுக்கு சென்றதாகவும் ஆனால் இதுபோன்ற அழகான புதுப் பொலிவுடன் கூடிய பள்ளி ஒன்றை காணவில்லை என்றும் அஹமது கலிபாவிடம் கூறினார். செய்கு முகம்மது ஹம்தான் இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரை நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என்று செய்கு அஹமது கலீபா நஜீப் ஹாஜியாரிடம் கேட்டுக் கொண்டர். நஜீப் ஹாஜியார் இதனை தர்கா நகர் பள்ளிகளின் தர்மகர்த்தாக்களிடம் பள்ளிவாசல் நிர்மாணக் குழுவிடமும் கூறிவைத்தார். அவர்களும் அவ்வாறே செயல்பட்டனர்.

2004.07.18 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் இலங்கை திரும்பினார். 2004.07.23 ஆம் திகதி தர்கா நகர் பெரிய பள்ளிவாசலில் இஷாத் தொழுகையின் பின்னர் பள்ளிவாசல் தர்மகர்த்தாக்களுடனும், மத்ரஸா நிர்வாகிகளுடனும் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார். 2004.08.13 ஆம் திகதி மத்ரஸாவின் திறப்பு விழாவை கோலாகலமாகச் செய்வதென அக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

## மனம் குளிர வைத்த மத்ரஸா திறப்பு விழா.

1918 ஆம் ஆண்டு எமது முன்னோர்களால் பெரியபள்ளி மத்ரஸா ஆரம்பிக்கப்பட்டு 1930 களில் நஜீப் ஹாஜியாரின் தந்தை அமீர் ஆலிம் இம் மத்ரஸாவிலேயே ஆரம்ப சன்மார்க்கக் கல்வியை கற்கத் தொடங்கினார் என அறியத் கிடைத்தது. நஜீப் ஹாஜியார் அவர்களும் 1970 ஆம் ஆண்டில் பாடசாலை செல்லும் நாட்களில் மாலை நேரங்களில் இம் மதரஸாவிலே ஆரம்ப சன்மார்க்கக் கல்வியைக் கற்றுள்ளார்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருப்பெயரால் மத்ரஸாவுடன் எப்போதும் தொடர்பில் இருந்த தனக்கு இரண்டு மாடிகளையும் கட்டிக் கொடுப்பதற்கான பாக்கியத்தை இறைவன் அருளினான் என நஜீப் ஹாஜியார் மனநிறைவுடன் எந்நேரமும் கூறிக் கொள்வார். இம் மத்ரஸாவைக் கட்டுவதற்கு நஜீப் ஹாஜியாருக்கு உற்சாகம்

ஊட்டியவர் அப்துல் ஹலீம் ஹாஜியார் என நன்றியுணர்வோடு சொல்கிறார் அவர்.

மத்ரஸாவின் திறப்பு விழாவிற்கான ஏற்பாடுகள் சிறப்பாக ஒழுங்கு செய்யப் பட்டிருந்தன. பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள், மத்ரஸா நிர்வாகிகளுடன் கௌரவ ஆளுநர் அலவி மௌலானா அவர்களை சிறப்பு விருந்தினராகவும், செய்கு அஹமது கலீபா அவர்களை பிரதம அதிதியாகவும் அழைக்கவே தீர்மானித்திருந்தனர். எனினும் செய்கு அஹமது கலீபாவின் உத்தரவின் பெயரில் நஜீப் ஹாஜியாரே பிரதம அதிதியாக இவ்விழாவில் கலந்து கொண்டார். விழாவிற்கு நஜீப் ஹாஜியார் அவர்களைச் சற்று தாமித்தே சமுகம் தரும்படி ஏற்பாட்டாளர்கள் வேண்டிக் கொண்டனர்.

வைபவத்தன்று கௌரவ ஆளுநர் அலவி மௌலானாவை ஊர் மக்கள் கோலாகலமாக வரவேற்றனர். அலவி மௌலானாவுடன் பள்ளிவாசல் தர்மகர்த்தாக்களின் தலைவர் ஷாஜகான் ஹாஜியார், மத்ரஸா நிர்வாகிகள், ஊர் பிரமுகர்கள், ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து நஜீப் ஹாஜியாரின் வருகைக்காக காத்திருந்தனர். நஜீப் ஹாஜியார் அவரது மூன்று புதல்வர்களுடனும் மாமனார் ஹுஸைன் ஹாஜியாருடனும் ஸப்வத் ஹாஜியாரின் வாகனத்தில் வந்திறங்கினார். பிரதான பாதையின் இரு மருங்கிலும் ஊர் மக்கள் திரண்டு கரகோசம் செய்து அவரை வரவேற்றனர்.

அல் ஹாஜ் சாஜஹான் ஏ. பாதாஹ் அவர்கள் நஜீப் ஹாஜியாருக்கு பூமாலை அணிவித்து வரவேற்றார். சிறுவர்கள் கஸீதாவை ஓதி முன்னே செல்ல பிரதான வீதியில் ஊர்வலமாக மத்ரஸா வாயில் வரை நஜீப் ஹாஜியாரை அழைத்துச் சென்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

நஜீப் ஹாஜியார் தனது திருக்கரங்களால் மத்ரஸாவின் வாயிலைத் திறந்து வைத்தார். அவரின் புதல்வர் நிஹ்மதுல்லாஹ் கல்வெட்டை திரை நீக்கம் செய்தார். பின்பு பொதுக் கூட்டம் அரம்பமானது. பொதுக்கூட்டத்தில் ஆளுநர் அலவி மௌலானா உரையாற்றும் போது நஜீப் ஹாஜியாரின் அருஞ் சேவைகளை பாராட்டியதோடு புதல்வர் நிஹ்மதுல்லாஹ்வின் ஆங்கிலம் அரபு மொழியிலான உரையையும் சிலாகித்துப் பேசினார்.

நஜீப் ஹாஜியார் அன்றைய விழாவில் அரபியிலும் தமிழிலும் உரையாற்றி எல்லோர் மனதையும் காந்தம் போல் கவர்ந்தார். அன்று வெளியிட்ட “வித்தியாதீபம்” என்னும் நினைவு மலரின் முதற் பிரதியை கௌரவ ஆளுநர் அலவி மௌலானாவிடம் நஜீப் ஹாஜியார் கையளித்தார். ஜும்மாத் தொழுகையின் பின்னர் மீரா

பள்ளி வாசலிலே மாலை நேர குர்ஆன் வகுப்பு ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. முதன் முதலில் மாணவர்களுக்கு புனித குர்ஆனின் சில ஆயத்துக்களை ஓதிக் கொடுத்து அவ்வகுப்பினை அங்குரார்ப்பணம் செய்து வைத்த பெருமையும் நஜீப் ஹாஜியாரையே சேரும்.

2004.10.24 ஆம் திகதி ரமழான் மாதம் நஜீப் ஹாஜியார் கலீபாவின் தோட்டத்தில் அவருடன் நோன்பு திறந்தார். தராவீஹ் தொழுகைக்குச் செல்ல முன்னால் பாராளுமன்ற சபாநாயகர், முஹம்மது கலீபா அல் ஹப்தூர் அவர்களும் தற்போதைய உப சபாநாயகர் ஹமத் சுல்தான் அல் தர்மகீ அவர்களும் அங்கு சமூகமளித்தனர்.

## நெருக்கத்தில் கண்ட சந்திப்பு.

2007.03.30 ஆம் திகதி நஜீப் ஹாஜியாரும் அவரது மகன் நிஹ்மத்துல்லாஹ்வும் சேகு அஹமது கலீபா சுவைதியுடன் அபுதாபியில் இருக்கும் எமிரேட் மாளிகைக்குச் சென்றனர். அங்கு அல்ஜீரியாவின் ஜனாதிபதி அப்துல் அஸீஸ் தங்கி இருந்தார். அவரை கண்டு கைலாகு செய்து சலாம் கூறி தேநீர் உபசார விருந்தில் கலந்து கொள்ளும் வாய்ப்பு நஜீப் ஹாஜியாருக்குக் கிடைத்தது.

அவர் அல்ஜீரியா நாட்டின் முன்னாள் வெளிவிவகார அமைச்சராக இருந்து பின்னர் ஜனாதிபதி அபேட்சகராக நியமிக்கப்பட்டு 1998 இல் சில மாதங்கள் யூ.ஏ.இ. அரசாங்கத்தின் ஒரு விருந்தினராக இருந்தார். அக்காலகட்டத்தில் அவரது ஆத்ம நண்பரான சேகு அஹமது கலீபாவை சந்திக்க அடிக்கடி வருவதுண்டு. அப்போது நஜீப் ஹாஜியாரும் அவர்களுடன் உடல் பயிற்சியில் ஈடுபடுவதும் விருந்துபாசாரங்களில் கலந்து கொள்வதுமுண்டு. அத்துடன் அவர்கள் சந்தித்துக் கொள்ளும் போது சுவாரசியமாக கலந்துரையாடுவார்கள்.

## சான்றிதழ் கிடைத்தமையும் செவி சாய்த்த தூதுவரும்.

2008.05.16 முதல் நஜீப் ஹாஜியார் அரசாங்கத்தின் அனுசரணையில் ஒரு கல்லூரியில் இரண்டு மாதப் பயிற்சிநெறி ஒன்றில் ரஷ்ய மொழியைக் கற்றுக் கொண்டார். இப் பயிற்சிநெறியின் முடிவில் அவர் அதி விசேட சித்தி பெற்றார். அதற்குரிய சான்றிதழை நஜீப் ஹாஜியார் தன்வசம் வைத்திருக்கிறார். அச்சான்றிதழ் பிரிட்டிஷ் நாட்டு ஒப்புதலுடன் கிடைக்கப் பெற்றதாகும்.

2008.10.17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இலங்கைக்கான புதிய தூதுவர் ஜானக பண்டார அல்ஜனுக்கு முதல் முதலில் விஜயம்

செய்தார். இலங்கையரின் நலன் கருதி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட நடமாடும் சேவையை மீண்டும் ஆரம்பித்தார். இச் சேவை சில காலமாக இடைநிறுத்தப் பட்டிருந்தது. மீண்டும் இந்நடமாடும் சேவையை ஆரம்பிக்கும் வேளையில் அதன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்வதற்காக தூதுவராலயத்திலிருந்து நஜீப் ஹாஜியாருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. உரிய வேளையில் அங்கே சென்ற நஜீப் ஹாஜியார் இலங்கையர்களின் பிரச்சனைகள் தொடர்பாகத் தூதுவருடன் உரையாடினார். இந்நடமாடும் சேவை அதே இடத்தில் வெள்ளிக்கிழமை தோறும் மாலை நாலு மணி வரை தொடர்ச்சியாக இடம்பெறும் என்பதை அறிந்து கொண்ட நஜீப் ஹாஜியர், யு.ஏ.இ. நாடு ஓர் இஸ்லாமிய நாடாக இருப்பதனால் இங்கு வெள்ளிக்கிழமை ஜும்மா நேரம் அனைத்து இஸ்தாபனங்களும் மூடப்படுகின்றன. அதேவேளை நடமாடும் சேவை அமைந்துள்ள இடத்துக்குப் பின் பக்கம் பெரிய பள்ளிவாசல் அமைந்துள்ளது. எனவே இவ்விடத்தில் வெள்ளிக்கிழமைகளில் பகல் 12-1 வரை சேவையை நிறுத்துமாறும் அதற்குப் பின்னர் தொடர்ந்து நடத்துமாறும் கேட்டுக் கொண்டார்.

நஜீப் ஹாஜியாரின் வார்த்தைகளில் உள்ள உண்மையைப் புரிந்து கொண்ட தூதுவர் நாம் அரசாங்கத்தையும், மதத்தையும் கௌரவிக்க வேண்டும் என பதிலளித்து குறித்த வேளையில் சேவையை நிறுத்துமாறு உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிட்டார்.

ஆம் நஜீப் ஹாஜியாரின் வேண்டுகோள் வெற்றி பெற்றது. இன்றைக்கும் இந்நடமாடும் சேவை மாத இறுதியில் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் ஒரு மணி முதல் மாலை வரை இயங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது.

## கண் முன்னே நிழலாடும் நினைவுகள்.

2009.02.04 ஆம் திகதி தூதரகத்தின் ஏற்பாட்டில் இலங்கையின் சுதந்திர தின வைபவம் அபுதாபி கிரான்ட் பிளாஸில் கொண்டாடப்பட்டது. தூதரகத்தில் இருந்து இதற்காக நஜீப் ஹாஜியாருக்கு விசேட அழைப்பு வந்தது. நஜீப் ஹாஜியாரும் மகன் ரஹ்மததுல்லாஹ்வும் வைபவத்தில் கலந்து கொண்டார்கள். அவ்வைபவத்தில் பல நாட்டு தூதுவர்களும் யு.ஏ.இ. நாட்டின் பெண் அமைச்சர் ஒருவரும் கலந்து சிறப்பித்தனர்.

துபாயில் அமைக்கப்பட்டுள்ள உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் பரிஜுல் அரப்பைப் பார்வையிடுவதற்காக நஜீப் ஹாஜியார் அவர்கள் 2009.02.07 அன்று தனது குடும்பத்துடன்

அவர்களின் வீட்டுக்கு (யூ.ஏ.இ.) விருந்தினராக வந்த மாமனார் ஹுஸைன் அவர்களையும் அழைத்துக் கொண்டு சென்றார்.

2009 ஏப்ரல் மாதம் பிரதி அமைச்சராக இருந்து, பிற்காலத்தில் ஆளுநராகவும் கடமையாற்றிய ரெஜினோல்ட் குரே அவர்கள் யு.ஏ.இ. விஜயம் செய்த போது அவர்கள் தங்கி இருந்த ஹோட்டலுக்கு சென்று அவருடன் நஜீப் ஹாஜியார் உரையாடினார்..

2009.07.24 இல் நஜீப் ஹாஜியார் தனது மனைவி, மகள் ஹுஸ்னா, மகன் ரஹ்மத்துல்லாஹ், மகள் ஆமினா ஆகியோருடன் இலங்கை தூதுவர் ஜானக பண்டாரவைச் சந்தித்தனர். அவர் முந்தைய வாரம் இலங்கை சென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை முன்னிலையில் சபரகமுவ மாகாண ஆளுநராக சத்தியப் பிரமாணம் செய்திருந்தார். தூதரகத்தில் தனக்கு அளிக்கப்பட்டு இருந்த பொறுப்புக்களை முடித்துக் கொண்டு செல்வதற்காகவே மீண்டும் அபுதாபி வந்திருந்தார். அவருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காகவே நஜீப் ஹாஜியார் தூதுவர் காரியாலயத்திற்குந் சென்றார். அங்கு அவரை சந்தித்து அவருடன் அரைமணி நேரம் உரையாடினார். அத்துடன் நஜீப் ஹாஜியார் இலங்கை வந்தால் தன்னைச் சந்திக்குமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

2009.08.16 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் தர்கா நகரில் இருக்கும் தனது வீட்டுக் காணியில் இரண்டு மாடி கட்டடங்களை கட்டுவதற்காக அடிக்கல் நாட்டினார். 2008.08.09 இல் நஜீப் ஹாஜியார் தர்கா நகரைச் சேர்ந்த ஹரீஸ் ஹாஜியாருடன் அவரது காரில் இரத்தினபுரிக்குச் சென்று இன்றைய சப்ரகமுவ ஆளுநரும் முன்னாள் இலங்கை யூ.எ.இ. யின் தூதுவருமான ஜானக பண்டாரவை ஆளுநர் காரியாலயத்தில் சந்தித்தார். விருந்தளிகள் இருவரையும் அவர் சிறப்புர வரவேற்று உபசரித்தார். அவருடன் சப்ரகமுவ மாகாணத்தின் மக்களை பற்றி சுமார் 20 நிமிடங்கள் இருவரும் கலந்துரையாடினார்.

## கலந்துகொண்ட கருத்தரங்கும் ஜனாதிபதியின் வருகையும்.

2009.11.15 ஆம் திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குத் தொடர்ச்சியாகக் கருத்தரங்கொன்று அல்ஐன் பொலிஸ் மேலிடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. “போலிஸும் மனித உரிமைகளும்” என்னும் கருப்பொருளில் அமைந்திருந்த இக் கருத்தரங்கில் நஜீப் ஹாஜியாரும் கலந்து கொண்டார்.

2009.12.11 ஆம் தினத்தன்று செய்கு அஹமது கலீபாவின் மாளிகைக்கு சோமாலியா நாட்டின் முன்னாள் உப ஜனாதிபதி

இஸ்மாயில் அலி அவர்கள் வருகை தந்திருந்தார். நஜீப் ஹாஜியார் அவரைச் சந்தித்து உரையாடினார். அவரின் கடந்த கால அரசியல் வாழக்கையைப் பற்றி அவரிடம் கேட்டு அறிந்து கொண்டார். அவர் 1969 - 1992 வரை உப ஜனாதிபதியாகப் பதவி வகித்தார்.

## நினைவில் பூத்தவை.

2010.01.17 இல் தர்கா நகர் பெரிய பள்ளிவாசலின் மத்ரஸாவின் 90 வது வருட நினைவு தினம் அமைந்திருந்தது. அதைக் கொண்டாடும் முகமாக அன்றைய தினம் ஒரு வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் நினைவு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. 2004 இல் மதரஸாவின் புனர்நிர்மாணத்திற்கு நஜீப் ஹாஜியார் பெருமளவில் உதவி செய்ததை யாவரும் அறிவீர்கள். எனவே அன்றைய தினம் வெளியிடப்பட்ட நினைவு மலரில் நஜீப் ஹாஜியாரின் ஆசிச் செய்தி ஒன்றும் உள்ளடக்கப்பட்டிருந்தது. விழாவில் விசேட பேச்சாளராக நஜீப் ஹாஜியார் அழைக்கப்பட்டிருந்தார். ஆனாலும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் அவரால் அவ்வைபவத்தில் பங்குபற்ற முடியவில்லை.

## அல் ஹாஜ் நஜீப் பின் அமீர் ஆலிம் அவர்களின் ஆசிச் செய்தி.

எனது தகப்பன் அமீர் ஆலிம் இக்கல்லூரியில் 1930 ஆம் ஆண்டு ஆரம்ப மார்க்கக் கல்வியை அரபு மொழியில் கற்றார். பின்னர் பல கல்லூரிகளிலும் படிப்பை மேற்கொண்டு இறுதியில் இந்தியா சென்று மேற்படிப்பை முடித்தார். அதன் பின்பு அவர் பெயர் பெற்று விளங்கினார்.

நானும் 1970 ஆம் ஆண்டு இக்கல்லூரியில் ஆரம்ப மார்க்கக் கல்வியை அரபு மொழியில் மாலை நேரங்களில் தொடர்ந்தேன். இப்போது நான் ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் தலைநகரான அபுதாபியில் போலிஸ் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் மொழிபெயர்ப்பாளராக கடமை ஆற்றுகின்றேன். இன்னும் எனக்கும், என் தகப்பனாருக்கும் கற்றுத்தந்த பெருமை இக்கல்லூரியைச் சாரும். இன்று இக்கல்லூரியின் 92 ஆம் ஆண்டு பூர்த்தியடைநிதிருக்கும் தருவாயில் மாணவர்கள் பட்டம் பெற்று வெளியேறுவதையிட்டும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதற்காக 2010 ஜனவரி 17ஆம் திகதி கல்லூரியில் நடைபெறவிருக்கும் வைபவத்தில் ஐக்கிய அமீரகத்தின் கொடைவள்ளளான செய்க் அஹமது கலீபா அல் ஸுவைதி அவர்கள் சமூகமளிக்க முடியாமையை அறிவிக்குமாறு வேண்டிக் கொண்டதை இத்துடன் குறிப்பிடுகின்றேன்.

மேலும் இக்கல்லூரியிலிருந்து ஆலிம்கள் வருடா வருடம் பட்டம் பெற்று வெளியேறி முஸ்லிம்களுக்கு வழிகாட்ட அல்லாஹ்வை வேண்டுகின்றேன்.

## அலைமோதும் நினைவுகள்.

2010.06.10 ஆம் திகதி ஈதுல் பித்ர் பெருநாள்த் தொழுகையை முடித்தவுடன் தர்கா நகர் ஸாவியாவில் நோன்பு மாதம் இரவு வேளைகளில் குர்ஆன் பயிற்சியும், ஹதீஸ் பயிற்சியும் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கும், கற்பித்த ஆசிரியர்களுக்கும் பணப்பரிசு வழங்கி மகிழ்வித்தார் நஜீப் ஹாஜியார். இது அவரது வழக்கமாக இருந்தது.

2010.09.15 காலை நஜீப் ஹாஜியார் பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லம் ஹாஜியாருடன் பாராளுமன்றம் சென்றார். திரும்பி வரும்போது இருவரும் அமைச்சர் ரவூப் ஹகீமின் வீட்டுக்குச் சென்றனர். இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக பதவி வகிக்கும் அவருடன் சுமார் ஒரு மணி நேரம் மத்திய கிழக்கில் பணிபுரியும் இலங்கை மக்கள் எனும் தலைப்பில் கலந்துரையாடினார்.

2011.09.04 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் ஷேக் அஹமது கலீபா அவர்களைச் சந்தித்து தர்கா நகரில் அவரது செலவில் கட்டப்பட்ட மீரா பள்ளிவாசலின் மூன்றாவது மாடியையும் கட்டித் தருமாறு கேட்டார். அவர் அதை கட்டித் தருவதாக ஒப்புக்கொண்டார்.

## ஜனாதிபதியுடன் சந்திப்பு

2012.08.09 ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற இப்தார் நிகழ்ச்சிக்கு நஜீப் ஹாஜியாருக்கு அழைப்பு வந்தது. மகிழ்ச்சியோடு அவர் அங்கு சென்றார். நஜீப் ஹாஜியார் அரபி உடையில் சென்றிருந்ததால் காவலர்கள் அவரை VIP பகுதியில் அமர வைத்தனர். அப்பகுதி பொதுவாக அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் மற்றும் உயர் பதவியில் இருப்பவர்கள் அமரும்படியாக ஒதுக்கப்பட்டிருந்தது. நஜீப் ஹாஜியார் அந்த இடத்திற்குப் போய் அங்கிருந்தவர்களுடன் கைகுலுக்கி சலாம் கூறி அமர்ந்து கொண்டார்.

நோன்பு திறக்க 15 நிமிடங்கள் இருக்கும்போது அவ்விடத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வருகை தந்தார். எல்லோரும் எழுந்து அவரை வரவேற்று மரியாதை செலுத்தினார்கள்.

நஜீப் ஹாஜியார் ஜனாதிபதியின் பக்கத்து மேசையில் அமர்ந்து கொண்டார். நோன்பு திறந்ததன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லம் ஹாஜியார் ஜனாதிபதிக்கு அவரை அறிமுகம் செய்து வைத்தார். நஜீப் ஹாஜியார் ஜனாதிபதியுடன் இரண்டு நிமிடங்கள் கதைத்தார். ஹாஜியாரின் பதவி, பணிபுரியும் இடம், தெரிந்த பாஷைகள், சேவை செய்த காலங்கள் போன்ற விபரங்களை அவர் ஜனாதிபதியுடன் பகிர்ந்து கொண்டார்.

*சந்தர்ப்பங்கள் வரும் பொழுது தடம் மாறாதீர்கள் சந்திப்புகள் வரும்போது நழுவ விடாதீர்கள்.*

## சிலிர்க்கவைத்த நினைவுகள்.

2012.08.14 இல் நஜீப் ஹாஜியாரின் மகள் ஹுஸ்னாவின் அன்பளிப்பாக தர்கா நகர் அரசாங்க வைத்தியசாலையின் பரிசோதனை நிலையத்துக்கு குளிர்சாதனப் பெட்டியொன்று வழங்கப்பட்டது. இப்பகுதி மக்களின் சிகிச்சைத் தேவைகளுக்கு இலகுவாக அமைய வேண்டும் என்பதே நஜீப் ஹாஜியாரினதும் வைத்தியசாலை ஊழியர்களினதும் நோக்கமாக இருந்தது.

2012.10.23 இல் துபாயின் இலங்கைக்கான கவுன்சிலர் அப்துல் ரஹீம் நஜீப் ஹாஜியாருக்கு விசேட அழைப்பு ஒன்றை அனுப்பியிருந்தார். மாலை 5 மணிக்கு கிரேண்ட் ஹயாத் ஹோட்டலுக்கு வரும்படி அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. தனது மனைவி மகன் ஹிதாயத்துல்லாஹ், மகள் ஆமினா சகிதம் அவர் அங்கு சென்றார். வைபவத்திற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் வருகை தந்திருந்தார். அவருடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக்கொண்ட நஜீப் ஹாஜியார் அலரி மாளிகையில் தான் அவரைச் சந்தித்ததை நினைவு படுத்தினார். தனக்கும் அது நினைவிருப்பதாக ஜனாதிபதி மகிழ்ச்சியுடன் சொன்னார். அங்கு வெளிநாட்டமைச்சர் ஜி.எல். பீரிஸும் வருகை தந்திருந்தார்.

2012.11.11 ஆம் தினத்திலிருந்து ஒரு வாரத்திற்கான "வரவேற்பும் தொடர்பும்" என்ற தலைப்பின் கீழ் பயிற்சி கருத்தரங்கொன்று நடைபெற்றது. போலீஸ் மேலிடத்தின் பணிப்புரையின் கீழ் கலந்து கொண்ட நஜீப் ஹாஜியார் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

*பார்க்காமல் இருக்க பழகிக் கொண்டேன் பேசாமல் இருக்க பழகிக் கொண்டேன் நினைக்காமல் இருப்பதில் தோற்றுப் போனேன்.*

## நிகழ்ந்த சில நிகழ்வுகள்.

2013.01.25 இல் இலங்கைத் தூதரகத்திலிருந்து நஜீப் ஹாஜியாரை அழைத்து இலங்கையின் புதிய தூதுவர் முன்னாள் இலங்கையின் பொலிஸ்மா அதிபராக கடமையாற்றிய டாக்டர் மஹிந்த பாலசூரிய அவர்கள் அங்கிருக்கும் இலங்கையர் முன்னிலையில் உரையாற்றுவதற்கு பிரபலமானதொரு ஹோட்டலுக்கு வருகை தரவிருப்பதால் ஹாஜியாரையும் அந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொண்டனர்.

மாலை 6.30 மணி அளவில் புதிய தூதுவர் அங்கு சமூகமளித்தார். அவரிடம் நஜீப் ஹாஜியார் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். அதற்கு தூதுவர் தான் ஹாஜியாரை பற்றி ஏற்கனவே அறிந்துள்ளதாக கூறினார். உரையாடலுக்குப் பின் இராப்போசன விருந்தும் வழங்கப்பட்டது. அதன் பின்னர் தூதுவரிடம் தனது இல்லம் வரும்படி வேண்டிக் கொண்டார் நஜீப் ஹாஜியார். மகிழ்ச்சியுடன் அழைப்பை ஏற்ற தூதுவர் மற்றொரு நாளில் ஹாஜியாரின் இல்லம் வந்து உள்ளம் மகிழ்ந்து சென்றார்.

இலங்கைத் தூதுவரின் அழைப்பை ஏற்று நஜீப் ஹாஜியாரும் நிஹ்மதுல்லாஹ்வும் இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அபுதாபி intercontinental ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு இராப்போசன விருந்தும் வழங்கப்பட்டது. பல நாட்டு தூதுவர்கள் அங்கு வருகை தந்திருந்தனர். அமெரிக்க தூதரகத்திலிருந்து வந்த ஒரு காரியதரிசியுடன் இலங்கைப் பிரஜைகளின் நிலை பற்றி கலந்துரையாடினார் நஜீப் ஹாஜியார்.

2013.02.05 இல் துபாயில் இலங்கைக்கான கவுன்சிலர் ஜெனரல் அப்துல் ரஹீமின் அழைப்பை ஏற்று நஜீப் ஹாஜியாரும் மகன் ரஹ்மத்துல்லாஹ்வும் ஹோட்டல் லீ மெரீடியனில் ஏற்பாடாகி இருந்த இலங்கையின் 65 ஆவது சுதந்திர தின விழாவிலும் கலந்து கொண்டதோடு அவ்வைபவத்தில் யு.ஏ.இ. யின் கல்வி அமைச்சர் ஹுமைத் பின் முஹம்மது அல் கிதாமி அவர்களும் கலந்து கொண்டார்.

2013.02.25 அன்று தர்கா நகர் தெருவுப் பள்ளியின் மூன்றாவது மாடி கட்டிடம் கட்டுவதற்காக நஜீப் ஹாஜியார் பள்ளி கட்டிட குழுவின் தர்மகர்த்தாக்களின் தலைவருடன் கலந்து ஆலோசித்தார். ஏற்கனவே நஜீப் ஹாஜியார் இதற்காக ஒரு தொகைப் பணம் கொண்டு வந்திருந்தார்.

## முயற்சியால் மூன்றாவது மாடி.

10 வருடங்களுக்கு முன்பு தர்கா நகர் தெருவுப் பள்ளியை இரு மாடிக் கட்டடமாக செய்கு அஹமது கலீபாவின் நிதியுதவியினால் கட்டிக் கொடுத்ததை வாசகர்கள் அறிவீர்கள். நஜீப் ஹாஜியார் அவர்களின் கடந்த சில வருட கால முயற்சியால் இப்பள்ளியின் மூன்றாவது மாடியும் கட்டப்பட்டு நிறைவு பெறும் தருவாயில் இருந்தது. இதற்கான பூரண பண உதவி நஜீப் ஹாஜியார் செய்கு அஹமது கலீபாவிடமிருந்து பெற்றுக் கொடுத்தார். அத்துடன் ஏற்கனவே கட்டி இருந்த பள்ளியின் மலசல கூடங்களை விருத்தி செய்வதற்காக நிதி உதவியும் நஜீப் ஹாஜியார் செய்கு அஹமது கலீபாவிடமிருந்து பெற்றுக் கொடுத்தார். இப்பாரிய கட்டிட நிர்மாணப் பணிகளை தமது சொந்த தேவைகளை எல்லாம் ஒரு பக்கம் ஒதுக்கிவிட்டு அல்லும் பகலும் அயராது உழைத்து செவ்வனே செய்து முடித்த அன்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் அல்லாஹுத்தஆலா ஈருலகப் பாக்கியங்களையும் கொடுத்தருள்வானாக என்று நஜீப் ஹாஜியார் நிதமும் பிரார்த்தித்தார்.

## இப்தாரில் எரிபொருள் அமைச்சர்.

2013.07.21 அன்று மாலை நஜீப் ஹாஜியார் தனது புதல்வர்கள் மூவருடனும் அல்ஜனில் அல் ஹஸ்னா என்ற இடத்திற்குச் சென்றார். அங்கே அமைந்திருந்த கௌரவ நாசிர் அஹ்மது கலீபா அவர்களின் தோட்டத்தில் இப்தார் நிகழ்வுக்காக கத்தார் நாட்டு எரிபொருள் அமைச்சர் சமூகமளித்திருந்தார். நஜீப் ஹாஜியார் கௌரவ நாசர் அவர்களுடன் உரையாடிய போது, 1976 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் மாநாட்டில் அன்றைய யு.ஏ.இ. ஜனாதிபதி, அன்றைய யு.ஏ.இ. வெளிநாட்டு அமைச்சரான தனது தந்தை செய்கு அஹமது கலீபா ஆகியோருடன் தான் சிறுவனாக இருக்கும்போது இலங்கை வந்ததாக நஜீப் ஹாஜியாரிடம் சொன்னார். அவ்வருகையின் சுவாரசியமான விடயங்களை நஜீப் ஹாஜியாருடன் பகிர்ந்து கொண்டார்.

## மீரா மஸ்ஜிதின் மூன்றாம் மாடி திறப்பும் உள்ளம் கவர் சிறப்பும்.

தர்கா நகரின் மீரா மஸ்ஜிதை ஒரு பெறுமதி வாய்ந்த பொக்கிஷம் என்று தான் சொல்ல வேண்டும். அது ஊரின் ஒரு அடையாளமாகவும் திகழ்கிறது. தெருவுப் பள்ளியென அழைக்கப்படும் மீரா மஸ்ஜிதின் மூன்றாம் மாடிக் கட்டடம் 16.08.2023 ஆம் திகதி நஜீப் ஹாஜியாரினால் திறந்து வைக்கப்பட்டது. இப்பள்ளிவாசலைச் சற்று விரிவாக நோக்குகையில் இலங்கையின்

மேல் மாகாணத்தில் கழுத்துறை மாவட்டத்தில் உள்ள பள்ளிவாசல்களில் இதுவும் ஒரு முக்கியமான உயர் தரத்தில் உள்ள பள்ளிவாசலாக கருதப்படுகின்றது.

இப்பள்ளி வாசலில் ஒரே நேரத்தில் ஐயாயிரம் பேர் தொழக்கூடிய வசதிகள் செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இப் பள்ளிவாசலின் மூன்றாம் மாடி விஸ்தரிக்கப்பட்ட பின்னர் 15.06.2014 ஆம் திகதி தர்கா நகரில் ஏற்பட்ட அசம்பாவித சமபவத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கிருந்த அச்சுறுத்தல் காரணமாக குடும்பம் சகிதம் ஒரு வார காலம் தங்கி இருப்பதற்கு அடைக்கலமாக அமைந்தது. இதனடிப்படையில் மூன்றாம் மாடி இப் பள்ளிவாயலின் பெறுமதியை மேலும் உயர்த்திக் காட்டுகின்றது. அன்றைய அசம்பாவிதத்தின் போது இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் கிடைத்த முஸ்லிம் மக்களின் உதவிகளுடன் தர்கா நகர் உள்ளூர் மக்களின் உதவிகளைக் கொண்டும் இப்பள்ளிவாயலில் தங்கியிருந்த குடும்பங்களுக்கு அத்தியாவசிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

அவர்களுள் நோய்வாய்ப்பட்டிருந்தவர்களுக்கு அன்றைய நாட்களில் சேவையில் ஈடுபட்டிருந்த வைத்தியர்கள் முன் வந்து சிகிச்சை அளித்தனர். அவர்களுள் நஜீப் ஹாஜியாரின் புதல்வி டாக்டர் ஹுஸ்னாவும் ஒருவராவார்.

*எல்லாவற்றையும் அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டிவிட்டு எப்போதும் அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்லுங்கள்.*

## அடிக்கல் நாட்டு விழா
## நெஞ்சமதில் ஒளி வீசும் நிலா.

17.08.2013 ஆம் திகதி நஜீப் ஹாஜியாருக்கு சொந்தமான நிலத்தில் மார்க்க சம்பந்தமான விடயங்களைக் கற்பதற்கான கல்வி நிலையம் ஒன்றை நிறுவ ஏற்பாடு செய்தார். அத்துடன் அதே தினம் நஜீப் ஹாஜியாரின் வாழ்க்கை வரலாறான நெஞ்சம் நிறைந்த நஜீப் ஹாஜியார் முதலாம் பாகம் நூல் வெளியிட்டுவைக்கப்பட்டதும் மகிழ்ச்சிக்குரிய நினைவுகளாகும்.

புத்தக வெளியீட்டு விழா மிகவும் விமர்சையாக நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மார்க்கார், முன்னாள் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லம் ஹாஜியார், உலமாக்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவ மாணவிகள் என பெருந்திரளானோர் கலந்து சிறப்பித்தனர்.

இப்புத்தகத்தை வெளியிட்டதன் நோக்கம் தனது வாழ்க்கை வரலாறு எதிர்கால சந்ததியினருக்கு ஒரு படிப்பினையாக அமைய வேண்டும் என்பதே எனக் கூறினார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அவர் மேலும் அன்றைய தினம் களுத்துறை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தார். அதே போன்றே விழாவில் நாடறிந்த எழுத்தாளர் பேருவளை சீனங்கோட்டை ஹாஜியானி பாயிஸா கைஸ் நஜீப் ஹாஜியாரின் சேவைகளைப் பாராட்டி கவிதை ஒன்று மொழிந்தார்.

இக்கல்வி நிலையத்திற்கு வக்பு செய்யப்பட்ட இடம் 1996 இல் நஜீப் ஹாஜியார் அவர்களால் தனது மக்களின் நலன் கருதி வாங்கப்பட்ட இடமாகும். தனது பிள்ளைகள் உயர்ந்த நிலைக்கு வருவதை கண்ட நஜீப் ஹாஜியர் அந்த நிலத்தை பரந்த மனமுடைய தனது மனைவியினதும் பிள்ளைகளினதும் விருப்பத்துடன் சதக்கத்துல் ஜாரியாவாக பொதுப்பணிக்காக வக்பு செய்தார்.

*கிணற்றில் உள்ள நீர் அள்ள அள்ள ஊற்றெடுப்பதைப் போல நல்லெண்ணத்துடன் செய்யப்படும் சேவைகள் அல்லாஹ்விடத்தில் பொருத்தமானதொன்றாக அமையும் 'சதக்கத்துல் ஜாரியாவாகும்'. சந்தோஷமான அனைத்திலும் ஒரு நல்ல நிகழ்வு நடப்பது மிகப்பெரிய வரம்தான்.*

## விளையாட்டுப் போட்டிக்கும் பிரதம அதிதியாக

2013 இல் வெலிகம அஸ்ஸபா பாடசாலையில் விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. போட்டியில் இறுதி நாள் பரிசளிப்பு விழா விமர்சையாக நடைபெற்றது. அப்போது பாடசாலையின் அதிபராக இருந்த இர்பான் மாஸ்டர் அவர்கள் நஜீப் ஹாஜியாரை பரிசளிப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக கலந்து கொள்ளும்படி வேண்டிக்கொண்டார். அவரது அழைப்பை ஏற்று நஜீப் ஹாஜியார் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததுடன் பெருமனதோடு அப்பாடசாலைக்கு நகல் எடுக்கும் இயந்திரம் (போட்டோ கொபி மெஷின்) ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கினார். இர்பான் மாஸ்டர் அவர்கள் நஜீப் ஹாஜியாரின் சுய சரிதையான நெஞ்சம் நிறைந்த நஜீப் ஹாஜியார் எனும் நூலின் ஆசிரியர் ஆவார்.

## மண்ணில் உள்ளவர்களை ஆதரித்தால் விண்ணில் உள்ளவன் உங்களை ஆதரிப்பான்.

தாய் தந்தையரை இழந்து நிற்கும் அநாதைகளை ஆதரித்து உள்ளம் குளிர வைத்தால் அதைவிட சிறந்தது உலகத்தில் எதுவுமில்லை என்று தான் சொல்ல முடியும். மண்ணில் உள்ள வறியவர்களை

நீங்கள் ஆதரித்தால் விண்ணிலும் எங்கிலும் உள்ள அல்லாஹ் உங்களை ஆதரிப்பான் என்பது பொய்யல்லவே. ஆம் நஜீப் ஹாஜியார் அந்த விடயத்தில் மிகவும் உயர்ந்த இடத்தில் இருந்தார்.

தர்கா நகரில் உள்ள இஷாஅத்துல் இஸ்லாம் அனாதை இல்லத்திற்கு நீண்ட வரலாறு உண்டு. அது 1979 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அவ்வில்லத்தில் அப்போது 100 அநாதைச் சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். ரமழான் மாதங்களில் நஜீப் ஹாஜியார் அங்கு சென்று அப்பிள்ளைகளுக்கு மத்தியில் சொற்பொழிவு ஆற்றுவார். அத்தோடு நோன்பு காலத்தில் ஸாவியாவில் நடைபெறும் குர்ஆன் பயிற்சி நெறியில் பங்கேற்ற மாணவர்களுக்கு அவர்களை ஊக்கப்படுத்தும் நோக்குடன் நோன்புப் பெருநாள் தினங்களில் விழா வைத்து பரிசில்கள் வழங்குவார்.

*ஒருவரையும் குறைத்து மதிப்பிடவோ காயப்படுத்தவோ வேண்டாம் இன்று ஒருவன் வலிமையும் அதிகாரமும் உள்ளவனாக இருக்கலாம் ஆனால் காலம் அதிக வலிமையுடையது.*

## ஜனாதிபதியை மீண்டும் சந்தித்தார்.

ஒரு நாட்டின் முதல் தலைமை மனிதரான ஜனாதிபதியை சந்தித்து கதைக்க கிடைப்பது எல்லோருக்கும் இலகுவான காரியமல்ல. அவரைச் சந்திக்கும் வாய்ப்பு நஜீப் ஹாஜியாருக்கு மீண்டும் கிடைத்தது. ஆம் நஜீப் ஹாஜியார் ஒருமுறை அலரி மாளிகைக்கு இப்தார் நிகழ்வுக்காக ரமழான் மாதம் சென்று இருந்த போது ஜனாதிபதியை சந்தித்து உரையாடியிருந்தார். அதே போன்றே இரண்டாவது தடவையாக ஐக்கிய அரபு இராச்சியம் துபாய் மாகாணத்திற்கு அன்றைய இலங்கை தூதுவரின் அழைப்பின் பேரில் இலங்கை ஜனாதிபதி கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் சமூகம் அளித்த வேளையிலும் அவருக்கு ஜனாதிபதியைச் சந்தித்து உரையாட வாய்ப்புக் கிடைத்தது.

மற்றுமொரு முறை ஜனாதிபதி அவர்கள் பேருவளையில் நடைபெற்ற ஒரு திருமண வைபவத்திற்கு வந்திருந்த போது அவர்களுடன் நஜீப் ஹாஜியாருடன் உரையாடி இரவு விருந்தில் கலந்து கொண்டார். இப்படியாக அவரை சந்திக்க கிடைத்த வாய்ப்புகள் பொன்னானதாக இருந்தன என்கிறார் நஜீப் ஹாஜியார் அவர்கள்.

## மதத் தலைவர்களுடன் மகிழ்வான சந்திப்பு.

2014 ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைநகரான அபுதாபியில் இலங்கை தூதரகம் புதிய தளத்திற்கு இடமாற்றம்

செய்யப்பட்ட போது அப்போதைய இலங்கையின் ஐக்கிய அரபு இராச்சியத் தூதுவர் மஹிந்த பாலசூர்யாவின் அழைப்பின் பேரில் நஜீப் ஹாஜியார் அவர்களும் திறப்பு விழாவுக்குச் சென்றிருந்தார்.

பாலசூர்ய அவர்கள் முன்னை நாள் இலங்கையின் பொலீஸ் மா அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வைபவத்தை ஆரம்பித்து வைப்பதற்காக இஸ்லாமிய மதத் தலைவராக நஜீப் ஹாஜியார் அவர்களும், பௌத்த மத குரு ஒருவரும், கிறிஸ்தவ மதத் தலைவரும், இந்து மதத்தைச் சார்ந்த ஒருவரும் முன்னிறுத்தப்பட்டிருந்தனர். இது நான்கு மதத்தினரதும் ஒற்றுமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது.

அப்போது சுமார் மூன்று லட்சம் இளைஞர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொழில் புரிந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வைபவத்தில் நான்கு மதத் தலைவர்களும் தத்தமது ஆராதனைகளை வழங்கியதுடன் வைபவம் ஆரம்பிக்கப்பட்டு கோலாகலமாக நடைபெற்றது.

## பெண் ஜனாதிபதியுடன் மற்றுமொரு சந்திப்பு.

நஜீப் ஹாஜியாருக்கு 05.12.2014 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பும் கிட்டியது. அவர் 1995 முதல் 2005 வரை இலங்கையில் ஜனாதிபதியாக இருந்தார் என்பது யாவரும் அறிந்த விடயம். அவரை சந்திப்பதற்காக தனது புதல்வி டாக்டர் ஹுஸ்னாவுடன் அவருடைய உத்தியோகபூர்வ இல்லத்திற்கு நஜீப் ஹாஜியார் விஜயம் செய்தார். முன்னாள் ஜனாதிபதியுடன் இருவரும் உரையாடியது மட்டுமல்லாமல் முன்னாள் ஜனாதிபதி இருவரையும் நல்ல விதத்தில் உபசரிப்பும் செய்தார்.

நஜீப் ஹாஜியாரின் இச்சந்திப்பின் நோக்கம் இலங்கையின் முக்கிய தலைவர்களை தமது வாழ்நாளில் சந்தித்துக் கதைக்க வேண்டும் என்ற எண்ணமாகும். முதலாவதாக அவர் சிறுவயதில் 1970 ஆம் ஆண்டுகளில் அப்போதைய பிரதமர் டட்லி சேனாநாயக்கவை சந்தித்திருந்தார்.

இரண்டாவதாக 1978 இல் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனாவைச் சந்தித்தார். அதேபோன்று அப்போதைய பிரதமரும் 1989 முதல் 1993 வரை ஜனாதிபதியாக இருந்தவருமான ஆர். பிரேமதாச அவர்களைச் சந்தித்து அவரோடு உரையாடி இராப்போசன விருந்திலும் கலந்து கொண்டார். ஏற்கனவே

குறிப்பிட்டது போல் 2012 - 2014ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை பலமுறை சந்தித்திருந்தார்.
அதேபோல் 2016 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவை பேருவளை பிரதேச சபை செயலாளரின் அழைப்பின் பேரில் ஒரு வைபவத்தில் கலந்து கொண்டபோது சந்தித்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிக்காவை சந்திப்பதற்காக ஷாஜஹான் அப்துல் பதாஹ்வும், சாயிக் சுஹைப் அவர்களுமே நஜீப் ஹாஜியாருக்கு ஏற்பாடு செய்து கொடுத்தனர். அச் சந்திப்பின் போது நஜீப் ஹாஜியார் தனது வாழ்க்கை கடந்தகால, நிகழ்கால வாழ்வின் முக்கிய சம்பவங்களை பற்றி அவருடன் கலந்துரையாடினார். இச்சந்தர்ப்பத்தில் வாசகர்களுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் தந்தை எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க 1956 - 1959 வரை இலங்கையின் பிரதமராக இருந்தமையை ஞாபகமூட்டுகிறார் நஜீப் ஹாஜியார். 1960 ஆம் ஆண்டில் சந்திரிகாவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்க உலகின் முதல் பெண் பிரதமராக இருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

*அலைகளை சந்தித்து சமாளிக்கும் மீன்களுக்கு வலைகளை எதிர்கொள்ளத் தெரிவதில்லை.*

## திறப்பு விழாவும் புத்தக வெளியிடும்.

2015.03.08 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் அனைவரையும் பரசவமூட்டும் வகையில் திறந்து வைக்கப்பட்டது. இவ்வைபவத்திற்கு பிரதம அதிதிகளாக அப்போதைய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, அப்போதைய இலங்கை ஐக்கிய அரபு இராச்சியத் தூதுவர் அப்துல் ஹமீத் அப்துல் பதாஹ் அல் முல்லா மற்றும் அப்போதைய களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லம் ஹாஜியார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். தர்கா நகரில் உள்ள மூன்று அரச பாடசாலை மாணவர்களினதும் அலீப் தனியார் பாடசாலை மாணவர்களினதும் நிகழ்ச்சிகளும் வைபவத்தை அலங்கரித்தன.

அன்று நஜீப் ஹாஜியாரின் வீட்டில் அதிதிகளுக்கும், தூதுவர்களுக்கும் பகல் போசன விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர்கள் அதில் அகமகிழ்ந்து கலந்து கொண்டனர்.

நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் இரண்டு மாடிகளைக் கொண்டது. கீழ் மாடியில் 100 மாணவர்கள் கற்கக் கூடிய வசதிகள்

செய்யப்பட்டுள்ளதுடன் தொழுகை அறையும், மலசல கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மேல்மாடியில் தமிழ், சிங்களம், அரபு, ஆங்கிலம் ஆகிய மொழிகளால் ஆன நூல்களைக் கொண்ட நூலகம் ஒன்று உள்ளது. இந் நூலகத்தில் பல மொழிகளிலும் உள்ள அனைத்துப் பத்திரிகைகளும் வைக்கப்பட்டுள்ளன. ஆரம்ப கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கான பாட புத்தகங்களும் வைக்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு விசேட இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் நூல் நிலையத்தில் ஆலிம்கள், உலமாக்களுக்கான கிரந்தங்களும் வைக்கப்பட்டுள்ளன.

மேல் மாடி மூன்று அறைகளைக் கொண்டது. மலசலகூட வசதிகள் அடங்கிய நஜீப் ஹாஜியாரின் அலுவலக உபயோகத்திற்கான அறையுடன் ஏனைய இரண்டு அறைகளும் கல்வி நிலைய பணிகளுக்காக உபயோகிக்கப்படுகின்றன. அத்தோடு வேறாக கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இக் கழிவறைகள் காரியாலய உத்தியோகத்தர்களுக்கும் நூல் நிலையத்திற்கு வருகை தருபவர்களுக்குமாக வைக்கப்பட்டுள்ளன. அதே போன்றே ஒரு உணவகமும் அமைக்கப்பட்டுள்ளது. ஞாயிறு முதல் வெள்ளி வரை இந்நிலையம் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை திறந்திருக்கும் வருகை தருபவர்களுக்காகவும் மாணவர்களுக்காகவும் பள்ளிவாயலும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

2016.04.15 முதல் களுத்துறை மாவட்டம் மற்றும் காலி மாவட்டத்தில் உள்ள பலபிட்டி, பனாப்பிட்டி, துந்துவ போன்ற இடங்களில் வசிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை வைத்தியசாலையில் இருந்து அவரவர் வீடுகளுக்கு இலவசமாக எடுத்துச் செல்வதற்கு வசதியாக 24 மணித்தியால சேவையாக ஒரு வாகனத்தையும் இந்நிலையத்தில் தயார் நிலையில் வைத்துள்ளார் நஜீப் ஹாஜியார் அவர்கள். “அல்ஹம்துலில்லாஹ்”.

இந்நிலையம் மூலமாக பொதுநல சேவைகள் பல நடைபெறுகின்றன. இதுவரை (2025) இந்நிலையம் மூலமாக பள்ளிவாசல்கள், அனாதை இல்லங்கள், மலசலகூடங்கள், சிறுவர் பூங்கா, பொதுக் கிணறுகள் போன்ற பொதுப் பணிகள் இலங்கையின் பல மாவட்டங்களிலும் செய்யப்பட்டுள்ளன. வருடா வருடம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களுக்கும், பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கும் கௌரவவிப்பு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இந்நிலையத்தின் மூலமாக மூன்று புத்தகங்கள் வெளியிடப்பட்டன. 2013 இல் “நெஞ்சம் நிறைந்த நஜீப் ஹாஜியார்” எனும் நூலின்

முதலாம் பாகம் வெளியிடப்பட்டது. 2022 இல் "தர்கா நகரின் பொக்கிஷங்கள்" என்ற நூலும் வெளியிடப்பட்டுள்ளது. இப் புத்தகத்திலே தர்கா நகரின் ஆரம்ப வரலாறு முதல் அனைத்து பொது மையங்களையும் உள்ளடக்கிய சரித்திரங்கள் அமையப்பெற்றுள்ளன.

இப் புத்தகங்கள் தர்கா நகரில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. மூன்றாவது நூலானது "மசீரத் கிபா" என்ற பெயரில் அரபு மொழி நூல் 2022ல் வெளியிடப்பட்டது. இது நஜீப் ஹாஜியாரின் வரலாறு இடம்பெற்ற நூலாகும். இப் புத்தகம் இலங்கையில் உள்ள அனைத்து அரபு கலாசாலைகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது. நஜீப் ஹாஜியாரும் ஒரு அரபு கலாசாலை மாணவனாக இருந்தமையே அதற்கான காரணம். அந்நாளில் மாணவனாக இருந்த நஜீப் என்பவர் எப்படி முன்னேற்றப் பாதையில் சென்றார் என்பதை ஏனைய மாணவர்களும் அறிய வேண்டும் என்பதற்காகவும் அவரை உதாரணமாகக் கொண்டு ஏனை மாணவர்களும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற அவாதான். நான்காவது நூலான இந்நூல் வாசகர்களாகிய உங்கள் கைகளில் தற்போது தவழுகின்றது.

## கல்வி நிலையத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

1) புத்தகங்கள் விநியோகிப்பது.

2) கல்வியினால் மாணவர்களைப் பயனடையச் செய்தல்.

3) அல் குர்ஆனை தஜ்வீத் முறைப்படி ஓத உதவுதல், மார்க்க விடயங்களை அறிந்து கொள்ள உதவுதல்.

4) மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் அவசியப்படும் பட்சத்தில் வழங்கி உதவி புரிதல்.

5) முன்னர் குறிப்பிட்ட மாவட்டங்களில் உள்ள ஊர்களுக்கும் ஜனாஸாக்களை அவரவர் வீடுகளில் சேர்ப்பது. தேவை பட்சத்தில் கபன் துணியும் அதனுடனான உபகரணங்களும் வழங்குவது.

6) தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களையும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களையும் வருடா வருடம் கௌரவிப்பது.

7) பொது அறிவு, மார்க்கக் கல்வி என்பவற்றை சமூகத்தில் உள்ள சந்ததியினருக்கு இலகுவாக்குவது.

*ஒவ்வொரு மனிதனும் இரட்டை கதைகளோடு வாழ்கிறான் ஒன்று அவன் வாழும் கதை மற்றது அவன் வாழ ஆசைப்படும் கதை.*

## இராச்சிய ஜனாதிபதியோடு இனியதோர் சந்திப்பு.

2003 ஆம் ஆண்டில் பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதியும் பிரதமரும் துபாய் மாகாணத்தின் அரசருமான ஷெய்க் முஹம்மது ராஷித் அவர்களை மேன்மை தங்கிய அஹமது கலீபா சுவைதியின் மாளிகையிலும் பொது வைபங்களிலும் நஜிப் ஹாஜியார் அவர்கள் சந்தித்துள்ளார்.

2004 முதல் 2022 வரை ஐக்கிய அரபு இராச்சிய ஜனாதிபதியாக இருந்த ஷேக் கலீபா அவர்களை மேன்மை தாங்கிய அஹமத் கலீபா அவர்களின் மாளிகையில் நஜீப் ஹாஜியார் சந்தித்தமை சிறப்புவாய்ந்த நிகழ்வாகும்.

இதே ஆண்டுகளில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் முடிக்குரிய இளவரசரும் 2022 முதல் இன்று வரை 2025 ஜனாதிபதியுமான முஹம்மத் ஸாயித் அவர்களை மேன்மை தங்கிய அஹமத் கலீபா சுவைதி அவர்களின் மாளிகையிலும் இன்னும் பொது வைபவங்களிலும் நஜீப் ஹாஜியார் சந்தித்துள்ளார். மேலும் பிரதி பிரதமரும் உள்நாட்டு அமைச்சருமான இரு ஜனாதிபதிகளின் சகோதரரான ஷேக் ஸயிப் அவர்களையும் பல தடவைகள் சந்தித்தமை பெருமைக்குரியதாகும். அவர்களுடன் அபூதாபியின் பொலிஸ் மா அதிபர் முகமத் கல்பான் அவர்களையும் பல சந்தர்ப்பங்களில் சந்தித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## பயாகல விகாரையில் ஜனாதிபதி மைத்திரியோடு சந்திப்பு.

களுத்துறை மாவட்டத்தில் பேருவளை பிரதேசத்தில் பிரசித்திபெற்ற ஒரு விகாரையில் ஒரு கூட்டம் 16.04.2014 இல் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் இராணுவ தலைவரும் அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேக்கா, அன்றைய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோர் கலந்து கொண்டதுடன் பேருவளை பிரதேச சபைச் செயலாளர் மூலமாக நஜீப் ஹாஜியார் அவர்களும் ஒரு பிரதிநிதியாக அழைக்கப்பட்டு கலந்து கொண்டார்.

## நன்றி மறப்பது நன்றன்று

2005 ஆம் ஆண்டு அதிபர் ஐ.எல்.எம். சுஜப் அவர்களினால் எழுதி பிரசுரிக்கப்பட்ட நூலான "தர்கா நகர்" எனும் புத்தகத்தில் 14,15,55 ஆகிய பக்கங்களில் நஜீப் ஹாஜியார் அவர்கள் தர்கா நகர் மீராப்பள்ளி (தெருவுப் பள்ளி) மற்றும் தர்கா நகர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரி ஆகிய இவ்விரு கட்டிடங்களினதும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு செய்த பெரும் சேவையை பாராட்டி நன்றி தெரிவித்து எழுதியுள்ளார்.

இக்குறிப்பில் அவர் முஅய்யிதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவரான நஜீப் ஹாஜியாரை பற்றி எழுதியிருந்தார். இக்கூற்றின் பிரகாரம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒரு பொன்மொழியான மனிதர்களுக்கு நன்றி செலுத்தாதவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தாதவனை போலாகின்றான் என்ற பொன்மொழி நமது ஞாபகத்தில் எழுகின்றது. எனவே நஜீப் ஹாஜியார் 2015 இல் காலம் சென்ற எமது அதிபர் ஐ.எல்.எம். சுஜப் அவர்கள் ஜென்னத்துல் பிர்தௌஸ் எனும் சுவனபதியை அடைய வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

*நாம் என்ன கூறினோம் என்பதை மனிதர்கள் மறந்து விடுவார்கள் எப்படி கூறினோம் என்பதை மறக்க மாட்டார்கள்.*

## மகத்தான இலவச ஜனாஸா சேவை.

நஜீப் ஹாஜியார் அவர்களின் சேவைகளில் ஒன்றான ஜனாஸா சேவை மிக முக்கிய இடத்தை பெறுகின்றது. ஆம் இச்சேவையானது பணம் படைத்தவர்கள், இல்லாதவர்கள் என்ற எந்தவிதப் பராபட்சமுமின்றி பொதுவாக முஸ்லிம்கள் என்ற அடிப்படையில் இடம்பெற்று வருகின்றது.

களுத்துறை மாவட்டத்தில் இயங்கி வரும் இச்சேவையை நஜீப் ஹாஜியார் அவர்கள் 20.4.2016 ஆம் திகதியன்று ஆரம்பித்து வைத்தார். களுத்துறை மாவட்டத்தை அண்மித்த காலி மாவட்டத்தைச் சேர்ந்த பலப்பிட்டிய, பணாப்பிட்டி, துந்துவை போன்ற இடங்களையும் இதனுடன் சேர்த்துக் கொண்டமை பெருமைக்குரிய விடயமாகும். களுத்துறை மாவட்டத்திலும், காலி மாவட்டத்தில் மேற் சொன்ன மூன்று பிரதேசங்களிலும் வசிப்போர் யாராக இருந்தாலும் ஜனாஸாக்கள் அவரவர்களது வீடுகளுக்கு கொண்டு வந்து சேர்க்கப்படுவதோடு வைத்தியசாலைகளில் இறந்தவர்களின் ஜனாஸாக்களும் இறப்புச் சான்று பத்திரங்களுடன் பொறுப்பேற்கப்படுகின்றன. வேறு மாவட்டங்களிலும் வபாத்தானவர்களின் ஜனாஸாக்கள் சட்டரீதியாக கொண்டுவரப்படும்

இவ்வாகனத்தில் கபன் துணிகளும் தயாராக உள்ளதோடு சேவையைப் பெற்றுக் கொள்ள வைத்தியரின் கடிதமும், பொலிஸ் கடிதமும் அவசியமாகின்றன.

*பிறருக்கு நீங்கள் கை கொடுக்கும் வரை இறைவன் உங்களுக்கு தெரியாமலே உங்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் உதவிக்கொண்டுதான் இருப்பான்.*

## சேவைக்குப் பாராட்டு.

ஒரு மனிதன் எந்த சேவையைச் செய்தாலும் அது பாராட்டுக்குரியதாகவே அமைவது இயல்பு. இறைவனும் அதைத்தான் விரும்புகிறான். அப்போதுதான் அவன் மேலும் மேலும் சேவை செய்ய ஆர்வம் கொள்கின்றான். அந்த வகையில் நஜீப் ஹாஜியார் மக்கள் சேவை செய்வதில் ஊறிப் போயிருந்தார். அவர் செய்துள்ள சேவைகள் எண்ணிலடங்காதவை. இலங்கையிலும், ஐக்கிய அரபு இராச்சியத்திலும் நஜீப் ஹாஜியார் செய்து கொண்டிருக்கும் சேவையைப் பாராட்டி ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் முஹிதீன் ஜிப்ரி அவர்கள் இலங்கை தூதரகத்தில் நஜீப் ஹாஜியாருக்கு ஒரு சான்றிதழை வழங்கினார்.

*யாரும் உங்களைப் பாராட்டினால் அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்லுங்கள் வாழ்வில் எதுவும் நிரந்தரம் இல்லை.*

## அனுபவங்கள் கற்க கலாசாலை சென்றார்.

நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் ஆரம்பமான நாள் முதல் அங்கு நடைபெறும் சேவைகளை விஸ்தரிக்க வேண்டும் என்ற ஆழ்ந்த சிந்தனை நஜீப் ஹாஜியார் அவர்களிடம் இருந்தது. அதற்காக அவர் பல கல்வி நிலையங்களுக்குச் சென்று அந்நிலையங்களைப் பார்வையிட்டார். அவ்விடங்களின் வரலாறுகள், பாடத்திட்டங்கள் அவற்றின் நிர்வாக நடவடிக்கைகள் என அங்கு கிடைத்த அனுபவங்களைக் கற்று அறிந்து கொள்வதில் அவர் ஆர்வமுள்ளவராக இருந்தார்.

இதன் அடிப்படையில் இலங்கை கல் எளிய என்ற கிராமத்தில் அமைந்திருக்கும் அரபு கலாசாலைக்கு 07.04.2016 ஆம் நாள் விஜயம் செய்து அங்கிருந்தும் சில அனுபவங்களை பெற்றுக் கொண்டார். இந்த அரபு கலாசாலை 1959 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும்.

*முழுமையான பரிபூரணத்தை அடைய முடியாது நாம் பரிபூரணத்தைப் பெற முயற்சித்தால் சிறந்ததை அடைய முடியும்.*

## புதல்வரும் புதல்வியும் MBBS பட்டம்.

நஜீப் ஹாஜியாரின் இரண்டாவது மகன் டாக்டர் ரஹ்மத்துல்லாஹ்வும் மகள் டாக்டர் ஹுஸ்னாவும் 2011 ஆம் ஆண்டு MBBS டாக்டர் பட்டம் பெற்று சீன பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியிருந்தார்கள். டாக்டர் ரஹ்மத்துல்லாஹ் சீனாவின் ஒரு மாகாணமான வூகானில் ஏற்கனவே படித்து பட்டம் பெற்ற பல்கலைக்கழகத்தில் சத்திர சிகிச்சை நிபுனராக கற்பதற்கு புலமைப்பரிசில் பெற்றிருந்தார். ஆகையால் அவர் அதற்குரிய பாடநெறியை தொடர்ந்தும் மேற்கொண்டார். இதனால் நஜீப் ஹாஜியார் அவர்கள் சந்தோசத்தின் உச்சிக்கே சென்றார். பிள்ளைகள் படித்து நல்ல நிலைக்கு வரும்போது பெற்றோரின் மனம் குளிராதா என்ன? டாக்டர் ரஹ்மத்துல்லாஹ்வின் சிறப்புக் கற்கை நெறி முடிவடைந்து அவரின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக நஜீப் ஹாஜியார் 25 .10. 2016 அன்று மூன்றாவது முறையாக சீன நாட்டுக்கு பயணமானார்.

*யா அல்லாஹ் எங்களுக்கு வாழ்க்கையில் எவ்வளவு மகிழ்ச்சியையும் பரக்கத்தையும் நிம்மதியையும் அமைதியையும் உனது அருட்கொடைகளையும் நீ தந்தாயோ அதை விட பல மடங்கு அதிகமாக எங்கள் குழந்தைகளுக்கு தந்தருள்வாயாக என்று பிரார்த்தனை புரிய வேண்டும்.*

## வருமானம் பெற வழி அமைத்தார்.

ஒரு கல்வி நிலையத்தை நடாத்திச் செல்வதானால் அதற்கு நிறையப் பணம் தேவைபப்டுகின்றது. நஜீப் ஹாஜியார் அவர்கள் தனது கல்வி நிலையத்தின் சேவை தங்குதடையின்றி தொடர்ச்சியாகக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்று ஆர்வம் கொண்டார். அதற்கான நிதியினைத் திரட்டிக் கொள்ளக் கூடிய வழியைத்தேடி அவர் பல விதத்திலும் சிந்தித்தார். அப்போது அவரது சிந்தையில் ஒரு அழகான யோசனை பிறந்தது.இலங்கை எவ்வளவு எழிலான நாடு. இந்த நாட்டுக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். இப்படி நாட்டைச் சுற்றிப் பார்க்க வெளிநாட்டில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளை அழைத்துச் செல்வதற்காக ஒரு வாகனத்தை வாங்கி சேவையில் ஈடுபடுத்தினால் அதில் கிடைக்கும் வருமானத்தை கல்வி நிலையத்தின் செலவுகளுக்காக பயன்படுத்திக் கொள்ளலாமே என்று நினைத்தார். அந்த யோசனையை நடைமுறைப்படுத்தினார். அதில் வெற்றியும் கண்டார்.

*எப்படி எல்லாம் வருமானம் பெற முடியுமோ அப்படி எல்லாம் ஹலால் ஆன முறையில் அமைந்தால்தான் அல்லாஹ்வும் பொருந்திக் கொள்வான்.*

## இலங்கையின் 69ஆவது சுதந்திர தினத்தில் பிரதம அதிதியாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் உயர் கல்வி அமைச்சர்.

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினம் 04.02.2017 அன்று தூதரகத்தில் நடைபெற்றது. அவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு தூதுவர் முஹிதீன் ஜிப்ரி நஜீப் ஹாஜியாருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

நஜீப் ஹாஜியார் ஏனைய பிரமுகர்களுடன் இணைந்து விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். 1979 ஆண்டு முதல் இலங்கைக்கான தூதரகம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை இருந்துவருகின்றது. அன்று முதல் இன்று வரை எல்லா பொது நிகழ்வுகளிலும், சுதந்திர தின நிகழ்வுகளிலும் நஜீப் ஹாஜியாருக்கு கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டாம் நாளன்றும் துபாய் இலங்கைக்கான துணைத் தூதுவர் நஜீப் ஹாஜியாருக்கும், அவரின் புதல்வர் ஹிதாயத்துல்லாஹ்வுக்கும் அழைப்பு விடுத்த போது இருவரும் நிகழ்வில் அகமகிழக் கலந்து கொண்டனர். அவர்களுடன் ஐக்கிய அரபு இராச்சியத்தின் உயர் கல்வி அமைச்சர் பிரதம அதிதியாக கலந்து கொண்டமையை ஒரு முக்கிய சம்பவமாகக் குறிப்பிடலாம்.

*நீ எங்கு தான் பெரியவனாக அழைக்கப்பட்டாலும் அல்லாஹ்வை விட பெரியவன் யாரும் இல்லை என்பதை மறவாதே.*

## உயர்ந்த உள்ளங்களின் உயரிய சேவை.

ஒரு நாள் நஜீப் ஹாஜியார் தனது மூன்று புதல்வர்களுடனும் தொழுகைக்காக தர்கா நகர் பெரிய பள்ளிவாயிலுக்கு சென்றிருந்தார். தொழுகை கடமையை முடித்துக்கொண்டு மூன்று புதல்வர்களும் தமது தந்தையை நெருங்கி இப்பள்ளிவாயிலின் மலசல கூடங்களையும், வுளூ செய்யும் இடத்தையும் அழகான முறையில் அமைத்துக் கொடுக்கும்படி வேண்டினர். உடனே பள்ளி நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து இப்புனரமைப்பு வேலையை மேற்கொண்டார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அந்தப் புனரமைப்புப் பணிகள் நிறைவு பெற்று 12.05.2017 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகையுடன் நஜீப் ஹாஜியார் அவர்களின் கரங்களினால் திறந்து வைக்கப்பட்டது. இவைபவத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

இப்பள்ளிவாயலானது 600 வருடங்களைத் தாண்டியது என சரித்திர சான்றுகள் கூறுகின்றன. இப்பள்ளிவாயலில் சரித்திரத்தை பூரணமாக வாசகர்கள் அறிய விரும்பினால் 2022 ஆம் ஆண்டு நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் பிரசுரித்த தர்கா நகரின் பொக்கிஷங்கள் என்ற புத்தகத்தை வாசிப்பதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

*நம் வாழ்க்கையில் நம்மால் எதுவும் செய்ய முடியாது என்று நினைக்க கூடாது உயர்ந்த உள்ளம் இருந்தால் பரந்த சேவைகள் செய்யலாம்.*

## ஊழியர்களை கௌரவித்து உள்ளம் நிறைந்தார்.

ஊழியர்களை மதித்து நடப்பதும், கௌரவிப்பதும் உயர்ந்த மனிதப் பண்பாகும். தமக்காகப் பாடுபடும் ஊழியர்களை எப்போதும் நெஞ்சில் வைத்து சரியான காலங்களில் அவர்களுக்கான சம்பள உயர்வுகளைக் கொடுத்து நல்லுபதேசம் கூறி, அவர்களிடமிருந்தும் ஆலோசனைகளைப் பெற்று, பிறர் முன்னிலையில் அவர்களைப் போற்றி, அவர்களுடைய குடும்ப சுக துக்கங்களில் கலந்து கொள்வதும் மனிதாபிமான முறையில் பாராட்டு விழாக்களில் அவர்களையும் கௌரவித்து பாராட்டி, அவர்களில் காணும் சிறு தவறுகளைப் பெரிதுபடுத்தாமல் அவர்களுக்குப் புரியும் விதத்தில் ஆலோசனைகளை வழங்குவதுமாக நமது ஊழியர்களுடன் நடந்து கொண்டால் அவர்கள் எப்போதும் எம்மோடு ஒன்றாகவே இருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அத்துடன் அவர்கள் எப்போதும் விசுவாசமுள்ளவர்களாகவும், பாதுகாவலர்களாகவும் இருப்பார்கள்.

இதன் அடிப்படையில் நஜீப் ஹாஜியார் அவர்கள் 13.01.2017 இல் தமது கல்வி நிலையத்தில் ஊழியர்களைப் பாராட்டி கௌரவித்து, அவர்களுக்கு நற்சான்றிதழ்களும் வழங்கினார். இறை நாட்டமின்றி இம்மியளவும் அசையாது.

களுத்துறை மாவட்டத்தில் வியங்கல்லை என்னும் கிராமத்தில் இரண்டு மாடிக் கட்டிடமான ஒரு மத்ரஸாவை புனர்நிர்மாணம் செய்து தரும்படி நஜீப் ஹாஜியாரிடம் அவ்வூர் மக்கள் வேண்டிக் கொண்டனர். அவர்களது வேண்டுகோளைப் புறந்தள்ளாத நஜீப் ஹாஜியார் அவர்கள் 15.01.2017 ஆம் திகதி அவரது கரங்களால் அதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். எந்தக் காரியம் நடைபெற வேண்டுமானாலும் இறை நாட்டம் வேண்டும். பிறகு அதனை புனர்நிர்மாணம் செய்ய அவருக்கு பூரண அனுமதி கிடைக்கவில்லை. ஆகையால் அப் பணி ஆரம்பிக்கப்படாமல் போனது மிகவும் கவலைக்குரிய விடயம் என்று கூறி மனம் வருந்தினார் அவர்.

*பிறர் வாழ்க்கையை பார்த்து வாழ்வதல்ல வாழ்க்கை நாம் வாழ்ந்து பார்த்து வாழ்வதுதான் நிஜமான வாழ்க்கை உள்ளமும் நிறைவைத் தருகிறது.*

## மனைவியின் எண்ணத்தை வண்ணமாக்கிய கணவர்.

2003 ஆம் நாள் தர்கா நகர் தெருவுப் பள்ளி புதிதாகக் கட்டப்பட்டது. அதன் முன்றாம் மாடி 2013 இல் கட்டி முடிக்கப்பட்டது என்பதை இந்நூலை வாசிக்கும்போது நீங்கள் அறிந்திருப்பீர்கள். நஜீப் ஹாஜியாரும், மனைவியும் ஒரு நாள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் தங்களது வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் சென்றுகொண்டிருந்த வழியில் ஒரு மையவாடி காணப்பட்டது, தனது மனைவியிடம் நஜீப் ஹாஜியார் மையவாடியைக்காட்டி அங்கு வைக்கப்பட்டிருந்த நடமாடும் கூடாரத்தைச் சுட்டிக்காட்டினார். அதை இலகுவாக அங்குமிங்கும் நகர்த்திச் செல்லக்கூடிய சௌகரியத் தன்மையை மனைவியிடம் விபரித்துக் கூறினார். அதைக் கேட்ட மனைவி அவரது எண்ணத்தை கணவரிடம் தெரிவித்தார் தர்கா நகரில் இருக்கும் தெருவுப்பள்ளி மையவாடிக்கும் இப்படியானதொரு நடமாடும் கூடாரத்தைக் கொடுத்தால் என்ன என்ற யோசனையை அவர் நஜீப் ஹாஜியாரின் சிந்தையில் விதைத்தார்.

நஜீப் ஹாஜியாருக்கு அது நல்லததொரு யோசனையாகவே பட்டது. அப்படியே செய்வோம் என்று மனைவியின் நல்லெண்ணத்துக்குப் பச்சைக் கொடி காட்டினார் அவர். அதன் பிரகாரமே முதன் முதலில் 2017 ஆம் ஆண்டில் இப்படியான ஒரு நகரும் கூடாரம் தர்கா நகர் தெருவுப் பள்ளி மையவாடியில் நிறுத்தப்பட்டது. இலங்கையில் இதுவரை எங்குமே யாராலும் இப்படியானதொரு விடயம் செய்யப்பட்டிருக்கவில்லை என்று கூறுகிறார் நஜீப் ஹாஜியார்.

*வாழ்க்கை துணை சரியாக அமையாவிட்டால் வாழ்நாள் முழுவதும் போராட்டம்தான்.*

## நடமாடும் கூடாரச்சேவை தொடர்ந்தது.

கல்வி நிலையத்தால் வழங்கப்பட்ட நடமாடும் கூடாரச் சேவை நஜீப் ஹாஜியாரால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. தர்கா நகர் பெரிய பள்ளி மையவாடி, அதிகாரிகொடை பள்ளி மையவாடி, வெலிப்பிட்டி பள்ளி மையவாடி, சீனாவத்தை ஜும்மா பள்ளி மையவாடி, இன்னும் பக்கத்து ஊர்களான, காலி சோலை ஜும்மாப் பள்ளி மையவாடி, பேருவளை மருதானை ஜும்மா பள்ளி மையவாடி, மக்கொனை ஜும்மா பள்ளி மையவாடி போன்ற மையவாடிகளுக்கும் நடமாடும் கூடாரச் சேவை வழங்கப்பட்டது.

## நல்லடக்கத்திற்கான நற்சேவை.

களுத்துறை மாவட்டத்தில் மக்கொனை பிரதேசத்திலும் களுத்துறை நகரத்திலும் ஜனாஸாவின் நடவடிக்கைகளைச் செய்வதற்கான கட்டிடங்கள் உள்ளன என்பது யாவரும் அறிந்த விடயமே. 2017 ஆம் ஆண்டு தர்கா நகரைச் சேர்ந்த ஒரு பெண்ணின் ஜனாஸாவை களுத்தறை வைத்திய சாலையிலிருந்து கொண்டு வரும் போது அப்பெண்ணின் (ஜனாஸா) வீட்டில் வசதியின்மை காரணத்தால் மக்கொனை ஜும்மா பள்ளிவாசலில் அமைந்திருக்கும் கட்டிடத்தில் குளிப்பாட்டி கபனிட்டு பின்பு அவரது இல்லத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இதைச் செவியுரற்ற நஜீப் ஹாஜியார் அவர்கள் இதற்கு ஒரு வழி அமைக்க வேண்டும் என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். தெருவுப் பள்ளியின் அன்றைய தர்மகர்த்தாக்களைச் சந்தித்து இது பற்றிக் கலந்துரையாடினார். அவர்களின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு இரு அறைகளைக் கொண்ட ஒரு கட்டிடத்தை பள்ளிக்கு அருகாமையில் அமைத்துக்கொடுத்தார்.

அவற்றில் ஒரு அறை ஜனாஸாவைக் குளிப்பாட்டுவதற்காகவும் மற்ற அறை ஜனாஸாவுக்குத் தேவையான பொருட்கள், ஜனாஸாவைக் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் “சந்தூக்” பெட்டி என்பவற்றை வைப்பதற்காகவும் பயன்படுத்தப் படுகின்றன.

*ஒரு நபரின் மனதில் நாம் பதித்த தடம் என்பது அவர்களுக்கு நல்ல நினைவுகளை மட்டுமே ஏற்படுத்த வேண்டும்.*

## மாணவ மனங்களிலும் நிலைத்தார்.

களுத்துறை மாவட்டத்தின் முஸ்லிம் பாடசாலைகளின் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் மாணவ மணிகளை 2013 ஆண்டு முதல் நஜீப் ஹாஜியார் அவரது கல்வி நிலையத்தின் மூலம் தொடர்ந்து கௌரவித்து வருவது மகிழ்வுக்குரிய விடயமாகும். காலி மாவட்டத்தில் உள்ள துந்துவை, பலப்பிடி, பனாப்பிடி போன்ற பிரதேசங்களும் இக் கௌரவிப்பில் அடங்குகின்றன. அந்தவகையில் 2017 ஆம் ஆண்டுக்கான கௌரவிப்பு விழா 02.12.2017 அன்று நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்திற்கு பிரதம அதிதியாக நவமணி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்.எம். அமீன் அவர்களும், கௌரவ அதிதியாக முன்னைய நாள் ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கை தூதரகத்தின் மொழிபெயர்ப்பாளர் செய்த் அஹமத் அவர்களும் வருகை தந்து சிறப்பித்தனர். முன்னை நாள் பாடசாலை அதிபரும், நஜீப் ஹாஜியாரின் சுயசரிதை முதல்

பிரதியின் ஆசிரியர்களில் ஒருவருமான எம்.எஸ்.எம். இர்பான் மாஸ்டர் வைபவத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து தலைமை தாங்கி நடாத்தினார்.

*உங்களைப் புரிந்தவர்களுக்கு மட்டும் நல்ல புத்தகமாகவே இருந்தால் போதும் நீங்கள்.*

## நளீமியா கலாபீடத்துக்கு நஜீப் ஹாஜியார் விஜயம்.

அது நஜீப் ஹாஜியாரின் கல்வி நிலையம் இரண்டு வருடங்களாக சிறந்த முறையில் செயற்பட்டுக் கொண்டிந்த காலகட்டம். அச்சமயத்தில் அங்கு பலவிதமான சேவைகள் நடை பெற்றுக் கொண்டிருந்தன. ஆனாலும் கல்வி நிலையத்தின் சேவைகளை இன்னுமின்னும் விஸ்தரித்து மேலும் முன்னேற்றப் பாதையில் அதனைக் கொண்டு செல்வதற்காக நஜீப் ஹாஜியார் மிகவும் கடினமாக உழைத்தார். அதற்கான வழிமுறைகளைத் தேடியறிந்து கொள்வதற்காக அவர் பல கல்விக் கலாசாலைகளுக்கும் விஜயம் செய்தார்.

அதன் அடிப்படையில் நஜீப் ஹாஜியார் அவர்கள் 17.01.2017 ஆம் திகதி தனது புதல்வி டாக்டர் ஹுஸ்னாவுடன் ஜாமியா நளீமியா கலாபீடத்துக்குச் சென்றார். கலாபீடத்தின் தலைவர் கலாநிதி சுக்ரி அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து அவருடன் உரையாடி பல விடயங்கள் பற்றிய தெளிவினைப் பெற்றுக் கொண்டார்.

*நல்ல விஜயங்கள் நன்மையை பயிற்றுவிக்கும்.*

## புதல்வருடன் 70 வது சுதந்திர தினத்தில் சங்கமிப்பு.

04.02.2018 அன்று இலங்கையின் 70 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்ட நிகழ்ச்சி அபுதாபி இலங்கை தூரகத்தில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய இலங்கையின் தூதுவர் ஜிப்ரி முஹிதீன் அவர்கள் விழாவிற்கு வருகைதரும்படி நஜீப் ஹாஜியாருக்கு அழைப்பு விடுத்திருந்தார். அவரின் அழைப்பை ஏற்று நஜீப் ஹாஜியார் அவர்களும் அவரது புதல்வர் ஹிதாயதுல்லாஹ்வும் நிகழ்வில் கலந்து கொண்டனர். இவ்விழா பிரபலமானதொரு ஐந்து நட்சத்திர ஹோட்டலில் இடம் பெற்றது. இந்நிகழ்விலே பல நாட்டுத் துணைத் தூதுவர்களும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் பல அமைச்சர்களும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

*சில காலம் சங்கமமாகும் சம்பவங்கள் சந்தோஷ பூச் சூடுகின்றன நெஞ்சில்.*

## மூன்றாம் ஆண்டு நினைவு தினம்.

எந்த விடயத்தை எடுத்துக் கொண்டாலும் அதனை நினைவு கூர்வது நற்பண்பாகும். நஜீப் ஹாஜியாரின் கல்வி நிலையத்தின் முன்றாம் ஆண்டு நினைவு தின வைபவம் 08.03.2018 அன்று கொண்டாடப்பட்டது. கல்வி நிலையத்தின் குர்ஆன் மத்ரஸா மாணவர்களுக்கிடையே சன்மார்க்கப் போட்டிகள் நடாத்தி அதில் வெற்றிபெற்றவர்களுக்கு அன்றைய தினம் பரிசுகளும் வழங்கப்பட்டன. இவ்வைபவத்திற்கு பிரதம அதிதியாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதரகத்தின் மொழிபெயர்ப்பாளர் ஷெய்க் அஹமட் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

*பேசாத பொழுதும் பேசிக்கொண்டே இருக்கிறது பேசிய நினைவுகள்.*

## மஸ்ஜித் தக்வா திறப்பு விழா.

தர்கா நகரில் வெலிப்பிட்டி என்ற கிராமத்தில் 2018 ஆம் ஆண்டுகளில் சுமார் 250 குடும்பங்கள் அளவில் வாழ்ந்து வந்தனர். 1993 ஆண்டுப் பகுதியில் ஷெய்க் மதார் வீதியில் ஒரு சிறு பள்ளிவாயல் கட்டப்பட்டிருந்தது. இப்பள்ளிவாயலின் தேவைகள் பரிபூரணமின்றிக் காணப்பட்டன. அதனை அவதானித்த நஜீப் ஹாஜியார் அவர்கள் அத் தேவைகளைச் செய்து கொடுத்து அப்பள்ளிவாயலைப் பூரணமானதொரு பள்ளிவாயலாக அமைத்துக் கொடுத்தார்.

அதற்குத் தேவையான நிதியுதவியை நஜீப் ஹாஜியார் அவர்களே திரட்டிக் கொடுத்தார். பள்ளிவாயலின் திறப்பு விழா 06.05.2018 ஆம் திகதி புனித ரமழான் மாதம் கோன்பு 11 இல் நடை பெற்றது. இப்தார் நிகழ்வைத் தொடர்ந்து நஜீப் ஹாஜியார் அவர்களின் திருக் கரங்களால் பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டது. அன்று அங்கு சமுகமளித்திருந்த அனைவருக்கும் இப்தார் ஏற்பாடுகளுடன் இராப்போசன விருந்தும் நஜீப் ஹாஜியார் அவர்களால் வழங்கப்பட்டது. இவ்வைபவத்தில் சுமார் ஆயிரம் பேர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

*கண் குளிர் காட்சிகள் இடம்பெறும் போது இறைவனை துதியுங்கள் ஏனென்றால்*
*அவன் நாட்டம் இன்றி எதுவும் நடக்காது.*

## பனாப்பிடிய பள்ளிவாசல் திறப்பு விழா.

காலி மாவட்டம் பனாப்பிடிய கிராமம் சுமார் 150 குடும்பங்கள் வாழும் ஒரு சிறிய கிராமமாகும். இங்கு ஒரு முஸ்லிம் பாடசாலையும், பள்ளி

வாயலும் உள்ளன. இக்கிராமத்தைச் சூழவும் கறுவாத் தோட்டங்கள் அமைந்துள்ளமை ஒரு வரப்பிரசாதம் ஆகும். பள்ளி வாயலின் பின் பக்கமாக ஒரு அழகிய ஆறும் ஓடிக் கொண்டிருப்பது கிராமத்திற்கு தனியான ஒரு அழகுதான். இக்கிராமத்தை 1945 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் அனுமதியுடன் இலங்கை முஸ்லிம்களின் பெரியார் புகழ் பெற்ற சேர் ராசிக் பரீத் அவர்கள் அழகுற அமைத்திருந்தார். இங்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2 ஏக்கர் நிலம் அளவில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. காலி மவட்டத்தைச் சேர்ந்த துந்துவை, பலப்பிடி போன்ற இடங்களிலிருந்தும், இன்னும் சில பிரதேசங்களிலிருந்தும் வந்தவர்களே இக்கிராமத்தில் குடியமர்த்தப்பட்டிருந்தனர்.

இக்கிராமந்தின் பள்ளிவாயலானது புனர்நிர்மாணம் செய்யப் வடவேண்டிய நிலையில் காணப்பட்டது. இப்படியிருக்க அப் பிரதேசவாசிகள் நஜீப் ஹாஜியாரின் கல்வி நிலையம் வந்து அவரைச் சந்தித்து பள்ளிவாயலை புனர்நிர்மாணம் செய்து தரும்படி கேட்டனர். அவர்களின் வேண்டுகோளை மனமுவந்து ஏற்றுக் கொண்ட நஜீப் ஹாஜியார் தனது முயற்சியால் பிரிதொருவரின் உதவியுடன் இப்பள்ளிவாயலை புனர்நிர்மாணம் செய்து கொடுத்தார்.

17.08.2018 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகைக்கு முன் நஜீப் ஹாஜியாரின் கரங்களால் பள்ளிவாயில் திறந்து வைக்கப்பட்டது மட்டுமல்லாமல் சமூகமளித்த அனைவருக்கும் ஹாஜியாரின் ஏற்பாட்டில் பகற் போசனமும் வழங்கப்பட்டது.

*நடக்கட்டும் நம்புகிறோம் என்பது மனிதர்களின் வாக்கு நம்பினால்*
*நடக்கும் என்பது சித்தர்களின் வாக்கு*

## பெண்கள் பயிற்சி நிலையத்திலும் ஒரு விசேட அதிதியாக.

மூன்று மாடிக்கட்டடமாக கம்பஹா மாவட்டம் கஹட்டோவிடவில் பெண்கள் பயிற்சி நிலையம்
ஒன்று 2018 இல் ஆரம்பிக்கப்பட்டது. இப் பிரதேசத்தின் அப்போதைய அமைச்சர் பாயிஸ் முஸ்தபா அவர்களும் இம்மூன்று மாடிக் கட்டடத்தை கட்ட பண உதவி புரிந்த கொழும்பைச் சேர்ந்த இல்லியாஸ் ஹாஜியார் அவர்களும் திறப்பு விழாவில் கலந்த சிறப்பித்திருந்தனர்.

அவ்வைபவத்தில் நஜீப் ஹாஜியார் அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் அஹ்மத் முனவ்வர் ஹாஜியார் அவர்களின் அழைப்பை ஏற்று விசேட அதிதியாகவும், பேச்சாளராகவும் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

*ஒரு நபரின் மனதில் நாம் பதித்த தடம் என்பது அவர்களுக்கு நல்ல நினைவுகளை மட்டுமே ஏற்படுத்த வேண்டும்.*

## தூதுவர்களை சந்தித்து சேவைகளில் செழித்து நின்றார்.

13.12.1978 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் அவர்கள் முதன் முதலாக ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சென்றமை வாசகர்களாகிய நீங்கள் அறிவீர்கள். அவ்வேளையில் அங்கு இலங்கைக்கான ஒரு தூதரகம் இருக்கவில்லை. 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதன் முதலாக இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதரகம் அப்போதைய இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ஏ.ஸீ.எஸ். ஹமீத் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அன்று ஆரம்பிக்கப்பட்ட தூதரகத்தில் இன்று வரை (2025) ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கைக்கான தூதுவர்களை சந்திப்பதும் கலந்தாலோசிப்பதும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதும் அங்கு வாழ் இலங்கையர்களின் நலன் கருதி பெருஞ் சேவைகளில் ஈடுபடுவதும் நஜீப் ஹாஜியார் அவர்களின் வழக்கமாமகக் காணப்பட்டது.

அந்த வகையில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான புதிய தூதுவராக நியமிக்கப்பட்ட சபருல்லாஹ்கான் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து அறிமுகத்தை ஏற்படுத்திக் கொண்டார் நஜீப் ஹாஜியார்.

*விடை கண்டு பிடிக்க வேண்டிய புதிர் அல்ல வாழ்க்கை அது வாழ்ந்து பார்க்க வேண்டிய ரகசியம்.*

## ஐக்கிய அரபு இராச்சியத்திலும் இலங்கை சிறார்களுக்கு கலைப் போட்டி.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதரகத்தில் இலங்கை வாழ் குடும்ப சிறார்களுக்கு மத்தியில் அவர்களுக்கு உற்சாகமூட்டி, அவர்களின் திறமைகளை வளர்த்தெடுக்கும் விதத்தில் கலைப் போட்டியொன்று நடைபெற்றது.

இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவ மணிகளை கௌரவித்து பரிசுகள் வழங்கப்பட்டன. இவ் வைபவத்திற்கு நஜீப் ஹாறியார் அவர்கள் பிரதம அதிதியாக அழைக்கப்பட்டமை பெருமைக்குரிய விடயமாடும்.

*மனிதர்களுக்கு மத்தியில் போட்டி இருக்க வேண்டும்
பொறாமைப் படக்கூடாது.*

## நன்கொடையும் திறப்புவிழாவும்.

தர்கா நகரில் அதிகாரிகொடை கிராமத்தில் சுமார் 300 முஸ்லிம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். அங்கு மலை மேட்டில் இற்றைக்கு 125 வருடங்களுக்கு முன்பாக ஒரு பள்ளிவாயல் அமைக்கப்பட்டிருந்தது. இப்பள்ளிவாயலானது பல தடவைகள் புனர்நிர்மாணம் செய்யபட்டிருந்தது.

1986 ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கை மக்கள் நலன்புரிச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த விடயம் நீங்கள் அறிந்ததே.

அச்சங்கத்தின் தலைவராக ஏகமனதாக நஜீப் ஹாஜியார் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். அச்சங்கத்தின் உறுப்பினர்களுள் ஒருவரான அதிகாரிகொடையைச் சேர்ந்த சகோதரன் முனாஸின் வேண்டுகோளுக்கு இணங்க தலைவர் நஜீப் ஹாஜியார் அவர்கள் சங்கத் தலைவர் என்ற அடிப்படையில் ஒரு சிறு பணத் தொகையை நன்கொடையாக வழங்கியிருந்தார்.

அதே போன்று அதிகாரிகொடைப் பள்ளியின் இரண்டு மாடிக் கட்டடத்தை நிறைவு செய்து தருமாறு நிர்வாக சபை நஜீப் ஹாஜியாரிடம் வேண்டிக் கொண்டபோது நஜீப் ஹாஜியார் அவர்கள் மனமுவந்து அவ்வேண்டுகோளை ஏற்று பிரிதொருவரின் உதவியுடன் பணியை செய்து கொடுத்தார்.

09-11-2018 யில் வெள்ளிக்கிழமை ஜும்ஆவுக்கு முன்பு நஜீப் ஹாஜியார் அவர்களினால் பெரும் திரளான மக்களுக்கு மத்தியில் பள்ளிவாயல் திறந்து வைக்கப்பட்டது.

இப்பள்ளிவாயலின் தோற்றம் ஒரு மேட்டுப் பகுதியில் அமைந்துள்ளதால் வெகு தூரத்திலிருந்தே அப்பாதை வழியாக செல்பவர்களுக்கு அழகாகக் காட்சி தருகின்றது என காண்பவர்கள் கூறுவது எல்லோர் செவிகளுக்கும் விருந்து போடுவதாக இருந்தது.

*தகுதியான நேரத்தை நோக்கி காத்திருக்காதீர்கள் கிடைக்கும்
நேரத்தை தகுதி ஆக்கிக் கொள்ளுங்கள்.*

## பிரதம அதிதிகளாக தந்தையும் புதல்வரும்.

வருடா வருடம் நடைபெற்று வரும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு பற்றி வாசகர்களாகிய யாவரும் அறிந்திருப்பீர்கள். மேற்படி பரீட்சையில் 2018 ஆம் ஆண்டு 80 மாணவர்கள் சித்தி பெற்று பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். இம்மாணவர்கள் களுத்துறை மாவட்ட அனைத்து முஸ்லிம் பாடசாலைகளிலிருந்தும் காலி மாவட்டத்தில் அடங்கும் பனாப்பிடி, பலப்பிடி, துந்தவை போன்ற முஸ்லிம் பாடசாலைகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். கௌரவிப்பு விழா நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்களுக்கு மத்தியில் விமர்சையாக நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதம அதிதிகளாக நஜீப் ஹாஜியார் அவர்களும் புதல்வர் நிஹ்மதுல்லாஹ் (கல்வி நிலைய முகாமையாளர்) அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

*நினைவுகள் தராத உறவுகள் நம் மனதில் நிலைத்து இருப்பதில்லை.*

## மஸ்ஜித் பிலால் அடிக்கல் நாட்டு விழா.

இற்றைக்கு 35 (2024) வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு தர்கா நகர் ஆற்றங்கரையோர காற்றோட்டம் மிக்க இரம்மியமான சூழலில் அமைந்துள்ளதே மஸ்ஜிதுல் பிலால் பள்ளிவாயலாகும்.

இப் பிரதேச மக்கள், பள்ளி வாயல் நிர்வாகிகள் இப்பள்ளிவாயலை இரண்டு மாடிக் கட்டடமாக நிர்மாணித்துத் தரும்படி நஜீப் ஹாஜியார் அவர்களை கேட்டுக் கொண்டனர். அதனை அவரும் ஏகமனதாக ஏற்று பிரிதொருவர் உதவியுடன் நிர்மாணித்துக் கொடுத்தார்.

பள்ளிவாசலின் அப்பணிகளுக்காக 12.11.2018 யில் ஏராளமானவர்களுக்கு மத்தியில் நஜீப் ஹாஜியார் அவர்களின் திருக் கரங்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

*நம்முடைய எண்ணமும் சிந்தனையும் செயலும் தெளிவாக இருந்தால்*
*யாராலும் நம்மை மாற்றிட முடியாது.*

## மத்ரஸா புனரமைப்பும் பிரதம அதிதியும்.

காலி மாவட்டத்தில் பலப்பிடி பிரதேசத்தில் அமைந்தள்ளதுதான் மத்ரஸதுல் அல் அஷ்ஷரியா. இம் மத்ரஸாவை புனரமைப்பு செய்து

தருமாறு அங்குள்ள நிர்வாகிகள் நஜீப் ஹாஜியார் அவர்களைக் கேட்டுக் கொண்டனர். இவ்வாறான வேண்டுகோள்களை புறந்தள்ளாத நஜீப் ஹாஜியார் அவர்கள் உடனே அச்செயற் திட்டத்தில் இறங்கினார். அப்பணிகள் மும்முரமாக செய்யப்பட்டு பூரணமடைந்து 30-12-2018 அன்று நஜீப் ஹாஜியார் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இன்னொரு நாள் இம் மத்ரஸாவில் மிலாதுன் நபி விழா கொண்டாடப்பட்டபோது. அவ்வைபவத்தில் நஜீப் ஹாஜியார் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததுடன் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பரிசுகளை வழங்கி வைத்தார்.

*அல்லாஹ் உன் வாழ்வில் ஏற்படுத்திய ஒவ்வொரு நலவுகளுக்கும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த மறந்து விடாதே.*

## இப்படியும் ஒரு விழாவில் விசேட அதிதியாக.

06-01-2019 ஆம் திகதி தர்கா நகர் அல்ஹம்ரா மஹா வித்யாலயத்தில் சிறுவர்களுக்கான (மாணவர்கள்) பரிசளிப்பு விழா ஒன்று இடம் பெற்றது. இவ் விழாவில் அப்போதைய அமைச்சர் டீ. அஜித் பெரேரா பிரதம அதிதியாகவும் நஜீப் ஹாஜியார் அவர்கள் விசேட அதிதியாகவும் அழைக்கப்படிருந்தனர். இவ்விழாவிற்கு பிரபல அறிவிப்பாளர் பாஸி சுபைர் அவர்கள் தலைமை தாங்கினார்.

*சிறுவர்களை ஆதரித்தால் சோகமான நேரம் கூட மாறிப்போகும் வலிகள் கூட தொலைந்து போகும்.*

## சிந்தையைக் கவரும் சிறுவர் பூங்கா.

தர்கா நகர் அல்ஹம்றா மகா வித்தியாலய அதிபர் திரு. நஸ்ரி அவர்கள் களுத்துறை கல்வி வலயத்தின் அனுமதிமையப் பெற்று சிறுவர் பூங்காவொன்றை அமைத்துத் தரும்படி நஜீப் ஹாஜியார் அவர்களிடம் கேட்டுக் கொண்டார். அவர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நஜீப் ஹாஜியார் அவர்கள் பாடசாலை வளாகத்தில் 16.01.2019 ஆம் திகதி அதற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். இவ்வைபவத்திற்கு பேருவளை பிரதேச சபையின் அப்போதைய தலைவரும், உறுப்பினர்களும் வருகை தந்து சிறப்பித்தனர்.

இச்சிறுவர் பூங்காவிற்கு “நஜீப் ஹாஜியார் சிறுவர் பூங்கா” எனப் பெயர் சூட்டப்பட்டது. 18.04.2019 ஆம் திகதி ஏராளமான மக்கள் மத்தியில் பாடசாலை மாணவர்கள் அணிவகுத்து நிற்க நஜீப் ஹாஜியார் அவர்களின் அன்புக் கரங்களால் இச்சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு இப்பூங்காவிற்கு

செலவாகிய பணத் தொகை சுமார் 50 இலட்சம் ஆகும். இத் தொகையானது நஜீப் ஹாஜியார் அவர்களின் 33 வருட அரச சேவை ஓய்வூதியத்தின் ஒரு பகுதியாகும்.

தர்கா நகரிலும் அண்மித்த ஊர்களிலும் சிறுவர்களின் நலன் கருதியே இச்சிறு பூங்காவை நஜீப் ஹாஜியார் அவர்கள் நிர்மாணிக்க முன்வந்தார். அவருடைய ஓய்வூதியத்தை தனது குடும்பத்துக்கோ அல்லது சொந்தத் தேவைகளுக்கோ பயன்படுத்தாமல் தர்கா நகரின் எதிர்கால சந்ததியினரான சிறுவர்களின் பொழுது போக்கு நேரம் பயனுள்ளதாக அமைய வேண்டும் என்பதற்காக செலவு செய்து பூங்காவை அமைத்தமைக்காக ஊர் மக்களின் உயரிய பாராட்டும். பிரார்த்தனைகளும் அவருக்குக் கிடைத்தன.

*மரணத்தை விட மோசமானது மனதில் வாழ்ந்தவர்களை மறந்தது போல் வாழ்வததான்.*

## ஞாபகமூட்டல்.

## நஜீப் ஹாஜியார் அவர்கள் செய்த சேவைகள் சிலவற்றை ஞாபக மூட்டுகிறேன்.

1. களுத்துறை மாவட்டத்தில் முதன் முதலில் ஜனாஸா சேவையை ஆரம்பித்தமை.
2. தர்கா நகரில் ஒரு நூல் நிலையத்தை ஆரம்பித்தமை.
3. சிறுவர் பூங்காவை நிர்மாணித்தமை.
4. ஜனாஸா குளிப்பாட்டும் கட்டடத்தை நிர்மாணித்தமை.
5. பள்ளி மையவாடிகளுக்கு நடமாடும் கூடார வசதிகள் செய்து கொடுத்தமை.
6. 800 வருட கால தர்கா நகரின் பொது மையங்களை குறிப்பிட்டு தர்கா நகர் வரலாற்றை
பல வருடங்களாக சேகரித்து “தர்கா நகரின் பொக்கிஷங்கள்” எனும் புத்தகத்தை நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் மூலமாக வெளியிட்டு தர்கா நகர் வாழ் முஸ்லிம் மக்களுக்கு இலவசமாக விநியோகித்தமை.
7. தர்கா நகரில் வசிக்கும் 4500 வீடுகளுக்கு இஸ்லாமிய கலண்டர்களை வருடாவருடம்
இலவசமாக வழங்குகின்றமை.

*வேப்ப மரத்தின் வேரில் தேனை ஊற்றி வளர்த்தாலும் அதன் கசப்புத் தன்மை மாறாது அப்படித்தான் சில மனிதர்களும்.*

## பெண்களுக்குத் தொழுகை மண்டபம் அத்தியாவசியமாகும்.

பேருவளை மருதானை கடற்கரையோரத்தில் கி.பி 920 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பழைமை வாய்ந்த பள்ளிவாசல் ஒன்றின் மேல் மாடியில் தொழுகை மண்டபம் ஒன்றுக்கான தேவை ஏற்பட்டது. அதனை நஜீப் ஹாஜியார் அவர்கள் மனமுவந்து நிர்மாணித்துக் கொடுத்தார். 19.04.2019 அன்று வெள்ளிக்கிழமை ஜும்மாவுக்குப் பின் அவ்வூர் மக்களின் முன்நிலையில் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இப்பள்ளிவாயலை கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அப்போதைய அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் இலங்கையின் பழம்பெரும் புராதன கட்டிடங்களின் ஒரு அங்கமாக அரச அங்கீகாரம் கொடுத்து சேர்த்துக் கொண்டார்.

*ஏங்கிக் கிடத்தலில் எதுவும் நடக்கப் போவதில்லை என்றானபின் அதைக் கடத்தல் என்பது வலி நிறைந்த போராட்டமே.*

## மஸ்ஜித் பிலால் திறப்பு விழா.

12.11.2018 இல் நஜீப் ஹாஜியார் அவர்களால் அடிக்கல் நட்டி புது நிர்மாணப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்ட மஸ்ஜித் பிலால் பள்ளிவாயல் இரு மாடிக் கடடடமாக கட்டி முடிவடைந்திருந்தது. தர்கா நகரில் ஹாஜி லேனில் பெந்தோட்டை நதியின் அருகாமையில் நதியை நோக்கி மிகவும் கம்பீரமான முறையில் அமைக்கப்பட்ட இப்பள்ளிவாயலை 20.04.2019 ஆம் திகதி அஸர் தொழுகையுடன் பெருந்திரளான மக்களுக்கு மத்தியில் நஜீப் ஹாஜியார் அவர்கள் தனது கரங்களால் திறந்து வைத்தார்.

இப்பள்ளிவாயலின் ஆரம்ப வரலாறு நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தினால் கடந்த 2022 ஆம் வருடம் பிரசுரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்ட தர்கா நகரின் பொக்கிஷங்கள் நூலின் மூலமாக வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்.

*இன்பங்களை கொண்டாடவும் துன்பங்களை பகிரவும் உறவு ஒன்று இருக்கும் என்றால் வாழ்வில் நகர்வுகள் ஒவ்வொன்றும் பேரழகுதான்.*

## சமுர்த்தி வங்கிக்கு நகல் எடுக்கும் இயந்திரம்.

இலங்கையில் பல பாகங்களிலும் அரசாங்கத்தினால் சமுர்த்தி வங்கி அமைக்கப் பட்டுள்ளமை யாவரும் அறிந்த விடயமாகும். இந்த வங்கியின் நோக்கம் முதியோர்கள், வறியவர்கள், அங்கவீனர்கள்

போன்றோருக்கு மாதாந்தம் நிதி உதவி வழங்கி அவர்கள் வாழக்கையில் மேம்பட உதவுவதாகும்.

அங்கு மாதாந்தம் சமூகமளிக்கும் சாதாரண, வலது குறைந்த வாடிக்கையாளர்களின் ஆவணங்களை நகல் எடுக்கும் சேவையை பெற்றுக் கொள்வதில் சிரமம் ஏற்படுகின்ற காரணத்தினால் நஜீப் ஹாஜியார். அவர்கள் அவரது சகோதரியின் வேண்டுகோளுக்கு இணங்க 09.09.2019 ஆம் நாள் நகல் பிரதி இயந்திரம் ஒன்றை வங்கி ஊழியர்கள் முன்நிலையில் தர்கா நகர் காரியாலயத்தின் முகாமையாளரிடம் வழங்கினார்.

*மரணம் எப்போது என்று தெரியாத இவ்வாழ்வில் மக்களை திருப்திப்படுத்தும்*
*எண்ணத்தை விட்டு விட்டு உனக்காக நேரத்தை செலவிடும்*
*அடியானாக மாற்றிவிடு யா அல்லாஹ்.*

## புதல்வருடன் தூதுவரைச் சந்தித்தல்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதரகத்திற்கு தூதுவர்கள் தத்தமது பதவிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் புதிய தூதுவர்கள் இலங்கை அரசினால் நியமிக்கப்படுவது வழக்காமாகும்.

அந்த வகையில் 09.15.2019 இல் நஜீப் ஹாஜியார் அவர்களும் அவரின் மூத்த புதல்வருமான நிஹ்மதுல்லாஹ்வும் அபுதாபி இலங்கை தூதரகத்திற்குச் சென்று சமீபத்தில் புதிய தூதுவராக வருகை தந்திருந்த மஜிந்த என்பவரைச் சந்தித்து அங்கு வாழும் இலங்கையர்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளைப் பற்றியும் நஜீப் ஹாஜியாரின் கடந்த கால சேவைகளைப் பற்றியும் கலந்துரையாடினார்கள்.

*உன் வாழ்வில் சில அருட்கொடையாக வருவார்கள் இன்னும் சிலர் உனக்கோர்*
*பாடமாக வருவார்கள் அருட்கொடையைப் பேணிக்கொள்*
*பாடத்தைக் கற்றுக்கொள்.*

## 33 வருட சேவைக்காக கௌரவிப்பு.

23.01.2020 இல் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஒரு நகரமான அல்ஜன் எனும் மாவட்டத்தில் பொலீஸ் தலைமையகத்தில் நஜீப் ஹாஜியார் அவர்களின் 33 வருட சேவையைப் பாராட்டி அப்போதைய அம்மாவட்டத்திற்குப் பொறுப்பான பொலீஸ் அதிபர் நஜீப் ஹாஜியார் அவர்களுக்கு சான்றிதழும், கேடயமும் வழங்கி கௌரவித்தமை பெருமைக்குரிய விடயமாகும்.

*மனம் எனும் கடிவாளத்தை திருப்பி பிடித்துக் கொள் இல்லை என்றால் அது சொர்க்கம் மட்டுமல்ல நரகத்துக்குக் கூட கொண்டு சென்று விடும்.*

## களுத்துறை ஸாவியா திறப்பு விழா.

களுத்துறை அல்விஸ் பிளேஸில் அமைந்துள்ள ஸாவியதுல் பாஸியதுல் சாதுலியா இற்றைக்கு 60 வருடங்களுக்கு முன் பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த ஒரு தனவந்தரின் உதவியைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும்.

இப்பிரதேசத்தில் 80 குடும்பங்கள் வசிக்கின்றனர். இந்த ஸாவியாவை புனர்நிர்மாணம் செய்வதற்காக ஸாவியா நிர்வாகிகளும், ஊர் மக்களும் முயற்சி செய்து கொண்டிந்தபோது பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த பத்திரிகை நிருபர் பி.எம். முக்தார் அவர்களே நஜீப் ஹாஜியாரைப் பற்றிச் சொல்லி அவர்களிடத்தில் அறிமுகப்படுத்தியுள்ளார்.

புனர்நிர்மாணப்பணிகள் 03.11.2019 அன்று நஜீப் ஹாஜியார் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு 25.12.2022 ஆம் திகதி நிறைவு பெற்று நஜீப் ஹாஜியார் அவர்களினாலேயே மாலை மஃரிப் தொழுகையுடன் திறந்து வைக்கப்பட்டது.

## அநாதை இல்லம் குளிர்வான உள்ளம்.

வவுனியா மாவட்டத்தில் அரபா நகரில் இலங்கை அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டு ஓர் அநாதை இல்லம் அமைக்கப்பட்டுள்ளது.

அதன் நிலப்பரப்பு ஒரு ஏக்கரைக் கொண்டதாகும். அதில் ஒரு கட்டிடம், சில தனவந்தர்களால்
கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது. அங்கு சுமார் 75 இஸ்லாமிய அநாதரவானவர்கள் உள்ளனர்.

இக்கட்டடத்துடன் வகுப்பறைகள், பள்ளி வாயல், ஆசிரியர் அறை, மலசல கூடங்கள், வுழுச் செய்யுமிடம் போன்றவைகள் அடங்கிய பிரிதொரு கட்டடம் அத்தியாவசமாக இருந்தது. பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த கொடை வள்ளல் நளீம் ஹாஜியார் அவர்களின் மருமகன் இம்ரான் ஹாஜியாரின் சகோதரியின் மகன் இபாம் பாஸி ஹாஜியார் அவர்கள் மேற்கூறிய கட்டடத்தை அமைத்துத் தரும்படி நஜீப் ஹாஜியாரிடம் வேண்டினார். அநாதைகளிடத்தில் அன்பு வைத்துள்ள நஜீப் ஹாஜியார் அவர்களால் இச்சேவையை மறுக்க முடியவில்லை. அவர் அதை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்.

இக்கட்டடமானது 28.03.2021 அன்று கட்டி முடிக்கப்பட்டு நஜீப் ஹாஜியார் அவர்களினால் அனைவரும் மகிழும் வகையில் அயலவர்களினதும் ஊர் மக்களினதும் முன்நிலையில் ஆனந்தமாகத் திறந்து வைக்கப்பட்டது.

அதேநேரம் 75 சிறார்களைக் கொண்ட அநாதை இல்லம் ஒன்றுக்கும் வருடா வருடம் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் முகமாக சிறார்களுக்கு புத்தாடையும், பண உதவியும் வழங்குவதும் இச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்தத்தக்கது.

மண்ணில் உள்ளவனுக்கு இரக்கம் காட்டுங்கள் விண்ணில் உள்ளவன் இரக்கம் காட்டுவான் என்பதற்கு ஒப்ப இச்சேவையானது நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்களில் அநாதைகள் பற்றி ஏராளமான வாசகங்களைக் கற்று அறிந்து வைத்துள்ளமையால் தாம் இவ்வாறான சேவைகளை மேற்கொண்டு வருவதாக நஜீப் ஹாஜியார் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

## சீருடை வழங்கி சித்தம் குளிர்ந்தார்.

2021 இல் நஜீப் ஹாஜியார் அவர்களின் சேவைகளில் தேவையுடையவர்களுக்கு சீருடை வழங்கும் ஒரு திட்டத்தையும் புதிதாகச் சேர்த்திருந்தார்.

வெலிப்பன்னை குர்ஆன் மத்ரஸாவிற்கும் தர்கா நகர் அல்ஹம்றா மஹா வித்தியாலயத்திற்கும் விளையாட்டுச் சீருடைகளை வழங்கி வைத்த அதே சமயம் விளையாட்டுக் கழகங்களுக்கும் சீருடைகள் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் மூலம் விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு.

01.12.2021 அன்று சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்தவரான “புதியநிலா” ஊடகவியலாளரும் பத்திரிகையாளருமான செய்யித் ஜாகிர் அவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைநகரான அபூதாபிக்கு சமூகமளித்த வேளையில் நஜீப் ஹாஜியார் அவர்களின் சேவையைப் பாராட்டி அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

## சேவைகள் தொடர்கின்றன
## தர்கா நகர் மஸ்ஜிதுன் நூர்.

தர்கா நகர் மஸ்ஜிதுன் நூர் பள்ளிவாயலில் 3 அறைகளும், பள்ளிக் கூடத்திற்கான மண்டபமும் அமையப் பெற்றிருந்தன. அம்மண்டபம்

ரமழான் மாதத்தில் பெண்களுக்கு தராவீஹ் தொழுவதற்கான இடமாக அமைத்து நவீன முறையில் மலசல கூடங்களும், வுழூச் செய்வதற்கான ஒரு இடமும், ஒரு பொதுக் கிணறும் செய்து தரும்படி பள்ளிவாயலின் நிர்வாகிகளினாலும் அப்பகுதி மக்களாலும் நஜீப் ஹாஜியார் அவர்களிடம் கேட்கப்பட்டிருந்தது. அதை முழுமனதாக ஏற்று நஜீப் ஹாஜியார் அவர்கள் அவரது கல்வி நிலையம் மூலம் அமைத்துக் கொடுத்தார்.

இதன் நிர்மாணப் பணிகள் முடிவு பெற்று 04.04.2021 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் அவர்களின் கரங்களால் அஸர் தொழுகையுடன் திறந்து வைக்கப்பட்டது. இதுவும் நஜீப் ஹாஜியார் அவர்களின் மகத்தான சேவைகளில் ஒன்றாகும்.

## ஆளுனரைச் சந்தித்தல்.

அப்போதைய அமைச்சரும் கிழக்கு மாகாணத்தின் அப்போதைய ஆளுனருமான எம்.எல்.எ.எம். ஹிஸ்புல்லாஹ் அவர்களை கொழும்பு மாநகரில் 12.04.2021 யில் நஜீப் ஹாஜியார் அவர்கள் சந்தித்து கலந்துரையாடினார். அப்போது இருவரினதும் அன்றாட வாழ்வியல் அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

ஹிஸ்புல்லாஹ் அவர்கள் தர்கா நகரின் முதன்மை வகிக்கும் பாடசாலைகளில் ஒன்றான ஸாஹிறா மகா வித்தியாலயத்தில் தனது உயர்தரக் கல்வியைக் கற்றவர் என்பதை அவருடன் உரையாடும் போது நஜீப் ஹாஜியார் அவர்கள் அறிந்து கொண்டார்.

## நூல் வெளியீடும் இனாமாக வழங்கப்பட்டமையும்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் தேச பிதா காலஞ் சென்ற சேக் சாயித் சுல்தான் அல் நேஹ்யான் அவர்களின் உபதேசத்தில் ஒன்றான......

இறந்த காலங்களை அறியாதவர்களுக்கு, நிகழ் காலமும் இல்லை, எதிர் காலமும் இல்லை என்ற வாக்கியத்தின் கருத்தாவது, சென்ற காலங்களில் தமது முதாதையர்களின் வாழ்க்கை முறை, நடை முறை, செயல் முறை, சன்மார்க்கமுறைகள் பற்றிய விடயங்கள், எளிமையான வாழ்க்கை முறை, குடும்ப ஒற்றுமை, பொறாமையற்ற மனநிலை என்று பழைமையை அறியாதவனுக்கு நிகழ் காலத்திலும் எதிர் காலத்திலும் சிறப்பாக வாழ முடியாது என்பதாகும்.

பொதுப் பணிகள், உதாரணமாக பள்ளிவாயல்கள், பாடசாலைகள், எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கை முறையை இலகுபடுத்துவதற்கான செயன் முறைகள், விவசாயத் திட்டங்கள்

என்பவற்றுடன் வரலாறையும் கற்றறியாதவர்களுக்கு நிகழ் காலத்திலும், எதிர் காலத்திலும், வாழ்க்கையை வழி நடத்துவதற்கான படிப்பினைகளைப் பெறுவது கடினம் என்ற ஒரு கருத்தையும் அவ்வாக்கிலிருந்து பெறலாம்.

இப்பெரியாரின் கருத்தை நன்குணர்ந்த நஜீப் ஹாஜியார் அவர்களின் மனதில் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தோன்றியதன் காரணமாக தர்கா நகரின் 800 வருட வரலாற்றை பல வருடங்களாகச் சேகரித்து நிகழ்காலத்திலும் எதிர் காலத்திலும் வாழ்கின்ற சந்ததியியினருக்கு ஒரு படிப்பினையாகவும், மூதாதையர்களின் நற்செயற் திட்டங்களை அறியப் படுத்துமுகமாகவும் இனிமேலும் தர்கா நகரின் வரலாறு அழியாமல் பேணிப் பாதுகாக்கப்படுவதற் காகவும் “தர்கா நகரின் பொக்கிஷஙகள்” எனும் நூலை வெளியிட்டு 20.04.2022 அன்று தர்கா நகரில் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தில் ஊரின் முக்கிய பிரமுகர்கள் மத்தியில் வெளியிட்டு, தர்கா நகரில் வசிக்கும் 4500 குடும்பங்களுக்கும் வீடு வீடாகச் சென்று இனாமாக பகிர்ந்தளிக்கப்பட்டது.

*பிரபல்யம் அதிகாரத்தில் ஆசை கொள்ளாமல் ஆர்ப்பாட்டம் இல்லாமல்*
*செயல்படுவோரை அல்லாஹ் விரும்புகிறான் அவர்களது உள்ளங்கள்*
*அல்லாஹ்வுடன் தொடர்பு பட்டிருக்கும்.*

## மஸ்ஜிதுல் புஹாரி 3 வது கட்டடம் திறப்பு விழா.

1881 ஆம் ஆண்டு இலங்கையின் தலைநகரான கொழும்பில் நிறுவப்பட்ட மஸ்ஜிதுல் புஹாரி பள்ளிவாயல் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களினால் கட்டப்பட்டதாகும். இப்பள்ளி வாயலில் இமாமாக 2 ஆவது உலக மகா யுத்தம் நடந்த 1945 ஆம் ஆண்டு காலங்களில் நஜீப் ஹாஜியார் அவர்களின் தந்தை கடமையாற்றியுள்ளார்.

இக் காலத்தில் T.B. ஜாயா அவர்களின் கண்காணிப்பின் கீழ் கொழும்பு மருதானை ஸாஹிறாக் கல்லூரியில் நஜீப் ஹாஜியாரின் தந்தை அமீர் ஆலிம் அவர்கள் ஆசிரியராக கடமையாற்றியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

தற்காலத்தில் (2022) அப்பள்ளியின் தர்மகர்த்தாக்களின் தலைவர் சாகுல் ஹமீத் அவர்கள் நஜீப் ஹாஜியார் அவர்கள் பிறக்க முன்பே தர்கா நகரில் அவரது வீட்டில் தங்கியிருந்து அவரது தந்தையின் கண்காணிப்பில் தர்கா நகர் ஸாஹிறாக் கல்லூரியில் கல்வி கற்றுள்ளார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க நஜீப் ஹாஜியாரின்

தந்தையின் நினைவாக இப்பள்ளி வாயிலின் 3 வது மாடியைக் கட்டிக் கொடுக்குமாறு வேண்டியதற்கு இணங்க நஜீப் ஹாஜியார் அவர்கள் அதை ஏக மனதாக ஏற்றுக் கொண்டார். கட்டி முடித்த பின்னர் 26.02.2022 ஆம் திகதி அரூசியதுல் காதிரியாவின் தற்கால தலைவராகிய நாஸிர் ஆலிமின் முன்னிலையில் நஜீப் ஹாஜியார் அவர்கள் திறந்து வைத்தார்.

கடந்த 2021 ஆம் ஆண்டில் அரூசியதுல் காதிரியாவின் அப்போதைய தலைவர் தைக்கா சுஐப் ஆலிம் அவர்கள் அவரது நாடான இந்தியாவிலிருந்து தொலைபேசி மூலம் நஜீப் ஹாஜியாரைத் தொடர்பு கொண்டு இப் பள்ளிவாயலின் 3 வது மாடியைக் கட்டிக் கொடுக்குமாறு வேண்டடிய பின்னர் 3 வாரங்களில் அவர் இறையடி சேர்ந்தார். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அவர்களை இலங்கையிலும், டுபாயிலும் பல தடவைகள் நஜீப் ஹாஜியார் அவர்கள் சந்தித்துள்ளார். அவர் தகப்பனார் அமீர் ஆலிம் அவர்களின் நெருங்கிய நண்பரும் ஆவார். 1940 ஆம் ஆண்டளவில் அமீர் ஆலிம் அவர்கள் உயர் சன்மார்க்கக் கல்வி கற்பதற்காக தமிழகத்துக்குச் சென்ற வேளையில் தைக்கா நாஸிர் ஆலிம் அவர்களின் வீட்டிலே தங்கி தனது உயர் கல்வியை முடித்தார்.

அன்று முதல் அமீர் ஆலிம் அவர்கள் அன்னாரின் குடும்பத்துடன் நெருங்கிப் பழகினார். தைக்கா சுஐப் ஆலிம் அவர்களின் பாட்டனாரின் தந்தையாகிய மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள் இலங்கையில் பல பாகங்களிலும் 300 பள்ளி வாயல்களைக் கட்டியதாக வரலாறுகள் கூறுகின்றன.

தைக்கா சுஐப் ஆலிம் அவர்கள் தர்கா நகரில் நஜீப் ஹாஜியாரின் தகப்பனார் அமீர் ஆலிம் அவர்களின் வீடு சென்று பல தடவைகள் நலன் விசாரித்து வந்திருந்ததாகவும் தைக்கா சுஐப் ஆலிம் அவர்கள் நஜீப் ஹஜியாரைச் சந்தித்த வேளைகளில் நினைவு படுத்தியுள்ளார்.தற்போது தரீக்கதுல் காதிரியதுல் அரூசியாவின் ஆன்மீக தலைவராக தைக்கா சுஐப் ஆலிமின் மூத்த புதல்வரான தைக்கா நாஸிர் சுஐப் ஆலிம் அவர்கள் தைக்கா சுஐப் ஆலிமின் மறைவுக்குப் பின் நியமிக்கப்பட்டு பொறுப்பேற்று வழி நடத்துகின்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

16.10.2022 ஆம் திகதியன்று அமெரிக்கத் தேசியப் பல்கலைக் கழகத்தின் மூலமாக நஜீப் ஹாஜியார் அவர்களின் சமூக சேவைகளைப் பாராட்டி “கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது. ஐக்கிய அரபு இராச்சியத்தில் டுபாய் நகரில் Ground Plaza எனும் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் விழா நடைபெற்றதுடன் சான்றிதழும்

வழங்கப்பட்டது. இவ்விழாவில் இன்னும் பலநாட்டு சமூக சேவையாளர்களும் கௌரவிக்கப்பட்டதோடு 26.10.2012 ஆம் திகதி இலங்கை அரசினால் "தேசத்தின் பெருமை" என்ற மகுடத்தில் தேசமானிய விருதும் நஜீப் ஹாஜியார் அவர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வைபவம் கொழும்பு நகரில் தாஜ் சமுத்திரா ஐந்து நட்த்திர ஹோட்டலில் நடைபெற்றது. இதில் பெரியார்கள், கல்விமான்கள் என பலரும் கலந்து சிறப்பிததனர்.

## அநாதைகளை ஆதரித்தல்.

இலங்கையின் மாக்கோலை அநாதை இல்லத்தின் கண்காணிப்பின் கீழ் இயங்கும் ஓர் அநாதை இல்லம்தான் மல்வானை பிரதேசத்தில் அமைந்துள்ள அநாதை இல்லம். இவ்வில்லமானது மிகப் பெரிய நிலப்பரப்பில் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த அநாதை இல்லத்திற்கு நாஜீப் ஹாஜியார் அவர்கள் 19.12.2022 இல் தனது மனைவியுடன் விஜயம் செய்தார். அங்குள்ள நிர்வாகிகளுடனும், மாணவர்களுடனும் அங்கு நடைபெறும் விடயங்களைப் பற்றி கேட்டு அறிந்து கொண்டார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அதன் பின்னர் அங்குள்ள கட்டிடங்களைப் பார்வையிட்டு மாணவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் சில அன்பளிப்புக்களை வழங்கினார். அத்துடன் அவர்களுடன் நடந்த கலந்துரையாடல் மன மகிழ்ச்சியைத் தந்தது எனக் கூறினார் அவர்.

*நீங்கள் அனாதைகளின் உள்ளங்களை உடைக்காதீர்கள் ஆதரவாக நடந்து*
*கொள்ளுங்கள் அல்லாஹ் உங்கள் செல்வங்களை ஆதரிப்பான்.*

## நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தால் கிணறுகள்.

நஜீப் ஹாஜியார் அவர்கள் அவருடைய கல்வி நிலையத்தினால் பல பிரதேசங்களுக்கு பொதுவாகவும், தனிப்பட்ட முறையிலும் கிணறுகளை நிர்மாணித்துக் கொடுத்துள்ளமை மிகவும் போற்றத்தக்க விடயமாகும்.

அந்த வகையில் நஜீப் ஹாஜியார் அவர்களின் தகப்பனாரின் ஊராகிய வெலிப்பன்னை பிரதேசத்தில் சுமார் 60 வீடுகள் பயன்பெறும் வகையில் ஒரு பொதுக் கிணறு நிர்மாணிக்கப்பட்டது.

பேருவளை பிரதேசத்திலும் பல குடும்பங்களுக்கு பயன் படும் வகையில் பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் ஹபுகஸ்தலாவ பிரதேசத்திலும் பள்ளி வாசல் ஒன்றுக்கு அருகாமையில் பொதுக் கிணறு ஒன்று அமைக்கப் பட்டு பள்ளி வாயலுக்கும் அதனைச் சுற்றியுள்ள வீடுகளுக்கும் பயன் தரும் முறையில் அது செய்து கொடுக்கப் பட்டது. தர்கா நகர் அதிகாரிகொடையில் இரண்டாவது பள்ளிவாயலான மஸ்ஜிதுன் நூர் பள்ளி வாயலுக்கும் அதனைச் சுற்றி வசிக்கும் வீடுகளுக்கும் பயன் பெறக் கூடிய முறையில் அப்பள்ளியின் வளாகத்தில் ஒரு பொதுக் கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது. தர்கா நகரில் ஒரு வறிய குடும்பத்தின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களின் வீட்டின் வளாகத்தில் அவர்களுக்கு சொந்தமாக ஒரு கிணறு அமைத்துக் கொடுக்கப்பட்டது.

## பெண்கள் பாடசாலையில் ஒருபள்ளி வாயல்.

1945 ஆம் ஆண்டு தர்கா நகரில் பெண்கள் அரச பாடசாலையொன்று நிறுவப்பட்டது. அதற்கு முன்பாக அல்ஹம்றா மகா வித்தியாலயத்தின் வளாகத்தில் ஓலைகளினால் அடைக்கப் பட்ட ஒரு கூடாரத்திலேயே மாணவிகள் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர்.

இங்கு மாணவர்களையும், மாணவிகளையும் வெவ்வேறாகப் பிரிக்கும் வகையில் ஒரு மதில் கட்டப்பட்டிருந்தது. இரு சாராருக்குமிடையில் பாடசாலை நேரங்களில் ஒழுக்கம் மிக உயரிய முறையில் பேணப்பட்டது.

இதன் பிறகு தர்கா நகர் மரிக்கார் வீதியில் அமைந்திருக்கும் A.A.M. ஹனீபா அவர்கள் அவருக்குச் சொந்தமான வீட்டை காணியுடன் அன்பளிப்புச் செய்தார். அதன்பின் அப்பாடசாலையின் பெயர் அளுத்கம்வீதிய முஸ்லிம் மகளிர் கல்லூரி என மாற்றம் செய்யப்பட்டது. இன்றுவரை அன்னாரின் பழமை வாய்ந்த வீட்டை பாடசாலை வளாகத்தில் அதே விதத்தில் காணக் கூடியதாக உள்ளது.

இதன் வளாகத்தில் வேறு பலராலும் பல கட்டடங்கள் கட்டப்பட்டும் உள்ளன. இப்பாடசாலையின் அதிபரும், பழைய மாணவர்களும் அங்கு ஒரு பள்ளிவாயலை அமைப்பதற்காக ஒரு கட்டடத்தைக் கட்டித் தருமாறு நஜீப் ஹாஜியார் அவர்களை வேண்டிக் கொண்டனர். அதனை நஜீப் ஹாஜியார் அவர்கள் ஏற்று 19.05.2002 ஆம் திகதி அவரது கரங்களால் அடிக்கல் நாட்டி வைத்தார்.

26-01-2023 ஆம் திகதி நஜீப் ஹாஜியார் அவர்களால் கட்டப்பட்ட இக்கட்டடத்தை அவரது கரங்களாலேயே அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊர் வாசிகள் முன்னிலையில் கோலாகலமாகத் திறந்துவைத்தார்.

இக் கட்டடத்துக்கு "நஜீப் ஹாஜியார் கலாசார நிலையம்" என பெயர் சூட்டப்பட்டு அது களுத்துறை கல்வி வலயத்தினால் அங்கீகரிகப்பட்டது.

*எதையும் சரியாக தேர்ந்தெடுக்க தவறினால் அனுசரிப்பதைத் தவிர வேறு வழியில்லை.*

## சுதந்திரதின விழாவும் பரிசளிப்பு விழாவும்.

இலங்கையின் 75 வது சுதந்திர தினவிழாவும், அல்ஹம்றா மஹா வித்தியாலயத்தின் கிரிக்கட் கழகத்தில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழாவும் 04-02-2023 அன்று தர்கா நகர் பாக்கிர் மார்க்கார் விளையாட்டு அரங்கத்தில் முன்னாள் மற்றும் நடப்பு அதிபர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அஸ்லம் ஹாஜியார், இன்னும் பல முக்கியஸ்தர்கள், பாடசாலை மணவர்கள், ஊரார்கள் புடை சூழ மிகக் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாக நஜீப் ஹாஜியார் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இவ்விழாவானது அல்ஹம்றா மஹா வித்தியாலயத்தினால் ஏற்பாடு செய்யப் படடிருந்தது.

*மன்னிப்பு பிறருக்கு நீ கொடுக்கும் பரிசு மறதி உனக்கு நீயே கொடுக்கும் பரிசு.*

## முஸ்லிம் கலாசார விவகார செயலகத்திற்கு விஜயம்.

07.02.2023 ஆம் நாள் முஸ்லிம் கலாச்சார செயலகத்திற்கு நஜீப் ஹாஜியார் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அத்துடன் கலாச்சார செயலகத்தின் தலைவர் பைஸர் ஆப்தீன் அவர்களைச் சந்தித்து நஜீப் ஹாஜியார் அவர்களினால் வெளியிடப்பட்ட நெஞ்சம் நிறைந்த நஜீப் ஹாஜியார், தர்கா நகரின் பொக்கிஷங்கள், அரபு மொழியிலான மசீரத் கிபா ஆகிய 3 நூல்களையும் கையளித்து அங்குள்ள நூலகத்தில் வாசகர்களுக்காக வைக்கும் படி வேண்டிக் கொண்டார்.

அரபு மொழியிலான மசீரத் கிபா நூலை இச்செயலகத்தில் பதிவு செய்து நடாத்திக் கொண்டிருக்கும் அரபுக் கலாசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்கான உத்தரவை பெற்றுக் கொண்டார். அவற்றின் விலாசங்களைத் தரும்படி கேட்டு எழுதிய கடிதத்தை நஜீப் ஹாஜியார் அவர்கள் இச் செயலகத்தின் தலைவரிடம் ஒப்படைத்தார்.

இவ்வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட செயலகத்தின் தலைவர் இலங்கையின் பல பாகங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கும் கல்லூரிகளின் முகவரிகளை நஜீப் ஹாஜியார் அவர்களிடம் கையளித்தார் உரிய இடங்களுக்கான புத்தகங்களை விநியோகிக்கும் ஏற்பாடுகள் துரிதமாக செய்யப்பட்டன.

*உங்களைப் புரிந்தவர்கள் மட்டும் புரிந்து கொள்ளட்டும் புரியாதவர்களுக்கு புதிராகவே இருக்கட்டும்.*

## இப்தார் நிகழ்ச்சி.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலை நகர் அபுதாபியில் இலங்கைத் தூதரகத்தில் இப்தார் நிகழ்ச்சிக்கு 07-04-2023 இல் நஜீப் ஹாஜியார் அவர்களையும், அவருடைய மூத்த புதல்வர் நிஹ்மதுல்லாஹ்வையும் அழைத்திருந்தனர். அப்போதைய இலங்கைத் தூதுவர் உதய இந்திரரத்னாவுடன் கை கோர்த்து நிகழ்சியில் இருவரும் கலந்து கொண்டனர்.

16.04.2023 ஆம் திகதி இதே தூதரகத்தில் மற்றுமொரு இப்தார் நிகழ்ச்சியில் புதல்வர் நிஹ்மதுல்லாஹ்வுடன் கலந்து கொண்டது மட்டுமல்லாமல் அன்றைய தினம் தூதுவர் சமூகமளிக்காமையினால் நஜீப் ஹாஜியார் அவர்கள் சிறப்புப் பேச்சாளராக உரையாற்றினார். அங்கு வாழ் இலங்கை மக்களின் மத்தியில் நோன்பின் மகிமையைப் பற்றி சிங்கள மொழியிலும் விளக்கினார் என்பது சிறப்புக்குரியதாகும்.

*மற்றவர்களது பிழையான எண்ணங்களுக்காக உங்களது நல்லெண்ணங்களை நீங்கள் மாற்றிக் கொள்ள வேண்டியதில்லை.*

## கிரிக்கட் போட்டியில் சிறப்பு விருந்தினராக.

12.11.2023 யில் “எத்தர அபி” எனும் சங்கத்தினூடாக நடைபெற்ற ஐக்கிய அரபு இராச்சியத்தின் கிரிக்கட் கழகங்களுக்கு இடையிலான சுற்றுப் போட்டியில் வெற்றியீட்டிய கழகங்களுக்கு கிண்ணங்கள் வழங்கும் வைபவம் நடை பெற்றது. பிரதம அதிதியாக அப்போதைய தூதுவர் உதய இந்திரரத்ன அவர்களும், சிறப்பு விருத்தினராக நஜீப் ஹாஜியார் அவர்களும் கலந்து கிண்ணங்களை வழங்கிவைத்தனர்.

## ஆயுள் கால உறுப்பினராக.

01.09.1939 அன்று தொடங்கிய இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் ஐக்கிய நாடுகள் சபை 24.10. 1945 ஆம் திகதி உருவானது.

இச் சபையில் உலக நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்தன. 1952 இல் இதன் செயற்பாடுகள் ஆரம்பமாகின. எனினும் இலங்கை 14.12.1955 ஆம் நாளே இவ்வமைப்பில் இணைத்து கொண்டது.

இங்கு நான் ஐக்கிய நாடுகள் சபைகளின் செயற் திட்டங்களை குறிப்பிட அவசியமில்லை என நினைக்கின்றேன். ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைச் செயலகத்தினால் நஜீப் ஹாஜியார் அவர்கள் சிறப்பு ஆயுட்கால உறுப்பினராக 19.02.2023 ஆம் திகதி இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் அத்தினம் தொட்டு அவர் அவ்வமைப்பில் உறுப்பினராக செயற்பட்டு வருகின்றார்.

*ஆயுள் உள்ளவரை அல்லாஹ்வை நினைவு கூராத உள்ளங்கள்*
*என்றும் அமைதி கிடையாது.*

## தூதுவரின் பாராட்டு,
## நெஞ்சமதில் தாலாட்டு.

பாகிஸ்தான், எகிப்து, ஜெர்மனி போன்ற காடுகளில் கடமையாற்றிய ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் மொகமட் அஹ்மத் அவர்கள் நஜீப் ஹாஜியார் அவர்களின் இரண்டாவது Sponsor ஆவார்.

15.04.2023 அன்று மொகமட் அஹ்மத் அவர்களை அவருடைய பிரத்தியேக அலுவலகத்தில் நஜீப் ஹாஜியார் அவர்கள் சந்தித்தார். அப்போது அவருடைய அரபு மொழி நூலான "மசீரத் கிபா" நூலை அவர்களிடம் கையளித்தார்.

இந்நூலைக் கண்ட தூதுவர் மொகமட் அஹமத் அவர்கள் அகம் மகிழ்ந்து போக நஜீப் ஹாஜியார் அவர்களின் முயற்சியைப் பாராட்டியது மட்டுமல்லாமல், நீங்கள் என்னை விட மேலானவர், என்னால் இது போன்ற ஒரு நூலை எழுத முடியவில்லையே என உயர்த்திப் பேசினார். நஜீப் ஹாஜியார் அவர்கள் உள்ளம் குளிர்ந்து அவரிடம், நீங்கள் தான் என்னையும் விட மேலானவர், உங்களோடு இருந்த காலங்களில் உங்களிடம் நான் கற்றது ஏராளம். உங்களுக்குத் தாராளமான மனம், உங்களால் தான் நான் இந்நூலை உருவாக்கி வெளிக்கொண்டு வந்திருக்கிறேன். உங்களிடமிருந்து பெற்ற பல அனுபவங்கள் தான் இந்நூலுக்கு உதவியாக அமைந்தன. இதனால் நீங்கள் தான் உயர்ந்தவர் என மொகமட் அஹ்மத் அவர்களைப் போற்றும்படியாகச் சொன்னார்.

நஜீப் ஹாஜியாரின் இந்த ஒவ்வொரு வார்த்தைகளும் அவரது நெஞ்சில் தேன் சொட்டுக்களாய் விழுந்தன. நஜீப் ஹாஜியார் இப்படிச் சொல்லுவார் என்று அவர் துளி கூட எதிர்பார்த்து இருக்கவில்லை. மகிழ்ச்சியில் திகைத்துப் போனார் அவர்.

சபையில் அத்தனைபேர்களுக்கும் மத்தியில் நஜீப் ஹாஜியார் அவர்கள் அவரிடம் கடமை புரிந்த காலங்களில் மிகவும் விசுவாசமாக நடந்து கொண்டதாகப் பாராட்டி பேசியமை இப்போதும் நஜீப் ஹாஜியாரின் உள்ளத்தை மகிழ்விக்கின்றது என்று தான் சொல்ல முடியும்.

1979 ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டு வரை தூதுவர் மொகமட் அஹ்மத் அவர்களின் தலைமையின் கீழ் நஜீப் ஹாஜியார் அவர்கள் கடமை புரிந்த அனுப்பங்களை வாசகர்கள் ஏற்கனவே வாசித்து அறிந்திருப்பீர்கள்.

*யாருக்குமே பிடிக்காதவர்களாய் நீங்கள் மாறி போவதற்கு ஒரே காரணம்தான் நீங்கள் நேர்மையாக இருக்கின்றீர்கள் என்பதே.*

## முதன்முதலில் குத்பா பிரசங்கமும் இரண்டாம் மாடி திறப்பு விழாவும்.

150 வருடங்களுக்கு முன்பாக நாவலப்பிட்டி பொல்வதுறை எனும் பிரதேசத்தில் "கதீஜா" பள்ளிவாயல் ஆரம்பிக்கப்பட்டது.

1976 முதல் 1977 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நஜீப் ஹாஜியார் அவர்கள் இப் பள்ளிவாயலில் இமாமாகவும் குர்ஆன் மத்ரஸாவின் ஆசிரியராகவும் கடமையாற்றி உள்ளதோடு 20.08.1976 யில் அவரது வாழ்க்கையில் முதன்முதலாக குத்பா ஜும்மா பிரசங்கம் செய்து இங்கு கதீபாகவும் பணியாற்றியுள்ளார்.

இப்பள்ளிவாயல் பின்னைய காலங்களில் ஊர் மக்கள், நலன் விரும்பிகள், வெளி மாவட்ட உபகாரர்களின் உதவிகளுடன் இரண்டு மாடி கட்டடமாக கட்டப்பட்ட போதிலும் மேல்மாடி பூர்த்தி செய்யப்படாத நிலையில் காணப்பட்டது. அங்கு தற்போதைய தர்மகர்த்தாவாக பணியாற்றிக் கொண்டிருக்கும் ஜனாப் நலீம் அவர்களின் தலைமையில் ஏனையோரும் சேர்ந்து நஜீப் ஹாஜியார் அவர்களிடம் 2024 ஆம் ஆண்டு ரமழான் மாதத்திற்கு முன்பு பெண்கள் தொழக்கூடிய விதத்தில் மேல் மாடியைப் பூர்த்தி செய்து தரும்படி கேட்டுக் கொண்டனர். அதனைப் பொறுப்பெடுத்த நஜீப் ஹாஜியார் அவர்கள் அம்மேல் மாடியில் ரமழான் அல்லாத காலங்களில் மாலை நேர குர்ஆன் மத்ரஸாவும் நடாத்தக் கூடிய வகையில் செய்து கொடுத்தார்.

16.02.2024 அன்று வெள்ளிக்கிழமை ஜும்மாவுக்கு முன் நஜீப் ஹாஜியார் மற்றும் அவரது புதல்வர் டாக்டர் ரஹ்மத்துல்லாஹ்,

பேருவளை பத்திரிகை நிருபர் பி.எம். முக்தார் ஆகியோருடன் நஜீப் ஹாஜியாரின் குடும்ப உறுப்பினர் பர்ஹான் உட்பட ஊர் மக்கள் சூழ்ந்திருக்க நிர்மாணிக்கப்பட்ட பகுதி நஜீப் ஹாஜியார் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

*முதல் முதலில் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தெளிவாக இருக்க வேண்டும்*
*உள்ளமானது மீண்டும் உடையாமல் இருக்க.*

## நூற்றாண்டு விழாவும் முத்திரை வெளியீடும்.

18.02.2024 அன்று “அல் பாஸியத்துல் நஸரியா” பெண்கள் கல்லூரியின் நூற்றாண்டு விழா மிகவும் விமர்சையாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் அப்போதைய நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சரான பந்துல குணவர்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கிர் மார்க்கார் அவர்கள் சிறப்பதிதியாகக் கலந்து கொண்ட அதே சமயம் இப்பாடசாலை அதிபர் திருமதி மஸ்னவியா மூசின் அவர்களின் அழைப்பை ஏற்று நஜீப் ஹாஜியார் அவர்கள் அவரின் புதல்வர் டாக்டர் ரஹ்மத்துல்லாஹ் மற்றும் டாக்டர் ஹுஸ்னா ஆகியோருடன் கலந்து கொண்டார்.

நூற்றாண்டு விழாவை ஒட்டி 25 ரூபாய் பெருமதியான முத்திரையொன்றும் வெளியிடப்பட்டது. இம்முத்திரையின் பிரதி ஒன்றை பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அமைச்சர் பந்துல குணவர்தனவினால் நஜீப் ஹாஜியார் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அச்சமயம் பாடசாலை சம்பந்தமான பல விடயங்கள் ஆராயப்பட்டன. இறுதியில் இம்தியாஸ் பாக்கிர் மார்க்கார் அவர்கள் நஜீப் ஹாஜியார் அவர்களின் பாரிய சேவைகளைப் பாராட்டி அமைச்சரிடம் அறிமுகம் செய்து வைத்தார்.

## அடிக்கல் நாட்டு விழாவும் சிறப்புரையும்.

புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள அஸீஸியா மத்ரஸா இல்லத்தில் சுமார் 200 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் தங்கி நின்று கல்வி கற்கின்றனர். அவர்களில் ஏராளமான அனாதைச் சிறுவர்களும் உள்ளனர்.

இக் கல்விக் கூடத்தின் ஆரம்பகர்த்தாவாகிய அப்துல் அஸீஸ் மௌலானா அவர்களின் அழைப்பின் பெயரில் நஜீப் ஹாஜியார் அவர்கள் 20.02.2024 அன்று அங்கு விஜயம் செய்தார். அவரை மாணவ மாணவிகள் கௌரவித்து மரியாதை செலுத்தும் முகமாக முன் வாயிலில் இருந்து கருத்தரங்கு கூடம் வரை அணிவகுத்து வரவேற்றுச் சென்றனர். ஆசிரியர்கள் மாணவ மாணவிகளுக்கு மத்தியில் நஜீப் ஹாஜியார் அவர்கள் கல்வி, நேரம், காலம், மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை எப்படி அமைய வேண்டும் என்பதனை அழகாக விவரித்து உரையாற்றினார்.

8 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள அவ்வனாதை இல்லத்தில் பல கட்டடங்கள் அமையப் பெற்றுள்ளன. அதில் மாணவ மாணவிகளுக்கான விடுதிகள், வகுப்பறைகள், மூன்று வேளை போசனத்திற்கான உணவு வழங்கும் சிற்றுண்டிச் சாலை, தொழுகைக்கான பள்ளிவாயல், கருத்தரங்கு மண்டபம் என்பன அமைந்துள்ளன.

மேலும் புதிய மூன்று மாடி கட்டடம் அமைப்பதற்கு நஜீப் ஹாஜியார் அவர்களினால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டமை ஒரு விசேட அம்சமாகும்.

## அனாதை இல்லத்தில் அரபு மொழியில் உரை.

களுத்துறை மாவட்டம் அட்டுலுகம பிரதேசத்தில் அமைந்துள்ள அனாதை இல்லத்தில் குர்ஆன் மத்ரஸா, மார்க்கக் கல்வி கற்கும் மத்ரஸா போன்ற பிரிவுகள் இருக்கின்றன. இதில் நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகள் கல்வி கற்கின்றனர்.

இம்மூன்று மத்ரஸாக்களினதும் அதிபர் சேக் அப்துர் ரஹ்மான் பஹ்ஜி அவர்களின் அழைப்பை ஏற்று நஜீப் ஹாஜியார் அவர்கள் தர்கா நகர் பிரபல வர்த்தகர் ஹரீஸ் ஹாஜியார் அவர்களுடன் 21.02.2024 அன்று அங்கு விஜயம் செய்தார்.

அதிபர் அவர்கள் மாணவர்களுக்கு மத்தியில் அரபு மொழியில் உரையாற்றும் படி நஜீப் ஹாஜியார் அவர்களை வேண்டிக் கொண்டார். அதற்கினங்க நஜீப் ஹாஜியார் அரபியில் உரையாற்றினார்.

அவ்வுரைக்குச் செவி சாய்த்த மாணவர்கள் மிகவும் உற்சாகமடைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் நஜீப் ஹாஜியார் அவர்கள். தொடர்ந்து நஜீப் ஹாஜியாரின் சேவையைப் பாராட்டி அதிபர் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

*பிறரின் நல்ல பேச்சுக்கு செவி சாய்க்காதவனுக்கு அமைதியான சூழலோ மனதிற்கு நிறைவான வாழ்க்கையோ அமைவதில்லை.*

## முதலாம் ஆண்டு மாணவர்கள் அனுமதி வரவேற்பு நிகழ்வு.

தர்கா நகர் அல்ஹம்றா மஹா வித்தியாலயத்தில் 2024ம் ஆண்டுக்கான முதலாம் தரத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களின் முதலாம் நாள் வகுப்பை ஆரம்பித்து வைக்கும் வைபவம் 22.02.2024 அன்று காலை 8 மணிக்கு நடைபெற்றது.

இவ்வைப்பவத்தில் பிரபல எழுத்தாளர் ஹாபிஸ் இஸ்ஸதீன் ஆசிரியர், பிரபல எழுத்தாளர் தர்கா நகர் டி.எம். சபா ஹாஜி, களுத்துறை கல்வி வலயத்தின் உறுப்பினர் முகமத் ஆகியோருடன் அதிபரின் அழைப்பை ஏற்று நஜீப் ஹாஜியார் அவர்களும் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். இவ்வைபவத்தில் பெற்றோர்களுடன் சில ஊர் மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

*பணக்காரன் ஏழை வீட்டுக்குச் சென்றால் உபசரிப்பு பலமாக இருக்கும் ஆனால் ஓர் ஏழை பணக்காரன் வீட்டுக்கு சென்றால் உபதேசம் மட்டுமே இருக்கும்.*

## சர்வதேச மனித உரிமைகள் ஒருங்கிணைப்பாளராக நியமனம்.

இலங்கையின் தலைநகர் கொழும்பில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) சர்வதேச கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. 22.02.2024 அன்று நடைபெற்ற இக்கருத்தரங்கில் நஜீப் ஹாஜியார் அவர்கள் ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டார். அத்துடன் அதற்கான சான்றிதழையும் அவர் பெற்றுக் கொண்டார்.

இவ்வைப்பவத்தில் பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே குணவர்த்தன அவர்கள் பிரதம அதிதியாக வருகை தரவிருந்தார். ஆனால் துரதிஷ்டவசமாக அவர் வெளிநாடு செல்ல வேண்டி இருந்ததால் கலந்து கொள்ள முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வைப்பவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க அவர்களும் மொரட்டுவை பல்கலைக்கழக உபவேந்தரும் சபாநாயகரின் புதல்வரும் இன்னும் நான்கு மத பிரதிநிதிகளாக 4 நபர்களும் கலந்து கொண்டனர்.

## சபாநாயகருடன் ஒரு சந்திப்பு.

23.02.2024 இல் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரியவை அவரின் கொழும்பு இல்லத்தில் நஜீப் ஹாஜியார் அவர்கள் சந்தித்து அவருடைய கடந்த கால அரசியல் அனுபவங்களைக் கேட்டு அறிந்தார். அத்தோடு நஜீப் ஹாஜியாரின் வாழ்க்கை முறையையும் கடந்த கால சேவைகளைப் பற்றியும் அவரிடத்தில் எடுத்துக் கூறினார். அத்தோடு கரு ஜயசூரிய அவர்களின் சேவைக்காலத்தில் இடம்பெற்ற முக்கியமான சம்பவங்கள் பற்றியும் நஜீப் ஹாஜியார் அவர்கள் கேட்டறிந்து கொண்டார்.

அதற்கு அவர் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக்கு சிங்களம் கற்பிப்பதாகவும் அவர் பிரதேசமான மீரிகமவில் சிங்கள மக்களுக்கு தமிழ் கற்பிப்பதாகவும் கூறினார். கரு ஜெயசூரிய அவர்கள் 2015 முதல் 2019 வரை இலங்கையின் பாராளுமன்ற சபாநாயகராகக் கடமை ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கருவறையிலிருந்து கல்லறைவரை

இவ்வுலகம் யாருக்கும் நிரந்தரமானதல்ல. மண்ணினால் படைக்கப்பட்ட மனிதன் என்றாவது ஒரு நாள் மண்ணுக்கே சொந்தமாக வேண்டும். இதுதான் உண்மை.

வாசகர்களாகிய நீங்கள் நஜீப் ஹாஜியார் அவர்களின் பிறப்பு முதல் இன்றுவரையான வாழ்க்கைச் சரித்திரத்தை வாசித்து அறிந்துள்ளீர்கள். தனது வாழ்வின் அத்தனை விடயங்களையும் எந்தவித மறைப்புமின்றத் வெளிப்படையாகச் சொன்ன அவர் கடைசியாகத் தன் உள்ளத்தில் நிலைகொண்டிருந்த இறுதி ஆசையாக இருந்ததையும் மிகவும் ஆர்வத்துடன் உங்களோடு பகிர்ந்து கொள்கின்றார்.

பல வருட காலமாக ஒரு மையவாடியை அமைக்க வேண்டும் என்ற ஒரு ஆசை அவரது உள்ளத்திலே வேரூன்றியிருந்தது. “ஒரு பள்ளிவாயலில் மையவாடி ஒன்றை அமைத்துக் கொடுத்தால் எனது இறுதி ஆசை நிறைவேறிய திருப்தியில் நான் நிம்மதியடைவேன்” என்று அவரது உள்ளம் அவாவுற்றது. இந்த இறுதி ஆசையை நிறைவு செய்ய இலங்கையில் பல ஊர்களுக்குச் சென்று அதற்கான

தேவையிருக்கும் இடங்களைத் தேடினார் நஜீப் ஹாஜியார். ஆனாலும் அவருக்கு அது கிடைக்கவில்லை. கவலையில் சோர்ந்து போன அவர். இறைவனிடம் பிரார்த்தனை புரிந்தார் “யா அல்லாஹ் எனது இந்த ஆசையை நிறைவேற்றி வை ரஹ்மானே...” என்ற அவரது பிரார்த்தனையை இறைவன் நிறைவேற்றித் தருவான் என்ற நம்பிக்கையுடன் காலம் கனியும் வரை காத்திருந்தார்.

அவரது எண்ணம் போன்றே படைத்த நாயன் அவரைக் கைவிடவில்லை. அவரது பிரார்த்தனையை அவன் ஏற்றுக் கொண்டான். ஆம் ஒருநாள் அவரது தகப்பனின் ஊரான வெலிப்பன்னை பள்ளிவாயலின் மையவாடி அவரது நினைவிற்கு வந்தது. ஏனென்றால் அந்த மையவாடி மழை காலங்களில் வெள்ளப் பெருக்கினால் நீர் நிறையும் நிலையில் இருந்தது. இந்த விடயம் ஊர் மக்களை மிகுந்த மனக் கவலையில் ஆழ்த்தியிருந்தது. மழை காலங்களில் ஒரு ஜனாஸாவை நல்லடக்கம் செய்வதில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்த அவர்கள் இந்நிலைமைக்கு ஒரு தீர்வு கிடைக்காதா? எனக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த தருணம் அது. அவர்களது ஏக்கங்களைத் துடைத்து நஜீப் ஹாஜியாரின் இறுதி ஆசையை நிறைவேற்ற நல்லதொரு சந்தர்ப்பமாக அது அமைந்தது. உடனே வெலிப்பன்னைப் பள்ளிவாயலின் நிர்வாகியைச் சந்தித்து தனது எண்ணங்களை விளக்கிச் சொன்னார் நஜீப் ஹாஜியார் அவர்கள். மையவாடியில் நீர் நிறையாத வண்ணம் மண் நிறைத்து, ஒழுங்காக, முழுமையாக அழகாகச் செய்து தருவதாகப் பொறுப்பேற்றார். அல்ஹம்துலில்லாஹ். எண்ணப்படியே மழைக் காலங்களில்கூட ஜனாஸாக்களை நல்லபடியாக நல்லடக்கம் செய்வதற்கு முடியுமான முறையில் தனது சொந்தச் செலவில் மையவாடியை அமைத்துக் கொடுத்ததில் மனநிறைவும் நிம்மதியும் திருப்தியும் அடைந்தார் நஜீப் ஹாஜியார் அவர்கள். அதற்காக அவர் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே என்று இறைவனுக்கு நன்றி செலுத்தினார். சந்தோசத்தில் ஆழ்ந்து போனார்.

ஆம் நஜீப் ஹாஜியார் அவர்கள் இறை நம்பிக்கையுடன் இறை பொருத்தம் வேண்டி பல வகையான பள்ளிவாயல்கள், கட்டிடங்கள், நடமாடும் கூடாரங்கள் என இன்னோரன்ன சேவைகளைச் செய்திருந்த போதிலும் தனது இறுதி ஆசை நிறைவேறியதையிட்டு மிகவும் மகிழ்ந்து போனார்.

எல்லோரும் உலகில் வாழ்ந்துவிட்டு மரணிக்கின்றனர். ஆனால் அவர்களுள் ஒரு சிலரே தமது பெயரை இவ்வுலகில் நிலைநிறுத்திவிட்டுச் செல்கின்றனர். ஏதோ வந்தோம் வாழ்ந்தோம் என்றில்லாமல் அடுத்த பரம்பரையும் தமது பெயரை உச்சரிக்கும் வகையில் பிறருக்கும் பிரயோசனமான முறையில் வாழ்ந்துவிட்டு மரணிப்பதிலேயே வாழ்வின் சிறப்பு தங்கியுள்ளது. அந்தவகையில் நஜீப் ஹாஜியார் அவர்கள் ஒரு சாதாரண மனிதராக இருந்து உள்நாட்டில் பல தொழில் முயற்சிகள் செய்து பார்த்து பல ஏமாற்றங்களையும் தோல்விகளையும் அனுபவித்து, மிகவும் சிரமப்பட்டு வெளிநாடு சென்று, கடினமாக உழைத்து தனது திறமையினாலும் நம்பிக்கை, நாணயமான நடத்தையினாலும் முன்னுக்கு வந்து தனது ஊரும் தன்னைச் சார்ந்த சமூகமும் நலன் பெற வேண்டும் என தனது சக்திக்கு மீறிய சமூகப் பணிகளைப் பொறுப்பெடுத்து, அவற்றைத் திறம்படச் செய்து கொடுத்து, தனது வாழ்நாளை அர்த்தப்படுத்தும் வகையில் தலை நிமிர்ந்து நிற்கின்றார்.

இந்நூலை வாசித்ததன் மூலம் நஜீப் ஹாஜியார் அவர்கள் எப்படியான ஒரு வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்? அதனைக் கொண்டு எவ்வாறான சமூகப் பணிகளைச் செய்திருக்கிறார் என்ற தெளிவை நீங்கள் பெற்றிருப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

நஜீப் ஹாஜியாரின் வாழ்க்கை வரலாறு உங்களுக்கு ஒரு படிப்பினையாக அமையுமாயின், ஒரு உத்வேகத்தைத் தருமாயின் அது அவர் இந் நூலை வெளியிடுவதற்கான நோக்கத்தை நிறைவேற்றுவதாய் அமையும். சமூகப்பணி செய்வதற்கு பெருத்த பணம் தேவையில்லை, மாறாக அதற்கான ஏக்கமுடைய மனமே தேவை என்பதை நஜீப் ஹாஜியார் தனது கடந்த கால வாழ்வின் மூலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறார். தன்னை உதாரணமாகக் கொண்டு இன்னும் பலர் இப்பணியைக் எடுத்துச் செல்ல முன்வர வேண்டும் என்பதே அவரது பேரவாவாக உள்ளது.

நஜீப் ஹாஜியார் அவர்களது எண்ணங்கள், செயற்பாடுகள் அனைத்தையும் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொண்டு இவ்வுலகில் அவருடைய அந்தஸ்துகளை உயர்த்தி தேகாரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்குவானாக என்று பிரார்த்திக்கின்றேன்.